க.பொ.த உயர் தரம்

# அரசறிவியல்

## தரம் - 12

## ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி





சமூக விஞ்ஞானத் திணைக்களம்
தேசிய கல்வி நிறுவகம்
மஹரகம

# அரசறிவியல்

# க.பொ.த உயர் தரம்

# தரம் - 12

## ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி

2017 ஆம் ஆண்டு முதல் 12 ஆந் தரத்திற்கானது

(இவ்விடயப்பரப்பினை அடிப்படையாகக் கொண்ட முதலாவது பரீட்சை 2019 இல் நடைபெறும்)

சமூக விஞ்ஞானத் திணைக்களம்

தேசிய கல்வி நிறுவகம்

மஹரகம

அரசறிவியல்

12 ஆந் தரம்

ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி

2017

© தேசிய கல்வி நிறுவகம்

ISBN :

சமூக விஞ்ஞான திணைக்களம்

மொழிகள், மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞானப் பீடம்.

தேசிய கல்வி நிறுவகம்,

மஹரகம - இலங்கை.

இணையம் :- www.nie.lk

மின்னஞ்சல் :- info@nie.lk

## பணிப்பாளர் நாயகம் அவர்களின் செய்தி

2007 ஆம் ஆண்டு நடைமுறையிலிருந்த உள்ளடக்கத்தை அடிப்படையாகக் கொண்ட பாடவிதானத்தை நவீனப்படுத்தி, தேசிய கல்வி நிறுவகம், ஆரம்ப, இடைநிலை கல்விப் பரப்புகளின் எட்டு வருட சுழற்சி முறையான, புதிய தேசியமட்ட பாடவிதானத்தின் முதல் பாகத்தினை அறிமுகப்படுத்தியது. தேசிய கல்வி ஆணைக்குழுவினால் முன்மொழியப்பட்ட தேசிய கல்வி இலக்குகளை அடிப்படை நோக்காகக் கொண்டு, இது செயற்படுத்தப்பட்டதுடன் பொதுத் தேர்ச்சிகளை விருத்தி செய்து வந்தது.

பல்வேறுபட்ட கல்வியாளர்களால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளினதும், கருத்துக் களினதும் பொருத்தப்பாட்டுடன் பகுத்தறிவு வாதத்தினை அடிப்படையாகக் கொண்டு பாடவிதானம் நடைமுறைப்படுத்தப்பட்டது. அதன் தொடர்ச்சியாக பாடவிதானச் சுழற்சியின் இரண்டாம்பாகம் 2015 ஆம் ஆண்டில் இருந்து கல்வி முறையில் அறிமுகப்படுத்தப்பட்டு வருகின்றது.

இந்தப் பகுத்தறிவுவாத நடைமுறையின் கடை நிலையில் இருந்து உயர்நிலை வரை அனைத்துப் பாடங்களிலும் ஒழுங்குபடுத்தப்பட்ட முறையில் தேர்ச்சிகளை வளர்த்தெடுப்பதற்காக, கீழிருந்து மேல்நோக்கிய நடைமுறைப்படுத்தப்படும் அணுகுமுறை பயன்படுத்தப்படுகிறது. ஒரே பாடத்தின் உள்ளடக்கத்தினை ஏனைய பாடங்களிலும் மீண்டும் பாவிப்பதனைக் குறைப்பதற்காகவும், பாடத்தின் நோக்கங்களை மட்டுப்படுத்துவதற்காகவும், செயற்படுத்தக்கூடியதான மாணவர் மையப் பாடவிதானம் ஒன்றை உருவாக்கும் நோக்கிலும் கிடையான ஒருங்கிணைப்பானது செயற்பட்டு வருகின்றது.

ஆசிரியர்களிற்கு, அவர்களது வகுப்பறைக் கற்பித்தல்களை வழிப்படுத்துவதற்கு அவசியமான வழிகாட்டுதல்களை வழங்குவதற்காகவும், தங்களைக் கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளில் பொருத்தப்பாட்டுடன் ஈடுபடுத்திக்கொள்வதற்காகவும், வகுப்பறை அளவீடு களையும் மதிப்பீடுகளையும் பொருத்தமாகப் பயன்படுத்திக் கொள்வதனை நோக்கமாகக் கொண்டு புதிய ஆசிரிய வழிகாட்டி நூல்கள் அறிமுகப்படுத்தப்படுகிறது. இந்த வழிகாட்டி. நூல்கள், ஆசிரியரை ஒரு பொருத்தப்பாடுடைய ஆசிரியராக வகுப்பறையில் செயற்பட வைக்கின்றது. இந்த வழிகாட்டி நூல்களினூடாக, ஆசிரியர்கள் தங்கள் மாணவர்களின் தேர்ச்சிகளை வளர்த்தெடுக்கத் தேவையான தர உள்ளீடுகளையும், செயற்பாடுகளையும் தாங்களாகவே தெரிந்தெடுக்கும் சுதந்திரத்தினையும் பெற்றுக்கொள்கின்றனர். விதந்துரைக் கப்பட்ட பாடப்பரப்புக்களின் பாரிய சுமைகள் இல்லாதொழிக்கப்படுகிறது. ஆதலால், இப்புதிய ஆசிரிய வழிகாட்டி நூல்கள் முழுப்பயன்பாடு உடையவையாவதற்கு, கல்வி வெளியீட்டாளர்களினால் வெளியிடப்படும் விதந்துரைக்கப்பட்ட பாட நூல்களின் உச்சப்பயன் பாட்டினை பெற்றுக்கொள்வது அவசியமாகின்றது.

இப்புதிய பகுத்தறிவுவாத பாடவிதானத்தினதும், புதிய ஆசிரிய வழிகாட்டி நூல்கள்,

புதிய பாடநூல்களினதும் அடிப்படைக் குறிக்கோள், மாணவர்களை ஆசிரிய மையக் கல்வியிலிருந்து விடுவித்து, செயற்பாடுகளுடன் கூடிய மாணவர் மையக்கல்வியினை நடைமுறைப்படுத்தக்கூடிய கல்வி முறைமையினால், பூகோள தொழில் சந்தைகளுக்கு தேவையான தேர்ச்சிகளும் திறன்களும் மிக்க மனித வளத்தினை வழங்கக்கூடிய மாணவர் களின் எண்ணிக்கையினை விருத்தி செய்யக்கூடியதாயிருத்தலேயாகும்.

இந்தச் சந்தர்ப்பத்தில் இந்நிறுவகப் பேரவையின் அங்கத்தவர்களுக்கும், கல்வி அலுவல்கள் சபையின் அங்கத்தவர்களுக்கும், இவ்வாசிரியர் வழிகாட்டி நூல்களின் உருவாக்கத்திற்குப் பங்களிப்புச் செய்த வளவாளர்களுக்கும் மற்றும் இவ்வுயரிய நோக்கத்திற்காக அர்ப்பணிப்புடன் பணியாற்றிய அனைவருக்கும் எனது நன்றிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

கலாநிதி. திருமதி. ஜெயந்தி குணசேகர
பணிப்பாளர் நாயகம்
தேசிய கல்வி நிறுவகம்
மகரகம.

## பிரதிப் பணிப்பாளர் நாயகத்தின் செய்தி

கற்றல் என்பது பரந்து விரிந்து செல்வதொன்றாகும். அது வாழ்க்கையை மேம்படுத்தவும் எளிமைப்படுத்தவும் வல்லது. மனிதன் கற்கும் ஆற்றலில் உச்ச நிலையில் உள்ளான். மனித, சமூக அபிவிருத்தியை மையமாகக் கொண்ட ஒரு நாடும் அதன் சமூகமும் அறிவாற்றலினால் இனங்கண்ட, நியமமற்றவற்றைக் களைவதற்கும். நல்லவற்றைப் பண்படுத்திப் புத்துலகைப் படைப்பதற்கான கருவியாய் அமைவது கல்வியாகும்.

கற்றலுக்காகப் பெறுமதிமிக்கவை எவையோ அவையும், கற்றல் முறையியல்களும் வசதிகளும் கல்வியைச் சூழ உருவாதல் வேண்டும். கலைத்திட்டம், பாடத்திட்டம், வழிகாட்டிகள், வசதி செய்வோர் போன்றவையெல்லாம் இவ்வகையிலேயே கல்வித்துறையிற் சேர்ந்து கொள்கின்றன.

இலங்கை, நவீன செல்நெறிகளையும் பண்டைய அருஞ்செல்வங்களையும் கலக்கச் செய்து தமது கல்விக்கோலத்தை உருவாக்கிக்கொண்டுள்ளது. சமகாலத் தேவைகளுக்கமைய மறுசீரமைப்புகளினூடாக எட்டு ஆண்டுகளுக்கொருதடவை இற்றைப்படுத்தப்படும் கலைத்திட்டத்துக்குரிய ஒரு கற்றல் வளமாக இவ்வாசிரியர் வழிகாட்டிகள் தயாரிக்கப்படுகின்றன.

பாடக் குறிக்கோள்களின் ஒத்ததன்மையை தேசிய மட்டத்தில் பேணுவது அவசியமாகும். எனினும், ஆசிரியர் வழிகாட்டியிற் தரப்பட்டுள்ள கற்றல் முறையியல்கள் சற்றேனும் பிசகாது அச்சொட்டாகப் பயன்படுத்துவதற்குரிவையன்று. பாடத்திட்டத்தின் தேர்ச்சிகள், தேர்ச்சி மட்டங்களை அடைவதற்காகப் பாடவிடயங்களின் மூலம் கற்றற் பேறுகளை அண்மிப்பதற்காகக் கற்றல் முறையியல்களை ஆக்கபூர்வமானதாக மாற்றியமைத்துக் கொள்வதற்கான சுதந்திரம் வசதி செய்து கொடுப்போருக்கு உண்டு என்பதில் ஐயமில்லை. மாணவரது அடைவுச் சதவீதத்தை உயரிய மட்டத்திற்கு இட்டுச் செல்ல உதவும் மற்றும் அதற்கான வசதிகளைச் செய்து கொடுக்கும் ஆசிரியரது வகிபாகத்திற்கு உந்துதலளிப்பதற்காகத் தயாரிக்கப்பட்டுள்ள ஆசிரியர் வழிகாட்டியை ஆசிரியர்கள் மட்டுமன்றி மாணவரும் பெற்றோரும் கூடப் பயன்படுத்தலாம். குறித்த பாடத்தின் பாடநூலுக்குத் துணையாக அமையும் ஒரு சாதனமான இவ்வாசிரியர் வழிகாட்டி, மற்றுமொரு பாடநூல் அன்று என்பதை அறிந்து பாடநூல், ஆசிரியர் வழிகாட்டி ஆகிய இரண்டையும் ஆசிரியர்கள் பயன்படுத்த வேண்டும்.

அந்தந்தப் பாடத்தின் அடைவு தொடர்பில், தேசிய நிலைப் பரீட்சகர்களால் எதிர்பார்க்கப்பெறும் அடைவுகளை, மாணவர்கள் அடைந்துள்ளனரா என்பது பற்றிப் பாடநிறைவில் வகுப்பறையில் வசதி செய்து கொடுப்பவர்களால் மதிப்பிடப் பெறுதல் வேண்டும். களிப்பூட்டத்தக்க செழுமையான பண்பாட்டைக் கட்டியெழுப்புவதற்கான ஒரு கருவியாக இவ்வாசிரியர் வழிகாட்டி அமைய வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன்.

சங்கைக்குரிய கலாநிதி மாபுல்கொட சுமனரத்ன தேரர்

பீடாதிபதி, பிரதிப் பணிப்பாளர் நாயகம்
மொழிகள், மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம்
தேசிய கல்வி நிறுவகம்

## வளப்பங்களிப்பு

**வழிகாட்டலும் அனுமதியும்**

**கல்வி சார் அலுவல்கள் சபை**
**தேசிய கல்வி நிறுவகம்**

**இணைப்பாக்கம்**

**டப்ள்யு.ஏ.குமுதேந்தி சுதர்ஷனி** – சிரேஷ்ட விரிவுரையாளர், தேசிய கல்வி நிறுவகம்.

**விடய ஆலோசனை மற்றும் கண்காணிப்பு :**

**பேராசிரியர் ஜயதேவ உயங்கொட** - கொழும்பு பல்கலைக்கழகம்.

**எழுத்தாளர் குழு –**

**வெளிவாரி :**

| | |
|---|---|
| **பேராசிரியர் ஜயதேவ உயங்கொட** | - கொழும்பு பல்கலைக்கழகம் |
| **பேராசிரியர் உபுல் அபேரத்ன** | - பேராதனைப் பல்கலைக்கழகம் |
| **விரிவுரையாளர் அதுல விதானவசம்** | - பேராதனைப் பல்கலைக்கழகம் |
| **திரு. எஸ். பாஸ்கரன்** | - சிரேஷ்ட விரிவுரையாளர், பேராதனைப் பல்கலைக்கழகம் |
| **திரு. டெரன்ஸ் புரசிங்ஹ** | - சிரேஷ்ட விரிவுரையாளர், ஸ்ரீ ஜயவர்த்தனப்பர பல்கலைக்கழகம் |
| **திரு. எம். ரஞ்சித்** | - சிரேஷ்ட விரிவுரையாளர், சப்ரகமுவா பல்கலைக்கழகம் |
| **திரு. சுமுது வலாகுலுகே** | - விரிவுரையாளர், உறுகுணைப் பல்கலைக்கழகம் |
| **திருமதி. டப்ள்யு.கே.சீ. பிரியந்தி** | - விகாரமஹாதேவி பெண்கள் கல்லூரி, கிரிபத்கொட |
| **திருமதி. கல்யாணி சித்ரா த சில்வா** | - சுஜாதா பெண்கள் கல்லூரி, நுகேகொடை (ஓய்வுநிலை, வேல்ஸ் கல்லூரி, மொறட்டுவை) |
| **திரு. எஸ். சௌந்தர்ராஜன்** | - அல்அதான் முஸ்லிம் கல்லூரி, பதுளை |

**உள்ளக :**

**திருமதி. டப்ள்யு.ஏ.குமுதேந்தி சுதர்ஷனி** – சிரேஷ்ட விரிவுரையாளர், தேசிய கல்வி நிறுவகம்.

**மொழி ஒழுங்கமைப்பு :**

**திரு. ஸ்ரீ நாத் கனேவத்த** – மொழி ஒழுங்கமைப்பாளர், அங்கொடை, கொதடுவ, கஜஹாவத்த

**திரு. சுசில் சிறிசேன** – விரிவுரையாளர், தேசிய கல்வியற் கல்லூரி, காபிடிகம.

**தமிழாக்கம் :**

**திரு. எஸ். மோகன்** - ஆசிரியர் சேவை, ஹவுப்பே த.வி., கஹவத்தை.

**மொழிப்பெயர்ப்பு :**

**திரு. ஆர். சந்திரமோகன்** - அபிவிருத்தி உத்தியோகத்தர், அம்பகமுவ பிரதேச செயலகம், கினிகத்தேனை.

**கணிணி உதவி :**

**திரு. ஏ.எல்.எஸ்.பீ. அத்தபத்து** - தேசிய கல்வி நிறுவகம். மஹரகம.

**திரு. ஏ.எம்.எஸ். நிஷான் பண்டார** - ஆவே மரியா கல்லூரி, கொழும்பு

**பல்வேறு உதவிகள் :**

**திரு. எஸ். பீ. பிரனாந்து** - தேசிய கல்வி நிறுவகம், மஹரகம.

## உள்ளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| 1. அரசறிவியலின் தோற்றம், அரசியல் ஆய்வு மற்றும் அணுகுமுறைகள் | 02 - 24 |
| 2. அரசறிவியலில் உள்ளடக்கப்படும் உபதுறைகள் | 25 - 43 |
| 3. அரசு | 44 - 70 |
| 4. அரசியலமைப்பு மாதிரிகள் | 71 - 81 |
| 5. அரசியல் கருத்தியல்கள் | 82 - 105 |
| 6. முரண்பாடும் முரண்பாடு தீர்த்தலும் | 106 - 126 |
| 7. இலங்கையின் காலனித்துவ நிலைமாற்றம் | 127 - 135 |
| 8. சுதந்திரத்தின் பின்னரான இலங்கையின் வெஸ்மின்ஸ்டர் அரசியலமைப்பு மாதிரிகளும் அதன் மாற்றங்களும் | 136 - 146 |

# கற்றல் கற்பித்தல் தொடர்பான வழிகாட்டல்

## 01. அரசறிவியலின் தோற்றம், அரசியல் ஆய்வு மற்றும் அணுகுமுறைகள்

**தேர்ச்சி 01** :- அரசியல் மற்றும் அரசறிவியலின் இயல்பு தொடர்பில் அறிவூட்டமுள்ள பிரசையாக செயற்படுவார். (பாடவேளைகள் - 25)

**தேர்ச்சி மட்டம்** :-

I.I அரசியலானது சமூக வாழ்க்கையின் இன்றியமையாத ஓர் அங்கமாகும் என்பதை விளக்குவார்.

I.II அரசறிவியலானது அரசியலின் பல்வேறு அம்சங்களை கல்வி சார்ந்த வகையில் கற்கும் ஒரு பயிற்சி ஊடகமொன்றாக விபரிப்பார்.

I.III பாடத்துறையோடு தொடர்புடைய பல்வேறு அணுகுமுறைகளைப் பயன்படுத்தி அரசறிவியலை கற்பார்.

**கற்றற் பேறுகள்** :-

- அரசியலையும் அரசறிவியலையும் வரைவிலக்கணப்படுத்துவார்.
- அரசியலுக்கும் அரசறிவியலுக்கும் இடையிலான தொடர்புகளையும் வேறுபாடுகளையும் இனங்கண்டு விளக்குவார்.
- அரசறிவியல் கற்கையை கற்பதற்கான அணுகுமுறைகளை பெயரிட்டு அவை ஒவ்வொன்று தொடர்பாகவும் விபரிப்பார்.
- அரசறிவியலின் அணுகுமுறைகளை விமர்சன ரீதியில் விசாரனை செய்வார்.
- அரசறிவியல் கற்கையை கற்பதால் தனக்கும் தனக்குரித்தான சமூக உலகின் அரசறியல் செயற்பாட்டிற்கும் சமூகம் எனும் வகையில் பங்களிப்புச் செய்யும் விதம் தொடர்பில் கருத்துரைப்பார்.

### அறிமுகம்

அரசியல் சமூக வாழ்வின் அத்தியவசிய அங்கமாகும். அரசொன்றினுள் பிறக்கின்ற எல்லா மனிதர்களும் அரசியல் பிராணியாவதால், அரசியல் மற்றும் மனித வாழ்வுக்கிடையில் நேரடியானதும், அந்யோன்ய மற்றும் விடுவிக்கப்படமுடியாத இணைப்பாக இது காணப்படுகின்றது. இந்த தொடர்பின் இயல்பினை எல்லா செயற்பாட்டு பிரசைகளும் அறிந்திருக்கவேண்டியதோடு புதிதாக அரசறிவியலை கற்கும் மாணவர்களும் அறிந்திருக்கவேண்டியது அத்தியவசியமாகும். அரசறிவியல், அரசியலின் பல்வேறு பிரிவுகளை கற்கும் துறையென்பதை மாணவ மாணவியர் விளங்கிக் கொள்ள வேண்டும்.

அரசறிவியலை விளங்கிக் கொண்டு அதனோடு அரசியலுக்கு இடையில் காணப்படும் தொடர்புகளை வரைவிலக்கணப்படுத்த அவர்களால் முடியும். அத்தோடு விடயத்தோடு தொடர்புடைய பல்வேறு அணுமுறைகளை பயன்படுத்தி அரசறிவியலை கற்பதற்கும் மாணவ மாணவியருக்கு முடியுமாக இருக்கும். இவ்விடயம் தொடர்பான அடிப்படை அறிவினை ஏற்படுத்தல், அரசியல் மற்றும் அரசறிவியலின் இயல்புகளை அறிந்துக் கொண்ட பிரசையாக செயற்பட தேவையான தேர்ச்சிகளைப் பெற்றுக்கொடுத்தல் இந்த முதலாம் அலகினால் எதிர்பார்க்கப்படுகின்றது.

## விடயப்பரப்பை விளங்கிக் கொள்வதற்காக வழிகாட்டல்கள்

### 1.1. அரசறிவியலை விளங்கிக் கொள்ளல்

அனைவரினதும் சமூக வாழ்க்கையின் பிரதான அங்கமாக அரசியலை பயிலும் துறையே அரசறிவியல் என சுருக்கமாகவும் எளிமையாகவும் விளங்கப்படுத்த முடியும். அரசியல் என்பது பரந்த கருத்தைக் கொண்ட எண்ணக்கரு என்பது அரசியல் தொடர்பாக கற்கும்போது எமக்கு புலப்படும்.

அரசியல் கற்கைத்துறையாக நீண்ட வரலாற்றைக் கொண்டுள்ளதாகும். கி.மு. **நான்காம்** நூற்றாண்டில் இருந்து கிரேக்கத்தின் ஏதேன்சில் அரசியலைக் கற்றல், அபிவிருத்தி செய்தல் மற்றும் பயிற்சியளித்தல் என்பன விசேட கற்கை நிலையங்களில் நடைப்பெற்றன. பிளேட்டோ மற்றும் அரிஸ்டோட்டில் போன்ற புகழ்மிக்க தத்துவஞானிகள் அரசியல் தொடர்பான இக்கிரேக்க சம்பிரதாயத்தின் ஆரம்ப கருத்தாக்களாவர். தற்போது பாடசாலை, பல்கலைக்கழகங்கள் போன்ற நிறுவனங்களில் ''அரசறிவியல்'' எனும் பாடத்தை கற்பித்தலானது இச்சம்பிரதாயத்தை மேலும் முன்னோக்கி கொண்டு செல்வதாகும்.

''அரசறிவியலைக் கற்றல்'' என்பதில் பல்வேறு கருத்துக்கள் காணப்படுகின்றன. அரசியல் மற்றும் அதனோடு தொடர்புடைய துறைகள் பற்றி கற்றல், ஆய்வு செய்தல், விபரித்தல், இருக்கின்ற கோட்பாடுகள் மற்றும் எண்ணக்கருக்களை விமர்சனத்திற்கு உட்படுத்தல், புதிய கோட்பாடுகள், எண்ணக்கருக்களை கட்டியெழுப்புதல், நடைமுறை அரசியல் கொள்ளைகள், முறைகளை விமர்சனத்திற்கு உட்படுத்தி புதிய மாற்றுப் பிரேரணைகளை முன்வைத்தல், அரசியலில் ஈடுபடுவோருக்கு மட்டுமன்றி பிரசைகளுக்கும் அரசியல் அறிவினை ஊட்டல் போன்றன இதில் அடங்கும். பிளேட்டோ மற்றும் அரிஸ்டோட்டில் தமது கல்வி நிலையங்களில் அரசறிவியலை கற்பித்தல், பயிற்றுவித்தல் போன்ற கருமங்கள் மூலம் இதனை நிறைவேற்றினர். புராதன இந்தியாவிலும் அரச ஆட்சி தொடர்பான நிபுணர்கள் இவ்வாறான காரியங்களை நிறைவேற்றினர். தற்போது பாடசாலைகளிலும் பல்கலைக்கழகங்களிலும் அரசறிவியல் நிகழ்ச்சிநிரலில் இந்நோக்கங்கள் உள்ளன.

அரசறிவியல் என்றால் என்ன என்பதை விளங்கிக் கொள்வதில் பிரதான சில விடயங்கள் காணப்படுகின்றன.

I. அரசறிவியல் ஓர் புராதன கற்கையாகும். மெய்யியல், கணிதம், தர்க்கவியல், ஒழுக்கவியல், அழகியல் போன்ற துறைகளுக்கு இணையாக அரசறிவியலின் பரவல் கி.மு. நான்காம் நூற்றாண்டு அளவில் புராதன கிரேக்கத்தில் ஆரம்பமானது.

II. ஓர் கற்கைத்துறையாக அரசறிவியலின் இயல்பு, பாடப்பரப்பு, உள்ளடக்கம், விதிமுறைகள், கோட்பாடுகளும் எண்ணக்கருக்கள் போன்ற இவை பல்வேறு விருத்திகளினால் சுமார் இருபத்தைந்து நூற்றாண்டுகளாக கட்டியெழுப்பப்பட்டு, மாற்றமடைந்து மற்றும் அபிவிருத்தி அடைந்து வந்ததாகும்.

III. அரசறிவியல் அணுகுமுறைகள், கோட்பாடுகள், விதிமுறைகள் என்பன தொடர்பில் பன்மைத்துவமே காணப்படுகின்றது. அவை பல்வேறு குருகுலக் கல்வி நிலையங்கள், சம்பிரதாயங்களுடன் காணப்படுகின்றது. இப்பன்மைத்துவமே அரசறிவியலை கற்பதில் உள்ள ஒரு சிறப்பாகும்.

அரசறிவியல் என்பது, அரசியலை கற்கைத்துறையாக கற்பது என்பதை மேலே குறிப்பிட்டோம். இக்கூற்றில் முக்கியமான இரு கருத்தியல்கள் உள்ளடங்கியுள்ளன.

I. அரசியல்

II. அரசறிவியல்

## I. அரசியல் என்றால் என்ன என்பதை விளங்கிக் கொள்ளல்

- அரசியல் என்றால் என்ன என்பதற்கு பொதுவாக கிடைக்கும் இலகுவான பதில் ''தேசத்தை ஆட்சி செய்தல்'' என்பதாகும். இது அரசியல் என்ற எண்ணக்கரு தொடர்பில் காணப்படும் பிரசித்தமான அல்லது பயன்பாட்டில் உள்ள புரிதலாகும். இது அரசியல் தொடர்பில் காணப்படும் முழுமையான வரைவிலக்கணம் அல்ல. இது அரசியல் எண்ணக்கரு தொடர்பில் வாய்மொழியாக கட்டியெழுப்பப்பட்ட ஒன்றாகும்.

- கல்விசார் நோக்கில் அதன் ஆழமான அர்த்தத்தினை விளங்கிக் கொள்ள வேண்டும்.

- அரசறிவியல் போன்றே அரசியல் என்பதற்கும் பிரதான இரு கருத்துக்கள் உண்டு.

❖ அரசு, அரச நிருவாகம் மற்றும் அரசாட்சி தொடர்பான எண்ணக்கருவாகவும், அரசுக்கு மட்டும் மட்டுப்படுத்தப்படாமல் அரசுக்கு வெளியில் பிரசைகள் பங்குப்பற்றும் சமூக பயன்பாடொன்றாகவும் உள்ளது.

**அரசியல் என்பதை அரசு, அரச நிருவாகம் மற்றும் அரசாட்சி என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு விளங்கிக் கொள்ளல்.**

இவ்வாறானவைகள் அரசியல் தொடர்பில் காணப்படும் புராதன வரைவிலக்கணங்களாகும்.

➢ புராதன கிரேக்கத்திலும், இந்தியா மற்றும் சீன தத்துவியலாளர்களும் அரசியல் என்பதை அரசு மற்றும் அரச அதிகாரத்தை பயன்படுத்துதலோடு தொடர்புபடுத்தியே வரைவிலக்கணப்படுத்தினர்.

ஆங்கில மொழியில் (Politics) என்பது கிரேக்க மொழியில் (*Politikos / பொலிடிகோஸ்*) என்ற பதத்திலிருந்து பிரிந்து வந்ததாகும். ''பொலிஸ்'' (Polis) என்பது நகர அரசாகும். அதாவது, சிறிய நகரத்தை மையப்படுத்திய அரசாகும். ''நகர அரசு'' என்பதே *Politikos* என்பதன் விளக்கமாகும். இதன்மூலம் அரசறிவியல் என்பது நகர அரசு தொடர்பான விடயத்தினை ஆராயும் விஞ்ஞானம் / கலையாகவே கருதப்பட்டது. நகர அரசு தொடர்பான விடயப்பரப்பிற்குள் பரந்த கருத்தியல்கள் பல காணப்படுகின்றன.

- அரசின் தோற்றம}
- அரசின் நோக்கம்
- அரச ஆட்சி முறைகள்
- அரசு மற்றும் பிரசைகளுக்கிடையிலான தொடர்புகள்
- ஆட்சியாளர்களின் குணாம்சங்கள் மற்றும் திறன்கள்
- அரசாட்சி செயன்முறைகள்

என்பன இவற்றில் முக்கியமான கருத்தியல்களாகும்.

II. புராதன இந்தியா மற்றும் சீனாவில் ‘‘அரசியல்’’ என்பது இவ்வர்த்தத்திலேயே பார்க்கப்பட்டதாக கௌடிலியர் மற்றும் கொன்புசியஸ் போன்ற சிந்தனையாளர்களின் நூல்களில் காணப்படுகின்றன.

இவ்விரு சிந்தனையாளர்கள் மட்டுமன்றி அரிஸ்டோட்டிலும் கூட ஆட்சியாளர்களுக்கு அரசாட்சி தொடர்பாக ஆலோசனை வழங்குவதே அரசியல் வல்லுனர்களின் கருமமொன்றாக இருந்தது என கூறப்பட்டது.

- நடைமுறையில் இச்சம்பிரதாயம் கூடிக் குறைந்து காணப்படுகின்றது.

## ❖ அரசியல் சமூக பயன்பாடொன்றாக:-

அரசியல் என்பது அரசு, அரசாங்கம் மற்றும் அரச நிருவாகம் போன்ற துறைகளுக்கு மட்டுப்படுத்தாமல் அதற்கு வெளியில் சமூக பிரசைகளுக்கிடையில் காணப்படும் நடைமுறை என்பதே இதன் பொருளாகும்.

உதாரணம் :-

பிரசைகள் ஆட்சியாளர்களை நியமிக்கின்றனர். அவர்களுக்கு அரசாள்வதற்கான அதிகாரத்தை வழங்கியுள்ளனர். அரசியல் கட்சிகளின் உறுப்பினர்களாகவும் உள்ளனர். இவைத் தவிர கூட்டங்கள், ஊர்வலங்கள், எதிர்ப்பு நடவடிக்கைகள், வேலைநிறுத்தங்கள், போராட்டங்கள், சுயாதீன சங்கங்கள் மூலம் பொதுத் தேவைகளை நிறைவேற்றுதல் ன்ற ஊடகங்கள் மூலம் அரசியல் செயற்பாடுகளில் ஈடுபடுகின்றனர்.

இதன்படி ஆட்சியாளர்கள் மற்றும் தொழிலாக அரசியலை செய்யும் அரசியல்வாதிகள் மட்டுமின்றி பிரசைகளும் அரசியல் செய்கின்றனர். இது கிரேக்க யுகம்வரை நீண்டுள்ளது. ‘‘அரசியல்’’ என்பது புராதன நகர அரசோடு தொடர்புடையது என்ற கிரேக்க கருத்தில் இரு அர்த்தங்கள் உள்ளன. அவையாவன,

I. அரசு மற்றும் அரசாட்சியோடு தொடர்புடைய விடயம்

II. அரச செயற்பாடுகள் தொடர்பில் பிரசைகளின் கடமைளும் பொறுப்புக்களினது செயற்பாட்டுத்தன்மை.

உதாரணம் :-

கிரேக்கத்தில் அப்போது காணப்பட்ட நேரடி ஜனநாயக ஆட்சி முறையில் பிரசைகளின் நேரடி பங்குப்பற்றல் காணப்பட்டது. சட்டவாக்கம், நகர் நிருவாகம் மற்றும் நீதித்துறைகள் போன்ற செயற்பாடுகளில் பிரசைகள் சுயாதீனமாக ஈடுபட்டனர். ‘‘செயற்பாட்டு பிரசை’’ எனும் எண்ணக்கரு அரிஸ்டோட்டிலின் *Politics* நூலில் இவ்வர்த்தத்திலேயே பயன்படுத்தப்பட்டுள்ளது.

இதன்படி பிரசைகளின் அரசியல் பங்குப்பற்றல் என்பதற்கு ‘‘அரசியல்’’ என்ற எண்ணக்கருவில் விசேட இடம் கிடைத்துள்ளது. பிரசைகளின் செயற்பாடுகள் மற்றும் பங்குப்பற்றல் இல்லாத அரசியலொன்றை எண்ணிப் பார்க்க முடியாத அளவுக்கு இவ்விடயம் வேரூன்றியுள்ளது.

## 1.2 அரசியலுக்கும் அரசறிவியலுக்கும் இடையிலான தொடர்புகள்

இதனை பல முறைகளில் நோக்க முடியும்.

I. அரசியல் செய்தல் (Doing Politics)

II. அரசியல் கற்றல் (Studying Politics)

I. அரசியல் செய்தல்

இதன் பொருளாவது,

- ❖ அரசாங்க அதிகாரத்தைப் பெற்றுக்கொள்ள செயற்படல்.
- ❖ அரசாங்க அதிகாரத்தை நடைமுறைப்படுத்தல்.
- ❖ தேர்தல்களில் பங்குப்பற்றல்.
- ❖ அரசியல் கட்சிகளின் செயற்பாடுகளில் பங்குப்பற்றல்.
- ❖ போராட்டம் மற்றும் எதிர்ப்பு இயக்கங்கள் போன்றவற்றில் பங்குப்பற்றல்.

என்பன தொடர்பாக தனி நபர்கள் ஈடுபடும் செயற்பாடுகள்.

- ❖ அரசியல் செய்யும் பிரசைகளுக்கும் தொழில்சார் அரசியல் செய்பவர்களுக்கும் அரசியல் தொடர்பான கல்விசார் அறிவு அல்லது சிறப்புத்தேர்ச்சி தேவைப்படுவதில்லை. ''அரசியல்'' என்ற சமூக செயற்பாட்டில் ஈடுபடுவதற்குள்ள ஆர்வம், தியாகம் மற்றும் திடசங்கற்பம் என்பனவே தேவைப்படுகின்றன.

II. அரசியலைக் கற்றல்

இது அரசியல் செய்வதிலும் பார்க்க வேறுபட்ட செயற்பாடாகும். ''அரசியலை கற்கும் மாணவரை'' (Student of Politics) அரசியல் செய்பவர் ஒருவராக அடையாளப்படுத்துவதில்லை. தினந்தோறும் நடைமுறையில் செய்யப்படும் இத்தகைய மாற்றம் அரசியல் மற்றும் அரசறிவியல் என்பவற்றுக்கு இடையில் காணப்படும் தொடர்புகளை விளங்கிக்கொள்ள துணையாக அமையும்.

- ❖ கல்வித்துறையாக அரசியலை கற்றல் மற்றும் பிரயோக ரீதியாக அரசியலில் ஈடுபடல் என்ற இரண்டும் ஒன்றுக்கொன்று வேறுபட்டவைகளாகும்.
- ❖ அரசறிவியலின் செயற்பாடு அரசியலை கல்வியாக ஆய்வு செய்வதாகும்.
- ❖ ஒருவர் அரசியலை பிரயோக ரீதியாக மேற்கொள்ளாவிடினும் அரசியலை கற்கல் அரசறிவியலின் கருமமொன்றாகும்.

இதற்கமைய,

- அரசியல் கட்சிகளினதும் அமைப்புகளினதும் செயற்பாடுகள்.
- அரசாங்க அதிகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்காக அரசியல் கட்சிகள் மற்றும் இயக்கங்களுக்கு இடையில் ஏற்படும் போட்டி.
- தேர்தல் செயற்பாடுகள்
- தொழில்சார் அரசியல்வாதிகளின் நடத்தைகள்
- வாக்காளர் நடத்தை
- அரசியல் மோதல், எதிர்ப்புகள் மற்றும் போராட்டங்கள்
- அரசாங்க கொள்கைகள்

- கொள்கை உருவாக்கம் மற்றும் நடைமுறைப்படுத்தும் செயற்பாடுகள்
- சர்வதேச தொடர்புகளும் முரண்பாடுகளும்
- யுத்தம் மற்றும் சமாதானம்

போன்ற பரந்தளவில் காணப்படும் அரசியல் கருத்தியல்கள் பல அரசறிவியல் கற்கையில் முக்கிய இடம்பிடித்துள்ள விடயப்பரப்புகளாகும்.

## 1.3 அரசியலை கல்வியாக கற்றல்

அரசியல் கற்கைத்துறையாக சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக அபிவிருத்தி அடைந்ததொரு துறையாகும்.இது கி.மு. 4ஆம் நூற்றாண்டு வரை நீண்டுள்ளது. இந்த பரவலினூடு அரசியல் கல்வியின் பாடப்பரப்பு, விதிமுறைகள் மற்றும் அணுகுமுறைகளும் விரிவடைந்துள்ளன. இதற்கமைய நிகழ்காலத்தில் அரசியலின் பல்வேறு கோணங்களை கற்கும் ஓர் துறையாகவே அரசறிவியலை நாங்கள் கருதுகின்றோம்.

அரசியலை கற்றல் என்பதில் இரு அர்த்தங்கள் உள்ளன.

I. அரசியல் நடைமுறை அறிவொன்றாக பெற்றுக்கொள்ளும் தெளிவும் அறிவுஞானமும்

இது நாம் முறையாக பெற்றுக்கொள்ளும் அறிவொன்றன்று. இது நாளாந்த வாழ்க்கையின் அனுபவங்களின் அடிப்படையிலான புரிதலாகும். இதில் எமது சமூக, அரசியல் நம்பிக்கைளும் தீர்மானங்களும் காணப்படும். சமூக மற்றும் உலகம் தொடர்பில் குடும்பத்தில், அயலவர்களிடம், நெருக்கமானவர்களிடம் மற்றும் ஊடகங்களில் பெற்றுக்கொள்ளும் அறிவே இதன் அடிப்படையாகும். எமது தனிப்பட்ட விருப்பு வெறுப்புக்கள் மற்றும் நன்மை தீமை என்ற நம்பிக்கைகளும் இதில் உள்ளடங்கி இருக்கும்.

உதாரணம் :- பெண்களுக்கு பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவத்தை அதிகரிக்க வேண்டுமா? என்ற வினாவிற்கு நாம் பெரும்பாலும் பதில் வழங்குவது நடைமுறை அறிவில் உள்ள கட்டுப்பாடுகளை அடிப்படையாகக் கொண்டேயாகும். ‘‘பெண்களுக்கு அரசியல் மேற்கொள்வதற்கான பலம் இல்லை’’ என்ற பதில் நடைமுறை அறிவின் மூலம் தூண்டப்பட்ட விடயமாகும்.

II. அரசியலை கல்வித் துறையாக கற்றல்

இது அரசியல் தோற்றப்பாடு அல்லது முரண்பாட்டை ‘‘விஞ்ஞான ரீதியில்’’ கற்பதாகும். ‘‘விஞ்ஞான ரீதியான’’ என்ற பதத்தில் பல்வேறு விளக்கங்கள் இருப்பினும் அதன் பிரதான அடிப்படை விளக்கமானது ஏதேனும் தோற்றப்பாடு தொடர்பாக ‘‘முறையாக, கோட்பாட்டுக்கமைய வழிகாட்டும் சரியான முறைமைக்கு ஏற்ப பெற்றுக்கொண்ட தரவுகள், தகவல்கள் மற்றும் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கற்கும் முறையாகும்’’.

உதாரணம் :- பெண்களுக்கு பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவத்தை அதிகரிக்க வேண்டுமா என்ற பிரச்சினை தொடர்பாக பிறப்புசார் கோட்பாட்டு, ஒப்பீட்டு ரீதியான சர்வதேச அனுபவங்கள், மக்கள் கருத்து கணிப்பு போன்ற ஊடகங்களை பயன்படுத்தி செய்யப்படும் ஆய்வின் மூலம் பெற்றுக்கொள்ளும் தரவுகள் மற்றும் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கட்டியெழுப்படும் கண்காணிப்பு மற்றும் விபரிப்பின் மூலம் முடிவுகளை முன்வைத்தலாகும்.

- ## அரசியல் கற்கையும் அரசியல் பிரிவுகளும்

அரசியலை கற்கைக்கு உட்படுத்தல் என்பது அரசியல் தோற்றப்பாட்டின் பல்வேறுபக்கங்களை விளங்கிக் கொள்ளும் செயன்முறையாகும். கடந்த இரண்டாயிரம் ஆண்டுகள் பரவலினூடு பல்வேறு திசைகளில் அபிவிருத்தி அடைந்துள்ள மற்றும் தொடர்ந்தும் அபிவிருத்தியடைந்துக் கொண்டிருக்கும் அரசறிவியல் கல்வித்துறை மூலம் கற்கப்படுகின்ற அரசியலானது சமூக வாழ்தன்மையின் பல்வேறு பிரிவுகளில் காணப்படுகின்றது. அதாவது,

I. அரசியல் நிறுவனங்கள்

II. அரசியல் பயன்பாடுகள்

III. அரசாட்சி

IV. அரசியல் நடத்தை

V. அரசியல் கருத்தியல்கள்

என்பவே இவையாகும்.

### I. அரசியல் நிறுவனங்கள்

எந்தவொரு சமூகத்திலும் அரசியலானது நிறுவனமயமாக்கப்பட்டு காணப்படும். இவ்வாறு நிறுவனமயப்படுத்தப்பட்ட அரசியலில் பிரசித்திப்பெற்ற அம்சங்களாக அரசு, அரசாங்கம், பதவிமுறைகள், நீதிமன்றம், பாராளுமன்றம், அரசியல் கட்சிகள், அமைச்சரவை, உள்ளூராட்சி மன்றங்கள் போன்றனவே இவையாகும். இங்கு அரசியல் அதிகாரம் மற்றும் அரசியல் செயற்பாடுகளே நிறுவனமயப்படுத்தப்பட்டு இருக்கும். இவற்றை கற்கும்போது இவை அரசியல் விஞ்ஞான ஆய்வுக்கு உட்படுகின்றன. இவற்றின் நிறுவன கருப்பொருட்களாக அமைவது நிறுவனங்களின் ஆரம்பம், வளர்ச்சி, கட்டமைப்பு (அமைவுச் சேர்க்கை), அதிகாரம், பொறுப்புக்கள், நிலைமாற்றம் மற்றும் வேறுபாடுகள் மற்றும் அந்த நிறுவனங்களுக்கும் பிரசைகளுக்கும் இடையிலான தொடர்புகள் என்பனவாகும்.

### II. அரசியல் நடைமுறைகள் (Political Practices)

அரசியல் நடைமுறை ஊடகத்தை மையமாகக் கொண்டே நிறுவனமயப்படுத்தப்பட்ட அரசியல் சமூகத்தின் நிலைப்புத்தன்மை காணப்படுகின்றது.

உதாரணம் :- பாராளுமன்ற நிறுவனத்தின் இருப்புக்காக அதற்கென ஒழுங்கமைக்கப்பட்ட நடைமுறைகள் பல உள்ளன. ஜனநாயகம், தேர்தல் செயற்பாடுகள், சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தல், பெரும்பான்மையோரின் விருப்பம் மற்றும் மக்கள் இறைமையை ஏற்றுக்கொள்ளல், சட்ட உருவாக்க செயன்முறையின்போது பாராளுமன்றத்தின் செயற்பாடுகளை தீர்மானிக்கும் சம்பிரதாயங்கள் மற்றும் சட்டத்திட்டங்கள் என்பன இந்த நடைமுறைகளாகும். ஏனைய எல்லா அரசியல் நிறுவனங்களும் இவ்வாறான நடைமுறைகளுடன் கட்டியெழுப்பப்பட்டுள்ளன.

## III. அரசாட்சி (Governance)

அரசாட்சி என்பது அரசறிவியல் ஆய்வுக்கு உட்படும் அரசியலில் காணப்படும் பிரதானமான பிரிவாகும். ஜனநாயக அரசியல் முறைமையினுள் பிரசைகள் அரசாங்கத்தை தெரிவு செய்து தாம் அங்கத்துவம் பெற்றுள்ள சமூகமாகிய அரசியல் சமூகத்தினை சரியாக வழிநடத்தி அதன்மூலம் சமூகத்தின் பொது எதிர்ப்பார்ப்புகளுக்கு சேவை செய்து அரசியல் மற்றும் நிருவாக ரீதியாக சமூகத்தினை கட்டுப்படுத்துவதற்காகும். இந்த அரசாட்சி செயற்பாட்டில் உள்ளடக்கப்படும் பணிகள் சில உள்ளன.

- சமூகத்தின் நல்வாழ்வுக்காக, முரண்பாடுகளை தீர்த்துக்கொள்வதற்கு, சட்டத்தையும் ஒழுங்கையும் பேணிக்கொள்வதற்கும், பொருளாதார அரசியல் செல்வழிகளை ஒழுங்குப்படுத்தவும் தேவையான சட்டங்களை உருவாக்குதல் (Law Making)

- நாட்டின் பொருளாதார சமூக அபிவிருத்தி மற்றும் நிலைமாற்றத்தோடு நல்வாழ்வினை நோக்காகக் கொண்ட கொள்கைகளை உருவாக்குதல் (Policy Making), கொள்கை அமுலாக்கல் (Policy implementation)

- அரசாங்க கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதற்கு தேவையான அரச நிருவாக செயற்பாடுகள் (Public Administration)

- பிரசைகளுக்கு அரச அரவணைப்பு மற்றும் பாதுகாப்பினை பெற்றுக்கொடுத்து சமூக ஒருமைப்பாட்டை உறுதிப்படுத்தும் சட்டம் மற்றும் ஒழுங்குகினை பேணிச் செல்லல் (Law and order)

- சமூக குழுக்களுக்கிடையிலும், சமூகக் குழுக்களுக்கும் அரசுக்கும் இடையில் ஏற்படும் முரண்பாடுகளை முகாமைசெய்தல் (Conflict Management)

- நாடுகளுக்கிடையிலான தொடர்புகளை (Inter State Relations) முகாமை செய்தலும் பேணிச் செல்லலும்.

இவ்விடயங்கள் மக்களை தூண்டும் கருத்தியல்களாகும். அத்தோடு இவை அரசறிவியலில் ஆய்வாரள்களின் விசேட அவதானத்திற்கு உட்படுவனவுமாகும். இதற்கு இவை அரசியலின் பிரயோகக் கருவிகளாக உள்ளமையே முக்கியமான காரணமாகும்.

## IV. அரசியல் நடத்தை (Political Behaviour)

அரசியல் பிராணி ஒருவரான மனிதன் தற்போது பிரசையாக கருதப்படுகின்றான். அதாவது அரசின் அங்கத்தினர் ஒருவர் எனும் வகையிலாகும். பிரசைகளுக்கு நவீன ஜனநாயக அரசாங்க முறையினுள் நிறைவேற்றிக் கொள்ளக்கூடிய முக்கிய பணிகள் பல உள்ளன.

- அரசியலில் ஈடுபடல்
- தேர்தலில் வாக்கினை பயன்படுத்தல் அல்லது பயன்படுத்தாமை
- தேர்தல் செயற்பாடுகளில் செயற்றிறனுடன் ஈடுபடல் அல்லது ஒதுங்கியிருத்தல்
- அரசியல் கட்சிகளின் உறுப்பினராக இருத்தல் அல்லது இல்லாதிருத்தல்
- நாளாந்த அரசியல் நிகழ்வுகள் குறித்து ஈடுபாடு காட்டுதல் அல்லது காட்டாமல் இருத்தல்

போன்ற பிரசைகளின் அரசியல் விருப்பு வெறுப்புக்கள் மற்றும் செயற்பாடுகளை விபரிக்கும் அரசியல் எண்ணக்கருவே அரசியல் நடத்தையாகும்.

### V. **அரசியல் கருத்தியல்கள்** (Political Ideologies)

சமூகத்தின் அரசியல் நிறுவனங்களின் நடைமுறைகள் மற்றும் பிரசைகளின் அரசியல் நடத்தைகள் அரசாட்சி செயற்பாடுகளை ஒழுங்கமைக்கும் பிரதான சாதனமாக அமைவது அரசியல் கருத்தியல்களாகும்.

தற்போதைய உலக அரசியலின் இருப்பு மற்றும் அரசியல் தோற்றப்பாடுகள் அரச கொள்கைகளை ஒழுங்கமைப்பது தொடர்பிலான பிரதான கருத்தியல்கள் சில உள்ளன. அவையாவன,

- சமவுடைமைவாதம்
- லிபரல்வாதம்
- ஜனநாயக வாதம்
- குடியரசுவாதம்
- நலன்புரி வாதம்
- தேசியவாதம்
- பெண்ணியவாதம்

என்பனவையே அவையாகும்.

அரசியல் கருத்தியல் என்பது அரசியலுக்கு அழுத்தம் கொடுப்பதோடு சமூகத்தின் அரசியல் செயற்பாடுகள் மற்றும் பெருமளவு மக்களின் அரசியல் தீர்மானங்கள், நடத்தைகளும் அறிவுஞானத்தை ஒழுங்கமைக்கும் கருத்துக்களின் தொகுதியாகும். சமூகத்தில் பல்வேறு அரசியல் கருத்தியல்கள் இருக்க முடியும். பெரும்பாலும் அரசியல் கட்சிகளும் இந்த கருத்தியல்களின் அடிப்படையிலேயே கட்டியெழுப்பப்பட்டிருக்கும். அரசாங்கம் ஒன்று நடைமுறைப்படுத்தும் கொள்கைகளும் கருத்தியல்களுக்கு ஏற்பவே தோற்றம் பெற்றவைகளாக இருக்க முடியும். எனவே, அரசியல் கருத்தியல் என்பது அரசியல் தொடர்பாக கல்விசார் ஆய்வுக்கு உட்படுத்தப்படும் அரசியலின் முக்கியமானதொரு பிரிவாகும்.

## 1.4. அரசறிவியல் அணுகு (ஆய்வு) முறைகள்

அரசறிவியலானது பரந்த விடயப்பரப்புகளை உள்ளடக்கியுள்ளதால் அதன் ஆய்வு முறைகள் பலவற்றையும் உள்ளடக்கிய கற்றல் துறையாக உள்ளது. அதன் பாடப்பரப்பைப் போலவே அதன் ஆய்வு முறைகளும் நீண்டகால வரலாற்றைக் கொண்டு வளர்ந்துள்ளது. இந்த வளர்ச்சியில் இருபதாம் நூற்றாண்டில் ஏற்பட்ட விருத்தி முக்கியமானதாகும். இருபதாம் நூற்றாண்டிலேயே அரசறிவியல் சுயாதீன அறிவியல் கற்கை ஒன்றாக தன்னை அடையாளப்படுத்தியது. அதேப்போன்று அரசறிவியலில் ஆய்வு முறைகளாக இன்று நாங்கள் கருதுகின்றவைகளில் பெரும்பாலானவை இருபதாம் நூற்றாண்டில் வளர்ச்சி அடைந்தவைகளாகும். இவை சமூகவியல் மற்றும் மானிடவியல் துறைகளில் ஏற்பட்ட விருத்தி மற்றும் பரிமாற்ற உள்ளடக்கத்திலேயேயாகும்.

அரசறிவியல் அணுகுமுறைகள் சில

- ❖ தத்துவார்த்த / மெய்யியல் அணுகுமுறை
- ❖ ஒப்பீட்டு அணுகுமுறை
- ❖ பன்மைத்துவவாத அணுகுமுறை

- ❖ விஞ்ஞான அணுகுமுறை (நடத்தைவாதம்)
- ❖ அரசியல் பொருளியல் அணுகுமுறை
- ❖ சமூகவியல் அணுகுமுறை
- ❖ பெண்ணியல்வாத அணுகுமுறை

### 1.4.1. தத்துவார்த்த / இலட்சியவாத அணுகுமுறை (Philosophical / Normative Approach)

- அரசியல் ஆய்வில் முதலில் பயன்படுத்தப்பட்டதும் நீண்டகால நிலைப்பினைக் கொண்டதுமான அணுகுமுறை இதுவாகும்.
- பிளேட்டோ மற்றும் அரிஸ்டோட்டில் இதன் முன்னோடிகளாவர்.
- ஐரோப்பிய அரசியல் சிந்தனையின் பிரதான சக்தியாக இருந்த சிசரோ, சென் ஒகஸ்டின், மக்கியாவல்லி, தோமஸ் ஹொப்ஸ், ஜோன் லொக், இம்மானுவேல் காண்ட், ஹெகல், காள்மாக்ஸ் போன்றோர் இந்த அணுகுமுறையினை முன்வைத்தவர்களில் பிரதானமானவர்கள்.
- இருபதாம் நூற்றாண்டின் சிந்தனையாளர்களில் மகாத்மாகாந்தி, எனா எரேண்டி, ஜோன் ரோல்ஸ், சார்ள்ஸ் டெய்லர் மற்றும் யேகன் ஹபர்மஸ் போன்றோர் முக்கியமானவர்கள்.
- இந்த சிந்தனையாளர்களின் தத்துவங்களில் பல்வேறு வேறுபாடுகள் காணப்பட்டப்போதும் இவர்களிடையே பொதுவான முக்கிய அம்சங்கள் இரண்டினை கண்டுக்கொள்ள முடியும்.

    I. இவர்கள் அரசறிவியலாளர்களாகவன்றி அரசியல் தத்துவவியலாளர்களாக காணப்பட்டமை.

    II. இவர்கள் அனைவரும் அரசியலை இலட்சிய (Normative) கோணத்திலேயே பார்த்தமை.

**தத்துவவியல் அணுகுமுறையின் அடிப்படைப் பண்புகள் மூன்று உள்ளன.**

I. உலகம் தொடர்பான அடிப்படைவாத (Fundamental) வினாக்களை வினவுதலும் அவற்றை விசாரனை செய்தலும்

உதாரணங்கள் :-

- உலகம் என்பது யாது?
- உலக இருப்பு எவ்வாறு இடம்பெறுகிறது?
- உலகம் தொடர்பில் அறிவியல் ரீதியாக நோக்க முடியுமா?
- மனித வாழ்க்கை மற்றும் இருப்பிற்கு அர்த்தம் உண்டா?
- வாழ்க்கை என்பது யாது?

அரசியல் தொடர்பில் தத்துவவியலாளர்கள் விசாரணை செய்யும் அடிப்படை வினாக்களுக்கான உதாரணங்கள்

- அரசியல் என்பது யாது?
- அரசு என்பது யாது? அது என்ன நோக்கத்திற்காக உள்ளது?
- அரசிற்கு மக்கள் ஏன் அடிபணிய வேண்டும்?
- அரசு மற்றும் ஏனைய சமூக நிறுவனங்களுக்கிடையில் காணப்படும் தொடர்பு யாது?

போன்ற வினாக்கள் இன்றும் கலந்துரையாடப்படுகின்ற அரசியல் தத்துவவியலாளர்களால் முன்வைக்கப்படும் அடிப்படை வினாக்களாகும்.

II. தத்துவவியலாளர்கள், உலகை விளக்கிக் கொள்வதற்கு நாங்கள் பயன்படுத்தும் எண்ணக்கருக்களின் விளக்கத்தினை தீர்த்துக்கொள்ளவும், உறுதிப்படுத்திக்கொள்ளவும் விசேட ஈடுபாட்டினை காட்டல்.

உதாரணம் : நீதி, நியாயம், சமத்துவம், சுதந்திரம், உரிமைகள் போன்ற அரசறிவியலின் அடிப்படை எண்ணக்கருக்களின் ஆழமாக தேடுதல்.

III. இலட்சியவாத அணுகுமுறை அரசியலின் இலட்சிய நோக்கங்கள் மீது காட்டும் அதிக ஈடுபாடு.

- இலட்சியம் (Normative) என்பதன் விளக்கம் "பெறுமானங்களின் முடிவுகளை" உள்ளடக்கியது என்பதாகும்.
- உலகில் ஏற்படும் விடயங்கள் குறித்து எம்மிடம் நல்லவை / தீயவை, சாதகம் / பாதகம் என்ற வகையில் பெறுமானத் தீர்மானங்கள் உண்டு. அவ்வாறானவையே இலட்சிய பெறுமானத் தீர்மானங்களாகும்.

உதாரணம் :- கடுங் குற்றமிழைத்த ஒருவருக்கு மரண தண்டனையை கட்டாயமாக்க வேண்டுமா? என்பது தொடர்பில் நன்மை / தீமை, சாதகம் / பாதகம் எனும் வகையில் பெறுமானங்கள் தொடர்பாக தீர்ப்பனவுகள் உண்டு.

அதேப்போன்று உலக நிகழ்வுகள் தொடர்பாக பண்புரீதியான மதிப்பீட்டு அளவீட்டுக் கருவிகளை எமக்கு வழங்குவதும் இலட்சிய எண்ணக்கருவின் மூலமாகும்.

உதாரணம் :- சுதந்திரம், சமத்துவம், நியாயத்தன்மை

- உலகத்தை மிகவும் சிறந்த இடமாக மாற்றுவது எவ்வாறு என சிந்திப்பதற்கு எமக்கு உதவி வழங்குவது இலட்சிய நோக்கங்களாகும்.

உதாரணம் :- (i). சமூகம் சமத்துவத்தை மதிப்பளிக்கப்பட வேண்டும்

(ii). அரசியல் ஜனநாயக வழிமுறைக்குட்பட வேண்டும்

❖ அரசியல் தத்துவவியலில் இலட்சிய எண்ணக்கருக்கள் சற்று உயர் மட்டத்திலான இரு அர்த்தங்களை வழங்குவதற்காக பயன்படுத்தப்படுகின்றது.

I. அரசியல் சிந்தனைகள், ஆய்வு மற்றும் விபரிப்பு போன்றே அரசியல் நிறுவனங்கள் மற்றும் நடைமுறைகள் சமூகத்தின் பொது எதிர்ப்பார்ப்புகள், நல்வாழ்வுக்காக பாடுபட வேண்டும்.

II. அரசியல் தோற்றப்பாடுகள் என்றால் என்ன? என்பதை மாத்திரம் விளங்கப்படுத்துவது அல்லாமல், அரசியல் நிறுவனங்கள் மற்றும் நடைமுறைகள் எவ்வாறு அமையவேண்டும் என்பதை முன்வைத்தலே அரசியல் ஆய்வின் நோக்காக அமைய வேண்டும்.

❖ இதுவரை எல்லா அரசியல் தத்துவவியலாளர்களினதும் சிந்தனையாக மேற்குறிப்பிட்ட இரு நோக்கங்களை அடிப்படையாக கொண்டே காணப்பட்டன.

❖ தத்துவவியல் / இலட்சியவாத அணுகுமுறையின் பிரதான பண்புகள்

I. இங்கு பயன்படுத்தப்படும் எண்ணக்கருக்களின் விளக்கங்களை ஆழமாக ஆய்வு செய்தல்.

II. அரசியல் உலகு தொடர்பாக காணப்படும் பிரதான முரண்பாடுகளை வெளிப்படுத்தி அவற்றினை விவாதிப்பது

III. அரசியல் சிந்தனை கட்டமைப்பின் நிறுவனங்கள் மற்றும் நடைமுறைகளை இலட்சிய பண்புகள் மற்றும் தியாகம் தொடர்பில் ஈடுபாடு காட்டல்.

### 1.4.2. ஒப்பீட்டு அணுகுமுறை

- ஒப்பீடு என்பதன் கருத்து "தொடர்புபடுத்துவது" என்பதாகும்.

- பிரதானமானதொரு அறிவு சார்ந்த காரணத்தினாலேயே ஒப்பீட்டு அணுகுமுறை முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகின்றது. அதாவது ஏதாவது சமூக அரசியல் தோற்றப்பாடு / பிரச்சினை / கருத்தியல் தொடர்பாக மிகவும் பூரணத்துவமான தெளிவொன்றைப் பெற்றுக்கொள்ள வேண்டுமாயின் அந்த தோற்றப்பாடு / பிரச்சினை / கருத்தியல் வெளிப்படும் ஒரு சந்தர்ப்பத்தில் மட்டுமின்றி பல சந்தர்ப்பங்களில் ஒப்பீட்டு ரீதியில் ஆய்வு செய்தல் மிகவும் விளைதிறன் மிக்கது என்பதேயாகும்.

  உதாரணம் I:- நாடொன்றின் அரசியல் இஸ்திரதன்மைக்கு கைகொடுக்கும் மிகச்சிறந்த அரசியலமைப்பு எது? என்பது பற்றிய பிரச்சினை ஆய்வுக்காக உலகத்தில் காணப்படும் ஜனாதிபதி மற்றும் பாராளுமன்ற அரசியலமைப்புகள் சிலவற்றை ஒப்பீட்டு ரீதியில் கற்ற முடியும்.

  உதாரணம் II:- முரண்பாடு உச்ச நிலையைப் பெற்ற நாட்டிலும், சாமாதனம் உறுதிப்படுத்தப்பட்டுள்ள நாட்டிலும் அரசியல் இஸ்திரத்தன்மைக்கு மிகவும் பொருத்தமான அரசியலமைப்பு எதுவென ஆய்வு செய்வதற்கு இம்முறையினை பயன்படுத்தல்.

  (ஆசிரியர் இதற்காக உதாரணங்களை வழங்கி கலந்துரையாட வேண்டும்)

- அரசியலை ஏன் ஓப்பீட்டு ரீதியாக கற்க வேண்டும்? என்பதற்கு கெனன் நியுட்டன் மற்றும் ஜோன் மெண்டஸ் ஆகியோர் "ஒப்பீட்டு அரசியலுக்கான அடிப்படை" (Foundation of Comparative Politics) எனும் கட்டுரையில் குறிப்பிட்ட விடயங்கள் முக்கியமானவை.

  1. தமது நாட்டின் அரசியலை சிறப்பாக விளங்கிக் கொள்வதற்கு வேறு நாடுகளின் அரசியல் பற்றிய அறிவை பெறல் முக்கியமானதாகும்.
  2. ஒவ்வொரு நாட்டினதும் அரசியல் வரலாறு, அரசியல் பின்புலம், அரசியல் நிறுவனங்கள் பற்றிய ஒப்பீட்டு ரீதியிலான அறிவில்லாமல் அந்நாடுகளின் அரசியல் பற்றிய சிறப்பான தெளிவினைப் பெற்றுக்கொள்ள முடியாது.

❖ ஒப்பீட்டு அணுகுமுறையின் பிரிவுகள் மூன்று உள்ளன.

(அ). பழைமை ஒப்பீட்டு அரசியல் அணுகுமுறை

(ஆ). இருபதாம் நூற்றாண்டின் ஒப்பீட்டு அரசியல் அணுகுமுறை

(இ). சமகால ஒப்பீட்டு அணுகுமுறை

(அ). பழைமை ஒப்பீட்டு அரசியல் அணுகுமுறை

இவ்வணுகுமுறை புராதன கிரேக்கம், உரோம், மத்தியகால ஐரோப்பிய அரசியல் சிந்தனைகள் ஊடாக பயணிக்கின்றது. அரிஸ்டோட்டல் தனது அரசியல் (*The Politics*) என்ற நூலில் அக்கால கிரேக்க குடியரசுகளில் காணப்பட்ட அரசியலமைப்பு வகைப்படுத்தலுக்கு ஒப்பீட்டு அணுகுமுறையினை பயன்படுத்தியுள்ளார். அரசாங்கங்களின் இயல்புகளை வகைப்படுத்துவதற்காக இவர் இருவகையான அளவீட்டு கருவிகளை பயன்படுத்தினார். அவை ஒன்று ஆட்சியாளர்களின் எண்ணிக்கை மற்றையது அரசாங்கம் ஊழல் மிக்கதா? என்பதாகும். அரசியலமைப்பு தொடர்பான ஒப்பீட்டு ஆய்வினை அடிப்படையாகக் கொண்டே அரிஸ்டோட்டில் கிரேக்கத்தில் நிலவிய அரசியல் அமைப்புகளை முடியாட்சி, உயர்குடியாட்சி, கொடுங்கோண்மையாட்சி, சில்லோராட்சி மற்றும் ஜனநாயக ஆட்சி என வகைப்படுத்தினார்.

(ஆ). இருபதாம் நூற்றாண்டின் ஒப்பீட்டு அரசியல் அணுகுமுறை

இது 1960 தசாப்தங்களின் பின்னர் அமெரிக்க பல்கலைக்கழகங்களில் விருத்தி அடைந்த ஒன்றாகும். இது அரசியல் ஆய்வினை விஞ்ஞான ரீதியான பின்புலத்தில் இருந்து ஆராயும் ஒன்றாக இருந்தது. அரசறிவியல் கோட்பாடுகளும், விதிமுறைகளும் இயற்கை விஞ்ஞான விதிமுறைகளுக்கு ஏற்றதான விஞ்ஞானமாக அமைய வேண்டும் என்ற கருத்தே விஞ்ஞான ரீதியான அரசறிவியல் பாடப்பரப்பின் பிரதான தர்க்கமாக இருந்தது. இங்கு அரசியல் யாப்போ அல்லது அரசியல் வரலாற்றையோ ஒப்பிடுவதல்லாமல் எதேட்சையாக அவதானிக்கக்கூடிய சமகால அரசியல் கருத்தியல்களின் அடிப்படையில் மாறுப்பட்ட அரசியல் முறைகளை (Political System) ஒப்பீட்டு கற்பதே ஒப்பீட்டு அரசியல் ஆய்வின் ஊடகமாக அமைய வேண்டும். அரசியல் நவீனமயமாதல், அரசியல் அபிவிருத்தி, அரசியல் கலாசாரம், அரசியல் சமூகமயமாதல் மற்றும் அரசியல் நடத்தை என்பனவே அவ்வாறான கருத்தியல்களாகும்.

இவ்வணுகுமுறையினை பயன்படுத்தி வெளியான அரசியல் நூல்கள் சில.

1. கெப்ரியல் ஏ. ஆல்மண்ட் (Gabrial A Almond) 1956 இல் வெளியிட்ட **"ஒப்பீட்டு அரசியல் முறை"** (*1956, The Journal of Politics*) என்ற நூலின் 18 ஆம் பதிப்பின் இலக்கம் 03.

2. கெப்ரியல் ஏ. ஆல்மண்ட் (Gabrial A Almond) மற்றும் ஜேம்ஸ் எஸ். கோல்மன் (Jems S, Kolmon) 1960 இல் வெளியிட்ட **"அபிவிருத்தியடைந்துவரும் பிராந்தியங்களின் அரசியல்"** (*The Politics of Developing Areas*) என்ற நூல்.

3. சீமூவர் மார்ட்டின் லிப்சட் (Seemoower Martin Lipsat) - **அரசியல் மனிதன்: அரசியலின் சமூக அடிப்படை** – 1960 (*Political Man: The Social Bases of Politics*) எனும் நூல்

4. கெப்ரியல் ஏ. ஆல்மண்ட் (Gabrial A Almond) மற்றும் சிட்னி வெப்பர் (Sidney Webber) 1963 இல் வெளியிட்ட **"பிரசைகளின் அரசியல் கலாசாரம்: ஐந்து நாடுகளின் அரசியல் மனப்பாங்கு மற்றும் ஜனநாயகம்"** (*The Civic Culture: Political Attitudes and Democracy in Five Nations*) என்ற நூல்

5. சாமுவேல் பீ. ஹன்டிங்டன் - **மாற்றமுறும் சமூகத்தில் அரசியல் ஒழுங்குமுறை** – 1968 (*Political Order in Changing Societies*) என்ற நூல்.

(இ). சமகால ஒப்பீட்டு அணுகுமுறை

சமகால ஒப்பீட்டு அரசறிவியலின் வரலாற்றை நோக்கும்போது கீழ்வரும் அம்சங்களை இனங்காணலாம்.

(i) இதன்போது ஆய்வுக்கு உட்படுத்தக்கூடிய பாரப்பரப்பு பெரும்பாலும் நெகிழ்வுத்தன்மை மிக்கதாகும். அரசியல் நிறுவனங்கள், அரசியல் நடவடிக்கைகள், அரசியல் நிலைமாற்றங்கள், சமூக அரசியல் முரண்பாடுகள், சமாதான நடவடிக்கைகள், அரசுகளின் இயல்பும் நிலைமாற்றமும், ஜனநாயக நிலைமாற்றத்தின் போக்குகள், பிரசைகளின் செயற்பாடுகள், இனவாத அரசியல், சிவில் சமூக அரசியல் செயற்பாடுகள், மனித உரிமைகள், பெண்களின் அரசியல் ஈடுபாடு போன்ற கருத்தியல்கள் உதாரணங்களாகும்.

(ii) அரசியல் அபிவிருத்தி மற்றும் ஜனநாயகம் தொடர்பான முன்மாதிரிகளின் ஊடாக பெற்றுக்கொள்ளப்பட்ட அளவீட்டு கருவிகளைப் பயன்படுத்தாது இருப்பதோடு அவ்வாறான முன்மாதிரிகள் அவசியமற்றவை என்பதையே ஒப்பீட்டு அரசியல் விபரிக்க வேணடும்.

(iii) ஒவ்வொரு நாட்டினதும் அரசியல் நடைமுறைகளில் இருந்து ஒப்பீட்டு கல்வியை பெயர்த்தெடுத்து அரசியல் விபரிப்பை பலப்படுத்துவதே ஒப்பீட்டு ரீதியான விபரிப்பின் நோக்கமாக இருக்க வேண்டும்.

### 1.4.3 பன்மைத்துவ அணுகுமுறை

அரசறிவியலுக்கு அப்பால் உள்ள துறைகளின் கோட்பாடு, எண்ணக்கருக்கள் மற்றும் விதிமுறைகளை அரசறிவியல் விபரிப்புக்கு பயன்படுத்தலே இவ்வணுகுமுறையில் இடம்பெறுகின்றது. அரசறிவியலின் வரலாற்றைப் பார்க்கும்போது அரசறிவியல் எப்போதும் ஏனைய பாடத்துறைகளோடு தொடர்புபட்டு போசிக்கப்பட்டுள்ளது என்பது தெளிவாகின்றது.

உதாரணம் :-

கிரேக்க யுகத்தில் - தத்துவவியல்

உரோம யுகத்தில் - இறையியல் சாஸ்திரம், வரலாறு மற்றும் சட்டவியல்

19 ஆம் நூற்றாண்டில் - அரசியல் பொருளாதாரம், வரலாறு, சட்டவியல்

20 ஆம் நூற்றாண்டில் - சமூகவியல், மானுடவியல், உளவியல், புவியியல், கலை, கலாசாரம்

**பன்மைத்துவ அணுகுமுறை அரசறிவியலுக்கு தேவைப்படுவதற்கான காரணங்கள் சில உள்ளன.**

- அரசியல் என்பது சமூகத்தில் ஏனைய அம்சங்களில் தனிமைப்பட்டு இருப்பதல்லாமல் அது அவற்றுடன் இணைந்துள்ளதும் சமூகத்தினால் மேலெழுந்துள்ள தோற்றப்பாடொன்றாக இருத்தல்.

  உதாரணம் :- ஜனநாயகம் மற்றும் சாதி முறைகளுக்குமிடையிலான தொடர்புகள். இது இலங்கையிலும் இந்திய அரசியல் கலாசாரத்திலும் உள்ள முக்கிய கருத்தியலாவதோடு, சிக்கலான நிலை ஒன்றையும் உருவாக்கும். இதனை சரியாக அறிந்து கொள்வதாயின் சமூகவியல் மற்றும் மானுடவியல் அணுகுமுறைகள் அரசறிவியல் ஆய்வுக்கு அவசியமாகும்.

**பன்மைவாதம் என்ற எண்ணக்கருவில் மூன்று விளக்கங்கள் உள்ளன.**

I. குறிப்பிட்ட பாடத்துறையாக அடையாளப்படுத்தப்பட்டிருந்தாலும் சமூகத்தின் ஏனைய பிரிவுகளுடன் அரசியலானது கூடிக் குறைந்தளவில் தொடர்புபடுகின்றது என்பதை ஏற்றுக்கொள்ளல்.

II. அரசறிவியலில் தனக்கே உரித்தான கோட்பாடு மற்றும் எண்ணக்கருக்கள் காணப்பட்டாலும் ஏனைய பாடப்பரப்புகளின் கோட்பாடுகள் மற்றும் எண்ணக்கருக்களோடு இது தங்கியிருப்பது மற்றும் அதன் மூலம் போசிக்கப்படுவதும்.

III. கோட்பாடு மற்றும் எண்ணக்கருக்களுக்கு மேலாக விதிமுறைகள் தொடர்பிலும் அரசறிவியலில் ஏனைய பாடத்துறைகளின் விதிமுறைகளோடு தொடர்புபடலும் அதன் மூலம் போசிக்கப்படுவதும்.

## 1.4. விஞ்ஞான (நடத்தைவாத) அணுகுமுறை

- ''அரசறிவியல்'' என்பதற்கு இருபதாம் நூற்றாண்டின் விளக்கமே ''விஞ்ஞான விதி முறைகள்'' (Scientific Method) என்பதை பயன்படுத்தி அரசியலை ஆய்வு செய்தல் என்பதாகும்.

- இந்த புதிய விளக்கம், அரசறிவியல் உண்மையான தூய விஞ்ஞானமாக மாற வேண்டுமாயின் அது இயற்கை விஞ்ஞானங்கள், பொருளியல் மற்றும் உளவியல் போன்றவற்றில் பயன்படுத்தப்படும் விஞ்ஞான விதிமுறைகளை தமது விதிமுறைகளாக பயன்படுத்தினால் மட்டுமேயாகும் எனும் கருத்து வெளிப்படுகின்றது.

- இது 1930 தசாப்தங்களிலும் 1940 தசாப்தங்களிலும் அமெரிக்க அரசறிவியலாளர் குழுவொன்றின் பிரசித்திபெற்ற கருத்தொன்றபகும்.

- சமூக, பொருளாதார மற்றும் அரசியல் என்பவற்றில் செய்யப்படும் ஆய்வுகளில் ''செல்லுபடியானதன்மை'' ''நம்பகத்தன்மையான'' மற்றும் ''சரியான'' அறிவினை கட்டியெழுப்ப அவற்றின் முறைகள் விஞ்ஞான ரீதியிலான திசைக்கு மாற்றப்படல் வேண்டும் என்பதே பொருளாதார, சமூகவியலாளர்களுக்கிடையில் வேரூன்றியிருந்த கருத்துக்களாக இருந்தன.

- அந்த புதிய பாதை என்பது தூய விஞ்ஞானங்கள் அப்போது வெற்றிகரமாக பயன்படுத்தியிருந்த ''விஞ்ஞான ரீதியிலான'' மற்றும் ''மெய்ப்பிக்ககூடிய'' விதிமுறைகளாகும்.

### ❖ விஞ்ஞான அணுகுமுறையின் மூலக்கொள்கைகள்

- ''மெய்ப்பிக்கக்கூடிய ஆய்வுகள்'' மூலம் பெற்றுக்கொள்ளப்படும் விடயங்கள், சான்றுகள் மற்றும் தரவுகளை அடிப்படையாகக் கொண்ட அறிவினை உருவாக்குவதே சமூக, அரசியல் கற்கையின் இலக்காகும். கண்காணிப்பு மற்றும் ஆய்வு செய்யக்கூடிய விடயங்கள் மற்றும் தரவுகளை சமூக அரசியல் தோற்றப்பாடுகள் தொடர்பில் அறிந்துக்கொள்வதே ''மெய்ப்பிக்கக்கூடிய ஆய்வில்'' இடம்பெறுகின்றது.

- விஞ்ஞான ரீதியாக கட்டியெழுப்பப்படும் சமூக – அரசறிவியல் விபரிப்பு ''நோக்கம்'' சார்ந்ததாக (Objective) இருத்தல் வேண்டும். அதாவது, விஞ்ஞான ரீதியாக கட்டியெழுப்பப்படும் ''அறிவு'' எமது தனிப்பட்ட அதாவது ''சுய'' முடிவுகளின் நம்பிக்கைகள் ஆகியவற்றிலிருந்து விடுபட்டிருக்கவேண்டும் என்பதோடு, விஞ்ஞான ரீதியான அரசியல் அறிவு ஆய்வாளரின் தனிப்பட்ட முடிவுகளில் இருந்து விடுபட்டதாக இருத்தல் வேண்டும் என்ற கொள்கையாகும்.

- அத்தோடு சமூக – அரசியல் தோற்றப்பாடுகள் தொடர்பில் நாம் கட்டியெழுப்பியுள்ள அறிவு மற்றும் முடிவுகள், பெறுமானங்களின் முடிவுகள் இன்றி (Value Free) இருத்தல் வேண்டும்.

- ஏதேனும் தோற்றப்பாடு தொடர்பாக ஆராயும்போது அதன் சரி பிழை, நன்மை தீமை என்ற தீர்மானங்களை முன்வைக்க கூடாது என்பதோடு மெய்ப்பிக்கக்கூடிய மற்றும் நோக்கமைந்த தரவுகள், சான்றுப்படுத்தலை மையப்படுத்தி மட்டும் பகுப்பாய்வு செய்தல், கண்காணிப்பு மற்றும் முடிவுகளை உருவாக்கிக் கொள்ள வேண்டும்.

- இங்கு இயற்கை விஞ்ஞான விதிமுறைகளில் இருந்து சமூக விஞ்ஞானத்திற்குள் பிரவேசித்தலே "பெறுமானங்கள் விடுவிக்கப்பட்ட அறிவு" (Value free knowledge) என்பதே இதில் உள்ளடக்கப்பட்ட மூலக்கொள்கையாகும். இது தூய விஞ்ஞான முறையில் இருந்து சமூக விஞ்ஞானத்திற்கு கொண்டுவரப்பட்ட மூலக்கொள்கையாகும்.

- **விஞ்ஞான அணுகுமுறையும் நடத்தைவாதமும்**

- அரசறிவியலில் நடத்தைவாதம் (Behaviorism / Behavioualism) என்பது மனிதனின் அரசியல் நடத்தையை ஆராய்வதை பிரதானமாகக் கொண்ட விஞ்ஞானப்பூர்வ அரசறிவியல் விடயப்பரப்பாகும்.

- 1920 இல் ஆரம்பமாகி 1930 – 40 தசாப்தங்களில் பிரசித்தி பெற்ற வகையில் அரசியல் நிகழ்ச்சி நிரலின்மீது எந்தளவு தாக்கத்தை ஏற்படுத்தியது என்றால், இந்த தலையீடு "நடத்தைசார் விடுதலை" என 20ஆம் நூற்றாண்டில் அரசறிவியலின் பரவல் தொடர்பில் காணப்பட்ட கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டது.

- மெய்ப்பிக்கக்கூடிய ஆய்வுக்கு உட்படுத்தக்கூடிய அரசியல் உலகத்தை, சமூகத்தின் தனிநபர்களின் அரசியல் செயற்பாடுகளினுள் செயற்படும் முறை, அதாவது அரசியல் நடத்தை மற்றும் அந்த நடத்தைகளில் தாக்கம் செலுத்தும் விடயங்கள் என்பதே நடத்தைவாதத்தின் பிரதான தர்க்கமாக இருந்தது.

- தனிநபர்கள் அரசியல் செயற்பாடுகளில் ஈடுபடுகின்றனர். அரசியலில் தீர்மானம் மேற்கொள்கின்றனர். தமது அரசியல் நடத்தைகளில் தாக்கம் செலுத்தும் அரசியல் நம்பிக்கை மற்றும் கருத்தியல்கள் அவர்களுக்கு உண்டு. இவையே அரசியல் நடத்தைகளாகும். இந்த நடத்தையை மெய்ப்பிக்கக்கூடிய ஆய்வுக்கு உட்படுத்த முடியும். இம்மெய்ப்பிக்கக்கூடிய ஆய்வின்மூலம் போதுமான தரவுகளை பெறமுடியும்.

  உதாரணம் :- தேர்தல்களில் வாக்காளர்கள் வாக்களித்தல் தொடர்பாக மெய்ப்பிக்கக்கூடியதும் அளவு ரீதியான தரவுகளை இலகுவாகப் பெற்றுக்கொள்ள முடியும். இந்த தரவுகளை ஆண் / பெண், கல்வி மட்டம், தொழில், கிராம / நகர, வயது எனும் மட்டத்தில் வகைப்படுத்த முடியும். இதனை அடிப்படையாகக் கொண்டு தரவுகளை பகுப்பாய்வு செய்து நடத்தை கோலங்கள், போக்குகள், குணவியல்புகள், எண்ணிக்கையிலான தரவுகள் மூலம் (அட்டவணை, வரைபுகள், வீதங்கள் துணையுடன்) பெறுபேறுகளை பெற்றுக்கொள்ள முடியும்.

- **நடத்தைவாதத்தின் அண்மைக்கால போக்குகள்**

- பிரசைகளின் அரசியல் பங்குப்பற்றல் (Political Participation) தொடர்பில் ஆய்வு செய்வதே நடத்தைவாத ஆய்வுகளின் அண்மைக்கால போக்காக அமைகின்றது. இது மெய்ப்பிக்கக்கூடிய ஆய்வுகளின் மூலம் பகுப்பாய்வு செய்யக்கூடிய செயற்பாடாகும். அமெரிக்க நடத்தைவாதிகள் அண்மைக்காலமாக இது தொடர்பில் பெரிதும் அக்கறை காட்டியுள்ளனர்.

- நடத்தைவாதம் 1920 தசாப்தங்களில் ஆரம்பிக்கப்பட்டு 1950 – 1960 தசாப்தங்களில் அது அனைத்தையும் கட்டுப்படுத்தும் பிரிவாக மாறினாலும் 1970 களில் பின்னர் பின்னடைவு அடைந்துள்ளது.

- இதன் மீது காணப்பட்ட விமர்சனம் என்னவெனில் அரசியல் நடத்தையினை மட்டும் ஆய்வு செய்தலில் அவதானம் செலுத்துவதன் மூலம் அரசறிவியல் விபரிப்பின் விடயப்பரப்பு சுருங்குவதற்கு பெரிதும் காரணமாக அமைந்தது என்பதாகும்.

- அரசியல் நடத்தை, அரசியலின் ஒரு பிரிவு மட்டுமே என்பதால் ஏனைய பிரிவுகளை கருத்திற் கொள்ளாமை அவற்றின் அரசியல் முக்கியத்துவத்தினை இல்லாது செய்துள்ளது பேலாகும்.

- இதன்படி 1970 தசாப்தங்களில் நடத்தைவாத அணுகுமுறையின் முக்கியத்துவம் குறைவடைந்து தத்துவார்த்த, வரலாற்று மற்றும் சமூகவியல் அணுகுமுறைகளின் முக்கியத்துவம் மீண்டும் மேலெல தொடங்கியது.

- இந்த மாற்றங்களோடு நடத்தைவாதமானது 1970, 80 தசாப்தங்களில் பின் நடத்தைவாத (Post Baheviaral) காலகட்டத்திற்குள் வந்தது. மெய்ப்பிக்கக்கூடிய மற்றும் **அனுபவம்சார்** அரசியல் குருகுலத்தின் ஆதிக்க நிலையும் வீழ்ச்சி அடைந்தமை இந்த காலகட்டத்தின் மற்றுமொரு போக்காகும்.

- இம்மாற்றத்திற்கு மாக்ஸ்வாதம் - நவ மாக்ஸ்வாதம் - லிபரல்வாதம், தத்துவார்த்த - பெண்ணியல்வாதம் மற்றும் பின் நவீனத்துவவாதம் போன்ற பாடத்துறைகளினால் ஏற்பட்ட சவால்கள் காரணமாகின.

### 1.4.5 அரசியல் பொருளாதார அணுகுமுறை

அரசியல் பொருளாதார அணுகுமுறை (Political Economy Approach) தற்போது முற்றுமுழுதாக மாக்ஸ்வாத கோட்பாடு மற்றும் அணுகுமுறையிலேயே அடையாளப்படுத்தப்படுகின்றது. 19ஆம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் தோற்றம் பெற்ற சிந்தனையான மாக்ஸ்வாதத்தின் தத்துவம், பொருளியல், அரசியலில் மற்றும் சமூக விஞ்ஞான பிரிவுகள் காணப்படுகின்றன.

அரசியல் பொருளியல் என்ற எண்ணக்கரு 18 ஆம் நூற்றாண்டில் ஐரோப்பிய சிந்தனையாளர்களாலேயே முதலில் பயன்படுத்தப்பட்டது.

- பொருள் உற்பத்தி
- சந்தைப்படுத்தல் / வர்த்தகம்
- தேசிய வருமானம்

போன்ற பொருளாதார செயன்முறைகள் அரசாங்கத்தின் கொள்கையோடு தொடர்புபடும் முறை, பொருளாதார செயன்முறைக்கு அரசாங்கத்தின் கொள்கைகளின் தாக்கம் என்பவற்றை ஆய்வு செய்வதே இதன் ஆரம்பகால நிகழ்ச்சிநிரலாக அமைந்தது. இதன் முக்கியமான சிந்தனையாளர்களாக

- எடம் ஸ்மித்
- டேவிஸ் ரிக்காடோ
- ஜோன் ஸ்வாட்மில்
- தோமஸ் மெல்தஸ் ஆகியோர் காணப்படுகின்றனர்.

கார்மாக்ஸ் அரசியல் பொருளியல் தொடர்பில் காணப்பட்ட இந்த சம்பிரதாய புரிதலை மாற்றியமைத்தார். பொருளாதார துறைப்பற்றி விரிவாக ஆய்வுசெய்வதோடு 19 ஆம் நூற்றாண்டின் அரசியல் பொருளியலாளர்கள் செய்யாத வகையில் கோட்பாட்டு முறைமை (A Theoritical System) ஒன்றை உருவாக்கியமை கார்ள்மாக்ஸின் விபரிப்பில் காணப்பட்ட நவீன மற்றும் விசேட பண்பொன்றாக இருந்தது. இவ்வணுகுமுறை ‘‘வரலாற்று

பொருள்முதல்வாதம்'' (Historical Materialism) என அடையாளப்படுத்தப்படுகிறது. இது மனித வரலாறு, சமூக கட்டமைப்பு, பொருளாதார, அரசியல் மற்றும் சிந்தனைகள் என்ற அனைத்தினதும் ஒட்டுமொத்தத்தையும் கருத்திற்கொண்டு, இந்த ஒட்டு மொத்தத்தினையும் அவை ஒவ்வொன்றினதும் பிரிவுகள் மற்றும் ஒட்டுமொத்தத்திற்கு இடையில் காணப்படும் தொடர்புகளை ஆராய்வதற்காக முன்வைக்கப்பட்ட கோட்பாட்டு மற்றும் விதிமுறை அணுகுமுறையாகும். இந்த வரலாற்று பொருள்முதல்வாத அணுகுமுறையின் பிரதான கோட்பாட்டின் அங்கங்கள் சிலவாகும். அவையாவன,

I. முழு சமூகத்தினதும் ஒட்டுமொத்தத்தை (Totality) கருதிக்கொண்டே மனித சமூகத்தை ஆய்வுசெய்யும்போது நாங்கள் அதற்காக உள்நுளைய வேண்டும். ''சமூக ஒழுங்கமைப்பு'' என்பது (Social Formation) இந்த சமூக ஒட்டுமொத்தத்தை அடையாளப்படுத்துவதற்காக உருவாக்கிக்கொண்ட கோட்பாட்டு எண்ணக்கருவாகும்.

II. சமூக ஒழுங்கமைப்பு பிரதானமாக இரு தளங்களிலானது. அவையாவன,

1. பொருளாதார அடிப்படை (Economic Base)
2. சமூக, அரசியல், கலாசார எண்ணங்களை உள்ளடக்கிய சிறப்பியல் (உச்ச) கட்டமைப்பு (Super Structure)

III. சமூக ஒழுங்கமைப்பின் உச்சக் கட்டமைப்பின், அதாவது சமூக, அரசியல், கலாசார மற்றும் கருத்தியல் சார்ந்த துறைகளில் ஏற்படும் பரிமாற்றங்கள், மாற்றங்கள் ஒன்றுக்கொன்று சுயாதீனமாக, தனிமைப்படுத்தப்பட்டு ஏற்படும் அபிவிருத்திகள் அன்று. இவற்றுக்கு ஓரளவு சுயாதீனத்தன்மை இருக்க முடியுமாக இருந்தாலும் பொருளாதர தளத்தில் ஏற்படுகின்ற செயற்பாடுகள், பரிமாற்றங்களின் பெறுபேறாகவும் அவற்றின் வெளியீடுகளாகவுமே இறுதி விபரிப்பில் இவ்வேறுபாடுகள் இடம்பெறுகின்றன.

IV. ''வர்க்க போராட்டமாமே'' (Class Struggle) பொருளாதார, சமூக மற்றும் அரசியல் பரிமாற்றத்தின் அடிப்படை நிலைமையொன்றாகும். இது சமூகத்தின் ஒன்றுக்கொன்று எதிரான அபிலாசைகளை உடைய வர்க்கங்களாக வகைப்படுத்தலின் விளைவேயாகும். பொருளாதார காரணிகளை அடிப்படையாகக் கொண்டு இப்பிரிவினைகள் நடைபெறுகின்றது. வர்க்கப் பிரிவுகளின் அடிப்படைலேயே சமூகத்தின் பொருளாதார வளங்களுக்கு உரித்துடைய அல்லது உரித்தில்லாத வகுப்புகள் வேறுபடுகின்றன. வர்க்கப் போராட்டமானது பொருளாதார பலமிக்க மற்றும் பலமற்ற வர்க்கங்களுக்கிடையில் நடைபெறுகின்றது.

பெரிதும் மெய்ப்பிக்கக்கூடிய / தர்க்கிக்கக்கூடிய நடத்தைவாத அரசியல் அணுகுமுறைகளுக்கு மாற்றுமுறையாகவே இந்த அடிப்படை மாக்ஸிய கோட்பாட்டின் கருத்தினை அடிப்படையாகக் கொண்டு அரசியல் பொருளாதார அணுகுமுறை அரசியல் பாடத்துறையில் பிரவேசித்தது.

அரசியல் பொருளாதார அணுகுமுறையில் அவதானம் செலுத்திய அரசறிவியலாளர்களால் முன்வைக்கப்பட்டுள்ள விஞ்ஞான / நடத்தைவாத அரசறிவியல் தொடர்பான விமர்சனங்கள் பல. அவை பின்வருமாறு,

I. அரசியலில் காணப்படும் சரியான, ஆழமான கருத்தியல்களை அல்லாமல் அதன் மேலாட்டமான வெளிப்பாடுகளையே நடத்தைவாத அரசறிவியல் உண்மையாக ஆராய்கின்றது.

II. நடத்தைவாத அரசறிவியல் அரசியல் ரீதியாக தொன்றுதொட்டு வருவதாகும். (மாற்றங்களுக்குட்படாது)

III. சமூகத்தின் அரசியல் கட்டமைப்புகளை மாற்றுதல் அல்லது மறுசீரமைப்பு செய்வதல்லாமல் அவற்றை அவ்வாறே கொண்டு செல்வதே நடைபெறுகின்றது. இது நடைமுறையில் உள்ள ஏகாதிபத்தியத்திற்கு ஒத்துழைப்பு வழங்குகின்றது.

மாக்ஸவாத ஈர்ப்பினை பெற்ற அரசியல் பொருளாதார அணுகுமுறையின் முக்கியமான சிந்தனையாளர்கள் முன்வைத்த மாற்று அரசியல் அணுகுமுறையின் பண்புகளும் பிரிவுகளும் பல பின்வருமாறு,

I. அரசியல் உலகத்தினை விபரிக்கும்போது அதில் காணப்படும் பொருளாதார, சமூக மற்றும் வகுப்பு மூலங்களையும் அடையாளம் கண்டு அதன் ஒட்டுமொத்தத்தை அண்மித்து தமது விபரிப்புகளை கட்டியெழுப்பியுள்ளமை.

II. அரசியல், பொருளாதார மற்றும் சமூக வர்க்க சாதனங்களினால் தீர்மானிக்கப்படுகின்றது என்பதை எற்றுக்கொள்கின்றமை.

III. அரசியலின் அதிமுக்கிய (Fundamental) கருத்தியலாக அதிகாரம், இறைமை, வகுப்பு பாகுபாடுகள், வர்க்க முரண்பாடுகள், அரசு, அதிகார எதிர்ப்பு சமூக வெளிப்பாடுகள் போன்றனவற்றை கருதுகின்றமை.

IV. அரசியல் ஆய்வு, சமூக, அரசியல், பொருளாதாரம் போன்ற துறைகளில் காணப்பட்ட அதிகாரத்துவம் மற்றும் அதிகாரக் கட்டமைப்பு தீவிர விமர்சனத்திற்கு உள்ளாக்கப்படவேண்டும் என்ற இலக்கோடு இருத்தல்.

V. சமூக, அரசியல் பரிமாற்றத்திற்கு விமர்சன அரசியல் ஆய்வு உதவ வேண்டும் என நம்புதல்.

### 1.4.6 சமூகவியல் அணுகுமுறை

சமூகவியல் (Socialogy) அரசறிவியலோடு மிக நெருங்கிய தொடர்புடைய விடயப்பரப்பாகும். இவ்விடயங்களிரண்டும் வெவ்வேறாக 19ஆம் நூற்றாண்டில் அமெரிக்க பல்கலைக்கழகத்தால் பிரிக்கப்பட்டது. 20ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் இவ்வேறுபடுத்தல் உறுதிப்படுத்தப்பட்டாலும் அந்த விடயங்கள் இரண்டுக்குமிடையில் இடைவினைத்தொடர்புகள் இன்றும் காணப்படுகின்றன. “அரசியல் சமூகவியல்” (Political Sociology) அரசியல் மற்றும் சமூகவியல் அணுகுமுறைகளுக்கிடையில் காணப்படும் அந்யோன்ய ஏற்புடைமையில் கட்டியெழுப்பட்ட அரசறிவியலும் சமூகவியலினதும் ஒரு உப பிரிவாகும்.

அரசறிவியல் கற்றை மற்றும் விபரிப்பு, சமூகவியல் கோட்பாடுகள், அணுகுமுறை மற்றும் விதிமுறைகளில் பெரும்பாலும் பலனை பெற்றுள்ளன. அத்தோடு 19, 20 ஆம் நூற்றாண்டுகளின் முதற்பகுதியில் இவ்விடயப்பரப்புகள் இரண்டும் ஒன்றுக்கொன்று தொடர்புபட்டே காணப்பட்டது.

- 20ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் ஆகஸ்ட் கொம்டே, காள்மாக்ஸ் மற்றும் மெக்ஸ்வெபர் போன்ற சிந்தனையாளர்கள் நவீன அரசறிவியலினதும் சமூகவியல் கோட்பாடுகளினதும் முன்னோடிகளாவர்.

- 20 ஆம் நூற்றாண்டின் மத்திய காலத்தில் மிகவும் திறமையான ஆய்வாளர் குழுவொன்றுடன் பென்க்பேர்ட் குருகுல கல்வியை ஆய்வுசெய்த துறைகள் அரசறிவியல், சமூகவியல் ஆகிய இரண்டோடும் தொடர்புடையதாக காணப்பட்டது.

❖ அரசறிவியலில், சமூகவியல் மற்றும் மானிடவியல் துறையின் செல்வாக்கின் பயன்கள் அரசறிவியல் விதிமுறைகள் மற்றும் கோட்பாடுகள் ஆகிய இரு அம்சங்களிலும் காணலாம்.

- கருத்தியல் ரீதியாக சமூகவியல் ஆய்வு எப்பொழுதும் சமூக கட்டமைப்பு, சமூக அமைப்புகள், சமூக அலகுகள் மனிதன் மற்றும் சமூகத்திற்கிடையிலான தொடர்பு, சமூக வர்க்கம், சமூக பரிமாற்றம் மற்றும் இவையனைத்தோடும் தொடர்புற்று நடைபெறும் மனித செயற்பாடுகளை விளங்கிக் கொள்ளும் நோக்கிலேயே நடைபெறுகின்றன.

- மனிதனின் சமூக செயற்பாடுகள் பற்றி சமூக கலாசார மதம் போன்ற பிரிவுகளுக்குள் மிகவும் நெருங்கியவகையில் ஆய்வு செய்வதிலேயே சமூகவியலின் உப பிரிவான மானிடவியல் ஈடுபாடு காட்டுகிறது.

- அரசறிவியல் ஆய்வு செய்கின்ற சில பிரச்சினைகள் மற்றும் கருத்தியல்கள் தொடர்பாக சமூகத்தை மையப்படுத்திய பரந்த மற்றும் ஆழமான தெளிவொன்றினைப் பெற்றுக்கொள்ள மேற்குறிப்பிட்ட சமூகவியல் மற்றும் உளவியல் அணுகுமுறையும் மிகவும் பயனுடையதாகும்.

  உதாரணம் :

  அரசியல் கட்சிகள் என்பவை அரசறிவியல் ஆய்வில் முக்கியமானதொரு கருத்தியலாகும். அரசறிவியலாளர்கள் கட்சிகள் தொடர்பாக பின்வரும் சம்பிரதாய விடயங்கள் தொடர்பில் ஆய்வு செய்தனர்.

  - கட்சிகளின் வேலைத்திட்டங்கள்
  - தேர்தல் விஞ்ஞாபனம்
  - கட்சிகளின் வரலாறு
  - கட்சித் தலைவர்களின் உரைகள்
  - பத்திரிகை செய்திகளில் வெளியிடப்படும் தகவல்கள்
  - கட்சித் தலைவர்களின் கலந்துரையாடல்கள்

  இவை சமூகத்தினுள் செயற்படும் முறையின் மிகவும் முக்கியமான பக்கங்களாகும். எனினும் இது அரசியல் கட்சிகள் தொடர்பில் முழுமையான விபரிப்பினை செய்யவில்லை.

❖ அரசியல் மற்றும் அரசியல் கட்சிகள் என்பன சமூகத்தில் செயற்படும் முறையை விளங்கிக் கொள்ள எமக்கு சமூகவியல் மற்றும் மானிடவியல் அணுகுமுறைகள் பெரிதும் பயனுடையனவாகும். அரசியலில் பிரசைகள் ஏன் பங்குப்பற்றுகின்றனர்? கிராமிய மற்றும் சமூக மட்டத்தில் அரசியல் அதிகாரம் யாரிடம் உள்ளது? சொத்து, சாதி, குடும்ப பின்னணி, பால்நிலை (ஆண் பெண் தன்மை) போன்ற அம்சங்கள் பிரசைகளின் அரசியல் கட்சிகளின் செயற்பாட்டில் எவ்வாறு தாக்கம் செலுத்துகின்றன? அரசியல் மற்றும் அரசியல் கட்சிகளிடம் சமூக ரீதியாக காணப்படும் தொடர்புகளை விளங்கிக் கொள்வதற்கு இதுபோன்ற வினாக்களுக்கு நாம் விடை காண்பது அவசியமாகும். எனினும் அதற்கான அணுகுமுறை மற்றும் விதிமுறைகள் தேவை. அரசறிவியல் இதற்காக சமூகவியல் மற்றும் மானிடவியல் அணுகுமுறை என்பவற்றை இதற்கு விளைதிறன் கொண்டதாக பயன்படுத்த முடியும்.

### 1.4.7 பெண்ணியல்வாத அணுகுமுறை

அரசியல் மற்றும் சமூக ஆய்வுகளில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்திய பெண்ணியல்வாதம் கற்கை நெறியாக 1970 களில் மாற்றமடைந்தது. இது பெண்ணியல்வாத கற்கைத் துறையின் பிரதான பிரிவாகும். பெண்ணியல்வாத

அணுகுமுறை அரசியல் தொடர்பில் அதிமுக்கிய வினாக்களை எழுப்பியது மட்டுமின்றி ''அரசியல்'' என்ற எண்ணக்கருவின் விளக்கத்தையும் விருத்தி செய்தது.

அரசியல் விபரிப்பின்போது பெண்ணியல்வாதம் தொடர்பில் எழுப்பப்பட்ட வினாக்கள் பாரம்பரிய அரசறிவியலின் பல்வேறு பிரச்சினைகளில் இருந்து பெரிதும் மாறுப்பட்டது.

உதாரணமாக,

I. அரசியல் என்ற துறையில் ஏன பெண்கள் புறந்தள்ளப்பட்டுள்ளனர்?

II. அரசியல் துறையை ஆண்களின் துறையாக தொடர்ந்தும் பேண வேண்டுமா?

III. சமூக வரலாற்றின் ஊடாக பெண்கள் இரண்டாம் நிலைக்கு, ஓரங்கட்டப்படலுக்கு, துன்பத்திற்கு மற்றும் பாரபட்சம் காட்டுதலுக்கு ஆளாக்கப்பட்டிருப்பது ஏன்? அவ்வாறு செய்வதை தொடர்ந்தும் வைத்திருப்பதா?

IV. பெண்களை துன்பத்திற்கு உள்ளாக்கும் சமூக, அரசியல், கலாசார கருத்தியல் கட்டமைப்புகள் யாவை?

V. சமூக மற்றும் மனித விடுதலை தொடர்பில் லிபரல்வாதம் மற்றும் சமவுடைமைவாதங்களின் அனுபவங்கள் போதுமானதா?

இவ்வாறான வினாக்களை ஆராய்வதன் மூலம் பெண்ணியல்வாதத்தின் அரசியல் மற்றும் சமூக விபரிப்புக்கு புதிய கோட்பாடு / எண்ணக்கருக்களின் வகைகள் பல சேர்த்துக்கொள்ளப்பட்டன.

- பால்நிலை (Gender)
- ஆண் பெண் தொழில் வேறுபாடுகள் (Male-Female Division of Labour)
- ஆண் தலைமைத்துவம் (Patriarchy)
- பெண் துன்புறுத்தல் (Women's Oppressions)
- ஆண் மையவாதம் (Androcentrism)
- ஆணாதிக்கம் (Male Domination)
- பெண் விடுதலை (Women's Liberation)

போன்ற எண்ணக்கருக்கள் இதில் முக்கியமானவையாகும்.

அரசறிவியல் ஆய்வு விமர்சனம் மற்றும் கோட்பாடுகள் பெண்ணியல்வாத அணுகுமுறையினால் மாற்றமடைந்த முறையை பின்வருமாறு சுருக்கிக் கூறலாம்.

(i). அரசு, அரசியல் அதிகாரம், ஜனநாயகவாதம், பொதுவுடைமைவாதம், சுதந்திரம், சமத்துவம், நீதி, நியாயத்தன்மை, உரிமைகள், பாரபட்சம் காட்டுதல், சுரண்டல், அழுத்தம், எதிர்ப்பு, அரச கொள்கை, பிரசாவுரிமை போன்றன அரசறிவியலில் காணப்படும் அதிமுக்கிய எண்ணக்கருக்களாகிய இவை அனைத்து பால்நிலை (Gender) என்ற பிரிப்பு தொடர்பில் மீளாய்வுக்கு உட்படுத்தலும் அவற்றின் விடயப்பரப்புகளில் பால்நிலை தொடர்பான அணுகுமுறைகளை சேர்த்தல்.

(II). வகுப்பு, இனம், சமூகம், பிரசை போன்றன அரசறிவியலின் அதிமுக்கிய அடையாள எண்ணக்கருக்களில் ஆண் பெண் பால்நிலையை இணைத்துக்கொள்ளல்.

(III). அரசியல் என்பது பொதுமக்கள் அமைப்பின்மூலம் (Public Sphere) நடைபெறும் செயற்பாடாகும் என கிரேக்கத்தில் காணப்பட்ட அரசியல் தத்துவவியலாளர்களினால் ஆரம்பிக்கப்பட்ட கருத்தினை மாற்றி தனியாள் பங்குப்பற்றலில் (Private Sphena) அரசியல் நடைபெறும் துறையாக ஏற்றுக்கொள்ளல்.

(IV). மனிதன் மற்றும் சமூக விடுதலையும் (Emancipation) தொடர்பில் பாரம்பரிய தத்துவத்திற்கு பெண்கள் விடுதலை (Emancipation of Women) என்பதையும் இணைத்துக்கொள்ளல்.

**முன்மொழியப்படும் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள்**

1. பின்வரும் எடுத்துக்காட்டுக்களுக்கு அமைய வினாக்களைத் தயாரிப்பதற்கு மாணவ / மாணவியருக்கு வழிப்படுத்தல்.

உதாரணம் 01 :- மெய்யியல் ஆய்வில் ஈடுபட்ட அரசியல் சிந்தனையாளர்கள் இருவரின் பெயர்களை குறிப்பிடுக.

I. ……………………………………..

II. ……………………………………..

உதாரணம் 02 :- பின்வரும் நூல்களை எழுதிய அரசியல் சிந்தனையாளர்கள் யாவர்?

I. குடியரசு ……………………………………

II. அரசியல் ……………………………………

2. பின்வரும் தலைப்புகளின் கீழ் குழு முன்வைப்புகளை திட்டமிட்டு வகுப்பில் முன்வைக்கவும்.

அரசறிவியலின்

I. தத்துவார்த்த / மெய்யியல் அணுகுமுறை

II. ஒப்பீட்டு அணுகுமுறை

III. பன்மைத்துவவாத அணுகுமுறை

IV. விஞ்ஞான (நடத்தைவாத) அணுகுமுறை

V. அரசியல் பொருளாதார அணுகுமுறை

VI. சமூகவியல் அணுகுமுறை

VII. பெண்ணியல் அணுகுமுறை

**உசாத்துணைகள்**

01. கல்வி வெளியீட்டுத்திணைக்களம் (2007), அரசறிவியலின் மூலக்கொள்கைகள் I, கொழும்பு, கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.

02. Goodin, Robert E (ed) (2009), The Oxford *Hand book of Political Science*, Oxford, Oxford University Press.

03. Grisby, Elleen, (2009), *Analizing Politics: An introduction to Political Science*, Belmont, CA, USA: Cengage Learning.

04. Heywood, Andrew, (2013), *Politics*, London: Palgrave Macmillan.

05. Hineman, Robert A (1995), Political Science An Introduction, New York, Mc Graw Hill Provessional.

# அரசறிவியலில் உள்ளடக்கப்படும் உப துறைகள்

**தேர்ச்சி 02:** அரசறிவியல் பாடத்துறையில் உள்ளடங்கும் கருப்பொருட்களை அறிந்து அரசறிவியலை அறிந்துக் கொள்வதற்காக தன்னை தயார்ப்படுத்திக்கொள்வார். (பாடவேளைகள் - 20)

**தேர்ச்சி மட்டம்** :

2.1. அரசறிவியலில் பாடத்துறைக்குட்பட்ட கருப்பொருட்களின் இயல்புகளையும் உள்ளடக்கத்தையும் கற்பார்.

2.2. சமூகத்தில் அரசியல் வாழ்வில் அவற்றின் பணிகளை விமர்சிப்பார்.

**கற்றற் பேறுகள்** :

- அரசறிவியல் பாடப்பரப்பில் உள்ளடங்கும் கருப்பொருட்களை பெயரிட்டு விளக்குவார்.
- ஒவ்வொரு கருப்பொருட்களும் அரசறிவியல் கற்கைப் பாடத்துறையை முழுமைப்படுத்தும் விதத்தை விளக்குவார்.
- அக்கருப்பொருட்கள் தொடர்பான அரசியல் உலகு தொடர்பில் விமர்சன ரீதியாக சிந்திப்பதற்கு பயன்படுத்துவார்.

**அறிமுகம்** :

அரசறிவியலானது சுமார் 24 நூற்றாண்டுகள் வளர்ச்சியடைந்தும் பரிணாமம் பெற்றதுமான புலமைசார் கற்கையாகும். அரசறிவியலின் தற்போதைய பாட உள்ளடக்கம் பற்றி அறிந்து கொள்வதே இவ்வலகின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது.

புராதன கிரேக்க காலத்தில் இருந்து தற்காலம்வரை அரசியல் ஆய்வு உள்ளடக்கும் உப பிரிவாக அரசியல் தத்துவத்தினைக் குறிப்பிடலாம். அரசியல் செயல்முறையில் பிரதான பணியினை மேற்கொள்ளும் மற்றுமொரு அம்சமாக அரசியல் கருத்தியல்கள் காணப்படுகின்றன. நவீன அரசியல் மற்றும் சமூக சிந்தனைகள் சமூகத்தில் இடம்பெறும் சமூக நிகழ்வுகளை ஒன்றிணைத்து ஏன் அவ்வாறு இடம்பெறுகின்றன என்பதை விளக்கும் அரசியல் கோட்பாடுகள் அதன் மற்றுமொரு முக்கிய துறையாகும். அரசறிவியலில் முக்கியம் பெறும் மற்றுமொரு கருப்பொருள் அரசியல் நிறுவனங்களாகும். முறைசார் மற்றும் முறைசாரா என்ற வகைப்படுத்தல்கள் மூலம் இந்நிறுவனங்கள் கற்கப்படும். இதன்படி இத்தேர்ச்சி அரசியல் தத்துவம், அரசியல் கருத்தியல்கள், அரசியல் கோட்பாடுகள் மற்றும் அரசியல் நிறுவனங்கள் போன்ற கருப்பொருட்களினூடாக கற்க எதிர்ப்பார்க்கப்படுகின்றது.

## விடயப்பரப்பை விளங்கிக் கொள்வதற்காக வழிகாட்டல்கள்

2. அரசறிவியல் பாடத்துறை உள்ளடக்கிய துறைகளை அறிந்துக் கொள்ளல்.

## 2.1. அரசியல் தத்துவம்

அரசியல் தத்துவமானது பிரதானமாக மூன்று கருப்பொருட்கள் தொடர்பில் கவனம் செலுத்துகின்றது.

(அ). அரசியல் விபரிப்பில் பயன்படுத்தப்படும் எண்ணக்கருக்களின் வரைவிலக்கணங்களை தெளிவுப்படுத்தல்.

உதாரணம் : அரசு, அதிகாரம், பிரசாவுரிமை, சுதந்திரம், உரிமைகள், சமத்துவம்.

(ஆ). அரசியல் தொடர்பில் காணப்படும் அடிப்படை பிரச்சினைகளை வெளிப்படுத்தி அவற்றை ஆய்வு செய்தல்.

உதாரணம் : அரசு என்பது யாது? அரசு ஏன் அவசியமாகின்றது? அரசின் தோற்றம் எவ்வாறானது? அரசியல் என்பது யாது?

(இ). அரசியல் செயற்பாடு, அரசியல் நிறுவனம், அரசக் கொள்கைப் போன்றவற்றுக்கு வழிகாட்டும் இலட்சிய **கோட்பாடுகளை** முன்மொழிதல்.

உதாரணம் : சுதந்திரம், சமத்துவம், நியாயத் தன்மை (ஒப்புரவு), பொதுநலன், சமூக விடுதலை.

புராதன கிரேக்க யுகத்தில் இருந்து தற்காலம் வரை அரசியல் தத்துவவியல் கரிசனைக் கொண்டிருந்த கருப்பொருட்களில் நீதி, நியாயத் தன்மை, உரிமைகள், சுதந்திரம், சமத்துவம், அரசியல் விடுதலை, அரசின் இயல்புகள் மற்றும் நோக்கங்கள் என்பவற்றை முன்வைக்க முடியும். எவ்வாறாயினும் இந்த கருத்தியல்கள் தொடர்பாக அரசியல் தத்துவவியலாளர்களிடையே பொது இணக்கப்பாடு காணப்படாததோடு, இவை ஒவ்வொன்றும் கலந்துரையாடல்களுக்கும், விவாதத்திற்கும், கருத்தாடல்களுக்கும் உட்படுத்தப்பட்டு தனிமையாக்கப்பட்ட கருத்தியல்களாக காணப்படுகின்றன.

அரசியல் தத்துவம் கரிசனை கொள்ளும் கருப்பொருட்கள் மற்றும் அதனை ஆய்வு செய்த தத்துவவியலாளர்கள் தொடர்பான இலகுவான விளக்கத்தினை கீழுள்ள அட்டவணையினை அவதானிப்பதன் மூலம் பெற்றுக்கொள்ள முடியும்.

| கருத்தியல் | தோற்றம் / மத்தியகால மற்றும் தற்கால அரசியல் தத்துவவியலாளர்கள | சமகால அரசியல் தத்துவவியலாளர்கள் |
|---|---|---|
| நீதி / நியாயத் தன்மை | பிளேட்டோ, அரிஸ்டோட்டில், புனித ஒகஸ்தீன், புனித அக்குவானாஸ், தோமஸ் ஹொப்ஸ், டேவிட் கியும், இமானுவேல் காண்ட், ரூசோ, ஜோன் ஸ்வாட் மில், கார்ள் மாக்ஸ் | ஜோன் ரோல்ஸ், ரொபட் நோஸிக், மைக்கல் செண்டல், மார்த்தா நஸ்பவுன், மகாத்மா காந்தி |
| சமத்துவம் | அரிஸ்டோட்டில், ஹொப்ஸ், ஜோன் லொக், ரூசோ, மில், மாக்ஸ், எலக்ஸி டி தொக்வில், ஹேர்பட் ஸ்பென்சர், ஹியுகோ குரோசியஸ், இமானுவேல்ட் காண்ட், மில், மாக்ஸ் | மகாத்மா காந்தி, மைக்கல் ஹோல்ட்டர், சார்ள்ஸ் டெய்லர், ரொனால்ட் டிவோகின் |
| உரிமைகள் | காண்ட், தொக்வில், லொக், ஹியும், அடம்ஸ்மித், மாக்ஸ், மொண்டஸ்கியூ | ஆயிஷா பேர்லின், ரொனால்ட் டிவோகின், ஜோன் ரோல்ஸ், சார்ள்ஸ் டெய்லர் |
| சுதந்திரம் | பிளேட்டோ, அரிஸ்டோட்டில், ஹொப்ஸ், லொக், மாக்ஸ், ஜெரமி பெந்தம் | ஆயிஷா பெர்ளின், பெற்றிக் ஹயக், ஜோன் ரோல்ஸ், பிலிப் பெட்டி |
| அரசியல் இயல்பு | பிளேட்டோ, அரிஸ்டோட்டில், சென் ஒகஸ்தின், மாக்கியவல்லி, ஹொப்ஸ், லொக், ரூசோ, காண்ட், ஹெகல், மாக்ஸ் | சி. ரைட்மில், யேஹேன் ஹபர்மஸ், சார்ள்ஸ் டெய்லர், மிஷேல் பூகோ |
| அரசின் இயல்பு | ஹொப்ஸ், லொக், ரூசோ, மாக்கியவல்லி, மாக்ஸ் | ஜோன் ரோல்ஸ், யேஹேன், ஹபர்மாஸ், சார்ளஸ் டெய்லர |

19 ஆம் நூற்றாண்டு வரை ஐரோப்பாவில் தத்துவவியலுக்கு அரசியல் ஆய்வில் உயர் இடம் கிடைத்தாலும், இருபதாம் நூற்றாண்டின் மத்தியப் பகுதியில் அது ஓரளவு பின்னிலை அடைந்தது. அவ்வாறானதொரு நிலையை அடைவதற்கு அரசறிவியலில் விஞ்ஞான எதிர்வாதங்கள் மேலெழுந்த பின்னணியிலாகும். எவ்வாறெனினும் 1970 தசாப்தங்களின் ஆரம்பத்தில் இருந்து மீண்டும் அரசறிவியலில் தத்துவவாதத்திற்கு முக்கியத்துவம் கிடைத்தது. அதனூடாக அரசறிவியல் விபரிப்பில் இழந்த நன்மதிப்பு மற்றும் இடம் என்பன மீண்டும் கிடைத்தது. இந்த மாற்றமானது 1971 ஆம் ஆண்டில் அரசியல் தத்துவஞானி ஜோன் ரோல்ஸ் அவர்களின் *A Theory of Justice* (**நீதி தொடர்பான கோட்பாடுகள்**) என்ற கட்டுரையினை அடிப்படையாகக் கொண்டே ஏற்பட்டது. இதனோடு தத்துவஞானிகள், அரசறிவியலாளர்கள் மற்றும் சமூகக்கோட்பாட்டாளர்களுக்குமிடையில் ஏற்பட்ட கலந்துரையாடல்கள் மற்றும் விவாதங்கள் அரசியல் தத்துவவியலை மீண்டும் மேல்நோக்கி கொண்டு வருவதற்கு அடிப்படையாக அமைந்தது.

## 2.2. அரசியல் சிந்தனைகள்

- தராண்மைவாதம் (லிபரல்வாதம்), சமவுடைமைவாதம், ஜனநாயகவாதம், சமூக ஜனநாயகவாதம், பாஸிசவாதம், அரச பொதுநலவாதம், நவ லிபரல் வாதம், தேசியவாதம் போன்ற அரசியல் கருத்தியல்கள் உலக அரசியலில் பாரிய செயற்பாடுகளை மேற்கொண்டவைகளாகும்.
- அரசியல் கருத்தியல் என்பது சமூகத்தின் அரசியலுக்கு அழுத்தம் கொடுக்கும், அரசியல் செயற்பாட்டிற்கும் அதன் போக்கிற்கும் வழிகாட்டும், சமூகத்தின் பெரும்பான்மையோரை ஈர்த்துக்கொள்ளும் அரசியல் கருத்துக்கள் மற்றும் நம்பிக்கையினைக் கொண்ட உறுதியான கருத்துக்களின் தொகுதியாகும். எந்தவொரு அரசியல் சிந்தனையும்,
    - ❖ ஒவ்வொன்றும் வேறுப்பட்ட கருத்துக் தொகுதிகளால் ஆனது.
    - ❖ சமூகத்தின் வெவ்வேறு பிரிவுகளின் அரசியல் அறிவு, நம்பிக்கை மற்றும் நோக்குகளை உருவாக்குவதோடு இருக்கும்.
    - ❖ சமூக பிரிவுகளை அரசியல் செயற்பாடுகளில் ஈடுபடுத்துவதற்கான வாய்ப்பைப் கொண்டிருக்கும்.
    - ❖ இவற்றை மூன்று உதாரணங்களின் மூலம் தெளிவுப்படுத்தலாம்.

I. **லிபரல்வாதம்**

- அரசியல் கருத்தியலாக லிபரல்வாதத்தின் பிரதான மூலக்கொள்கையாக அமைவது தனிமனித சுதந்திரமாகும். தனியாள் சுதந்திரம், சமூக சுதந்திரத்தின் அடிக்கல் என்றும், இது பொருளாதார, சமூக, கலாசார போன்ற துறைகளில் மூலக்கொள்கையாக அமையவேண்டும் என்றும் லிபரல்வாதம் நம்புகின்றது.
- லிபரல்வாதம் வரலாற்று ரீதியாக ஐரோப்பாவில் மானிய முறை வீழ்ச்சியோடு ஏற்பட்ட முதலாளித்துவ பின்புலத்திலேயே அபிவிருத்தியடைந்தது.
- சுதந்திர சந்தை தொடர்பாக லிபரல்வாத பொருளாதார மூலக்கொள்கை ''சுதந்திரம்'' பற்றிய லிபரல்வாத கருத்தோடு தொடர்புற்றிருந்தது. அரசியல் துறையும் ''சுதந்திரம்'' ஆனதாக இருக்க வேண்டும் என்ற லிபரல் அரசியல் கருத்தியல், பின்னர் ஜனநாயகவாதத்துடன் இணைந்தது. ''லிபரல் ஜனநாயகவாதம்'' இவ்வாறே தோற்றம் பெற்றது.
- நடைமுறை உலகத்தில் அரசியல் நிறுவன மூலக்கொள்கைகள் மற்றும் பிரயோகங்களை ஒழுங்குப்படுத்துவதில் லிபரல்வாத அரசியல் கருத்தியல்கள் பிரதான காரணியாகவுள்ளன. இவ்வாறு லிபரல்வாத்தினை மையப்படுத்தி கட்டியெழுப்பப்பட்ட நிறுவனங்கள், மூலக்கொள்கைகள் மற்றும் பிரயோகங்கள் பின்வருமாறு,

- 19 ஆம் நூற்றாண்டின் இரண்டாம் அரைப்பகுதியில் ஆரம்பமான சமவுடைமைவாதம் இருபதாம் நூற்றாண்டின் பிரபல அரசியல் கருத்தியலாக பரவலடைந்தது. இது லிபரல்வாதத்திற்கும் முதலாளித்துவவாதத்திற்குமான விமர்சனமாகவும் மாற்றீடாகவுமே தோற்றம் பெற்றது.

- 19 ஆம் நூற்றாண்டின் முதல் அரைப்பகுதியில் பிரான்ஸ், ஜேர்மனி மற்றும் பிரித்தானியா போன்ற நாடுகளில் ஏற்பட்ட கைத்தொழில் புரட்சியுடன் ஏற்பட்ட சமூக பொருளாதார முரண்பாடுகளோடு, சமவுடைமைவாதிகளால் முன்வைக்கப்பட்ட பிரதான கருத்தாவது சமூக சமத்துவம் மற்றும் சொத்துக்களின் பொது உரிமை என்பதாகும்.

- இந்த அடிப்படைக் கருத்து மேலும் விரிவடைந்து ‘‘சமவுடைமைவாதம்’’ என்ற பிரபல கருத்தியலாக மாக்ஸ்வாதத்தால் மாற்றப்பட்டது. மாக்ஸ்வாதத்தினால் முன்வைக்கப்பட்ட பிரதான கருத்து முதலாளித்துவத்தை பிரட்டிப்போட்டு, தொழிலாளர் வர்க்கம் ஆட்சி செய்யும் வர்க்கமாக மாற்றும் சமூக புரட்சி என்பதே உண்மையான சமவுடைமையை ஏற்படுத்தும் என்பதாக அமைந்தது.

- இருபதாம் நூற்றாண்டு அரசியலினுள் சமவுடைமைவாதம் பிரதான பணிகள் நான்கினை ஆற்றியுள்ளது.

(அ) சுதந்திரம், சமத்துவம் மற்றும் சமூக அரசியல் விடுதலை தொடர்பாக லிபரல்வாத கருத்தியலுக்கான பிரதான மாற்றீட்டினை கட்டியெழுப்பியமை.

(ஆ) முதலாளித்துவ ஜனநாயகவாத அரசியல் முறைமைக்கு மாற்றீடாக சமவுடைமை அரசு தொடர்பான இலட்சியத்தினை முன்வைத்தமை.

(இ) முதலாளித்துவத்தோடிணைந்த பாரிய உழைப்புச்சுரண்டல், சமூக துன்பியல் மற்றும் சமூக அசமத்துவம் தொடர்பாக பாரிய விமர்சனங்களை முன்வைத்து பாதிக்கப்பட்ட மக்கள் குழுவின் சமத்துவம், உரிமை மற்றும் சமூக விடுதலை தொடர்பான கருத்தியலை அரசியல் சிந்தனையின் மையமாகக் கொண்டுவந்தமை.

(ஈ) ஐரோப்பாவிலும், ஐரோப்பா தவிர்ந்த ஏனைய உலகத்திலும் சமூக / அரசியல் சுதந்திரத்திற்காக மக்கள் இயக்கங்களுக்கு வழிகாட்டிய பிரதான அரசியல் கருத்தியலாக காணப்பட்டமை.

I. **தேசியவாதம்**

- பத்தாம் நூற்றாண்டு தொடக்கம் உலகம் முழுவதும் காணப்பட்ட பிரதான கருத்தியலாகும்.

- இது முதலில் ஐரோப்பாவில் தோன்றி பின்னர் ஆசிய, ஆபிரிக்க மற்றும் இலத்தின் அமெரிக்க நாடுகளிலும் பிரபல அரசியல் கருத்தியலாக மாறியது.

- அரசியல் கருத்தியலாக தேசியவாதம் செய்துள்ள மற்றம் இன்றும் செய்துகொண்டிருக்கும் பணிகள் பல உள்ளன.

(அ) தேசியவாதமென்பது, அரசாக ஒன்றிணையக்கூடிய பொது அடையாளம் உள்ள அரசியல் சமூகங்களாக தங்களாலேயே எண்ணப்படும் கருத்தியல் மற்றும் எண்ணக்கருவினை மக்களுக்கு வழங்குவதை குறிக்கும். மொழி, மதம், கலாசாரம் மற்றும் நிலப்பிரதேசம் அந்த பொது சமூகமாக மக்கள் தங்களை சிந்திப்பதற்கு இடம்கொடுக்கும் அடையாள சாதனங்களாகும்.

(ஆ) நவீன தேசிய அரசுகள் (Nation - State) அடிப்படையில் தேசியவாதத்தினால் தேசம் மற்றும் அரசு பற்றி எண்ணும் அடிப்படையிலேயே கட்டமைக்கப்பட்டுள்ளது. நிலத்தொடர்பு, கலாசார ஒற்றுமை, தேசியம் மற்றும் அரசு என்பன ஒன்றுக்கொன்று சமமானவகையில் இருக்க வேண்டும் என்ற நவீன அரசின் அடிப்படைக் கொள்கையும் தேசியவாத அரசியலின் பல்வேறு முன்வைப்பாகவே வந்துள்ளது.

- இதற்கமைய, அரசியல் கருத்தியல்கள் சமூக அரசியல் சிந்தனையில் விஞ்ஞான மற்றும் நடைமுறையோடு நெருக்கமாக இணைந்திருந்தாலும் அரசியல் நிறுவனங்கள் மற்றும் அரசியல் பரிமாற்றத்தின் பாதையினை ஒழுங்கமைக்க பங்களிக்கும் தீர்மானமிக்கதொரு அரசியல் சாதனமாகும் என்பது தெளிவாகின்றது.

## 2.3. அரசியல் கோட்பாடுகள்

நவீன அரசியல் மற்றும் சமூக சிந்தனையில் ''கோட்பாடு'' என்ற எண்ணக்கரு பொதுவாக சமூகத்தில் நடைபெறும் தோற்றப்பாடுகள் எவ்வாறு ஏற்படுகின்றது என்பதை தெளிவுப்படுத்தவும் விபரிக்கவும் கல்வியலாளர்கள் பயன்படுத்தும் விதிமுறைகளுக்கான கருவி ஒன்றாகவே பயன்படுத்தப்பட்டுள்ளது. கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள உதாரணங்களின் மூலம் இதனை விளங்கிக் கொள்ள முடியும்.

| நிகழ்வு | கற்றல் துறை | கோட்பாடு |
|---|---|---|
| ஆகாயத்தில் எறியப்படும் பொருள் ஏன் பூமியை வந்தடைகின்றது? வேறு திசைக்கு செல்லாதது ஏன்? | புவியியல் வாதம் | புவியீர்ப்புக் கோட்பாடு |
| சந்தையில் பொருட்களுக்கான தட்டுப்பாடு ஏற்படும்போது அவற்றின் விலை உயரக் காரணம் என்ன? | பொருளியல் | கேள்வி நிரம்பல் கோட்பாடு |
| சமூக பொருளாதார பரிமாற்றம் நடைபெறும் பொழுது சில சமூகப் பிரிவுகளுக்கிடையில் முரண்பாடு ஏற்படுவது ஏன்? | அரசறிவியல் | ஒப்பீட்டு நயக் கோட்பாடு (ஒப்பீட்டு தேய்மானக் கோட்பாடு) (Relative Deprivation Theory) |

விஞ்ஞானத்தில் ''கோட்பாடு'' எனப்படுவது சிறு எண்ணக்கருவாக சூத்திரப்படுத்தக்கூடிய, காராண காரிய தொடர்புகளின் அடிப்படையில் கட்டியெழுப்பப்படும் விஞ்ஞான ரீதியான வெளிப்பாடாகும். உலகின் இயற்கையாகவோ அல்லது சமூக அல்லது அரசியல் ரீதியாகவோ உலகத்தில் நாம் கண்காணிக்கும் நிகழ்வுகள் ஒவ்வொன்று பற்றியல்லாமல் அவை உள்ளடக்கப்பட்ட பல பிரிவுகள் பற்றிய விபரிப்புகள் பலவற்றின் அதாவது ஒட்டுமொத்த தோற்றப்பாடுகள் பற்றிய விபரிப்பு மற்றும் வெளிப்படுத்துதே விஞ்ஞான ரீதியான கோட்பாடு பொதுவாக மேற்கொள்ளும் செயற்பாடுடாகும். இதன்படி கோட்பாடு என்பது உலகில் ஏற்படும் பொது தோற்றப்பாடுகள் பற்றிய தெளிவுப்படுத்தல்களை மேற்கொள்ள விஞ்ஞானிகள் பயன்படுத்தும் கற்றல் கருவியாகும். கோட்பாடு உருவாக்கப்படல் இயல்பானதும் சமூகவியலாளர்களின் ஒரு முக்கிய விடயமுமாகும். அரசறியலில் கோட்பாடு என்பதற்கு இரு விளக்கங்கள் உள்ளன.

1. இலட்சிய கோட்பாடு (நியதிவாதம்) (Normative Theory)

2. விஞ்ஞான (தர்க்க) ரீதியான கோட்பாடு (Scientific Theory)

- இலட்சிய கோட்பாடு என்பது அரசியல் தத்துவம், அரசியல் சிந்தனையுடன் ஒன்றிணைக்கப்பட்ட கோட்பாடாகும். இது பிளோட்டோ முதல் இன்றுவரை காணப்படும் அரசியல் தத்துவங்களை சம்பிரதாயங்களுடன் தொடர்புபட்டுள்ளது. இந்த சம்பிரதாயங்கள் பிரதானமாக அரசியல், அரசு, அரசியல் அதிகாரம், ஆட்சிசெய்தல் மற்றும் சமூகக் கொள்கைகள் எவ்வாறு அமைய வேண்டும் என்பதை முன்வைக்கும் சித்தாந்த மூலக்கொள்கைகளே (Axiomatic Principles) அரசியல் கோட்பாடுகளாக முன்வைக்கப்பட்டுள்ளன. அரசு தொடர்பான அரிஸ்டோட்டலின் கோட்பாடு, சமூக ஒப்பந்தம் தொடர்பான ெ□ாப்ஸ் மற்றும் லொக் என்போரின் கோட்பாடு, அதிகாரம் தொடர்பான லிபரல்வாதிகளின் கோட்பாடு போன்றன இலட்சியவாத கோட்பாடு தொடர்பாக தோற்றம் பெற்றுள்ள உதாரணங்களாகும்.

    - சட்டம் தொடர்பான ஜோன் ரோல்ஸின் கோட்பாடு, குடியரசுவாத சுதந்திரம் தொடர்பான பிலிப் பெட்டியின் கோட்பாடு, சமூக பரிமாற்றம் தொடர்பாக ெ□பர்மாஸின் கோட்பாடு போன்றன இருபதாம் நூற்றாண்டின் உதாரணங்களாக குறிப்பிடலாம்.

- **விஞ்ஞான கோட்பாடு**

    - அரசறிவியலில் விஞ்ஞான ரீதியான கோட்பாடு தொடர்பான கருத்துக்கள் 1930 களில் இணைந்தது. அது சமூகவியலாளர்களின் ''விஞ்ஞான ரீதியிலான பார்வை'' என்ற பின்புலத்திலாகும். இந்த விஞ்ஞான ரீதியான சமூகவியல் சம்பிரதாயத்தினுள் கோட்பாடு என்பது இயற்கை விஞ்ஞான சம்பிரதாயத்தினுள் கோட்பாடு எண்ணக்கருவாக்கப்பட்ட முறையிலேயே விளக்கப்பட்டது. அதாவது உலகத்தில் நடைபெறுவனவற்றை ஏன் அவ்வாறு ஏற்படுகின்றது என்பதை சட்டத்திற்கு ஏற்ப தெளிவுப்படுத்துவதே கோட்பாட்டின் பணியாகும். கோட்பாடு என்பது இவ்வாறான சட்டங்களை கட்டியெழுப்புவதாகும். இதன்படி கோட்பாடு என்பது இயற்கையாகவோ அல்லது சமூக அல்லது உலகத்தில் நடைபெறுவனவற்றை தெளிவுப்படுத்தும் சட்டமாகும். மெய்பிக்கக்கூடிய தரவுகள் மற்றும் சான்றுகளை கண்காணித்தலுக்கும் பகுப்பாய்வுக்கும் உட்படுத்தி உருவாக்கப்படும் ''சட்டத்'' தொகுதிகளே விஞ்ஞானிகள் தமது ஆய்வுகள் மூலம் கோட்பாடுகள் என கட்டியெழுப்பியுள்ளனர்.

    - சமூகவியலில் இது நேர்கணிய கட்டமைப்புக்குள் உருவாக்கப்பட்டுள்ளமையால் அரசறிவியலில் இவ்வகையான கோட்பாட்டு விடயங்களை ''நேர்கணிய அரசியல் கோட்பாடுகள்'' (Positivisit Political Theory) என அறியப்படுகின்றது. நடத்தைவாதம், ஒப்பீட்டு அரசியல் விஞ்ஞான விபரிப்பு, அரசியல் நவீனமயமாதல் மற்றும் அரசியல் முறைமை கட்டமைப்புகள் என்பன 1930 தசாப்தங்களின் பின்னர் தோற்றம் பெற்ற அரசறிவியல் அணுகுமுறைகள் இந்த தோற்றப்பாட்டின் அடிப்படையிலேயே அரசியல் கோட்பாடுகளாக நோக்கப்படுகின்றன.

- தற்கால அரசறிவியலில் நாம் மேற்குறிப்பிட்ட இலட்சியவாத மற்றும் விஞ்ஞானப்பூர்வம் என்ற இரு அணுகுமுறைகளும் பயன்படுத்தப்படும். இதற்கிடையில் இருபதாம் நூற்றாண்டு மற்றும் சமகால அரசறிவியல் கோட்பாட்டுத்துறை, அணுகுமுறைகள் பலவற்றை உள்ளடக்கியுள்ளது என்பதை எங்களால் அவாதானிக்க முடிகின்றது. இவ்வாறான பிரதான கோட்பாட்டு பிரிவுகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன. அவையாவன,

  (அ) தாராண்மை அரசியல் கோட்பாடு

  (ஆ). குடியரசுவாத அரசியல் கோட்பாடு

  (இ). மாக்ஸ்வாத அரசியல் கோட்பாடு

  (ஈ). பின் மாக்ஸ்வாத கோட்பாடு

  (உ). அரசியல் நவீனமயமாதல் கோட்பாடு

  (ஊ). பெண்ணியல்வாத அரசியல் கோட்பாடு

  (எ). பின் நவீனத்துவ / பின் கட்டமைப்புவாத அரசியல் கோட்பாடு

  (ஏ). பின்காலனித்துவ அரசியல் கோட்பாடு

## 2.4. அரசியல் நிறுவனங்கள்

சமூகத்தில் அரசியல் பல்வேறு முறைகளில் நிறுவனமயப்படுத்தப்பட்டுள்ளமை, பெரும்பாலான அரசியல் செயற்பாடுகள் மற்றும் நடைமுறைகள் அரசியல் நிறுவனங்களை சார்ந்து ஒழுங்கமைக்கப்பட்டுள்ளமையினாலும் அரசியலை ஆராயும்போது நாங்கள் அரசியல் நிறுவனங்கள் தொடர்பாக கரிசனை காட்டுகின்றோம். பொருளியல், சமூகவியல், கல்வியல், அரசறிவியல் மற்றும் சட்டம் போன்ற கற்கைத்துறைகள் பலவற்றிலும் ‘‘நிறுவனம்’’ பற்றிய ஆய்வுகள் தமது கற்றலுக்கு முக்கியமானதாக கருதப்படுகின்றது.

நிறுவனங்கள் தொடர்பாக கற்கும்போது, கண்டுக்கொள்ளக்கூடிய விடயங்கள் அவை சட்டரீதியான விதிமுறைகள், நடத்தைகளை என்பனவற்றை உள்ளடக்கிய அமைப்பெனும் நிலையிலேயோ காணக்கூடியதாக உள்ளது. இதற்கிடையில் சமூகத்தில் காணப்படும் நிறுவனங்கள் சிற்சில நோக்கங்களுக்காக கட்டியெழுப்பப்பட்ட நிறுவனங்களாவும் இருக்கும்.

❖ சமூகத்தில் காணப்படும் நிறுவனங்களை முறைசார் (Formal) மற்றும் முறைசாரா (Informal) என வகைப்படுத்தலாம்.

  ❖ பாடசாலை, பல்கலைக்கழகம், நகரசபை, பாராளுமன்றம் போன்ற நிறுவனங்கள் முறைசார்ந்தவையாகும். இவை முறையான சட்டத்திட்டங்கள், நபர்கள் மற்றும் கட்டிடங்கள் என்பவற்றுடன் கூடிய புலப்படும் நிறுவனமாகும்.

  ❖ குடும்பம், உறவுமுறை, குலம், சாதி, தந்தை தலைமைத்துவம் போன்றன சமூகத்தில் காணப்படும் முக்கிய நிறுவனங்களானாலும், இவை முறைசாரா இயல்பிலேயே காணப்படுகின்றன. இது எங்கள் முன் புலப்படாவிடினும் அதன் இருப்பு செயற்பாடுகள் மற்றும் பெறுபேறுகளை கண்டுக்கொள்ள முடியும்.

அரசியல் ஆய்வோடு தொடர்புடைய பிரதான நிறுவனங்கள் நான்கு பற்றி இந்த அலகில் கவனம் செலுத்த வேண்டும். அரசு மற்றும் அரசாங்கம், அரசியல் கட்சிகள், அமுக்கக் குழுக்கள், சிவில் சமூகம் என்பன அவையாகும்.

## 2.4.1. அரசும் அரசாங்கம் ஓர் அரசியல் நிறுவனமாக

- ❖ எந்தவொரு சமூகத்திலும் காணப்படும் அடிப்படை மற்றும் மையமான அரசியல் நிறுவனங்கள் அரசும் அரசாங்கமுமாகும். சமூகத்தில் காணப்படும் ஏனைய பெரும்பாலான அரசியல் நிறுவனங்கள் அரசு மற்றும் அரசாங்கத்தினாலேயே தோற்றுவிக்கப்பட்டுள்ளன.

உதாரணம் :- பாராளுமன்றம், அமைச்சரவை, நீதித்துறை, உள்ளூராட்சி நிறுவனங்கள், ஆயுதப்படைகள், பொலிஸ், சிறைச்சாலை, பாடசாலை, பல்கலைக்கழகம், திணைக்களங்கள் போன்றன.

- ❖ அரசும் அரசாங்கமும் ஒன்றுக்கொன்று தொடர்புப்பட்டாலும் இவை இரண்டும் ஒன்றல்ல. நவீன ஜனநாயக அரசியல் முறையில் அரசு என்பது ஒப்பீட்டு ரீதியாக நீண்டகாலம் நிலைத்திருக்கும் சமூகத்தில் காணப்படும் அதிமுக்கிய அரசியல் நிறுவனமாகும். அரசாங்கம் என்பது அரச செயற்பாடுகள் மற்றும் பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்காக மக்களால் குறுகிய காலத்திற்கு அதிகாரம் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ள நிறுவனமொன்றாகும்.

- ❖ ஆரம்பகால ஜனநாயக அரசியல் முறையில் அரசு மற்றும் அரசாங்கம் என்பவற்றுக்கிடையில் இவ்வாறான வேறுபாடுகள் காணப்படவில்லை.

- ❖ உதாரணம் :- அரசாட்சி முறையில் பொதுமக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கம் இல்லாதிருந்ததோடு, அரசு மற்றும் அரசாங்கத்திற்கிடையில் வேறுபாடும் இருக்கவில்லை. அரசனே அரசாகவும், அரசாங்கமாகவும் இருந்தார்.

- ❖ அரசு மற்றும் அரசாங்கத்திற்கிடையில் நிறுவன ரீதியான வேறுபடுத்தல்கள் ஐரோப்பாவில் மானியமுறை அரசியல் கட்டமைப்பு மற்றும் அரசாட்சி முறைமை வீழ்ச்சியடைந்ததன் பின்னர் தோற்றம் பெற்ற லிபரல் ஜனநாயக அரசியல் முறையின் பிரதான பண்பாகியது.

- ❖ அரசியல் நிறுவனமாக அரசுபோன்ற மனித நிறுவனங்களும் உள்ளன. நவீன அரசு நிச்சயிக்கப்பட்ட ஆள்புல பிரதேசத்திலேயே ஒழுங்கமைந்துள்ளது. அரசுக்கு நிச்சயமான தேச எல்லை உண்டு. நிச்சயிக்கப்பட்ட ஆள்புல பிரதேசத்தினுள் அரசியல் ரீதியாக ஒழுங்கமைந்துள்ள பிரசைகள் மீது தமது ஆதிபத்தியம் மற்றும் அதிகாரம் என்பவற்றை வைத்திருக்கும் உரிமையும் ஆதிபத்தியமும் அரசுக்கு உண்டு. இது அரசறிவியலில் ‘‘இறைமை அதிகாரம்’’ என அடையாளப்படுத்தப்படுகின்றது. இந்த அதிகார பலத்தினை நிலைநிறுத்திக் கொள்வதற்காக இன்னும் பல நிறுவனங்கள் அரசுக்கு உண்டு. அரசாங்கம் அதில் ஒரு நிறுவனமாகும்.

- ❖ அரசியல் நிறுவனமாக அரசுக்கு அடிப்படை சட்டக் கட்டமைப்பும் உண்டு. அது அரசியலமைப்பாகும். அரசின் இயல்பு, கட்டமைப்பு, நிறுவன ஒழுங்கமைப்பு போன்றன அரசியலமைப்பினாலேயே தீர்மானிக்கப்பட்டிருக்கும். அத்தோடு தமது அதிகார பலத்தினை நடைமுறைப்படுத்துவதற்காக அரசு கொண்டுள்ள பிரதானமான நிறுவனங்களாக சட்டத்துறை, நிறைவேற்றுத்துறை, நீதித்துறை, ஆயுதப்படைகள் மற்றும் பணியகவாட்சி என்பன உள்ளன. இந்த எல்லா உப நிறுவனங்களுக்கும் நிச்சயமான சட்டத்திட்டங்கள், மனிதவளம் போன்றன காணப்படுகின்றன.

- ❖ அரசியல் நிறுவனமாக அரசாங்கம் அரசின் அதிகாரங்களை நடைமுறைப்படுத்தும் பிரதான முகவர் நிறுவனமாகவே செயற்படுகின்றது. சட்ட உருவாக்கம் மற்றும் நடைமுறைப்படுத்தல், கொள்கை உருவாக்கம் மற்றும் நடைமுறைப்படுத்தல், பொதுமக்களுடன் தொடர்புகளை பேணல் மற்றும் ஏனைய

அரசுகளுடன் தொடர்புகளை பேணல் என்பன அரசுக்காக அரசாங்கம் மேற்கொள்ளும் பிரதான பணிகளாகும்.

❖ ஒன்றுக்கொன்று வேறுபட்டாலும் ஒன்றுக்கொன்று தொடர்புடைய நிறுவன தொகுதியாக எடுக்கும்போது அரசு மற்றும் அரசாங்கம் நிறுவனங்கள் ஒழுங்கமைந்துள்ள முறையினை நான்கு கருத்தியல்களாக வகைப்படுத்த முடியும்.

1. சட்டவாக்க நிறுவனம் - பாராளுமன்றம், சமஷ்டி சட்டச்சபை, மாகாணசபைகள்

2. நிறைவேற்று நிறுவனம் - அமைச்சரவை, அமைச்சுக்கள், திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், பணிநிலை முறைமை

3. நீதித்துறை நிறுவனம் - உயர் நீதிமன்றம் முதல் கீழ்நிலைவரை பரந்திருக்கும் நீதிமன்ற கட்டமைப்புகள்

4. பாதுகாப்பு, சட்டம் மற்றும் ஒழுங்கு

தொடர்பான நிறுவனம் - ஆயுதப்படைகள், பொலிஸ், சிறைச்சாலைகள்

❖ அரசு அரசறிவியலில் அதிமுக்கிய மைய கருத்தாகவும், பழைமையான கருத்தாகவும் உள்ளது. கிரேக்க தத்துவவியலாளர் பிளேட்டோ முதல் இன்றுவரை அரசறிவியலில் ''அரசு'' என்பது பற்றிய ஆய்வுகள் முடிவுறுத்தப்படாத கருத்தியலாகும்.

❖ அரசியல் தத்துவவியலாளர்கள் மற்றும் கோட்பாட்டாளர்கள் அரசு தொடர்பாக பிரதானமாக அவதானம் செலுத்தியுள்ள கருத்தியல்கள் பின்வருமாறு.

(அ). அரசின் இயல்பு

(அ). அரசின் தோற்றம்

(இ). அரசின் நோக்கம்

(ஈ). அரசின் அதிகாரம் மற்றும் இறைமை அதிகாரம்

(உ). அரசு மற்றும் பிரசை / சமூகம்

(ஊ). அரச அதிகாரத்தின் எல்லை

(எ). அரசின் பரிமாற்றம் மற்றும் மாதிரிகள்

- இதில் நாம் இன்று விளங்கிக் கொள்ளும் அர்த்தத்தில் ''அரசாங்கம்'' பற்றிய கலந்துரையாடல்கள் ஆரம்பகால அரசியல் சிந்தனையில் காணப்படவில்லை. பெறும்பாலும் அரசும் அரசாங்கமும் ஒரே அர்த்தத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளது. இதற்கு காரணம் நாம் மேலே குறிப்பிட்டதுபோன்று அரசு மற்றும் அரசாங்கத்தை வேறுபடுத்தல் என்பது 18 ஆம் நூற்றாண்டுக்கு பின்னர் வளர்ச்சியடைந்தமையே இதற்கான காரணமாகும்.
- அரசறிவியல் வரலாற்றில் ''அரசாங்கம்'' என்ற கருத்து பல்வேறு அரசியலமைப்பு மாதிரிகளை அறிந்துக்கொள்வதற்கும் இந்த அரசியலமைப்புகளை ஒப்பீட்டு ரீதியாக கற்பதற்கே பரவலாக பயன்படுத்தப்பட்டுள்ளது. அரசறிவியலை விளங்கிக் கொண்டு ஆய்வு செய்யப்பட்டுள்ள அவ்வாறான அரசாங்கங்கள் கீழ்வருமாறு காட்டப்பட்டுள்ளது.

(அ). ஜனநாயக அரசாங்கம்

(ஆ). ஜனநாயகமற்ற அரசாங்கம்

(இ). பாதி (அர்த்த) ஜனநாயக அரசாங்கம்

(ஈ). குடியரசுவாத அரசாங்கம்

(உ). ஒற்றையாட்சி அரசாங்கம்

(ஊ). சமஸ்டி அரசாங்கம்

(எ). தேசிய அரசாங்கம் (கூட்டு அரசாங்கம்)

(ஏ). முதலாளித்துவ அரசாங்கம்

(ஐ). சமவுடைமை அரசாங்கம்

(ஒ). பின் சமவுடைமை அரசாங்கம்

## 2.4.2. அரசியல் கட்சிகள்

- அரசியல் கட்சிகள், நவீன அரசியலில் குறிப்பாக ஜனநாயக அரசியலில் தவிர்க்கப்பட முடியாத ஓர் அங்கமாகும்.
- அரசியல் கட்சிகள் நீண்டதொரு வரலாற்றைக் கொண்டிருக்கவில்லை.
- ஐரோப்பா மற்றும் அமெரிக்க அரசியலில் 19ஆம் நூற்றாண்டின் மத்திய காலத்திற்கு பின்னரே தோன்றியுள்ளது. இலங்கை, இந்தியா போன்ற நாடுகளில் 20 ஆம் நூற்றாண்டின் மத்திய காலத்திற்கு பின்பே ஆரம்பமானது.
- எனினும் அரசியலில் அரசியல் கட்சிகள் புரியும் மையப்படுத்தப்பட்ட கடமைகளும் பணிகளும் காரணமாக இவை தொடர்பில் மிகவும் பரந்தளவில் மற்றும் விரிவாக்கப்பட்டுவருகின்ற கல்விசார் ஆய்வாக அரசறிவியலினுள் கட்டமைக்கப்பட்டுள்ளது.
- 20 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்திலேயே அரசியல் கட்சிகள் தொடர்பான கல்விசார் ஆய்வின் முக்கிய அரசியல் நிறுவனமாக ஐரோப்பா, அமெரிக்கா போன்றவற்றில் அரசியல் கட்சிகளின் செயற்பாடுகள் உறுதிப்படுத்தப்பட்டன.
- இந்த பின்புலத்திற்கு இரு பிரதான காரணிகள் பங்களித்தன.

    I. பிரதிநிதித்துவ அரசியல் முறைமையின் பரவல்.

    இருக்கின்ற அரசியல் அமைப்பில் பிரதானமான நிறுவன இயந்திரமாக அரசியல் கட்சிகளின் பணிகள் முன்னிலை அடைந்தன.

    II. வாக்குரிமை பரவலடைதல்

இதற்கு முன்னர் அமுக்கக்குழு (Interest Groups) காணப்பட்ட அரசியல் குழுக்கள் பரந்தளவிலான அங்கத்துவம் மற்றும் கட்டமைப்புடன் அபிவிருத்தி அடைந்தமை இதற்கு காரணமாகியது.

## அரசியல் கட்சி என்பது

- தேர்தல் அல்லது வேறு ஊடகத்தின் ஊடாக அரசாங்க அதிகாரத்தை பெற்றுக்கொள்ளும் நோக்கினைக் கொண்டு ஒழுங்கமைக்கப்பட்ட நிறுவனமாகும்.
- என்ரூ ே◻வுட் : சமூகத்தில் காணப்படும் அரசியல் குழு மற்றும் சமூக இயக்கங்களில் இருந்து அரசியல் கட்சியினை வேறுபடுத்தி அறிந்துக்கொள்ளக்கூடிய பிரதான குணாம்சங்கள் நான்கினை (Andred Heywood, *Politics*) குறிப்பிட்டுள்ளார்.
  - அரசியல் கட்சிகள் அரசியல் அதிகாரத்தை பெற்றுக்கொள்வதன் மூலம் அரசாங்க அதிகாரத்தை நடைமுறைப்படுத்தவே முயற்சிக்கும்.
  - அரசியல் கட்சிகள் "அங்கத்துவ அட்டைகளைக் கொண்ட" ஒழுங்கமைக்கப்பட்ட பிரிவாகும்.
  - அரசாங்க கொள்கைகளுக்கு ஏற்புடைய விடயங்கள் பலவற்றில் அவதானம் செலுத்தும் கொள்கைகளின் தொகுதி ஒன்று இருத்தல். (சிலவேளைகளில் தனிக் கொள்கை ஒன்றினை மட்டுமே முன்வைக்கும் சிறிய கட்சிகளும் உண்டு)
  - அரசியல் கட்சிகளுக்கு கொள்கை ரீதியாக மற்றும் கருத்தியல் அடையாளங்கள் காணப்படல் (வலதுசாரி, இடதுசாரி, மத்திய மயப்பட்ட, தேசியவாத, நலன்புரிவாதம் போன்றன)
  - நூறாண்டுகளுக்கும் சற்று முன்னோக்கிய கல்விசார் பின்புலத்தில் அரசியல் கட்சிகள் தொடர்பான ஆய்வில் அரசியலாளர்கள் கரிசனை கொண்ட கருத்தியல்கள் கீழ்குறிப்பிட்டப்படி அமைந்திருந்தது.

## 1. அரசியல் கட்சிகளின் வகைப்படுத்தல்

- ❖ உயர்குழாமை (காடர்) அடிப்படையாகக் கொண்ட கட்சிகள் (Cadre Parties) மற்றும் பொதுமக்களை அடிப்படையாகக் கொண்ட கட்சிகள் (Mass Parties)
- ❖ பொது மக்கள் கருத்துக்களை பிரதிநிதித்துவம் செய்யும் கட்சிகள் (Representative) மற்றும் பொதுமக்கள் கருத்துக்களை ஒழுங்கமைக்கும் (Intergrative Parties)
- ❖ அரசியலமைப்புசார் கட்சிகள் (Constitutional) மற்றும் புரட்சிகரக் கட்சி (Revolutionary)
- ❖ வலதுசாரி மற்றும் இடதுசாரி கட்சிகள்

## 2. அரசியல் கட்சிகளின் பணிகள்

- ❖ பிரதிநிதித்துவம் (Representation)
- ❖ அரசியல் உயர் குழாமினரை உருவாக்குதல் மற்றும் ஆட்சேர்ப்பு செய்தல் (Elite formation and recruitment)
- ❖ சமூகக் குழுக்களின் அரசியல் நோக்கங்களை உருவாக்குதல். (Setting Political Goals)

- ❖ பொதுமக்களின் / வாக்காளர்களின் அரசியல் அபிலாசைகளை அரசியல் செயற்பாட்டினுள் கொண்டு செல்லல் (Interest articulation and Aggregation)
- ❖ பொதுமக்களை அரசியல் செயற்பாட்டில் ஈடுபடுத்தல் மற்றும் தலைமைத்துவம் வழங்குதல் (Mobilization and Leadership)
- ❖ அரசாங்கத்தின் செயற்பாடுகளை ஒழுங்கமைத்தல்.

## 3. கட்சி முறைகள்

- ❖ தனிக்கட்சி முறை
- ❖ இருகட்சி முறை
- ❖ ஆதிக்கமுள்ள தனிக்கட்சி முறை
- ❖ ஆதிக்கமுள்ள இருகட்சி முறை
- ❖ பல்கட்சி முறை

## 4. கட்சிகளின் செயற்பாடுகளும் உபாய முறைகளும்

- ❖ அரசியல் கட்சிக்களின் கருத்தியல்கள்
- ❖ தேர்தல் வியுகம் மற்றும் உபாயங்கள்
- ❖ உறுப்பினர்களை ஆட்சேர்த்தலும் நிதி திரட்டும் விதிமுறைகளும்
- ❖ அரசியல் கட்சிகளின் சமூக அடிப்படை
- ❖ கட்சிகளின் ஒழுங்கமைப்பு முறைகள்
- ❖ சேவை வழங்குனர் - சேவை பெறுனர்களுக்கிடையில் தொடர்புகளை ஏற்படுத்துத்தும் சமூக வலையமைப்பு

அரசியல் கட்சிகள் தொடர்பான ஆய்வினைப் பார்க்கும்போது இவை பெரும்பாலும் ஐரோப்பிய மற்றும் அமெரிக்க அதாவது பாரிய கைத்தொழில் முதலாளித்துவ மற்றும் தாராண்மை ஜனாநாயக அரசியல் முறைகளின் அனுபவத்தினை அடிப்படையாகக் கொண்டுள்ளன என்பது தெளிவு. பிரதிநிதித்துவ ஜனநாயகம் தொடர்பில் குறுகிய வரலாற்றினைக் கொண்ட கைத்தொழில் மயமாக்களுக்கும், நவீனமயமாக்களுக்கும் குறைந்தளவில் உட்பட்டிருக்கும் சமூகத்தில் அரசியல் கட்சிகளின் இயல்புகள், செயற்பாடுகள் மற்றும் குணாம்சங்களில் மாறுபட்ட இயல்புகளை காட்ட முடியும்.

உதாரணம் :- இலங்கை, இந்தியா, ஆபிரிக்கா, இலத்தின் அமெரிக்கா மற்றும் ஆசிய நாடுகளில் அண்மைக் காலங்களில் செய்யப்பட்ட ஆய்வுகளில் இந்த மாற்றங்களின் இயல்புகளை அறிந்துக்கொள்ள முடியும்.

## 2.4.3. அமுக்கக் குழுக்கள் (Pressure Groups)

- ❖ இவை ஐரோப்பா மற்றும் அமெரிக்க அரசறிவியலின் விசேட கலந்துரையாடலுக்கு உட்படுத்தப்பட்ட அரசியல் சமூகக் குழுவாகும்.

- ❖ இதற்காக அமெரிக்காவில் பெருவாரியாக ஆசைக்குழுக்கள் (Interest Groups) மற்றும் நியாயப் பிரச்சாரக் குழுக்கள் (Lobbying Groups) என்ற இரு பதங்களையும் பயன்படுத்துகின்றனர். பிரித்தானியாவில் இது அழுத்தக் குழுக்கள் என்றே பயன்படுத்தப்படுகின்றது. இந்த மூன்று சொற்களினதும் அர்த்தங்களை பின்வறுமாறு குறிப்பிட முடியும்.

    - ○ அழுத்தக்குழுக்கள் என்பது குழுவாக ஒன்றிணைந்து சட்டம், அரசு, கொள்கை, அரசத் தீர்மானங்கள் போன்றவற்றுக்கு அழுத்தம் கொடுக்கும் ஒழுங்கமைக்கப்பட்ட பிரசைகள் குழுவாகும்.

    - ○ ஆசைக்குழுக்கள் என்பது குறிப்பிட்ட அபிலாசை / நோக்கம் / பெறுபேற்றினை அடிப்படையாகக் கொண்டு தமது அங்கத்தவர்களின் தேவை மற்றும் அபிலாசைகளை அடைந்துக்கொள்வதற்காக செயற்படும் ஒழுங்கமைக்கப்பட்ட பிரசைகள் குழுவாகும்.

    - ○ நியாயப் பிரச்சாரக்குழு என்பது சட்டம், அரசக் கொள்கை மற்றும் அரச தீர்மானங்களுக்கு அழுத்தம் கொடுப்பதற்கு மக்கள் பிரதிநிதிகள், அரசியல்வாதிகள், உத்தியோகத்தர்களை சந்தித்து, அவர்களின் தீர்மானங்களில் தமக்கு தேவையான அழுத்தங்களைக் கொடுக்கும், அல்லது வேறு சமூகக் குழு அல்லது அரசாங்கத்திற்காக பணத்திற்காக இக்காரியத்தை செய்யும் ஒழுங்கமைந்த குழுவாகும். நியாயப்பிரச்சார குழு பிரசைகள் குழுவாக இருக்கமுடியும் என்பதோடு அவ்வாறில்லாமலும் இருக்க முடியும்.

      உதாரணம் :- அமெரிக்க பிரசைகள் குழு அல்லது வெளிநாட்டு அரசாங்கத்திற்காக நியாயப்பிரச்சாரம் செய்கின்ற, அதன்மூலம் வருமானம் ஈட்டும் வர்த்தகக் கம்பனிகள்.

- ❖ சட்ட உருவாக்கம், அரச கொள்கை மற்றும் அரசாங்கத்தின் தீர்மானங்களுக்கு அழுத்தம் கொடுக்கும், அரசியல் கட்சிகளுக்கும் அப்பால் மற்றும் சமாந்தரமாகவும் காணப்படும் நிறுவனங்கள் என்பதனாலாலேயே அழுத்தம், அபிலாசைகள் மற்றும் நியாயப் பிரச்சாரக் குழுக்கள் போன்றன அரசறிவியலில் முக்கியம் பெறுகின்றது.

- ❖ இவை ஒழுங்கமைந்த நிறுவனங்களாக அமைவதோடு மேற்கத்தேய நாடுகளிலும் இலங்கையிலும் சங்கங்களாகவே காணப்படுகின்றன. இவற்றுக்கு அங்கத்தவர்களும் உத்தியோகத்தர் சபையும் காணப்படும். யாப்பு, காரியாலயம் மற்றும் ஊதியம் பெறும் பணியாளர் தொகுதியும் காணப்படும்.

- ❖ வர்த்தகர்கள், கைத்தொழிலாளர்கள், விவசாயிகள், நிருவாக அதிகாரிகள், மதக் குழுக்கள், தொழில் குழுக்கள், பெண்கள் போன்ற பல சமூகப் பிரிவினர்களால் அமுக்க / ஆசைக் குழு / நியாயப் பிரச்சாரக் குழுக்களை உருவாக்கிக் கொள்ள முடியும்.

### ❖ இலங்கையின் உதாரணங்கள்

- ❖ சிறு தேயிலை தோட்ட உரிமையாளர்களின் சங்கம்

- ❖ பெருந்தோட்டத்துரைமார்களின் சங்கம்

- ❖ இலங்கை வர்த்தகச் சபை
- ❖ இலங்கை மஹிலா சங்கம்
- ❖ இலங்கை அரச வைத்தியர்கள் சங்கம்
- ❖ அகில இலங்கை பௌத்த மாகா சம்மேளனம்
- ❖ தனியார் பேரூந்து உரிமையாளர்களின் சங்கம்

❖ அரசறிவியல் வரலாற்றில் தொழிற்சங்கம் மற்றும் சமூக இயக்கங்கள், அமுக்க / ஆசை / நியாயப்பிரச்சாரக் குழுக்களாக கருதப்படுவதில்லை. இவை வேறான அரசியல் நிறுவனங்களாக கருதப்படுகின்றன.

❖ அரசியல் கட்சிகள் மற்றும் அமுக்கக் குழுக்களுக்கிடையில் அவற்றின் நோக்கத்தை அடைந்துக் கொள்வதற்கான செயற்பாடுகளில் ஈடுபடும் கோணங்களில் பார்க்கும்போது பிரதான வேறுபாடுகள் உண்டு.

- ○ அரசியல் கட்சிகள் அரசாங்கத்தினுள் சென்று அதனூடாக அரச கொள்ளை தீர்மானமெடுத்தலின் போது அழுத்தம் கொடுப்பதற்கு முயற்சி செய்யும்.
- ○ அரசாங்கத்திற்குள் செல்லாமல் அரசாங்கத்திற்கு வெளியில் இருந்து கொண்டு அரசாங்கத்தின் கொள்கை மற்றும் தீர்மானங்களுக்கு அழுத்தம் கொடுப்பதே அமுக்க / ஆசை / நியாயப் பிரச்சார குழுக்களின் மூல உபாயமாக அமைகின்றது.
- ○ சில அமுக்கக் குழுக்கள் தனி கருத்தியல் என்ற அடிப்படையில் ஒழுங்கமைக்கப்பட்டும் உள்ளன.

  உதாரணம் :- சூழல் பாதுகாப்பு, ஓய்வூதியக்காரர்களின் உரிமைகளை பாதுகாத்தல், பேரூந்து பிரயாணிகளின் உரிமைகள் பாதுகாப்பு, ஏற்றுமதி வியாபாரத்தில் உள்ள கம்பனிகளின் உரிமைகளை பாதுகாத்தல், மரண தண்டனையை எதிர்த்தல்.

❖ சில அமுக்கக்குழுக்கள் பரந்த கோட்பாட்டு இலக்குகளை கொண்டவையாகும்.

உதாரணம் :- ஜனநாயகம், மனித உரிமைகள், பெண்கள் உரிமைகள், சிவில் உரிமைகள் போன்றன.

❖ அமுக்கம் / ஆசை / நியாயப் பிரச்சார குழுக்களுக்கு சார்பானதும் எதிரானதுமான வாதங்கள் உள்ளன.

## சார்பான வாதங்கள்

- அரசியல் கட்சிகள் தமது கொள்கைப் பிரகடனங்களில் உள்ளடக்காத ஆனால் குறித்த பிரசைகள் குழுக்களுக்கு தேவையான மற்றும் முக்கியமான குறைகளை (துன்ப துயரங்களை), வேண்டுகோல்களை, அபிலாசைகள் மற்றும் தேவைகள் தொடர்பில் சமூகத்தின், அரசாங்கத்தின் அவதானத்தை செலுத்துவதற்கான ஊடகமாக இருத்தல்.
- அரசியல் கட்சிகளில் குறைநிரப்பியாக செயற்பட்டு பிரசைகளின் அரசியல் பங்குப்பற்றல் வாய்ப்புகளை விரிவுப்படுத்தல்.

- அரச கொள்கை மற்றும் தீர்மானங்கள் குறித்து கரிசனைக் காட்டும் பிரசைகளை ஒழுங்குப்படுத்தலும் அவர்களுக்கிடையில் அது தொடர்பான கலந்துரையாடல்கள் மற்றும் விமர்சனங்களை விருத்தி செய்வதன்மூலம் சமூகத்தின் பொதுஜன அரசியல் கலந்துரையாடல்களை ஆழப்படுத்தலும் அதனூடாக ஜனநாயகத்தை உறுதிப்படுத்தல்.

- தமது கொள்கை மற்றும் தீர்மானங்கள் தொடர்பில் அரசாங்கத்தின் தன்னிச்சையான நடத்தைகளுக்கான தடையாக செயற்பட்டு சமூக ஜனநாயகத்தின் உறுதிப்பாட்டை வலுப்படுத்தல்.

## எதிரான வாதங்கள்

- இதில் இணைந்திருப்பவர்களும் செயற்படுபவர்களும் ஒன்றில் கற்ற, சொத்துடைய மற்றும் வரப்பிரசாதங்களை பெற்ற பிரசைகளாவர். இதனால் இவ்வாறான அமைப்புகளில் உயர்குழாம் (Elite) பண்பு ஒன்று இருப்பதோடு அதன் பெறுபேறுகளை பெற்றுக்கொள்பவர்களாகவும் சமூகத்தின் உயர்குழாம் வகுப்பினரே இருத்தல்.

- இவை பிரதிநிதித்துவப்படுத்துவது, சமூக குழுக்களின் குறுகிய மற்றும் நிலையான தேவைகளாக இருப்பதன் காரணமாக சமூகத்தின் பெரும்பான்மையானவர்கள் மற்றும் பொது நலனுக்கு கிடைக்கும் சேவைகள் கீழ் மட்டத்தில் காணப்படல்

- சில நாடுகளில் இவ்வாறான குழுக்களுக்கு பாரிய சமூக அதிகாரம் கிடைக்கிறது. இது மக்களால் கிடைக்கும் அதிகாரமல்ல. இதனால் இவற்றுக்கு உள்ள அதிகாரங்களில் வெளிப்படைத்தன்மையொன்று காணப்படாமை.

- ஜனநாயக செயற்பாடுகள் திறந்த ஒன்றாக இருப்பினும் இவ்வாறான அமைப்புகள் அரசாங்கத்தின் கொள்கை மற்றும் தீர்மானச் செயற்பாடுகளில் (மூடிய) கவசம் ஒன்றாக மாற்றுதல்.

## 2.4.4. சிவில் சமூகம்

❖ சிவில் சமூகம் என்பது ''அரசுக்கு வெளியில் சுயாதீனமான பிரசைகள் தமது பொது நோக்கங்களுக்காக ஒன்றிணைந்து ஒற்றுமையாக செயற்படும் சமூக வாய்ப்பாகும்.'' இதற்கு மேலாக இவ்வாறான வாய்ப்புகளில் செயற்படும் பிரசைகள்சார் அமைப்புகளை அடையாளப்படுத்தவும் ''சிவில் சமூகம்'' என்றப் பதம் பயன்படுத்தப்படுகின்றது. இதுவே சிவில் சமூகம் பற்றிக் காணப்படும் விரிவானதும் சுருக்கமானதுமான வரைவிலக்கணங்களாகும். இந்த பரந்த மற்றும் குறுகிய அர்த்தப்படுத்தல்கள் இரண்டிலும் ''சிவில் சமூகம்'' என்ற எண்ணக்கரு தற்போதைய அரசியல் மற்றும் சமூக கோட்பாடுகளிலும் பயன்படுத்தப்படுகின்றது.

❖ தற்போதைய ஜனநாயக கோட்பாட்டினுள் சிவில் சமூகம் தொடர்பான எண்ணக்கருவுக்கு முக்கிய இடம் கிடைக்கிறது. வலுவானதும் செயற்றிறன் மிக்கதுமான சிவில் சமூகம் ஒன்று இருத்தல் உறுதியான ஜனநாயகத்தின் பண்பாகவும் ஜனநாயகத்திற்கு கிடைத்த பெறுபேறாகவும் சிவில் சமூகம் பற்றிய கோட்பாடுகளில் கூறப்படுகின்றது.

❖ அரசியல் மற்றும் சிவில் சமூகக் கோட்பாடுகளில் சிவில் சமூகம் என்பதற்கு காணப்படும் எண்ணக்கரு ரீதியான வரலாற்றினுள் அது நான்கு அர்த்தங்களில் பயன்படுத்தப்பட்டுள்ளமையை காணலாம்.

1. **பழைமை தாராண்மைவாத கருத்து :-**

அதாவது அரசு மற்றும் குடும்பத்திற்கு இடையிலான தனிப்பட்ட செயற்பாடுகளுக்காக காணப்படும் சமூக சந்தர்ப்பங்கள். இமானுவேல் காண்ட் மற்றும் பெற்றிக் ெ□கல் போன்ற

ஜேர்மனிய தத்துவவியலாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளபடி சிவில் சமூகம் என்பது முதலாளித்துவ சந்தை தொடர்பான இடைவெளி என்பதாகும்.

**2. பழைமை மாக்ஸியவாத கருத்து :-**

சிவில் சமூகம் என்பது முதலாளித்துவ சந்தையாகும் என்ற ெ□கலின் கருத்தை மேலும் முன்னோக்கி கொண்டு சென்று கார்ள் மாக்ஸ் அந்த எண்ணக்கருவை முதலாளித்துவ சமூகம் என்பதற்கான மற்றுமொரு மாற்றீட்டு பதமாகவே பயன்படுத்தினார். இந்த மாக்ஸியவாத கருத்தின்படி சிவில் சமூகத்தில் சகலருக்கும் தனது தனிப்பட்ட சுயமான விருப்பு வெறுப்புக்களை நிறைவேற்றிக் கொள்வதற்கு அவரவருடன் போட்டி போடுவதே நடைபெறுகின்றது என்பதாகும். இதன்படி சிவில் சமூகத்தினுள் நபர்கள் தனித்தனியே பிரித்து தனிமைப்படுத்தப்பட்டு தமது சாத்தியப்பாடுகளை பூர்த்தி செய்துக்கொள்ள முடியாத நிலைக்கு செல்வதே நடைபெறுகின்றது.

**3. ஒருங்கமைந்த ஜனநாயக கருத்து :-**

இதன்படி சிவில் சமூகம் என்பது அரசிலிருந்து சுயாதீனமாக தமது பொதுத் தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக சங்கங்கள், அமைப்புகளை உருவாக்கிக் கொண்டு பொதுவில் செயற்படுவதற்கு ஜனநாயக அரசியல் கட்டமைப்பில் பிரசைகளுக்கு கிடைக்கும் சமூக வாய்ப்பாகும். சிவில் சமூகம் ஒழுங்கமைந்த ஜனநாயகத்தின் (Associational Democracy) வாய்ப்பாக முதன் முதலில் பார்த்தவர் 19ஆம் நூற்றாண்டின் பிரான்சிய அரசியல் சிந்தனையாளர் அலெக்சிஸ் டி தொக்வில் ஆவார். எனினும் அவர் ‘‘சிவில் சமூகம்’’ என்ற சொல்லை பயன்படுத்தவில்லை. இவர் இதற்காக ‘‘சிவில் வாழ்க்கை’’ (Civil Life) என்பதையே பயன்படுத்தினார். இதனூடாக தொக்வில் சிவில் சமூகம் பற்றிய தோற்றப்பாடுகளையே விபரித்தார்.

**4. புதிய மாக்ஸியவாத கருத்து (கிரமிசியன் கருத்து) :-**

அன்தோனியோ கிரம்சி என்ற இத்தாலி நாட்டு மாக்ஸியவாத சிந்தனையாளர் 1930 தசாப்தங்களில் எழுதிய ஆவணங்களில் ‘‘சிவில் சமூகம்’’ என்பதற்கு புதிய மாக்ஸியவாத அர்த்தப்படுத்தலை வழங்கினார். இதன்படி சிவில் சமூகம் என்பது அரசு மற்றும் பிரசைகளுக்கிடையே காணப்படும் சமூக கலாசார வாய்ப்பாகும். ஆட்சியாளர் வர்க்கம் தமது ஆதிபத்தியத்தை சமூகத்தின் மீது பிரயோகிக்கும்போது தேவைப்படும் பொதுமக்கள் விருப்பத்தை பெற்றுக்கொள்ளுவதற்காக அவசியமானவற்றை இந்த சமூக கலாசார வாய்ப்புகளினுள் தலையிடுவதன் மூலமே மேற்கொள்கின்றனர். மதம், கலாசாரம், கல்வி ஆகிய சமூக கலாசார துறைகள் போலவே பாடசாலை, தொழிற்சங்கம், விளையாட்டு கழகங்கள், ஊடகங்கள், பள்ளிவாசல்கள் போன்ற சமூக கலாசார நிறுவனங்களும் சிவில் சமூகம் என்ற பரப்புக்குள் உள்ளடங்கும்.

**5. ஜனநாயக சமூக அரசியல் செயற்பாட்டு வாய்ப்பாக**

1970 – 1980 தசாப்தங்களின் ஆரம்பப் பகுதியிலிருந்து சிவில் சமூகம் என்பதற்கு இந்த அர்த்தப்படுத்தல்கள் பயன்படுத்தப்பட்டது. ஜனநாயகம் காணப்படாத இலத்தின் அமெரிக்கா, கிழக்கு ஐரோப்பா மற்றும் ஆசியாவில் ஏதேட்சையதிகார அரசாங்கங்களுக்கு எதிராக ஜனநாயக அரசியல் இயக்கங்கள் தோற்றம் பெற்று சமூக அரசியல் தேவைகளையும் இயக்கங்களையும் அறிமுகப்படுத்த இந்த எண்ணக்கரு பயன்படுத்தப்பட்டது. இந்நாடுகள் யாவற்றிலும் எதேட்சையதிகார ஆட்சிப் பொறிமுறைகளின் கீழ் அரசியல் கட்சிகள் காணப்படாமையால் அந்த ஆட்சி பொறிமுறைக்கு எதிராக சமூக அரசியல் செயற்பாடுகளானது தொழிற்சங்கம், மத அமைப்புகள், விவசாய இயக்கங்கள், கலாசார மற்றும் கலை அமைப்புகள், மாணவர் இயக்கங்கள் போன்ற ஊடகங்களை அடிப்படையாகக் கொண்டே தோற்றம் பெற்றது. இந்த

இயக்கங்களின் பணிகள் அரசியல் கட்சிகள் செய்யாத பணிகளாகவே இருந்தன. இவ்வாறான இயக்கங்கள் பின்னர் ஜனநாயக சமூகத்தின் அரசியல் கட்சிகளுக்கு சமாந்தரமாக மாற்று அரசியல் செயற்பாடுகளை முன்னெடுக்க தொடங்கின. இதனாலேயே அரசியல் கட்சிகள் அல்லாத அரசியல் ஒழுங்கமைப்புகள் (Non Party Political Formations) என்ற அடையாளம் சிவில் சமூக அமைப்புகளுக்கு கிடைத்தது.

**6. சிவில் சமூகத்தின் சமூக இயக்கங்களும் அதன் தேவை என்ற வகையில் :-**

ஜனநாயக மற்றும் ஜனநாயகமற்ற சமூகத்திலும், சமூகத்தின் பரந்துபட்ட அரசியல் அபிலாசைகளின் மீது பொதுசன இயக்கங்கள் தோற்றம் பெறுகின்றன.

உதாரணம் :- விவசாய இயக்கங்கள், இளைஞர் இயக்கங்கள், பெண்ணிய இயக்கங்கள், மத இயக்கங்கள், தொழிற் சங்க இயக்கங்கள், சூழல் இயக்கங்கள், மனித உரிமைகள் இயக்கங்கள், பத்திரிகை சுதந்திர இயக்கங்கள்.

❖ இவ்வாறான இயக்கங்கள் அரசியல் கட்சிகளில் இருந்து வேறுப்பட்டவை. இவை அரசியல் கட்சிகள் போல முறையான நிறுவன கட்டமைப்பு மற்றும் அங்கத்தினர்களை கொண்டிராத திறந்த இயக்கங்களாகும். அவற்றுக்கு நிலையான கருத்தியல்கள் மற்றும் செயற்பாடுகள் இருக்கும். பரந்தளவிலான பல்வகை மக்களை நேரடி அரசியல் செயற்பாடுகளில் ஈடுபடுத்தல் (Mass Action) அதன் விசேட அம்சமாகும். இவ்வாறான பல்வகை மக்கள் இயக்கங்களும் சிவில் சமூக இயக்கமாகவே அடையாளப்படுத்தப்படுகின்றது.

### அரசறிவியலில் சிவில் சமூகம் பற்றிய கரிசனை ஏற்படுவதற்கான காரணங்கள்

- சிவில் சமூக இயக்கங்கள், அரசியல் கட்சிகளுக்கு அப்பால் சமாந்தரமாகவும் அரசியல் செயற்பாடுகள் நடைபெறும் நிறுவனங்களாக உள்ளமை.
- அரசுகளிலும், அரசியல் கட்சிகளிலும் சுயாதீன மற்றும் வேறுபட்ட சமூக அரசியல் தேவைகளை சிவில் சமூகம் பிரதிநிதித்துவம் செய்தல்.
- பிரசைகளின் அரசியல் பங்குப்பற்றலுக்கு அரசியல் கட்சிகளால் வழங்கப்படாத புதிய வாய்ப்புகள் சிவில் சமூகத்தினால் கிடைக்கின்றமை.
- துடிப்புமிக்க சிவில் சமூகமொன்று இருப்பதானது நாட்டின் ஜனநாயகத்தை ஆழப்படுத்த உதவும்.
- அரசியல் வலுவூட்டும்போது அரசியல் கட்சிகள் மறந்துவிடுகின்ற அல்லது தகைமைகளற்ற கருத்தியல்கள் மற்றும் நோக்கங்களின் கீழ் பிரசைகளை ஒழுங்குப்படுத்தும்.
- அமைப்புகளை **வலுவூட்டுவதன்மூலம்** பிரசைகள் அரசியல் ரீதியாக வலுப்படுத்த ஒத்துழைப்பு வழங்கும்.

## 2.5. ஒப்பீட்டு அரசியல் (Comparative Politics)

- 1950 தசாப்தங்களின் பின்னர் அரசறிவியலில் நிலையான துறையாக ஒப்பீட்டு அரசியல் அபிவிருத்தி அடைந்துள்ளது.
- இது அமெரிக்க அரசியல் விஞ்ஞானத்தில் ஆரம்பிக்கப்பட்டு பின்னர் அரசறிவியல் துறையின் ''கற்றல் துறையாகவும்'' மற்றும் ''கற்றல் விதிமுறையாகவும்'' மாறியுள்ளது.

- ஒப்பீட்டு அரசியல் கற்றல் வரலாறானது அரிஸ்டோட்டலோடு ஆரம்பித்ததோடு இவர் மிகவும் சிறப்பான அரசியலமைப்பினை முன்வைப்பதற்காக அக்கால கிரேக்கத்தில் காணப்பட்ட புராதான நகர அரசுகள் பலவற்றையும் ஆய்வு செய்தார். மக்கியவல்லியின் கட்டுரைக்காகவும் இவ்வணுகுமுறை பயன்படுத்தப்பட்டுள்ளது.

- மாக்கியவல்லியும் தமது அரசியல் கருத்துக்களுக்காக ஒப்பீட்டு அரசியலை பயன்படுத்தினார்.

- அரசறிவியலின் சம்பிரதாய கற்றிலில் ஈடுபட்டிருந்த ஐரோப்பா மற்றும் அமெரிக்காவுக்கு அப்பால் உலகின் ஏனைய நாடுகளில் அரசியல் முறைமைத் தொடர்பில் கற்பதற்கான அரசறிவியலாளர்களின் ஈடுபாடு, ஒப்பீட்டு அரசியல் கல்வியாக வளர்ச்சியடைய காரணமாகியது.

- இதன்படி மூன்றாம் உலகத்திலும், ரஸ்யா உள்ளிட்ட சமவுடைமை நாடுகளிலும், அரசியல் மற்றும் அரசியல் முறைமைகளில் காணப்பட்ட வேறுபாடுகளை அறிந்துக் கொள்வதற்கு அரசறிவியலில் முன்வந்தனர். இதனால் அரசறிவியல் பாடப்பரப்பில் காணப்பட்ட அமெரிக்க மற்றும் ஐரோப்பிய மையப்படுத்தல் மாற்றமடைந்தமையே ஏற்பட்டது.

- இவ்வாறு ஒவ்வொரு நாடுகளிலும் அரசியலை ஒப்பீட்டு ரீதியாக ஆராய்வதன் மூலம் அரசியல் செயற்பாடுகள் தொடர்பாக பொதுவில் ஏற்றுக்கொள்ளும் பொதுமைப்படுத்தப்பட்ட முடிவுகளுக்கு வருவதற்கும், அரசியல்வாதிகள் தூண்டப்படுவதையும் காரணமாகக் கொண்டு அது விதிமுறையாக மாறியது.

  உதாரணம்:- தேர்தல் முறைமை, வாக்காளர் நடத்தையில் தாக்கம் செலுத்தும் விதத்தினை நாடுகள் சிலவற்றினை ஆய்வு செய்து பொது முடிவுகளுக்கு (பொதுமைப்படுத்தப்பட்ட) வருவதற்கான வாய்ப்பு கிட்டும். இந்த விதிமுறையினை ஒப்பீட்டு விதிமுறை என அடையாளப்படுத்தலாம்.

- **ஒப்பீட்டு ரீதியாக அரசியல் மற்றும் அரசாங்கத்தை கற்றுக்கொள்வதற்கு அரசறிவியலாளர்கள் கரிசனை கொள்வது ஏன்?**

  I. அரசியலை வேறு நாடுகளுடன் ஒப்பிடுவதன் மூலம் எமக்கு எமது நாட்டின் அரசியல் பற்றிய மிகவும் சிறந்த தெளிவொன்றினை பெற்றுக்கொள்ளக் கூடியதாய் இருத்தல்.

  II. ஏனைய நாடுகளின் அரசியலைப் பற்றி சிறந்த தெளிவினைப் பெறுவதால் நாங்கள் அந்த நாடுகள் ஒவ்வொன்று பற்றி மட்டுமல்லாது இன்னும் சில நாடுகள் தொடர்பாக ஒப்பீட்டு பார்ப்பதற்கும் பெரிதும் உதவியாக அமையும்.

  III. அரசியல் முரண்பாடு மற்றும் கருத்தியல்கள் தொடர்பான பொதுமைப்படுத்தப்பட்ட பொது முடிவுகளுக்கு வருவதே நவீன அரசறிவியல் ஆய்வில் விபரிப்பாக இருந்தது.

- **ஒப்பீட்டு கல்வி எதனை செய்கின்றது?**

❖ அரசறிவியலாளர்கள் நாடுகளுக்கிடையேயான ஒப்பீடுகளை மேற்கொள்கிறார்கள்.

  உதாரணம் : அரசியல் கட்சி முறைமை பற்றி நாடுகள் சிலவற்றினை மையப்படுத்தி ஒப்பீட்டு ஆய்வினை மேற்கொள்ள முடியும். (Cross National Compatiosons)

❖ நாட்டினுள்ளும் கருத்தியல்களை ஒப்பீடு செய்ய முடியும்

உதாரணம் : ஆண் பெண் தேர்தலில் பங்குப்பற்றலின் போக்குகள் பற்றி கிராம மற்றும் நகர ரீதியாக ஒப்பீட்டு ஆராய முடியும் (Within Country Comparisons)

❖ அரசறிவியலில் முக்கியமான கருத்தியல்களை சர்வதேச ரீதியில் ஒப்பீட்டு ஆராய முடியும்

உதாரணம் :

- ஜனநாயக பரிமாற்றம், ஜனாதிபதி அரசாங்க முறைமையின் சாதக பாதக தன்மை
- விகிதாசார பிரதிநிதித்துவ முறை, பிரதிநிதித்துவ ஜனநாயக முறையில் ஏற்படுத்தும் தாக்கம்
- பெண்களின் அரசியல் பங்குப்பற்றலின் போக்குகள்

போன்றன ஒப்பீட்டாய்வின் அடிப்படையில் ஆய்வு செய்யக்கூடிய கருத்தியல்கள் ஆகும்.

**முன்மொழியப்பட்ட கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள்**

1. அரசறிவியலில் உள்ளடங்குகின்ற உப பாடப்பரப்புகளை சிறப்பாக ஆராய்ந்து சுவர் பத்திரிகையொன்றை அல்லது சஞ்சிகை ஒன்றை தாயாரிக்கவும்.

**உசாத்துணைகள்**


01. கல்வி வெளியீட்டுத்திணைக்களம் (2007), அரசறிவியலின் மூலக்கொள்கைகள் I, கொழும்பு, கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.

02. டி சொய்சா,எம்.ஓ.ஏ. (2003), அரசறிவியலின் அடிப்படை சித்தாந்தங்கள் (சிங்களம்), பேராதெனிய, ஆசிரியர் வெளியீடு.

03. உயங்கொட, ஜயதேவ, 2011, சிவில் சமூகம், அது என்ன?, யாருடையது?, எதற்கானது?, கொழும்பு சமூக விஞ்ஞானிகள் சங்கம்.

04. Goodin, Robert E (ed) (2009), The Oxford *Hand book of Political Science*, Oxford, Oxford University Press.

05. Heywood, Andrew, (2013), *Politics*, London: Palgrave Macmillan.

06. Newton, Kenneth and Van Deth, Jan W, 2010, *Foundations of Compatative Politics*, Cambrige University Press.

# 03. அரசு

**தேர்ச்சி 03** : தானும் பிரசையொருவர் எனும் வகையில் அரசு தொடர்பான கோட்பாடுகளையும் விளக்கங்களையும் பெற்றுக்கொள்வதற்கு தேவையான அடிப்படைகளை உருவாக்கிக் கொள்வார்.
(பாடவேளைகள் - 55)

**தேர்ச்சி மட்டம் :**

3.1 அரசு எனும் எண்ணக்கருவினை விளக்குவார்.

3.2 அரசு பற்றிய வகைப்படுத்தலை அடிப்படையாகக் கொண்டு அரசு பற்றிய கருத்தியலை விமர்சிப்பார்.

3.3 அரசு தொடர்பான அரசியல் எண்ணக்கருக்களை அடிப்படையாகக் கொண்டு நவீன அரசின் மாதிரி முறைகளை பகுத்தாய்வார்.

3.4 அரசியல் எண்ணக்கருக்களையும் கோட்பாடுகளையும் அடிப்படையாகக் கொண்டு அரசையும் அதன் இயல்புகளையும் பகுத்தாய்வார்.

**கற்றற் பேறுகள் :**

- அரசை வரைவிலக்கணப்படுத்தி அதன் பணிகளை விபரிப்பார்.
- நவீன ஆள்புல அரசினதும் தேசிய அரசினதும் பண்புகளை அறிந்து கொள்வார்.
- உலகமயமாக்கமானது அரசின்மீது ஏற்படுத்தும் தாக்கத்தினை விமர்சனம் செய்வார்.
- அரச மாதிரி முறைகளை வகைப்படுத்தி பகுத்தாராய்வார்.
- அரசின், இறைமை, பிரசை ஆகிய எண்ணக்கருக்களை விளக்குவார்.
- அரசின் இயல்பு பற்றிய கோட்பாட்டு அணுகுமுறைகளை பெயரிட்டு அவை ஒவ்வொன்று தொடர்பாகவும் விளக்குவார்.
- மனித சுதந்திரத்தை மேம்படுத்துவதற்கு அரசுக்கு மிகவும் இன்றியமையாத பண்புகளை இனங்கண்டு வெளிப்படுத்துவார்.

**அறிமுகம் :**

- அரசு என்பது அரசறிவியலில் முக்கியமான கருத்தியலாகும். அத்தோடு அரசு என்பது நம் அனைவரினதும் வாழ்வில் நேரடியாக அல்லது மறைமுகமாக அழுத்தம் கொடுக்கும் சமூக நிறுவனமும் ஆகும். பொதுவாக மனிதர்களுக்கு அரச அழுத்தங்களுக்கு உட்படாமல் வாழ்வது கடினமானதாகும். மனிதன் அரசொன்றுடன் முதன் முதலில் தொடர்புறும் சந்தர்ப்பம் பிறப்பொன்றை பதிவு செய்தலாகும். இது அவனது மரணம் வரை காணப்படும் தொடர்பாகும். அரசின் அங்கத்துவத்தை பெற்றதன் பின்னர் அது பிரசை என்ற அந்தஸ்தாக மாறுகிறது. அதன்பின்னர் அரசொன்றில் உரிமைகளைப் பெற்றுக்கொள்ள உரித்துடையவனாகின்றான்.

- அரசு தொடர்பில் காணப்படும் விசேடமான விடயம் என்னவெனில் அது கண்ணுக்கு புலப்படாத, தொட்டுணர முடியாத, ஆனால் எல்லா இடங்களிலும் வியாபித்து காணப்படும் தோற்றப்பாடாக காணப்படுவதாகும். பிரசைகளின் உரிமைகள் மற்றும் சுதந்திரங்களைப் பாதுகாப்பதும், ஒற்றுமையானதும் விளைதிறன்மிக்கதுமான வாழ்க்கையினை வாழ்வதற்கு தேவையான சட்டம் மற்றும் ஒழுங்கினைப் பேணுவதும், பொருளாதார அபிவிருத்தி மற்றும் சமூக நலன்புரிகளை உறுதிப்படுத்துவதும் அரசின் பொறுப்பாகும் என பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. பிரசைகளாக நாங்கள் கற்பதும் உள்ளடக்கப்பட்டதும், அரசு என நாம் குறிப்பிட முடியும்.

## விடயப்பரப்புக்களை விளங்கிக் கொள்வதற்கான வழிகாட்டல்கள்

### 3.0 அரசு

- அரசை விளங்கிக் கொள்வதற்கான பிரதான மூலக்கொள்கையாக அமைவது ''அரசு என்பது வரலாற்று மற்றும் சமூக தோற்றப்பாடு'' என்றாகும். இதன்மூலம் கருதப்படுவது, ''அரசு'' நிச்சயிக்கப்பட்ட வரலாற்று நிலைகளில் வளர்ச்சியடைந்து, பல்வேறு அரசியல் தளங்களில் பரவலடைந்து பல்வேறு இயல்புகளை பெற்ற சமூக நிறுவனம் என்பதே இதன் பொருளாகும். சுருக்கமாக குறிப்பிடுவதாயின் அரசு என்பது, வரலாற்று ரீதியாக விசேடத்துவமிக்க படைப்பாகும். அது சமூகத்தின் படைப்பொன்றாகும். இதன் விளக்கம் அரசின் இயல்பு சமூக வரலாற்று வளர்ச்சிக்கு இணைவாக மாற்றமடைந்துள்ளது என்பதாகும். கோத்திர அரசு முதல் நவீன ஜனநாயக அரசுகள் வரை அரசில் ஏற்பட்ட வரலாற்று அபிவிருத்தி இதனையே காட்டுகின்றது.

### 3.1 அரசு மற்றும் அதன் வகிபாகம்

- அரசு என்பதை சமூகத்தை நிருவகிக்க உருவாக்கப்பட்ட அதிகார கட்டமைப்பினையும், நிறுவனங்களையும் கொண்ட கூட்டாக விளக்க முடியும்.
- பிரதானமாக மூன்று துறைகளை அடிப்படையாகக் கொண்டே அரசின் பணிகளை சம்பிரதாகப்பூர்வமாக விளங்கிக் கொள்ளப்பட்டுள்ளது. அவையாவன,

    (i). சட்டத்துறை – சட்டங்களை உருவாக்குதல்

    (ii). நிருவாகத்துறை – சட்டங்களை நடைமுறைப்படுத்தல்

    (iii). நீதித்துறை – நீதியை நிருவகித்தல்

- இந்த வகைப்படுத்தல் ''அரசு'' என்பதை விளங்கிக் கொள்ள எமக்கு பயன்பட்டாலும் அரசின் பணி இதனைக்காட்டிலும் மிகவும் பரந்ததும் ஆழமானதுமாகும்.
- தற்கால உலகில் அரசொன்றின் பணிகளை பின்வருமாறு குறிப்பிடமுடியும்.

    (i). சட்டத்தின், சமூக வலையமைப்பினதும் சொத்துக்களின் பாதுகாவலன் :- இது அரசொன்றின் மரபார்ந்த பணியாகும். இதற்கு,

        (a) கண்காணித்தல் மூலம் (Policing) சமூக அமைதியை கொண்டு நடாத்துதல் (தேவையாயின் ஆயுதப்படைகளையும் பயன்படுத்தலாம்)

        (b) நீதியை நிலைநாட்டுதல், நீதிமன்ற நிருவாகம் மற்றும் தண்டனை வழங்கல்

        (c) சட்ட உருவாக்கம் மற்றும் சட்டங்களை வரைவிலக்கணப்படுத்தல்

(d) கொள்கை உருவாக்கம்

(ii). பொருளாதார நிருவாகம் மற்றும் வழிநடத்தல்

(a) வரிகளை வசூலித்தல்

(b) நாட்டின் பொருளாதார பாதையினை நிர்ணயித்தலும் பொருளாதார கொள்கைகளை உருவாக்கலும்.

(iii). சமூக நிருவாகம், வழிநடத்தல் மற்றும் சமூக கண்காணிப்பு

இதன்கீழ் வருமானங்கள் பகிர்ந்தளிக்கப்படும் விதத்தினை தீர்மானித்தல் மற்றும் நிருவகித்தல், பொருளாதார மற்றும் வணிகத்துறைகளின் தரங்களை நிர்ணயித்தல், சமூக பாதுகாப்பு மற்றும் நலன்புரி செயற்பாடுகள், வறுமை ஒழிப்புக் கொள்கைகள், வீடு, சுகாதாரம், கல்வி, போக்குவரத்து போன்ற சமூகத்துறைகளின் கொள்கைகளை தீர்மானித்தல் என்பவற்றை அரசு மேற்கொள்ளும்.

(iv). சமூகத்தின் சட்டம் மற்றும் ஒழுங்கினைப் பேணல்

அரசின் ஆள்புல எல்லைக்குள் சட்டம் மற்றும் ஒழுங்கினைப் பேணிக்கொள்ளல், பிரசைகள் அரசின் இறைமை அதிகாரத்திற்கு அடிபணிவை பெற்றுக்கொள்வதை உறுதிப்படுத்துவதற்காகவும் அரசு தொடர்ந்தும் முயற்சி செய்யும். இதற்கான அதிகார பலம், நிறுவனங்கள், மனித பலமும் அரசுக்கு உண்டு. பொலிஸ், நீதிமன்றம் மற்றும் மனித பலம் என்பவற்றை வைத்துக்கொள்வதும் பிரசைகளின் கண்காணிப்பு மற்றும் கண்காணிக்கும் (Surveillance and Policing) முறையில் சட்டம் மற்றும் ஒழுங்கினைப் பேணிக்கொள்வதற்கும் அரசு கொண்டுள்ள நிறுவனங்களைப் பயன்படுத்தும்.

(v). யுத்தப்பிரகடனம் மற்றும் யுத்தம் செய்தல்

பொதுவாக அரசுக்கு மட்டுமே உரிய விசேட பணியாக இது கருதப்படுகின்றது. அரசொன்று அரசுக்குள்ளாகவும் அரசுக்கு வெளியிலும் யுத்தத்தில் பங்குப்பற்றுகின்றது. உள்ளக மோதலானது அரசின் பாதுகாப்பிற்கு அரசின் ஆள்புல எல்லையில் ஏற்படும் அச்சுறுத்தலை தடுத்துக்கொள்வதற்காக அவசியமாகின்றது. அரச பாதுகாப்பிற்கு வேறு அரசுகளினால் கொடுக்கப்படும் யுத்த அச்சுறுத்தல்களுக்கு முகங்கொடுக்கும்போதே அரசு வெளியக மோதல்களில் ஈடுபடுகின்றது.

### 3.1.1. சமூகத்தில் காணப்படும் அரசியல் அதிகாரத்தின் மையமாக அரசு

- மனிதர்கள் ஒன்றாக ஒழுங்கமைக்கப்பட்டுள்ள ஒரு ஊடகமாக அரசியல் ரீதியில் ஏற்படும் ஒற்றுமையை குறிப்பிடலாம். அந்த அரசியல் ஒன்றிணைவின் பிரதான வெளிப்பாடே அரசாகும்.
- மனிதர்கள் ஒன்றாக இணையும் வேறு அமைப்புகளாக சுயாதீன குழுக்கள், அரசியல் கட்சிகள், தொழிற்சங்கங்கள், சமூக இயக்கங்கள், மத நிறுவனங்கள் போன்றன செயற்படுகின்றன.
- எனினும் அரசு இவை எல்லாவற்றுக்கும் மேலான அதிகாரமுடைய மற்றும் உயர் சமூக நிறுவனமாகும். ''அரசு மனித கூட்டமைப்பாகும்''. எனினும் இது மனித நிறுவனங்களில் உயர்வான நிறுவனம் என்ற அரிஸ்டோட்டலின் பிரசித்திப்பெற்ற கூற்றின் அடிப்படையும் இதுவாகும்.

- அரசு மனித அமைப்பு / நிறுவனங்களில் மேலான நிறுவனம் என்பதில் இரு விளக்கங்கள் காணப்படுகின்றன.

(i) **அரிஸ்டோட்டலின் அர்த்தப்படுத்தல் :-**

- கிரேக்க அரசியல் தத்துவவியலாளரான அரிஸ்டோட்டில் Politics என்ற கட்டுரையின் ஆரம்பத்திலேயே முன்வைக்கும் வாதமானது ''அரசு சமூக நிறுவனமாவதோடு, மனிதர்களின் உயர்வான பொது நலனுக்காக செயற்படுவதால் இது ஏனைய சமூக நிறுவனங்களை விட உயர்வானது'' என்பதாகும்.

- ஏனைய சமூக நிறுவனங்கள் தமது அங்கத்தவர்களின் நலன்களை அடைந்துக்கொள்வதற்காகவே பாடுபடுகின்றன.

- எனினும் அரசு சமூகத்தின் அனைவரினதும் பொது மற்றும் உயர்வான வாழ்க்கையை அடைந்துக்கொள்வதனை தனது நோக்கமாக கொண்டிருப்பதால் இது உயர் சமூக நிறுவனமாகும்.

(ii) **வெபரின் அர்த்தப்படுத்தல் :-**

- 19 ஆம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியிலும் 20 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்திலும் வாழ்ந்த ஜேர்மன் நாட்டு சமூகவியலாளரான மெக்ஸ் வெபர் (Max Weber) என்பவரால் அரசு தொடர்பாக முன்வைக்கப்பட்டுள்ள அர்த்தப்படுத்தல்களில் இது மிகவும் தெளிவாக முன்வைக்கப்பட்டது.

  ''Politics as a Vocation'' (1919) என்ற (அரசியலை தொழில் ஒன்றாக) கட்டுரையில் அவர் குறிப்பிட்டதாவது, ''அரசு என்பது வரையறுக்கப்பட்ட ஆள்புல பிரதேசத்தில் பலாத்கார (கட்டாயப்படுத்தல்) அதிகாரத்தை வெளிப்படையாகப் பயன்படுத்தும் தனியுரிமை தமக்கே உள்ளது எனக் கூறும் மனித குழுவாகும்'' என்றார்.

- அரசு வாய்ப்பினை வழங்கினால் மாத்திரமே சமூகத்தின் ஏனைய நிறுவனங்கள் மற்றும் நபர்களால் கட்டாயப்படுத்தல் அதிகாரத்தை (Coercive Power) பயன்படுத்துவதற்கான உரிமை இருக்கும். வன்முறையை பயன்படுத்தும் ''உரிமை'' யை பெற்ற ஒரே மூலாதார முகவர் எனும் வகையிலேயே அரசு என்பது கருதப்படுகின்றது. அரசு தன்னைப்பற்றி அவ்வாறே சிந்திக்கின்றது.

- அத்தோடு அரசு தனது எல்லைக்குள் இருக்கின்ற சமூக குழுக்களை, மனிதர்களையும் வழிநடத்துகின்றதும், நிருவகிக்ப்பது, **எச்சரித்தல்** மற்றும் தண்டனை வழங்குவதற்கான இறுதி நிறுவனமாக அரசு காணப்படுகின்றது. இதற்கான அதிகாரம், சட்டத்திட்டங்கள், நிறுவனங்கள், நபர்கள் என்பன அரசுக்கு உண்டு. பாராளுமன்றம், சட்டத்திட்டங்கள், நீதிமன்றங்கள், பணியகவமைப்பு, ஆயுதப்படை, பொலிஸ், சிறைச்சாலை போன்றவற்றை உள்ளடக்கிய பரந்த அதிகாரமிக்கதும் மற்றும் வேறு எந்த நிறுவனங்களுக்கும் இல்லாத அதிகார பலமும் (Authority) அரசுக்கு உண்டு.

- மேலே குறிப்பிடப்பட்ட அதிகார பலத்தினை அரசறிவியலில் அரசின் ''இறைமை அதிகாரம்'' என அடையாளம் காணப்படுகின்றது. அரசின் இறைமை அதிகாரம் என்பது அதன் அதிகாரம் காணப்படும் ஆளபுலப்பிரதேசத்தில் உள்ள சமூகத்தை வழிநடத்துவதற்கு தேவையான சட்ட உருவாக்கம், சட்டங்களை நடைமுறைப்படுத்தல்,

நீதியை நிருவகித்தல், சட்டம் மற்றும் ஒழுங்கு என்பவற்றை பேணிக்கொள்வதற்காக அரசுக்கு மட்டுமே உரித்தான அதிகாரமாகும்.

- அரசுக்கு கீழமைந்துள்ள வகையிலும் அரசின் அனுமதியுடன் இருந்தால் மட்டுமே ஏனைய சமூக நிறுவனங்களுக்கு இவ்வதிகாரமானது சிறிதளவிலேனும் கிடைக்கும்.

### 3.1.2. நவீன ஆள்புல (பௌதீக) அரசு

- நவீன ஆள்புல (பௌதீக) அரசு பிரதான அங்கங்கள் நான்கின் கீழ் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது.

I. வரையறுக்கப்பட்ட ஆள்புலப்பிரதேசம்

II. தேசிய அடிப்படை

III. அரசாங்கம்

IV. இறைமை

### I. வரையறுக்கப்பட்ட ஆள்புலப்பிரதேசம்

- நவீன தேசிய அரசுகள் அதன் அதிகார பலத்தினை பயன்படுத்தும் வரையறுக்கப்பட்ட ஆள்புலம் ஒன்றில் காணப்படுகின்றது. இது தெளிவான ஆள்புல எல்லைகளை உள்ளடக்கியதாக ஒழுங்கமைக்கப்பட்டிருக்கும்.

- வரையறுக்கப்பட்ட ஆள்புலப்பிரதேசம் காணப்படல், நவீன தேசிய அரசுகளின் விசேட பண்பாகும். இந்த ஆள்புல எல்லை ஏனைய அரசுகள் மற்றும் சர்வதேச சட்டங்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டதாகும். ஆரம்பக்கால நவீன தேசிய அரசுகளின் ஆள்புல எல்லைகள் நெகிழ்ச்சியுடையவனவாக காணப்பட்டதோடு, நவீன தேசிய அரசுகளின் ஆள்புல எல்லைகள் ஒப்பீட்டு ரீதியில் நெகிழ்ச்சியற்றவையாகும்.

- அரசின் ஆள்புல எல்லைகள் நிர்மானிக்கப்பட்டதாகவோ (செயற்கையானதாகவோ) அல்லது இயற்கையானதாகவோ அல்லது இவை இரண்டின் சேர்க்கையானதாகவோ இருக்க முடியும்.

- இந்த அரசின் எல்லைகள் நிலப்பிரதேசம், கடல் எல்லை அல்லது இவையிரண்டும், இந்த வலயத்தை சூழவுள்ள வான்பரப்பையும் உள்ளடக்கியிருக்கும்.

- அரசுக்கு உரித்தான நிலப்பிரதேசமானது இந்த எல்லையினாலேயே தீர்மானிக்கப்படுகின்றது. அரசின் பௌதீக மற்றும் பொருள்சார் அடிப்படை அதற்குரிய நிலப்பிரதேசமாகும். இதனாலேயே ‘‘பிரதேசம்’’ (Territoriality) என்ற எண்ணக்கரு அரசுக்கு எப்போதும் அவசியப்படுகின்றது.

- நாடு தொடர்பான உணர்வு அல்லது தேசாபிமானம் ஏற்படுவதில் செல்வாக்கு செலுத்தும் சாதனங்களில் பிரதான ஒன்றாக ஆள்புலம் (Territory, Land) முக்கியத்துவம் பெறுகின்றது.

- பிரசை ஒருவர் தான் ஏதேனும் அரசொன்றின் உறுப்பினன் என்ற கருத்தை ஏற்படுத்திக் கொள்வது ஆள்புலத்தினால் தீர்மானிக்கப்படும் பூமியினை அடிப்படையாகக் கொண்டேயாகும்.

II. **தேசிய அடிப்படை**

- நவீன இனங்களின் தோற்ற வழிமுறை மற்றும் நவீன அரசின் தோற்ற வழிமுறை என்பன ஒன்றுக்கொன்று சமாந்தரமாக நடைபெற்றுள்ளன.
- ''ஓர் இனம் - ஓர் அரசு'' என்ற கருத்து இதற்கு உட்பட்டதாகும். இது ''தேசம் - அரசு'' (Nation – State) என்ற நவீன அரசியல் இயல்பின் அடிப்படையாகும்.
- நவீன அரசு தோற்றம்பெறுவதில் கற்புல சாதனமாக அமைந்தது ''தேசியவாதமாகும்''.
- தேசியவாதம் என்பது ''அரசின் ஆள்புலத்தில் வாழும் அனைத்து மக்களும் ஒரே அடையாளம் கொண்ட, ஒரு இனமாகக் கருதும்'' அரசறிவியல் முன்வைக்கும் ஒரு கருத்தியலாகும்.
- இதன்மூலம் தேசிய ஒற்றுமை மற்றும் தேசிய புரிந்துணர்வு என்பன ஏற்படும் என எதிர்ப்பார்க்கப்படுகின்றது. இதனாலேயே நவீன அரசுகள் தேசிய அரசுகள் என அழைக்கப்படுகின்றன.

III. **அரசாங்கம்**

நாங்கள் மேலே 2.4.1 பகுதியில் நோக்கியவகையில்

- அரசின் இறைமையதிகாரத்தை நடைமுறைப்படுத்தும் நிறுவனம் அரசாங்கமாகும். அதாவது அரச அதிகாரத்தினை நடைமுறைப்படுத்தும் நிறுவன கட்டமைப்பு அரசாங்கமாகும்.
- அரசாங்கத்தால் அரச அதிகாரத்தை நடைமுறைப்படுத்தல் மற்றும் தீர்ப்பளித்தல் செயற்பாடு செய்யப்படும். இதன்படி சட்டத்துறை, நிருவாகம், நீதித்துறை ஆகிய அதிகாரங்கள் மூன்றினை அடிப்படையாகக் கொண்டு நிறுவன கட்டமைப்புகள் மற்றும் நிறுவனத் துறைகள் மூன்று உருவாக்கப்பட்டுள்ளன.
- அரசாங்க வகைப்படுத்தல்கள் பலவாறாக காணப்படுவதோடு ஜனநாயக அரசாங்கம், எதேச்சையதிகார அரசாங்கம், அதிகாரவாத அரசாங்கம், சமவுடைமை அரசாங்கம் போன்ற பல்வேறு அரசாங்க மாதிரிகளை கண்டுக்கொள்ள முடியும். அத்தோடு அரசாட்சி முறை, பாரளுமன்ற அரசாங்க முறை, ஜனாதிபதி அரசாங்க முறை, கலப்பு அரசாங்க முறை போன்ற வகையில் பல்வேறு அரசாங்கங்களும் காணப்படுகின்றன.

IV. **இறைமை**

- அரசு பெற்றிருக்கும் அதிகார பலத்தினையே இது குறிக்கின்றது.
- அரசுக்கு உரித்தான இறைமை, சமூகத்தில் வேறு எந்த நிறுவனத்திற்கும் இல்லாத உயர் அதிகாரமாகும்.
- சட்டங்களை உருவாக்கவும், முழு அதிகாரத்தையும் பயன்படுத்தி சட்டங்களை நடைமுறைப்படுத்தவும், சட்டங்களை மீறுவோரை தண்டிக்கவும் அரசுக்கு இருக்கின்ற ஏனைய நிறுவனங்களுக்கு இல்லாத அதிகாரம் என்பது இதன் கருத்தாகும்.
- இந்த அதிகாரமானது ஏனையவர்களுக்கு கட்டளைகளை பிறப்பிப்பதற்கும், ஏனையவர்களின் கட்டளைகளுக்கு அடிபணியாததுமான அதிகாரமாகும்.

- ஆள்புல எல்லைக்குள்ளும் அதற்கு அப்பாலும் அரசு உயர்வான நிலையினை பெற்றிருக்கவும், அரசின் ஆள்புலத்தின் அனைத்து நபர்களும், அனைத்து நிறுவனங்களும் அரசுக்கு தமது அடிபணிவை காட்டுவதற்கும் அது கொண்டிருக்கும் இறைமை அதிகாரமே அடிப்படையாக அமைகின்றது.

### 3.1.3. நவீன தேசிய அரசு

- தேசிய அரசு (Nation – State) என்பது நவீன அரசுகளை அடையாளப்படுத்த சமூகவியலில் பயன்படுத்தப்படும் ஒரு எண்ணக்கருவாகும்.
- ''தேசிய அரசு'' என்ற கருத்து பதினெட்டாம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் வளர்ச்சியடைந்தது.
- இதன் அடிப்படை உள்ளடக்கமாவது ''ஓர் இனத்திற்கு ஓர் அரசு – ஒரு அரசுக்கு ஒரு இனமே உள்ளது'' என்பதாகும்.
- 1789 பிரான்சிய புரட்சியின் பின்னர் தோற்றம் பெற்ற பிரான்சிய அரசு ஐரோப்பாவின் முதலாவது தேசிய அரசாக கருதப்படுகின்றது.
- ஆரம்பக்கால நவீன தேசிய அரசுகள் தேசிய அரசுகளாக காணப்படாமையே தேசிய அரசு, நவீன அரசுகளின் விசேட பண்பாக கருதப்படுதற்கு காரணமாகும்.
- ஆரம்பக்கால நவீன அரசுகளுக்கு குறித்த ஆள்புலம், ஆள்புல எல்லைகள் காணப்படவில்லை. அரச அதிகாரம் மத்தியமயப்படுத்தப்பட்டும் இருக்கவில்லை. ஒரு இனமாகக் கருதப்பட்ட மக்கள், பல்மொழி, கலாசார மற்றும் பிரதேச அடையாளம் கொண்டவர்களாக காணப்பட்டனர்.
- எனினும் நவீன தேசிய அரசுகள் இதிலிருந்து மாறுபட்டதாகும். ஒரு இனத்திற்கு ஒரே தேசிய மற்றும் கலாசார அடையாளங்களே இருக்க வேண்டும் என ஆரம்பத்தில் குறிப்பிட்டது. இதனால் கலாசார, மொழி மற்றும் மத ரீதியான பல்வகைமை காணப்படும் சமூகத்தில் நவீன தேசிய அரசுகள் பலவும் அரசு மற்றும் தேசத்தினை கட்டியெழுப்புவதில் பாரிய பிரச்சினைகளுக்கு முகங் கொடுத்தன.
- இதனால் தற்காலத்தில் தேசிய அரசு என்ற எண்ணக்கரு புதிதாக அர்த்தப்படுத்தப்பட வேண்டும் என அரசறிவியலாளர்கள் யோசனை முன்வைத்தனர். இதன்படி ''பன்மைவாதம்'' என்ற எண்ணக்கரு கட்டியெழுப்பப்பட்டுள்ளது.
- இதன் உள்ளார்ந்த கருத்து நவீன அரசுகள் வர்க்க மற்றும் கலாசார மக்கள் பிரிவுகளை கொண்டிருக்க முடியும் என்பதாகும். இதன் மூலம் கலாசார, வர்க்க மற்றும் அடையாள பல்வகைமையினை ஏற்றுக்கொள்ளும் பன்மைத்துவவாதிகள் (Pluralist) தமது அரசுப் பற்றிய கருத்தினை முன்வைத்தனர்.

### 3.1.4. உலகமயமாக்கலும் அரசும்

- நவீன லிபரல்வாத பொருளாதார அரசியல் மறுசீரமைப்புகளினால் வசதியளிக்கப்பட்ட செயற்பாடாக பொருளாதார உலகமயமாக்கலை அடையாளப்படுத்த முடியும். இச்செயற்பாட்டினுள் அரசுகளில் கண்டுக்கொள்ளப்பட்ட நவீன போக்கு அரசுக்கு வெளியாகவும் அரசின் எல்லைகளைக் கடந்த சாதனங்கள் மற்றும் இயக்கங்களின் ஆதிபத்தியத்தை குறிப்பிட முடியும்.

- மூலதனம், விஞ்ஞான தொழில்நுட்பம், தகவல் தொடர்பாடல் புரட்சி, கலாசார மயமாக்கல், தொழிலாளர்களின் சர்வதேச அசைவு போன்றன அரசின் தேசிய எல்லைகளை கருத்திற்கொள்ளாது, இவ்வெல்லைகளை தகர்த்துக்கொண்டு விரிவடைந்த ஒன்றாகும்.

- இவை தேசிய அரசுகளுக்கு எவ்வாறு தாக்கம் செலுத்துகின்றன? என்பது தொடர்பான கலந்துரையாடல்கள் முன்னிலை அடைந்ததோடு, இது தொடர்பான இரு கோட்பாட்டு அணுகுமுறைகள் முன்வைக்கப்பட்டன. அவையாவன,

    I. உலகமயமாக்கலினுள் தேசிய அரசுகள் இறுதியை அடையும் என்பதும்,

    II. தேசிய அரசுகள் நிறைவடையாமல் அது மீள்கட்டமைக்கப்படுதலுக்கு உட்படுவது என்பதுமாகும்.

- உலகமயமாக்கலினால் நடைமுறையில் இருந்த தேசிய அரசு முறைமை சற்று பிரச்சினைக்கு உள்ளானது என்ற விடயத்தோடு தொடர்புடைய பிரதிநிதிகளில் ஒருவரான பிரான்சிய தேசத்தவரான பேராசிரியர் ஜீன் மேரி கெஹேன்னோ (Jean marie Gehenno) (1995) ஆம் ஆண்டு வெளியிட்ட *The End of the Nation State* (தேசிய அரசுகளின் முடிவு) என்ற கட்டுரையில் குறிப்பிட்டுள்ளபடி, உலகமயமாக்கலினால் உருவாக்கப்பட்டுள்ள நிலைமையின் காரணமாக விசேடமாக உலகமயமாக்கம் சமூகம் தொடர்பான பின்புலத்தினுள், ஆள்புலத்தின் அடிப்படையில் அமைந்த தேசிய அரசுகளுக்கு தற்போது இருப்பு இல்லை. தேச எல்லைகளில் தற்போது அர்த்தமில்லை. மேலும் மூலதனத்திற்கு, தகவல்களுக்கு, தொழில்நுட்பம் மற்றும் மனிதர்களின் நிறுவனங்களின் வலையமைப்புகளுக்கு தேசிய அரச எல்லைகள் தொடர்ந்தும் அவசியப்படாததோடு, அவை தேசிய அரசுகளின் எல்லைகளை கருத்திற் கொள்ளாமலே செயற்படுகின்றன. இன்று தேச எல்லை என்ற ஒன்று எவ்வித அர்த்தமும் இல்லாத ஒன்றாகும். உலக தகவல் சமூகத்தில் ஆள்புலம் என்பது தொடர்ந்து முக்கியமற்றதாகும்.

- இந்த வாதத்தில் ''இனம்'' என்பதற்கான முக்கியத்துவமும் குறைந்துவருகிறது என்பதும் குறிப்பிடப்படுகின்றது. மேலும், பொது நோக்கம், பொது விதி தொடர்பில் சிந்தித்தல் தற்காலிக தொடர்பு வலையமைப்பானது சமூகத்தில் தொடர்ந்தும் காணப்படாமை காரணமாக மனிதர்களை ஒன்றாக பிணைத்து வைத்திருப்பது தற்காலிகமாக அரசியல் எனும் வகையில் முக்கியமற்ற வலையமைப்பு தொடர்பாலேயே பிணைக்கப்பட்டுள்ளது. தேசிய அரசுகளால் இவற்றுக்கு முகங்கொடுக்க முடியாது என்பதும் இந்த வாதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

- தேசிய அரசுகள் பலவீனமடைந்தமை உலகமயமாக்கலின் விளைவாகும்.

- ''தேசிய அரசுகள் பலவீனமடைதல்'' தொடர்பிலான கலந்துரையாடலில் சற்று மாறுபட்ட கருத்தாக அமைவது ''உலக மூலதனம் அரசின் கட்டுப்பாட்டிலிருந்து விடுபட்டு அரச நிருவாகத்தில் இருந்து சுயாதீனமடைந்துள்ளன'' என்பதாகும்.

- டேவிட் ெ□ல்ட் 1991 ஆம் ஆண்டு ''ஜனநாயகம், தேசிய அரசு மற்றும் உலகமயமாக்கல்'' என்ற கட்டுரையில் உலகமயமாக்கலினால் ஒரு தனியரசின், அதிபதி அரசிலும்கூட நிருவாகத்திற்கு உட்படாத புதிய உலக பொருளாதார முறைமை கட்டியெழுப்பப்பட்டு உள்ளது என்ற கருத்தினை முன்வைத்தார். இதன்படி புதிய சர்வதேச அரசியல் தளம் கட்டியெழுப்பப்படும். அதாவது பல்தேசிய கம்பனிகளின் தொடர்பு வலையமைப்பு (Transnational Network) தோற்றம் பெற்றமையும் அவற்றை அரசினால் நிருவகிக்க முடியாததன் காரணமாகவும் அரசுக்கு வெளியிலுள்ள சர்வதேச அமைப்புகளுக்கு மிகவும் பலம்வாய்ந்த வகையில் அரசுகளின் செயற்பாடுகளை கட்டுப்படுத்துவதற்கும், அழுத்தம் கொடுப்பதற்குமான திறன்கள் கிடைக்கப்பெற்றன.

### 3.2. அரச மாதிரிகளும் வகைப்படுத்தல்களும்

- **கோத்திர அரசு**

  - ஆரம்பகால அரசியல் நிறுவனங்களான இவற்றில் தற்போதைய சிக்கல்மிக்க சமூகங்களை போல அரசியல் நிறுவனக் கட்டமைப்பு அல்லது நிறுவனங்களை காண முடியவில்லை.
  - அரசியல் என்ற ஆட்சி அதிகாரங்கள் சமூகத்தினுள் பரந்து காணப்பட்டது.
  - இதில் பலமிக்க நபர்களால் ஆட்சி தீர்மானம் எடுக்கும் குழு தோற்றம் பெறுவதோடு பெரும்பாலும் குலமானது ஒரு குடும்பத்தின் ஒருவர் என்றவகையில் அதன் உறுப்புரிமையினை பெற்றனர்.
  - இக்குழுக்கள் மூலம் குலத்தின் ஒற்றுமையினை பேணிக் கொள்ள முடிந்தது.
  - குலத்தின் ஆட்சியில் தலைமைத்துவ பாத்திரம் ஒன்றை மேற்கொள்ளும் தலைவர் ஒருவர் இருப்பதோடு அவருக்கு வரையறுக்கப்பட்ட அதிகாரம் கிடைத்தது.
  - அவரின் அரசியல் அதிகாரமானது குழுவினுள் அவருக்குள்ள சிரேஸ்டத்தன்மையின் அடிப்படையிலேயே உருவாகின்றது.
  - இந்த தலைவர்கள் ஏனைய குலங்களுடன் செல்வம் மற்றும் மத விடயங்களுக்காக போராடி தமது குழுவுக்கு அனுகூலங்களை பகிர்ந்து கொண்டதாக மனிதர்களைப்பற்றி ஆய்வுசெய்த ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.
  - தலைவரின் குடும்பம் உட்பட ஏனையவர்களின் குடும்பங்களினதும் நிலைமைகள் ஒத்த தன்மைக் கொண்டதாக இருந்தமை இங்கு கண்டுக்கொள்ளக்கூடிய ஒற்றுமையாக இருந்தது.
  - இச்சமூகம் உணவு மற்றும் ஏனைய தேவைகளை பூர்த்தி செய்துக் கொள்வது தொடர்பில் தன்னிறைவு பெற்றிருந்தது.
  - கோத்திர அரசுகளில் அரசியல் பயன்பாடுகளின் அடிப்படை பழக்கவழக்கங்கள், பண்பாடுகள், அனுஸ்டானங்கள் மற்றும் சம்பிரதாயங்களின் அடிப்படையில் அமைந்திருந்தது.

**கிரேக்க நகர (புராதான) அரசு**

- அரசியல் தொடர்பில் ஒழுங்கமைந்த முதலாவது அரச முறைமையாக கருதப்படுவது கிரேக்க நகர அரசு முறையாகும். இது கோத்திர அரசு முறையின் பின்னர் அபிவிருத்தியடைந்த அரச முறைமையாகும்.
- நவீன அரசுகளிலும் கூட கோட்பாட்டு அடிப்படையினை உருவாக்கும்போது பெரும்பாலும் முன்மாதிரியாகக் கொள்ளப்படுவது கிரேக்க அரச முறையினை அடிப்படையாகக் கொண்டு கட்டியெழுப்பப்பட்ட கிரேக்க அரசியல் சிந்தனையாகும்.
- கிரேக்க நகர அரசு முறைமை நிச்சயிக்கப்பட்ட மற்றும் சிறிய பூமி பிரதேசத்தில் ஒழுங்கமைந்த மக்களுடன் கூடிய ஆட்சி முறை மற்றும் வாழ்க்கை முறையினைக் கொண்டு விருத்தி அடைந்ததாகும்.
- அங்கு குடியேறியிருந்த கிரேக்கர்கள் பரம்பரை மற்றும் பழங்குடியினரையும் (Clan and Tribe) மையமாகக் கொண்டு சமூகமாக பூமி பிரதேசத்தில் ஒழுங்கமைந்தனர். இவை அரசியல் வாழ்வில் மையமாக மாறியது.

- கிரேக்க நகர அரசு முறையில் கோத்திர ஆட்சி முறையிலமைந்த நிருவாகம், முறையான அரசாட்சி, ஏற்றுக்கொள்ளப்பட்ட பூமி பிரதேசத்தை அடிப்படையாகக் கொண்டு ஆரம்பமாகியுள்ளது என்பதை காண முடிகின்றது.

- கிரேக்க நகர அரசை சூழ அச்சமூகத்தின் அரசியல், பொருளாதாரம் அறிவார்ந்த மற்றும் ஒழுக்க ரீதியான வாழ்க்கையின் அம்சங்கள் சூழ்ந்திருந்தன.

- கிரேக்க நகர அரசுக்கு உரித்தான இரு கருத்துக்கள் காணப்படுகின்றன.

    (i). நகர அரசு அரசியல் ரீதியாக ஒழுங்கமைந்த அலகொன்றாக இருந்தமை.

    (ii). அவை ஒவ்வொன்றும் சுயாதீனமான அலகுகளாக இருந்தமை.

- கிரேக்க நகர அரசுகள் வேறு நகர அரசுகளுடன் அந்நியமாதல் கிரேக்கர்களுக்கு பழக்கமில்லாததாக இருந்த அதேவேளை மக்கள் தொகை மற்றும் ஆள்புல ரீதியாக வரையறுக்கப்பட்ட மற்றும் சிறிய அரசியல் அலகொன்றாக இருந்தது.

- இங்கு மக்களிடையே தமது அரசு தொடர்பில் மிக உயர்வான உணர்வு காணப்பட்டது. நகரத்தின் மதமே அனைத்து பிரசைகளினதும் மதமாகவிருந்தது.

- அத்தோடு கிரேக்க நகர அரசினுள் பெண்கள், அடிமைகளுக்கும், குடியேற்றவாதிகளுக்கும் பிரசா உரிமை கிடைக்கவில்லை. பிரசை என்பது சொத்துடைய ஆண்களுக்கான வரப்பிரசாதமாகியது.

- நேரடி ஜனநாயகம் நிலவிய ஏதேன்ஸ் போன்ற அரசுகளில் பிரசைகள் என்பவர்கள் மக்களின் செயற்பாடுகளுக்காக செயற்பாடான வகையில் பங்களிப்பு செய்வதே எதிர்ப்பார்க்கப்பட்டது.

- கிரேக்க நகர அரசுகளில் பல்வேறு அரசியல் மாதிரிகள் அபிவிருத்தி அடைந்திருந்தன. தனிநபர் ஆட்சி முறை, சில்லோராட்சி முறை, நேரடி ஜனநாயக ஆட்சி முறை, ஏகாதிபத்திய ஆட்சி முறை என்பன இவற்றுக்கான உதாரணங்களாகும்.

- ஜனநாயகம் மற்றும் பிரசைகளுக்கான அரசியல் செயற்பாடுகள் என்பன கிரேக்க நகர அரசினை மையப்படுத்தி தோற்றம் பெற்றமையினாலேயே அரசியல் ரீதியாக முக்கியம் பெறுகின்றது.

- **அரசாட்சி முறை (முடியாட்சி முறை)**

    - அரசாட்சி என்பது பெரும்பாலும் பரம்பரையாக அரசாட்சிக்கு உரிமைகோரும், தனி நபரினால் நடைமுறைப்படுத்தப்படும் ஆட்சி முறையாகும். இது உலகம் முழுவதும் கண்டுக்கொள்ளப்பட்ட ஆரம்பகால அரசு மாதிரியாகும்.

    - அரசன் / அரசி ஆட்சிக்குவருவது சம்பிரதாயப்படியாகும்.

    - தெய்வீகவழியுரிமை கோட்பாடுகளில் அரசனுக்கு அரசாட்சி செய்வதற்கு இறைவனால் அதிகாரம் கிடைத்துள்ளது என குறிப்பிடப்பட்டுள்ளமையால், சர்வதிகார அரசாட்சி முறைகளில் தெய்வீக வழியுரிமை அரசாட்சி பண்புகள் காணப்பட்டன.

    - அரசாட்சியில் ஆட்சியாளருக்கு எல்லையற்ற அதிகாரம் கிடைத்ததோடு சட்டம் அவரின் / அவளின் தனிப்பட்ட கட்டளைகளால் உருவானது.

- சர்வதிகார அரசாட்சியில் அரசியல் நிறுவனங்கள் குறைவான அபிவிருத்தியிலேயே காணப்பட்டன. சட்டத்துறை, நிருவாகத்துறை, நீதித்துறை, நிருவாகம் மற்றும் யுத்த அதிகாரம் மன்னன் / இளவரசியிடம் குவிந்து காணப்பட்டமையே இதற்கு காரணமாகும்.

- அரசாட்சியில் ''பிரசைகள்'' என்ற எண்ணக்கரு காணப்படவில்லை. இதற்கு பதிலாக ''கீழ்ப்பட்டவர்கள்'' (அடிமைப்பட்டவர்கள்) (Subject) என்றே காணப்பட்டது. கீழ்ப்பட்டவர்களுக்கு நவீன பிரசைகளை போல உரிமைகள் இருக்கவில்லை. அதற்கு பதிலாக அவர்களுக்கு பொறுப்புக்களே காணப்பட்டன.

- **தாராள (லிபரல்) ஜனநாயக அரசு**

    - ❖ வரையறுக்கப்பட்ட அரசு தொடர்பான எண்ணக்கருவே லிபரல்வாதத்தின் அடிப்படை அரசியல் எண்ணக்கருவாகும்.

    - ❖ எதேட்சையதிகார அரசுக்கு எதிராக மனித சுதந்திரங்களை உறுதிப்படுத்துவதற்காக 17 ஆம் நூற்றாண்டின் முன்னரைப்பகுதியில் இருந்து பிரித்தானியா உள்ளிட்ட மேற்கு ஐரோப்பா மற்றும் ஐக்கிய அமெரிக்க குடியரசு என்பவற்றில் பரவலடைந்த அரசியல் கருத்தியலே லிபரல் (தாராண்மை) ஜனநாயகவாதமாகும்.

    - ❖ லிபரல் வாதம் மற்றும் நவீன ஜனநாயகவாதம் என்பன ஒன்றுக்கொன்று சமனானவகையில் அபிவிருத்தியடைந்த அரசியல் எண்ணக்கருக்களாகும்.

    - ❖ ஜனநாயகம் என்பது மக்களால் செய்யப்படும் ஆட்சி தொடர்பான எண்ணக்கருவாகும். அதனால் அது நிலையான ஆட்சி முறையோடு இணைந்த எண்ணக்கருவாகும்.

    - ❖ லிபரல்வாதம் ஒருவகை நிலையான பொருளாதார முறையுடன் இணைந்த கருத்தியலாகும். அதாவது அது முதலாளித்துவ பொருளாதார முறைமையுடன் (கைத்தொழில் முதலாளித்துவம்) இணைந்த கருத்தியலாகும்.

    - ❖ இதன்படி லிபரல் ஜனநாயகவாதம் முதலாளித்துவ பொருளாதார முறைமையையும் ஜனநாயக ஆட்சி முறையினையும் ஒன்றிணைக்கின்றது.

    - ❖ தாராள ஜனநாயக அரசுமுறை பிரதானமாக முதலாளித்துவ பொருளாதார முறையினை அடிப்படையாகக் கொண்ட அரசியல் முறையொன்றாகும்.

    - ❖ மக்கள் ஆட்சி தொடர்பான எண்ணக்கரு இதன் கீழ் முக்கியம் பெறுவதோடு மக்கள் பிரதிநிதிகளால் செய்யப்படும் ஆட்சி பிரதிநிதித்துவ ஜனநாயக அரசாங்கமிருத்தல் லிபரல் ஜனநாயக அரசியல் முறையின் அடிப்படை பண்பாகும்.

- பிரதிநிதித்துவ அரசாங்கம் செயற்படுவதற்கு தேவையான அடிப்படை சமூக அரசியல் மாரிகள் (விடயங்கள்) சிலவற்றை பின்வருமாறு காட்ட முடியும்.

    - தடைகளற்ற சுதந்திரம்
    - சமத்துவம்
    - பெரும்பான்மை ஆட்சி
    - மக்கள் ஆட்சி

- யாப்புறுவாதம்
- சட்டத்தின் ஆட்சி
- நீதித்துறை சுயாதீனம்
- பொறுப்புடன்கூடிய அரசாங்கம்
- சுதந்திரமான தேர்தல்கள்
- போட்டிக் கட்சி முறை

(ஆசிரியர் இவ்விடயம் தொடர்பில் வகுப்பறையில் கலந்துரையாடலில் ஈடுபடவும்)

- **சமவுடைமை அரசு மாதிரி**

- சமவுடைமை அரச முறைமை இருபதாம் நூற்றாண்டில் அபிவிருத்தியடைந்த அரச முறையாகும். 19 ஆம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் தோற்றம் பெற்ற மாக்ஸ்வாத மாதிரியின் கோட்பாட்டு மற்றும் கருத்தியலே இதன் அடிப்படையாகும். மாக்ஸ்வாதம் என்பது கார்ள்மாக்ஸ் என்ற ஜேர்மனிய சிந்தனையாளரால் கட்டியெழுப்பப்பட்ட கோட்பாட்டு, தத்துவவியல் மற்றும் சிந்தனை தொகுதியாகும்.
- 19 ஆம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் தோற்றம் பெற்றிருந்த முதலாளித்துவ மற்றும் லிபரல்வாத அரச மாதிரிகளுக்கு மாற்றீடாகவே மாக்ஸ்வாத அரசியல் சிந்தனையின் சமவுடைமைவாத அரச மாதிரி தொடர்பான எண்ணக்கரு கட்டியெழுப்பப்பட்டது.
- இது முதலாளித்துவ சமூக, பொருளாதார, அரசியல் முறைமையை தொழிலாளர்கள் புரட்டிப்போடப்பட்டதன் பின்னர் கட்டியெழுப்பப்படும் அரசு மாதிரியாக மாக்ஸ்வாத கோட்பாடு முன்வைக்கப்பட்டது.
- உழைப்புச் சுரண்டல் அற்ற, சமூகத்தில் வகுப்புவாதமொன்று இல்லாத சமத்துவவாத சமூகத்தை கட்டியெழுப்புவதே சமவுடைமை அரசொன்றின் நோக்காக உள்ளது.
- சமவுடைமை அரசொன்றில் பிரசைகளின் பௌதீக வாழ்க்கை தரத்தினை அபிவிருத்தி செய்வதிலேயே அதிகம் கரிசனைக் கொள்ளப்படுகின்றது. கல்வி, தொழில், வீடு, சுகாதாரம் போன்ற அடிப்படை மனித தேவைகளை அனைவருக்கும் சமமான வாய்ப்புகளில் பெற்றுக்கொடுத்தல் சமவுடைமை அரசின் பொறுப்பாக கருதப்பட்டது.
- இதனால் தனியார் முயற்சிக்குப் பதிலாக அரச ஆதிபத்தியம் நிலைநிறுத்தப்படும். சமவுடைமையாளர்களின் நம்பிக்கையின்படி தொழிலாளர் வர்க்க கட்டளையின் கீழ் பொருளாதார வளம் மற்றும் உற்பத்தி செயற்பாட்டின் தனியார் உரிமையை இல்லாதொழித்து சமூக பொது அதிகாரத்தினை உருவாக்கும்போது சமூகத்தில் வகுப்பு அழிவடையும். வகுப்பு அசமத்துவம் இல்லாதொழிக்கப்படும்.
- வர்க்கங்கள் அற்ற சமூகத்தில் வர்க்க கருவியான அரசு என்ற அடக்குமுறை தாபனம் தொடர்ந்தும் தேவையற்றது என்பதால் அது உதிர்ந்துவிடும் என மாக்ஸ்வாத கோட்பாடு குறிப்பிடுகின்றது.
- சமவுடைமை அரசு, லிபரல் ஜனநாயக அரசில் இருந்து முற்றிலும் வேறுபட்டது. சமவுடைமை அரசின் உரிமையாளர்கள் தொழிலாளர் வர்க்கமாகும். அதன் அரசியல் முறையின் அடிப்படை லிபரல் ஜனநாயகமன்றி, தாழ்த்தப்பட்ட மக்களின் கட்டளைகளாகும்.

- அரசியல் கட்சிகளை மையப்படுத்திய அரசியல் போட்டித்தன்மை இங்கில்லை. பல் கட்சி முறைக்கு பதிலாக இங்கு ஒரு கட்சி முறையே காணப்படும்.

- இரஸ்யா, சீனா, கியூபா, வடகொரியா, வியட்நாம், கம்போடியா மற்றும் கிழக்கு ஐரோப்பாவின் சில நாடுகள் சமவுடைமை அரசுமுறையினை பரிசீலித்துப்பார்த்துள்ளன.

- சோவியட் யூனியன் (ஒன்றியம்) மற்றும் கிழக்கு ஐரோப்பாவில் சமவுடைமைவாதம் வீழ்ச்சியடைந்ததன் பின்னர் சமவுடைமை அரசு, லிபரல் ஜனநாயகவாத்திற்கு மாற்றீடாகக் கருதப்படுவதில்லை.

- **பாஸிஸவாத அரசு**

- பாஸிஸவாதம் என்பது அரசின் உயரியத்தன்மை (Glorification of the State) சிரேஷ்டத்தன்மை மற்றும் எதேட்சையதிகாரம், இனவாதம், இராணுவவாதம் என்பவற்றை அடிப்படையாகக் கொண்ட அரசியல் கருத்தியலாகும்.

- இது முதலில் 1920, 1930 தசாப்தங்களில் இத்தாலி மற்றும் ஜேர்மனி போன்றவற்றில் தோற்றம் பெற்றது. இத்தாலியில் பெணிட்டோ முசோலினியும், ஜேர்மனியில் எடோல்ப் ஹிட்லரும் ஐரோப்பிய பாஸிஸவாத்தின் பிரதான தலைவர்கள் இருவராவர்.

- பாஸிஸவாத்தின் பிரதான கருத்தியலாக இருப்பது இனவாத பார்வையில் அரசு தொடர்பாக விபரிக்கும ஹிட்லர் குறிப்பிடுவதாவது, ''இனத்தின் சிருஸ்டியே அரசாகும்'' என்றார்.

- பாஸிஸத்தால் அரசு மற்றும் இனம் என்பது சமமானவையாக கருதப்பட்டுள்ளமையை இதன்மூலம் விளங்கிக் கொள்ளலாம்.

- பாஸிஸவாத்திற்கு ஏற்ப அரசு என்பது ''இனத்தின் சிருஷ்டியாகும்'' அரசினால் இனத்தின் தேவையே பிரதிநிதித்துவப்படுத்தப்படும். இதனால் அரசும் இனமும் ஒன்றாகும்.

- அரசு தொடர்பில் காணப்படும் பாஸிஸவாத வரைவிலக்கணங்களில் மிகவும் பிரபல்யமான இரு வரைவிலக்கணங்கள் காணப்படுகின்றன. அதாவது, ''அரசு நிரகற்ற தாபனமாகும்'' என்பதும், ''அரசு சர்வவல்லமை பொருந்திய தாபனமாகும்'' என்பனவே அவையாகும்.

- நீட்சே முன்வைத்த ''சூப்பர்மேன்'' (அதிசிறப்பு மனிதன்) (Superman) என்ற எண்ணக்கரு அரசு தொடர்பான பாஸிஸவாத கருத்தியல் தொடர்பில் பெரிதும் தாக்கம் செலுத்தியுள்ளது. இதன்மூலம் அரசின் உயரியத்தன்மை, உயர்ந்தது, நிகரற்றது போன்றவற்றின் மூலம் அரசுக்கு நிகராக்கக்கூடிய வேறு எந்த நிறுவனங்களும் இல்லை என்பது விளங்குகின்றது.

- அதிகாரம் எல்லையற்ற நிலையே ''அரசு சர்வ வல்லமை பொருந்தியது'' என்பதன் அர்த்தமாகும். அதிகாரம் உயரியதும் நிகரற்றதுமாக இருத்தல் வேண்டும் என்பதாகும்.

- பாஸிஸ அரசு சமூக நிறுவனமாகவல்லாமல் அது சமூகத்திற்கு மேலுள்ளதாகும். அரசு அதிசயத்தக்கதும், மர்மமானதுமான இயல்பினைக் கொண்டிருப்பதோடு இதன் உண்மையான இயல்பினை சாதாரண மக்களால் விளக்கிக்கொள்ள முடியாது.

- அத்தோடு அரசின் தோற்றம் அதன் தற்போதைய நிலை மற்றும் அரசின் எதிர்காலம் தொடர்பில் முறையான விபரிப்பு ஒன்று பாஸிஸவாத்ததில் முன்வைக்கப்படுவதில்லை. ''அரசு நிலையானது'' என்பதில் அவதானம் செலுத்துகின்றது. அரசுக்கு ஆரம்பமோ அல்லது முடிவோ கிடையாது என்பதே இதன் அர்த்தமாகும்.

- ''அரசும் சமூகமும் சர்வசமமானது'' என்பதன் மூலம் பாஸிஸவாதிகள் சமூகம் மற்றும் தனிநபர்களை கவனத்தில் கொள்ளாது அரசின் முக்கியத்துவத்தை மட்டும் முன்னிலைப்படுத்தினர் என்பதே அர்த்தப்படுத்தப்படுகின்றது. அரசுக்கும் அரசின் அதிகாரத்திற்கும் தனிநபர்கள் எல்லாவகையிலும் கட்டுப்படும்போதே தனிநபர் விடுதலை சாத்தியப்படுகின்றது.

- சமூகத்தில் மக்கள் முக்கியமற்றதோடு அரசு மட்டுமே முக்கியமானது என்று குறிப்பிடும் பாஸிஸவாதிகள் ''அரசே ஆட்சியாளன் ஆகும்''. அதாவது அரசும் ஆட்சியாளனும் சர்வசமமானவையாகும். இதனால் அரசின் படைப்பே ஆட்சியாளனாவான் என்பதை சுட்டிக்காட்டியது.

- இதன்படி பாஸிஸ அரசில் ஆட்சியாளர் சர்வதிகாரியாவான். அதாவது அறிவுடைய, பண்புடைய, மனிதமாண்புடைய, யுத்தப்பலம் கொண்ட, வீரமுடைய, இராஜதந்திரமுடைய, தேசஅபிமானமுடைய குணாம்சங்களில் பாஸிஸ ஆட்சியாளன் பரிபூரணமானவன். இதனாலேயே பிரசைகளிடமிருந்து தலைவனுக்கு எல்லாவகையிலும் அடிபணிவு எதிர்ப்பார்க்கின்றது. நாயகர் வழிபாட்டை வெளிகாட்டுவது முக்கியமானது.

- பாஸிஸ அரசில் எல்லா ஊடகங்களும் நாயகர் வழிபாட்டினை வெளிப்படுத்த வேண்டும். அரசியல் கட்சி, அமுக்கக்குழுக்கள் முழுமையாக தடைசெய்யப்படும்.

- மக்களின் அரசியல் பங்குப்பற்றலை பாஸிஸவாதம் எதிர்க்கின்றது. அரச நிருவாக செயற்பாடுகள் முழுமையாக ஆட்சியாளனின் எதேட்சை அதிகாரத்தின் கீழ் நடைபெறுவதோடு அரசின் சட்டம் என்பது ஆட்சியாளனின் விருப்பங்களாகும்.

- ஆயுதபலம் பாஸிஸவாதத்தின் அடிப்படையாகும். பாஸிஸ அரசுக்கு தாங்களைத் தவிர்த்த வேறு எந்த சமூக நோக்கமும் இல்லை. ''அரசு அரசுக்காகவே'' என்ற நோக்கில் காணப்படும். அதாவது ''அரசு அரசுக்காகவே உள்ளது'' என்பதாகும்.

- **காலனித்துவ அரசு**

- பிரித்தானியா, பிரான்ஸ், ஒல்லாந்து, போர்த்துக்கல் போன்ற ஐரோப்பிய காலனித்துவ அதிகாரங்களுக்கு நேரடியாக கீழ்நிலைப்படுத்தப்பட்டிருந்த ஐரோப்பா அல்லாத சமூகத்தில் விருத்தியடைந்த அரச மாதிரியே ''காலனித்துவ அரசு'' என்பதன் மூலம் அறியப்படுகின்றது. இந்த அரச மாதிரி வரலாற்று ரீதியாக 16 ஆம் நூற்றாண்டின் பின்னரே வளர்ச்சியடைந்தது.

- 16 ஆம் நூற்றாண்டின் ஆரம்பக்காலத்தில் தோற்றம் பெற்ற போர்த்துகீசர் காலனித்துவ ஆட்சியியின் கீழேயே இலங்கையிலும் காலனித்துவ ஆட்சி ஆரம்பமாகியது. 1815 ஆம் முழு தீவும் பிரித்தானிய காலனித்துவத்திற்கு உட்பட்டதன் பின்னர் முழு நாட்டினதும் அரசியல் கட்டமைப்பும் பிரித்தானிய காலனித்துவ ஆட்சியின் கீழ் மாற்றமடைந்தன.

- காலனித்துவ ஆட்சிக்கு முன்னர் காணப்பட்ட ஆரம்ப காலனித்துவ அரசுகள் ஒன்றில் இலங்கை, புருனே, இந்தோனேசியா அல்லது இந்தியா போன்றன நிலமானிய அரசாக இருந்தன. இல்லையேல் பெரும்பாலான ஆபிரிக்க நாடுகளைப்போல் கோத்திர அரசுகளாக இருந்தன.

- காலனித்துவ அரசொன்றினை உருவாக்கத்தால், இந்த காலனித்துவ சமூக அரசியல் முறைமையில் கீழ்வரும் மாற்றங்கள் ஏற்பட்டன.

  (i). பாரிய நிலப்பிரதேசங்களை ஒரு அரசின் ஆளுகைக்கு கொண்டுவந்தமையால் காலனித்துவ அரசுகள், ஆரம்பகால காலனித்துவ அரசுகளை விடவும் பாரிய நிலப்பரப்புகளைக் கொண்ட அரசுகளாக மாற்றம் பெற்றன.

(ii). காலனித்துவ ஆட்சியில் யுத்த செயற்பாடுகளினால் காலனித்துவ அரசுகள் இராணுவ அரசுகளாகவே விருத்தி அடைந்தன. தேசிய சமூகத்தில் ஏற்பட்ட புரட்சி மற்றும் எதிர்ப்புகளை தடுப்பதற்கும் காலனித்துவ அரசுகள் யுத்த சக்திகளையும், ஆயுதப்படைகளையும் தொடர்ந்தும் பேணிச் சென்றன.

(iii). காலனித்துவ அரசுகள் மத்தியமயப்படுத்தப்பட்ட முறையில் ஒழுங்கமைந்திருந்தன. காலனித்துவ ஆட்சியாளர்களால் மத்தியமயப்படுத்தப்பட்ட கட்டமைப்பொன்றினை கட்டியெழுப்பியமை இச்சமூகத்தில் மேற்கொள்ளப்பட்ட முக்கிய மாற்றமாகும். பின்னர் பின் காலனித்துவ அரசுகள் இந்த கட்டமைப்பை மையப்படுத்தியே கட்டியெழுப்பப்பட்டன.

(iv). காலனித்துவ சமூகத்தில் காலனித்துவ அரசு இராணுவ அதிகாரவாத அரசாகவே கட்டியெழுப்பப்பட்டிருந்தது. அது ஜனநாயக அரசும் அல்ல. தேசிய சமூகத்தின் பிரதிநிதிகள் காலனித்துவ அரச கட்டமைப்பில் தேசிய சமூகத்தின் பிரதிநிதிகளாகவன்றி, காலனித்துவ அரசின் பிரதிநிதிகளாக செயற்படவே (முகவர்களாக) இணைத்துக்கொள்ளப்பட்டனர். காலனித்துவ அரசுக்கு சேவை செய்வதற்காக அவர்களுக்கு நிலம், நிந்தகம், பதவிகள் மற்றும் பண ரீதியான சலுகைகளும் கிடைத்தன. காலனித்துவ அரசுக்காக வரியினை சேர்த்தல், சட்டம் மற்றும் ஒழுங்கினைப் பேணிக்கொள்ளல் என்பவே இந்த தேசிய பிரதிநிதிகளிடம் பகிரப்பட்ட பிரதான பணிகளாகும்.

- **பின் காலனித்துவ அரசு**

  - பின் காலனித்துவ அரசு முறை விசேடமான அரச மாதிரியாகும் என்ற கோட்பாட்டு தர்க்கத்தினை கட்டியெழுப்பியவர் பாகிஸ்தானிய நாட்டைசார்ந்த ஹம்சா அலாவி (Hamza Alavi) என்ற கோட்பாட்டாளராவார்.

  - 1972 ஆம் ஆண்டு *New Left Review* சஞ்சிகையில் வெளியிட்ட "State in Post Colonial Societies: Pakistan and Bangaladesh" (பாகிஸ்தான் மற்றும் பங்களாதேஷ் சமூகங்களின் அரச பின் காலனித்துவம்) என்ற கட்டுரை இதற்கு துணைப்புரிந்தது.

  - ஹம்சா அலாவியின் கோட்பாடு மற்றும் வேறு அணுகுமுறைகளின் துணையோடு பின் காலனித்துவ அரசுகளின் விசேட பண்புகளை பின்வருமாறு குறிப்பிடமுடியும்.

(I). பின் காலனித்துவ சமூகத்தில் காணப்படும் அரசுகள், அந்த சமூகத்தில் காணப்பட்ட காலனித்துவ கட்டமைப்புகளை மேலும் முன்னோக்கி கொண்டு சென்றுள்ளமையாகும். காலனித்துவ ஆட்சியில் கிடைத்த அரசியல் சுதந்திரம் அந்த கட்டமைப்புகளில் இருந்து விடுபட்டு தனித்து செல்வதற்கு வாய்ப்பு வழங்கவில்லை.

(II). பின் காலனித்துவ அரசுகள் பெரும்பாலானவற்றில் ஜனநாயக பரிமாற்றம் சாத்தியமானதாகவோ அல்லது நிலைத்திருக்கதக்க வகையிலோ நடைபெறவில்லை. இராணுவப்புரட்சிகளின் மூலம் ஜனநாயக ஆட்சி அமைப்புகளை மாற்றியமைத்தல் மற்றும் அதிகாரவாத ஆட்சிமுறை உருவாதல் என்பன இச்சமூகத்தின் பொது பண்புகளாக காணப்படுகின்றது. இதிலிருந்து மாறுபட்டதாக இந்தியா, இலங்கை போன்ற பின் காலனித்துவ நாடுகள் சில உள்ளன.

(III). பின் காலனித்துவ அரசுகளில் காணப்படும் விசேடமான பண்பு, இந்நாடுகளில் ஒப்பீட்டுரீதியாக வலுவான மற்றும் பலமிக்க இராணுவ மற்றும் சிவில் நிருவாக கட்டமைப்பொன்று அரச இயந்திரத்தின் மையமாக தொழிற்படுவதாகும். இவை காலனித்துவ ஆட்சி காலத்தில் கட்டியெழுப்பப்பட்டவையாகும். காலனித்துவ வாதத்தில் பெற்றுக்கொண்ட அரசியல் சுதந்திரத்தினால் இந்த கட்டமைப்புகள் மாற்றமடையவில்லை. இவை அரசியல் கட்சி மற்றும் சிவில் அரசியல் நிறுவனங்களுக்கு மேலான மிகவும் அதிகாரமிக்கவையாகும்.

(IV). அரசியல் கட்சி, சிவில் அரசியல் நிறுவனங்களுக்கு மேலான அதிகாரமுடைய இராணுவம் மற்றும் படிநிலைவாத கட்டமைப்பொன்று தோற்றம்பெறல் பின் காலனித்துவ அரசு ஜனநாயக பரிமாற்றத்தினை நோக்கிய பயணத்தில் காணப்படும் கட்டமைப்பு ரீதியான தடையாகும்.

- **நவ தாராண்மைவாத அரசு**

பொருளாதார பின்புலம்

- அரசின் பொதுநலவாதம் மூன்றாம் உலகத்தில் இருந்து விலகிச் செல்லலின் ஆரம்பமும், சமவுடைமை உலகத்தில் தோற்றம் பெற்றமையினால் உலக முதலாளித்துவ பொருளாதார மற்றும் அரசியல் இயக்கங்களுக்கு உலகம் முழுவதும் இடையூறுகளற்ற நிலையினை உறுதிப்படுத்துவதற்கான வாய்ப்பு கிடைத்தது.

- இந்த பின்புலத்தில் தேசிய அரசுகளின் தேசிய எல்லைகளை தாண்டி சந்தை பொருளாதர முறைமையொன்று தோற்றம் பெற்றது.

- இந்த பணப் பொருளாதாரத்தை அடிப்படையாகக் கொண்ட முதலாளித்துவ பொருளாதார முறை முறையாக செயற்பட்டதனை அடிப்படையாகக் கொண்டு ''உலகமயமாக்கல்'' என்ற எண்ணக்கரு தோற்றம் பெற்றது.

- முதலாளித்துவ பொருளாதார முறையின் ஆரம்பத்தில் தலையிடாக்கொள்கையே காணப்பட்டது. இதன்மூலம் அரசு, பொருளாதார செயற்பாடுகளில் தலையிடாத அதாவது தடைசெய்வதில்லை என்பதே கொள்கையாக இருந்தது.

- ஆரம்பக்கால தலையிடாக் கொள்கையானது நலன்புரிவாத கொள்கையின் பரவலோடு நலிவடையச் செய்யப்பட்டது.

- 1960 தசாப்தங்கள் ஆகும்போது அரச நலன்புரிவாதம் படிப்படியாக பின்னிலை அடைந்து முகாமைத்துவ அரசு எண்ணக்கரு பரவியது.

- இவ்வாறு தராள அரசின் அரசாங்கத்தை நிருவகிப்பதோடு மட்டுப்படுத்துவது நவ தாராள அரசின் பிரதான பண்பொன்றாகும்.

- முதலாளித்துவ சந்தைப் பொருளாதாரம் சர்வதேசமயப்படுத்தப்படுவதன் மூலம் உலகத்தின் அரசியல் தளம் பாரிய மாற்றத்திற்கு உட்பட்டதோடு, சந்தைப் பொருளாதாரத்திற்கு இணையாக உலகலாவிய கலாசாரமும் விருத்தியடைந்தது.

- இவ்வாறான நிலையினால் தேசிய அரசு நாம நிருவாக நிலைக்கு தள்ளப்பட்டதோடு, அரசு பொருளாதார செயற்பாடுகளில் விலகியிருத்தலும் கட்டாய அங்கமாகியது. அதாவது தேசிய

அரசுகள் தேசிய எல்லைகளைக் கடந்து பரவலடைந்துள்ளது. சந்தைகளை வழிநடத்துவதற்கான எந்தவொரு வாயப்பும் தேசிய அரசுகளுக்கு இல்லை.

- அரசானது, சந்தைப் பொருளாதாரத்திற்கு இடம்கொடுக்கும் வகையில் தேசிய பொருளாதாரத்தை திறந்துவிட நடவடிக்கை எடுக்க வேண்டியதோடு, சர்வதேச பொருளாதாரத்தை இயக்கும் முழுமையான பொறுப்பினை உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம், சர்வதேச வர்த்தகச் சங்கம் மற்றும் பல்தேசிய கம்பனிகள் போன்ற சர்வதேச அமைப்புகளால் மேற்கொள்ளப்படும்.

- இதில் பொருளாதாரத்தை இயக்கும் செயற்பாடு தற்போதைய அரசுகளுக்குரிய பணியல்ல. இவ்வாறான பின்புலத்தில் சுதந்திர சந்தை செயற்பாட்டிற்கு தேவையான அமைதியான சூழலை உருவாக்குதல், நீதியை நிருவகித்தல் மற்றும் முகாமைத்துவம் செய்தல் என்பனவே அரசுக்கு வழங்கப்பட்டுள்ள பணிகளாகும்.

- இங்கு முதலாளித்துவ சந்தைப் பொருளாதாரத்தை தொடர்ந்தும் கொண்டுசெல்வதற்கு தேவையான அனைத்துவித நிலைமைகளையும் உருவாக்குதல் மற்றும் வழிநடத்தலை அடிப்படையாகக் கொண்ட முகாமைத்துவமே முகாமைத்துவம் என்பதன் விளக்கமாகும்.

## அரசியல் சிந்தனைப் பின்புலம்

- நவ தாராண்மைவாத கருத்துக்களை வெளியிட்ட அரசியல் சிந்தனையாளர்களில் ரொபட் நோசிக், பெட்றிக் வோன் போன்றோர் முக்கியமானவர்கள்.

- நவ தாராண்மைவாதிகள் குறிப்பிடுவதுபோல எல்லா தனிநபர்களும் குறிப்பிடத்தக்க உரிமைகளுக்கு உரித்துடையவர்கள். இவை எவ்வகையிலும் பறிக்க முடியாது. கைப்பற்ற முடியாத மற்றும் கைமாற்ற முடியாதவைகளாகும். இவை அரசினால் பெற்றுக்கொடுக்கப்படாததால் அவற்றில் சமநிலைத்தன்மைகளை ஏற்படுத்துவதற்காக அரசு தலையிட வேண்டியதில்லை.

- ரொபட் நோசிக் (Robert Nozik) குறிப்பிடுவதுபோல நபர்களின் அரசியல் உரிமையை பாதுகாப்பதற்காக அரச அதிகாரமானது மிகவும் குறைந்தளவில் பயன்படுத்தப்படல் வேண்டும்.

- அரச அதிகாரம் பொலிஸ் அதிகாரத்திற்கு மேற்பட்ட ஒன்றாக இருத்தல் ஆகாது. நபர்களின் சொத்து தொடர்பான உரிமை மிகவும் முக்கியமானது என்பதால் இவ்வுரிமையினை இல்லாது செய்ய முடியாது என அவர் குறிப்பிட்டுள்ளார். தற்போதைய முதலாளித்துவ பொருளாதார முறையின் புதிய போக்குகளுக்கு ஏற்ப அரசுகளின் இயல்புகளை மாற்றுவதற்காக நவ தாராண்மைவாத கருத்துக்கள் இவ்வாறு முன்வைக்கப்பட்டுள்ளன.

- தற்போதைய அபிவிருத்தியடைந்த முதலாளித்துவ பொருளாதார அரசுகளைப்போலவே குறைவிருத்தியடைந்த முதலாளித்துவ அரசுகளிலும்கூட அரசின் நலன்புரி எண்ணக்கரு ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை. சர்வதேச நாணய நிதியத்தின் பரிந்துரையாக இருப்பது குறைவிருத்தி நாடுகளிலும் நலன்புரி அரசுகளின் செலவுகளை இல்லாது செய்ய வேண்டும் என்பதாகும்.

- இவ்வாறானதொரு நிலையில் அரச சார்பற்ற நிறுவனங்கள் ஊடாக உதவிகளை பெற்றுக்கொடுக்கும் வேலைத்திட்டமே இவர்கள் சமூகத்தில் வறுமையானவர்களுக்காக முன்வைத்துள்ள தீர்வாக இருந்தது. இதன்படி சர்வதேச வல்லரசுகளில் உதவிபெறும் அரச சார்பற்ற வலையமைப்பு ஒன்று உலகத்தில் செயற்படுவதை காணமுடியும்.

- முதலாளித்துவ பொருளாதார முறை விருத்திக்கு அழுத்தம் கொடுக்கும் தலையிடாக் கொள்கையே அது சிதைந்து போவதற்கும் காரணமாக அமைந்ததோடு, இதற்கு மாற்றீடாக அரச நலன்புரி கொள்கை நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டதோடு முதலாளித்துவ சமூக பொருளாதார முறைமை மீண்டும் (புனரமைக்கப்பட்டு) உயிருட்டப்பட்டு நிலையான சமூக முறையாக மாறியது. இவ்வாறு முதலாளித்துவ முறை நிலைபெறலானது, நீண்டகாலமாக இதற்கு சாவால்விடுத்த சமவுடைமைவாதத்தினை பலவீனப்படுத்தியது.

## குறைந்தபட்ச அரச எண்ணக்கரு

- இதன்மூலம் அரச நலன்புரிவாத வரலாற்று பணியினை முடிவுக்கு கொண்டுவந்து முதலாளித்துவ முறையின் உண்மையான முதலாளித்துவவாத நோக்கங்கள் மீண்டும் எழுச்சிபெறல் இருபதாம் நூற்றாண்டின் பின்னரைப் பகுதியில் குறைந்தப்பட்ச அரசு (Minimalist State) என்ற எண்ணக்கருவின் தோற்றத்தோடு ஆரம்பமானது.

- குறைந்தப்பட்ச அரசு கொள்கையினால் மீண்டுமொருமுறை அரசின் பணிகளை வரையறுத்தல் என்ற குறைத்தலை காணமுடிகின்றது. எனினும் இது தலையிடா அரசுபோலன்றி சமூக பொருளாதார விடயங்களில் விலகியித்தல் அல்லது தலையிடாமல் இருப்பது அல்ல.

- இதில் சமூக, அரசியல் செயற்பாடுகளை முகாமை செய்வதற்காக மட்டுப்படுத்தப்பட்ட வகையில் அரசின் தலையிடுகின்றது. எனினும் இது நலன்புரி அரசினைப் போல பரந்த மற்றும் இலகு தலையிடுதல் அல்ல. இதன்படி அரச தலையிடாவாதம் மற்றும் நலன்புரிவாதம் ஆகிய இரண்டுக்கும் இடையிலான நிலையாகவே குறைந்தப்பட்ச அரசினை இனங்காண முடியும்.

## 3.3. அரசு தொடர்பான அரசியல் எண்ணக்கருக்கள்

### 3.3.1. அரசும் இறைமையும்

- இறைமை என்பதன் அர்த்தம் ''உயர்வானது'' என்பதாகும். இறைமை அதிகாரம் என்பதன் மூலம் கருதப்படுவது அரசு பெற்றிருக்கின்ற உயர்வான அதிகாரமாகும்.

- இச்சொல்லினை முதன்முதலில் அரசறிவியலில் பயன்படுத்தியவர் ஜீன் போடின் (Jean Bodin) ஆவார். இவர் இறைமையை சட்டத்தால் கட்டுப்படுத்த முடியாத பிரசைகள் மற்றும் குடிகள் மீது செலுத்தப்படும் அரசுக்குரிய உயர்வான அதிகாரம் என்றே வரைவிலக்கணப்படுத்தினார். இறைமை வேறு எந்த சமூகத்திற்கும் அடிபணியமாட்டாது.

- இதன்படி இறைமை இருவகைப்படும்.

  I. உள்ளிறைமை (Internal Sovereignty)

  II. வெளியிறைமை (External Sovereignty)

- உள்ளிறைமை என்பது எந்தவொரு சுதந்திர அரசும் தமது அரசினுள் வாழும் மக்களின் அடிபணிவை பெற்றுக்கொள்வதற்கான சட்ட அதிகாரத்தை பெற்றுள்ளது என்பதாகும்.

- வெளியிறைமை என்பது வேறு எந்த இறைமை அதிகாரத்திற்கும் அது கீழ்நிலைப்படாது இருத்தலாகும். இதன்படி இறைமைமிகு அரசு தமது வெளிநாட்டு கொள்கைகளை அழுத்தங்கள் இன்றி வைத்துக்கொள்வதற்கான திறனாகும்.

- இறைமை அதிகாரம் நிலையான, அனைத்தாண்மைவாய்ந்த, பிரிக்கப்பட முடியாத, கைமாற்ற முடியாத, கையளிக்க முடியாத ஒன்றாக கருதப்படுகின்றது.

- இறைமைப் பற்றிய எண்ணக்கரு சமஸ்டிவாதம் மற்றும் உலகமயமாக்கலோடு பாரிய சவாலுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளது. தேசிய அரசொன்றினுள் வாழும் பல்வேறு இனக்குழுக்களை ஒன்றிணைப்பதற்காக இறைமை அதிகாரத்தினை பகிர்ந்தளிக்கும் போக்கொன்று விருத்தியடைந்து வருகின்றது.

- மறுபுறம், இறைமை அதிகாரமானது உலகமயமாக்கலினால் சவாலுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளது.

- தற்போதைய உலகின் பொதுக் கொள்கைகள் தேசிய மட்ட இறைமை அலகுகள் மூலம் தீர்மானிக்கப்படுவதிலும் பார்க்க பெரும்பாலும் உயர் தேசிய அமைப்புகளினால் (Super – National Organizations) தீர்மானிக்கப்படுகின்றது.

- தேசிய அரசுகளுக்கு தேசிய வரிக் கொள்கை மற்றும் குற்றங்கள் யாது என தனித்து தீர்மானிக்கக்கூடிய நிலை இருப்பதினால் இது உள்ளிறைமை நடைமுறையில் உள்ளதாக ஏற்றுக்கொள்கின்றது.

- எனினும் தற்போதைய மூலதன பாய்ச்சலுடன் (Capital Flow) ஏற்பட்ட சந்தையினை மையப்படுத்தும் உலக வர்த்தக அமைப்புகள் போன்ற நிறுவனங்கள் சர்வதேச மனித உரிமைகள், சட்டங்கள், சம்பிரதாயங்கள் மற்றும் குற்றங்கள் என்றால் என்ன என்பதை தீர்மானிப்பதாலும் இறைமை சவாலுக்குட்படுத்தப்பட்டுள்ளது.

- இதனால் தற்கால தேசிய அரசுகள் என்பது உலக உயர் தேசிய நிறுவனங்களில் எடுக்கப்படும் கொள்கைகளை தேசிய மட்டத்தில் நடைமுறைப்படுத்தும் முகவர்களாக மாறியுள்ளதாக வாதம் ஒன்று முன்வைக்கப்பட்டுள்ளது.

- இந்த பின்புலத்தினுள் பிரபல்யமான அரசுகளின் இறைமை விருத்தியடைந்துள்ளதோடு நலிவான அரசுகளின் இறைமை அடித்துச் சென்றுள்ளமை தெளிவாகின்றது.

### 3.3.2 அரசும் பிரசையும்

- பிரசை என்பதன் சரளமான கருத்து ‘‘நகரத்தில் வாழ்பவர்’’ என்பதாகும். இதன் தற்போதைய அர்த்தம் ‘‘அரசின் உறுப்பினன்’’ என்பதாகும்.

- நபர்கள் தமது பொது வாழ்க்கை தொடர்பில் தீர்மானம் எடுக்கும் செயற்பாட்டில் பங்குப்பற்றும் முறைக்கு ஏற்ப ‘‘பிரசை’’ என்பது தீர்மானிக்கப்படுகின்றது.

- அரிஸ்டோட்டலின் கருத்துக்கு ஏற்ப, பிரசை என்பவர் அரசின் செயற்பாடுகளுக்கு நேரடியாக பங்குப்பற்றும் நபராவார்.

- இவர் இந்தக் கருத்தினை சிறிய கிரேக்க நகர அரசுகளின் பின்புலத்தில் இருந்தே முன்வைத்துள்ளார்.

- நவீன சிக்கல்மிக்க அரசு முறையில் கிரேக்க நகர அரசு முறையினைப் போன்று அரச நிருவாக செயற்பாடுகளில் பிரசைகள் நேரடியாக பங்குப்பற்ற முடியாது. இது மக்கள் பிரதிநிதித்துவத்தின் வழிமுறையொன்றாகும்.

- நவீன ஜனநாயக அரசுகளில் சட்ட உருவாக்குனர்கள் மற்றும் நிறைவேற்றுனர்கள் மக்களின் பிரதிநிதிகள் அல்லது மக்களுக்கு பொறுப்புக்கூறக்கூடிய பிரசைகள் என்றே

எதிர்ப்பார்க்கப்படுகின்றது. இதன் கருத்தாவது பிரசைகள் பொது தீர்மானங்களை எடுப்பதற்கு மக்கள் பிரதிநிதிகளுடாக தொடர்புபடுகின்ற பொறுப்புக்கூறும் உத்தியோகத்தர்கள் (அதிகாரிகள்) என்றாகும்.

- இதில் அரச செயற்பாடுகள் தொடர்பில் பிரசைகளின் கடமைப் பொறுப்புக்கள் நவீன அரசுகளின் மாற்றத்திற்கேற்ப ஒழுங்கமைந்துள்ளது.

- தற்போது அரசு மற்றும் பிரசைகளுக்கிடையிலான தொடர்பில் மிகமுக்கியமான பண்புகள் இரண்டு காணப்படுகின்றன.

  I. பிரசைகள் அனுபவிக்கும் அரசியல் உரிமைகள்

  II. பிரசைகளின் அரசியல் கடமைகள்

- இதன்படி பிரசை என்பவர் அரச நலன்புரி மற்றும் உரிமைகளை அனுபவிப்பவரும் அதற்காக அரசுக்கு அடிபணிவை காட்டுபவருமாவார்.

- அரசொன்றில் ஆள்புலத்தில் வாழ்கின்றவர்களுக்கு பிரசாஉரிமையை வழங்கக்கூடியதும் இல்லாதொழிக்கக்கூடியதுமான ஒரே நிறுவனம் அரசாகும். எனினும் உண்மையான நடைமுறையாக அமைவது அரசை நிருவகிப்பவர்களால் அதனை தீர்மானிக்க முடியும் என்பதாகும்.

- T.H. Marshall போன்றோர் இந்த எண்ணக்கருவுக்கு ''சமூக பிரசாவுரிமை'' என்பதை இணைத்துள்ளனர். இவர்களின் கருத்துப்படி ''தொழிலொன்றை செய்வதற்கு, வீடொன்றை உரிமையாக்கிக்கொள்வதற்கான உரிமை போன்றன சமூக பிரசை என்பதன் கருத்தாகும். மார்சலின் இச் ''சமூக பிரசாவுரிமை'' என்ற கருத்து ''லிபரல் பிரசாவுரிமை'' என்பதற்கான மாற்றீடாகும்.

- அரசுக்கு பிரசை ஏன் அடிபணிவை காட்டவேண்டும் என்ற வினாவிற்கு அரசறிவியலாளர்கள் பல்வேறு பதில்களை முன்வைத்துள்ளனர்.

  ❖ அரிஸ்டோட்டலின் கருத்துக்கு அமைவாக, அரசின் இறுதி நோக்கம் அனைத்து பிரசைகளுக்கும் நலன்புரி மற்றும் நல்வாழ்க்கையை ஏற்படுத்திக் கொடுப்பதாகும். பிரசைக்கு ஒழுக்கரீதியாக உயர்தரமான, மகிழ்ச்சியான வாழ்க்கையுடன் கூடிய உயர்வான வாழ்க்கை என்பன அரசினால் வழங்கப்படுகின்றது.

  ❖ சமூக ஒப்பந்தக் கோட்பாட்டாளர்களின் கருத்துக்கு ஏற்ப, பிரசைகள் அரசை உருவாக்கிக்கொண்டதோடு அரசுக்கு அடிபணிவை காட்டுவதற்கான உடன்பாட்டினை ஏற்படுத்திக் கொண்டுள்ளனர். இதற்காக அரசு பிரசைகளுக்கு பாதுகாப்பு மற்றும் சமூக அரவணைப்பினையும் வழங்குகின்றது.

  ❖ லிபரல்வாத கோட்பாட்டாளர்களின் கருத்துக்கு ஏற்ப, பிரசைகளின் இயற்கை உரிமைகளை பாதுகாத்துக்கொடுப்பது அரசு என்பதால் பிரசைகள் அரசுக்கு அடிபணிய வேண்டும்.

  ❖ ரூசோவின் கருத்துக்கு ஏற்ப, அரசு பொது விருப்பத்தினை பிரதிபலிப்பதோடு, அதன்மூலம் பொது சித்தமே பிரதிநிதித்துவம் செய்யப்படுகின்றது. இதனால் பிரசை அரசுக்கு அடிபணிய வேண்டும்.

- **அரசு, அரசாங்கம் மற்றும் ஆட்சிமுறை என்பவற்றுக்கிடையிலான ஒற்றுமை வேற்றுமைகள்**

  - எல்லா சமூகத்திலும் காணப்படும் அடிப்படை மற்றும் மையமான அரசியல் நிறுவனம் அரசும் அரசாங்கமும் ஆகும்.

  - சமூகத்தில் காணப்படும் ஏனைய அரசியல் நிறுவனங்களின் தோற்றமும் அரசு மற்றும் அரசாங்கத்தால் நடைபெற்றுள்ளது.

    உதாரணம் : பாராளுமன்றம், அமைச்சரவை, நீதித்துறை, உள்ளூராட்சி அமைப்புகள், ஆயுதப்படைகள், பொலிஸ், சிறைச்சாலை, பாடசாலை, பல்கலைக்கழகம், திணைக்களங்கள் போன்றன.

  - அரசும் அரசாங்கமும் ஒன்றோடொன்று தொடர்புடையன. எனினும் இவை இரண்டும் ஒன்றல்ல. ஜனநாயக அரசியல் முறைகளில் அரசு என்பது ஒப்பீட்டு ரீதியாக நீண்டகாலம் நிலைத்துள்ள, சமூகத்தில் காணப்படும் அதிமுக்கிய அரசியல் நிறுவனமாகும்.

  - அரசாங்கம் என்பது அரச செயற்பாடுகள் மற்றும் பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்காக மக்களால் குறுகிய காலத்திற்கு அதிகாரம் பெற்றுக்கொடுக்கப்படுகின்ற நிறுவனமாகும்.

  - ஆரம்பகால ஜனநாயக அரசுகளில் இவ்வேறுபாடு காணப்படவில்லை.

    உதாரணம் :- மன்னராட்சியில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கம் ஒன்று இல்லாதிருந்ததோடு அரசு மற்றும் அரசாங்கத்திற்கிடையில் வேறுபாடும் காணப்படவில்லை. அரசனே அரசு மற்றும் அரசாங்கமானான்.

  - அரசு மற்றும் அரசாங்கத்திற்கிடையிலான நிறுவன வேறுப்படுத்தல் என்பது, ஐரோப்பாவில் நிலமானிய அரசியல் கட்டமைப்பு மற்றும் அரசாட்சி முறைமை வீழ்ச்சியடைந்ததன் பின்னர் தோற்றம் பெற்ற லிபரல் ஜனநாயக அரசியல் முறையின் பிரதான பண்பாகியது.

  - அரசு போன்ற மனித நிறுவனமானது, நிச்சயிக்கப்பட்ட ஆள்புலப்பிரதேசத்தில், அரசியல் ரீதியாக ஒழுங்கமைந்த பிரசைகள் மீது தமது இறைமை மற்றும் அதிகாரத்த பேணிக்கொள்வதற்கான உரிமையும், அதிகாரமும் கொண்ட அரசியல் நிறுவனமாகும்.

  - தமது அதிகார பலத்தினை பேணிக்கொள்வதற்கு அரசுக்குள்ள நிறுவனங்களில் அரசாங்கம் என்பது ஒரு நிறுவனம் மட்டுமே.

  - அரசுக்குள்ள அடிப்படை சட்ட கட்டமைப்பு அரசியலமைப்பாவதோடு, அரசின் இயல்பு, கட்டமைப்பு, நிறுவன ஒழுங்கமைப்பு போன்றன இதனால் தீர்மானிக்கப்படும்.

  - அரசு தமக்குள்ள அதகாரபலத்தினை சட்டத்துறை, நிருவாகத்துறை, நீதித்துறை, ஆயுதப்படைகள் மற்றும் பணிக்குழு என்பவற்றை அடிப்படையாகக் கொண்டே நடைமுறைப்படுத்துகின்றது.

  - இதன்போது அரசாங்கமானது அரச அதிகாரத்தை நடைமுறைப்படுத்தும் பிரதான முகவராக செயற்படுகின்றது. சட்டமியற்றல், அமுலாக்கல், கொள்கை தொடர்புகள் பேணல் மற்றும் ஏனைய அரசுகளுடன் தொடர்புகளை பேணல் போன்றன அரசுசார்பாக அரசாங்கத்தால் செய்யப்படவேண்டிய பிரதான பணிகளாகும்.

- **ஆட்சிமுறை** (Regime)

  - ஆட்சிமுறை (Regime) என்ற எண்ணக்கரு ''அரசாங்கம்'' என்பதற்கு சற்று நெருக்கமுடையதாக இருப்பினும், இதற்கு வேறு விளக்கமொன்றுண்டு. அரசாங்கம் என்பது அரசின் செயற்பாடுகளை செய்வதற்காக பொதுமக்களால் நியமிக்கப்படும் நிறுவன கட்டமைப்பாக முன்னர் கண்டோம். ஜனநாயக முறையினுள் அரசாங்கம் என்பது பாராளுமன்றத்தில் பெரும்பான்மையை பெற்றுள்ள பிரதமர் மற்றும் அமைச்சரவையினால் தலைமைத்துவம் வழங்கப்படும் நிறுவனக் கட்டமைப்பாகும்.

  - ஒவ்வொரு அரசாங்கமும் தமது கருத்தியல்கள், சமூக அடிப்படை மற்றும் தலைமைத்துவம் தொடர்பில் காணப்படும் விசேடத்தன்மையினை அடிப்படையாகக் கொண்டு இந்த அரசாங்கத்தை அடையாளப்படுத்தும்போது ''ஆட்சிமுறை'' (Regime) என்ற பதம் பயன்படுத்தப்படுகின்றது. உதாரணங்கள் சில கீழே தரப்பட்டுள்ளன.

    - அரசாங்கத்தின் தலைமைத்துவத்திற்கு ஏற்ப அரசாங்கத்தை அடையாளப்படுத்தல் :- ராஜபக்ஷ ஆட்சி, ஜயவர்த்தன ஆட்சி, இந்திராகாந்தி ஆட்சி போன்றன.

    - அரசாங்கத்தின் ஒழுங்கமைப்புக்கு ஏற்ப உருவாகும் ஆட்சிமுறை :- கூட்டு ஆட்சி (Coaliation Regime)

    - அரசாங்கத்தின் கருத்தியலின் அடிப்படையில் :- நலன்புரிவாத ஆட்சி (Welfare regime), சமவுடைமைவாத ஆட்சி (Socialist regime), அனைத்தாண்மைவாத ஆட்சி (Authoritarian regime)

### 3.4. அரசின் இயல்பு தொடர்பான கோட்பாட்டு அணுகுமுறை

- **சமூக ஒப்பந்தவாதம்**

  - தெய்வீக வழியுரிமை கோட்பாடு கீழ்நிலை அடைந்திருந்த பின்புலத்திலேயே சமூக ஒப்பந்தவாதமானது மத்திய கால இறுதியில் ஐரோப்பாவில் அரசின் அதிகாரத்தை நியாயப்படுத்துவதற்காக மேலெழுந்தது.

  - இதுவரை ஆட்சியாளர்கள் தெய்வத்தின் பிரதிநிதிகள் என கூறிக்கொண்டு கொண்டுசென்ற நிலமானிய பொருளாதார முறை, எழுச்சிப் பெறும் வணிக வகுப்புக்கு தடையாக அமைந்தது.

  - முதலாளித்துவ முறை என்ற சமூக முறையினுள் உருவாகிய நவீன வகுப்புகளுக்கு தேவையான சம்பிரதாய மானிய பிரபுக்களை உருவாக்கி அந்நிலையினை தமது அபிலாசைகளுக்காக பயன்படுத்திக் கொள்வதாகும். இதற்கு ஒத்துழைப்பு வழங்கிய ''சமூகத்தினுள் அரசு தோற்றம் பெற்றது'' என்ற உடன்பாட்டுவாதத்தின் மூலம் அந்த சமூகத்தின் தேவைகளே வெளிக்காட்டப்பட்டது.

  - இதுவரை தானாகவே தோன்றியதாக கூறப்பட்ட அரசு சமூகத்தினால் படைக்கப்படுகின்றது என காட்டப்பட்டது. இது ''சமூகத்தில் ஏற்பட்ட உடன்பாட்டின் விளைவு'' என ஏற்றுக்கொள்ளப்பட்டது.

  - இந்த கருத்தியலை கோட்பாடாக முன்வைத்தவர்கள் தோமஸ் ெ□ாப்ஸ், ஜோன்லொக், ஜீன் ஜெக் ரூசோ ஆகிய மூவருமாவர்.

  - தோமஸ் ஹொப்ஸ் இங்கிலாந்தில் 1642 – 1648 காலப்பகுதியில் சிவில் யுத்தத்தில் ஏற்பட்ட அரசியல் அஸ்திர நிலையினை முடிவுக்கு கொண்டுவந்து நிலையான அரசியல்

நிலைமை ஒன்றை கட்டியெழுப்பக்கூடியது வலுவான அரசாட்சிகே முடியும் என்பதை காட்டுவதை நோக்காகக் கொண்டு இந்த கோட்பாட்டினை முன்வைத்தார்.

- ஜோன் லொக் ஆங்கிலப் புரட்சிக் காலத்தில் இங்கிலாந்தில் ஏதேட்சையதிகார அரசாட்சி கீழ்நிலைப்படுத்தப்பட்டு பாராளுமன்றின் அதிகாரத்தை உறுதிப்படுத்துவதற்காக தமது கோட்பாட்டினை முன்வைத்தார்.

- ரூசோ பிரான்சில் காணப்பட்ட எதேட்சையதிகார அரசாட்சிக்கும் ஊழல்மிக்க உயர்குழாமம் அதிகாரத்திற்கு எதிராக பொதுமக்களின் புரட்சியால் அரசாட்சி முறை மற்றும் உயர்குழாமின் அதிகாரத்தை முழுமையாக இல்லாதொழித்து அதிகாரத்தின் ஊற்று பொதுமக்கள் என்பதை காட்டுவதற்காக தமது கோட்பாட்டினை முன்வைத்தார்.

(ஆசிரியர் வகுப்பறையில் நீண்ட கலந்துரையாடலில் ஈடுபடவும்)

- **மாக்ஸ்வாதம்**

- மாக்ஸ்வாதம் என்பது பொருளாதாரத்தை அடிப்படையாகக் கொண்டு வரலாறு மற்றும் சமூகம் பற்றி விபரிப்பதற்காக முன்வைக்கப்பட்ட பரந்த தத்துவமாகும்.

- கார்ள்மாக்ஸ் மற்றும் பெற்றிக் ஏங்கல்ஸ் என்போரால் அறிமுகப்படுத்தப்பட்ட இக்கோட்பாடு அரசின் தோற்றம், பரவல் மற்றும் எதிர்காலம் பற்றி முன்னர் காணப்படாத வகையான விளக்கம் ஒன்றினை வழங்கியுள்ளது.

- மனித சமூக வரலாறானது வர்க்க போராட்ட வரலாறாகவே இதுவரை காணப்பட்டதாக இவர்கள் குறிப்பிட்டனர். வரலாற்றில் காணப்பட்ட எல்லாவித சமூகத்திலும் காணப்பட்ட எதிர்ப்புகளை அடக்குவதற்காக அரசு என்ற தாபனத்தை சொத்துடைய வர்க்கம் பயன்படுத்தியது என்பதால் ''அரசு சொத்துடையவர்களின் கருவி'' என்றும், ''அரசு அடக்குமுறை நிறுவனமாக'' செயற்படுவதாகவும் இவர்கள் குறிப்பிட்டனர்.

- ஆரம்ப கம்யூனிச யுகம், அடிமையுகம், நிலமானிய யுகம், முதலாளிய யுகம், சமவுடைமைவாதயுகம் போன்றவற்றால் சமூகத்தின் வரலாறு வளர்ச்சியடைந்துள்ளதோடு, வளர்ச்சியடைகின்றது என மாக்ஸ்வாதம் குறிப்பிடுகின்றது. அரசு அந்தந்த வரலாற்று காலங்களுக்கு ஏற்ப பரவலடைந்துள்ளது.

- புராதன மாக்ஸ்வாத்திற்கு ஏற்ப நவீன முதலாளித்துவ அரசு என்பது உற்பத்தி கருவிகளுக்கு உரிமையாளர்களாகவுள்ள முதலாளித்துவ வகுப்பினால் உழைப்பினை மட்டும் கொண்ட ஆனால் அந்த உழைப்புக்கும் உரிமைக்கோர முடியாத தொழிலாளர் வர்க்கத்தை சுரண்டுவதற்காக பயன்படுத்தப்படும் வர்க்கக் கருவி ஒன்றாகும். இதனாலோயே அரசினை இல்லாதொழிக்க வேண்டும் என மாக்ஸ்வாதிகள் நம்பிக்கை கொள்கின்றனர்.

- முதலாளித்துவ அரசை இல்லாதொழிக்கும் வரலாற்றுக் கடமையினை மாக்ஸ்வாதம் தொழிலாளர் வர்க்கத்திற்கே பெற்றுக்கொடுத்துள்ளது. தொழிலாளர் வர்க்கத்திடம் அதற்கான சாத்தியப்பாடு காணப்படினும் அதனை ஒன்றிணைப்பதற்கான நிறுவனம் ஒன்று தேவைப்படுகின்றது. மாக்ஸ்வாத்தின்படி அரசினை இல்லாதொழிக்கும் வரலாற்று கடமைப்பொறுப்புக்களுக்காக தொழிலாளர்களை வழிநடத்தும் கடமையினை கம்யூனிச கட்சியினால் மேற்கொள்ளப்படும். இதன்மூலம் கம்யூனிச கட்சி, தொழிலாளர் வர்க்கத்தின் முன்னோடி அரசியல் அதிகாரமாக மாறும்.

- தொழிலாளர் வர்க்கம் அதிகாரத்தைக் கைப்பற்றிக்கொள்ளும் சமவுடைமைவாத சமூகத்தை கட்டியெழுப்புவற்கும் அரசு என்பது குறிப்பிட்டக் காலமொன்றுக்கு அவசியமானது என மாக்ஸ்வாதிகள் குறிப்பிடுகின்றனர்.

- சமவுடைமை புரட்சியின் பின்னர் வர்க்கமற்ற அரசொன்ரே தோற்றம் பெறும். வர்க்கபேதமற்ற சமவுடைமை சமூகத்திற்கும், தொழிலாளர் வர்க்கத்திற்கும் எதிராக முதலாளிகளால் மீண்டும் கட்டியெழுப்பப்படக்கூடிய எதிர்ப்புரட்சியினை முறியடிக்கும் கடமைப் பொறுப்புகள், புரட்சியின் பின்னரான வர்க்கமற்ற அரசின் தேவை என்ற வகையின் பின்னணியில் உள்ள வாதமாகும்.

- எவ்வாறானப்போதும், சசவுடைமை புரட்சியின் பின்னர் நீண்டகாலத்திற்கு அரசின் தேவை இல்லாது இருப்பதால் அரசு இல்லாது போதல் அல்லது உதிர்ந்துவிடல் ஏற்படும் என சில மாக்ஸ்வாதிகள் நம்பினர். லெனின் இதிலிருந்து மாறுபட்டதொரு கருத்தினை கொண்டு, முதலாளித்துவ அரசு தானாக அழிவதிலும் பார்க்க தொழிலாளர் வர்க்கத்தின் தலைமைத்துவத்தின் கீழ் இல்லாதொழிக்க வேண்டிய கருவியாக குறிப்பிட்டுள்ளார்.

(ஆசிரியர் நீண்ட கலந்துரையாடலில் ஈடுபடவும்)

- **லிபரல்வாதம் (தாராண்மைவாதம்)**

- 18 ஆம் நூற்றாண்டின் இறுதி அரை நூற்றாண்டில் இருந்து மேற்கு ஐரோப்பாவில் பரவிய சுதந்திரம் தொடர்பான அரசியல் கருத்தியல் லிபரல்வாதம் என அறியப்படுகின்றது.

- பதினேழாம் நூற்றாண்டின் இறுதி அரைப்பகுதியில் ஆங்கில தத்துவவியலாளரான ஜோன்லொக், தனியாள் சுதந்திரம், அரசியல் சுதந்திரம் மற்றும் சொத்துரிமைக்கான சுதந்திரம் தொடர்பாக குறிப்பிட்ட கருத்துக்கள் லிபரல்வாத வளர்ச்சிக்கும், வலுவூட்டலுக்கும் பாரியளவில் தாக்கம் செலுத்தியுள்ளது.

- பதினாறாம் நூற்றாண்டு தொடக்கம் மேற்கு ஐரோப்பா வணிக முதலாளித்துவத்தை அடிப்படையாகக் கொண்டு தோற்றம்பெற்ற பொருளாதார முறை அரசினால் நடைமுறைப்படுத்தப்பட்டது. எனினும் 18 நூற்றாண்டின் இறுதியரை பகுதியில் தோற்றம் பெற்ற கைத்தொழில் முதலாளித்துவத்தை நடைமுறைப்படுத்துவதற்காக அரசு தலையிட வேண்டிதில்லை என்றும், இந்த பொருளாதார முறை அதற்கே உரித்தான சக்திகளால் நடைமுறைப்படுத்தப்படுகின்றது என்றும் புராதான பொருளியலாளர்களான எடம் ஸ்மித் மற்றும் டேவிட் ரிக்காடோ ஆகிய இருவரால் முன்வைக்கப்பட்டது.

- இந்த பின்புலத்தில் அரசு பொருளாதாரத்தை நடைமுறைப்படுத்தக்கூடாது என்ற கருத்தியலை அடிப்படையாகக் கொண்டு அரசு தலையிடாவாதம் என்ற எண்ணக்கருவொன்று தோற்றம் பெற்றது. இது தாராண்மைவாத்தின் **பழையான** பிரிவாகும்.

- இதன்படி தலையிடா அரசொன்றினை கட்டியெழுப்புவதற்கான அரசியல் கருத்தியலாக லிபரல்வாதம் மேற்கு ஐரோப்பாவில் உருவாக்கப்பட்ட கைத்தொழில் முதலாளித்துவ பொருளாதார முறையின் அரசியல் வெளிப்பாடாகவே பரவியது.

- இவ்வாறு பரவலடைந்த லிபரல்வாதம் மூன்று வகைகளில் இனங்கண்டுக்கொள்ள முடியும்.
    - புராதான லிபரல்வாதம் - தலையிடா அரசு எண்ணக்கரு
    - நவீன லிபரல்வாதம் - நலன்புரி அரசு எண்ணக்கரு

- ○ நவ லிபரல்வாதம் - குறைந்தப்பட்ச அரசு எண்ணக்கரு

- **புராதான தாராண்மைவாதம் (லிபரல்வாதம்)** :- பதினெட்டாம் நூற்றாண்டின் பின்னரை பகுதியில் பரவிய ஆரம்பகால லிபரல்வாத கருத்தே புராதான லிபரல்வாதமாகும். இது எவ்வகையிலும் பொருளாதாரத்தில் அரசு தலையிடக்கூடாது என்றும், அரசு அமைதியான சூழலை உருவாக்குவதும் பக்கசார்பற்றவகையில் நீதியை நிலைநாட்டி நபர்களின் செயற்பாடுகளுக்கு மிகவும் குறைவான மட்டத்தில் தலையிடுதல் என்பதில் கரிசனைக் கொண்டது. இதன்படி குறைவாக நிருவகிக்கப்படும் அரசு சிறந்த அரசு என்பதே இதன் கருத்தாகும்.

- **நவீன லிபரல்வாதம்** :- புராதன லிபரல்வாத்தினால் கிடைத்த பொருளாதார சுதந்திரத்தில் முதலாளித்துவ வர்க்கத்தின் இலாபத்தினை உச்சப்படுத்துவதற்காக தொழிலாளர் வர்க்கத்தை சுரண்டுவதற்கான திறந்த வாய்ப்பு முதலாளித்துவ வகுப்பிற்கு கிடைத்தது. இதனால் ஏற்படும் சமூக சமத்துவமின்மை, பாதிக்கப்பட்ட மக்கள் தொடர்ந்தும் முகங்கொடுக்கும் வறுமை, தொழிலின்மை, மந்தபோசனை, நோய்கள், அறிவற்றநிலை போன்ற சமூக பொருளாதார பிரச்சினைகளுக்கு தீர்வுகளை தேடவேண்டி ஏற்பட்டது. இதற்காக சட்டம் ஒழுங்கினைப் பேணி அரசு செய்யும் பொலிஸ் பணிகளுக்கு அப்பால் சமூக நலன்புரிகளிலும் தலையிடவேண்டும் என்பதில் கவனம் செலுத்தப்பட்டது. இவ்வாறு சமூகத்தின் பொது நலனுக்காக அரசு தலையிட வேண்டும் என்பதை கோட்பாட்டு ரீதியாக முன்வைத்தவர்களில் டீ.எச்.கிறின் மற்றும் ஹொப்ஸ் ஹவுஸ் பிரபு போன்றோர் முக்கியமானவர்கள். இதன்படி அரச நலன்புரி எண்ணக்கரு ஆழ வேரூன்றியது.

- சந்தை பொருளாதார முறையின் பிரவேசத்துடன் அரச நலன்புரிவாதம் பின்னிலையடைந்து முகாமைத்துவ அரசு எண்ணக்கரு பரவலடைந்தது. இவ்வாறு ஆரம்பமாகும் நவ தாராண்மைவாத எண்ணக்கருவினால் மீண்டுமொருமுறை அரசின் பணிகளை கட்டுப்படுத்தல் அல்லது குறைத்தலை கண்டுக்கொள்ள முடியும். எனினும் அது தலையிடா அரசைப்போல அரச பொருளாதார சமூக செயற்பாடுகளில் இருந்து விலகியிருத்தல் அல்லது தலையிடாதிருத்தலை குறைந்தப்பட்ச அரசில் காண முடியாதுள்ளதோடு குறைந்தப்பட்ச அரசு பொருளாதார மற்றும் சமூக செயற்பாடுகளில் மட்டுப்படுத்தப்பட்ட தலையீட்டை செலுத்தும். அதாவது சமூக அரசியல் செயற்பாடுகளை முகாமைத்துவம் செய்வதற்காக அரசு மட்டுப்படுத்தப்பட்ட வகையில் தலையிட வேண்டும் என்கின்றது. இதன்படி அரசு தலையிடாவாதம் மற்றும் அரச நலன்புரிவாதம் ஆகிய இரண்டுக்கும் இடைப்பட்ட நிலையாக குறைந்தப்பட்ச அரசை அடையாளப்படுத்தலாம்.

(ஆசிரியர் இக்கருத்தியல் தொடர்பாக வகுப்பறையில் நீண்ட கலந்துரையாடலில் ஈடுபடவும்)

- **பெண்ணியல்வாதம்**

- அரசு தொடர்பிலான விசேட பெண்ணியல்வாத கோட்பாடொன்று கிடையாது. இதற்காக அதிகாரம் தொடர்பான கோட்பாடே உண்டு. எனினும் அரசு மற்றும் அரசியல் தொடர்பாக விசேட அணுகுமுறை ஒன்றை பெண்ணியல்வாதம் முன்வைத்துள்ளது.

- ''பால்நிலையினை அடிப்படையாகக் கொண்டது'' என்பதே இக்கோட்பாட்டின் பிரதான கருத்தாகும்.

- ஆதிபத்தியம் மற்றும் அடக்குமுறை ஊடாக பாலுறவு நிலை மேலெழுந்து ஆண்கள் மற்றும் பெண்கள் சமூக பிரிவுகளாக படைக்கப்பட்டுள்ளனர் என்கின்றது.

- ஆண்களின் உலக தத்துவத்திற்கு ஏற்ப கட்டியெழுப்பப்பட்டுள்ள தோற்றப்பாட்டு உலகத்தில் பெண்கள் அர்த்தப்படுத்தப்படுவதோடு இதில் அவளின் உடலே மையப்படுத்தப்பட்டுள்ளது.

அவளின் பொருள், கட்டழகு ஒழுங்கமைக்கப்படுகின்றது. அவளின் வாழ்க்கை விபரிக்கப்படுகின்றது. பெண்களின் வாழ்க்கையின் உள்ளடக்கம் தாயாரிக்கப்படுகின்றது. அந்தந்த பால்நிலைக்கு ஏற்ப குறித்த கடமைப் பொறுப்புக்கள் உரித்தாக்கப்பட்டுள்ளன.

- பெண்ணியல்வாதத்தின் பல்வேறு கற்றல் துறைகள் உள்ளன. லிபரல், மாக்ஸ்வாத மற்றும் தீவிரவாதம் (ரெடிகல்) என்பன பிரதானமானவை.
- பெண்ணியல்வாதிகள் அரசு தொடர்பில் குறிப்பிடும் கருத்தாவது, அரசு என்பது ஆண்களை மையப்படுத்தி உருவாக்கப்படும் உலகத்தை முன்னோக்கி கொண்டு செல்லும் ஆண்களின் கருவியாகவாகும்.
- அரசு தொடர்பான பெண்ணியல் வாதத்திற்கான கோட்பாடொன்று காணப்படாமையாலேயே லிபரல்வாதம் மற்றும் மாக்ஸ்வாத கருத்தியல்களுக்கிடையே இது சுழல்கிறது.
- லிபரல் பெண்ணியல்வாதிகள் பெண்களின் விடுதலைக்காக அரசின் தலையீட்டினை ஏற்கின்றனர். மாக்ஸ்வாத பெண்ணியல்வாதிகள் முதலாளித்துவ அரசை எதிர்க்கவேண்டும் என்கின்றனர். இவர்கள் பெண்களுக்கு நீதியினை பெற்றுக்கொடுக்கும் முறையொன்றை உருவாக்க வேண்டும் என கோருகின்றனர்.
- இறுதியாக பெண்ணியல்வாதிகள் நிச்சயமாக ஆண்மைய கருவியாக உள்ள அரசு, பெண்கள் மீது ஆண்கள் உலகத்தை திணிக்கும் கருவியாக செயற்படுவதாக குறிப்பிடுகின்றனர்.

**முன்மொழியப்பட்டுள்ள கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள்**

1. திருவினைச் சீட்டு முறைமூலம் தனக்கு கிடைக்கும் தலைப்பின் அடிப்படையில் விடயங்களை முன்வைத்தல் / சொற்பொழிவாற்றுதல்

I. அரசியல் அதிகாரத்தின் மைய வெளிப்பாடாக அரசு

II. நவீன ஆள்புல அரசு

III. நவீன தேசிய அரசு

IV. உலகமயமும் அரசும்

V. கோத்திர அரசு

VI. புராதான கிரேக்க அரசு

VII. மன்னராட்சி

VIII. தாராள / லிபரல் ஜனநாயக அரசு

IX. சமவுடைமை அரசு

X. பாஸிச அரசு

XI. காலனித்துவ அரசு

XII. பின் காலனித்துவ அரசு

XIII. நவ தாராள / லிபரல் அரசு

2. கீழ்குறிப்பிட்ட கருத்தியல்கள் உள்ளடங்கும் வகையிலான கையேடு ஒன்றை தயாரிக்குக.

- அரசும் சமூக நிறுவனங்களும்
- அரசும் பிரசாவுரிமையும்
- அரசு, அரசாங்கம் மற்றும் ஆட்சிமுறை என்பவற்றுக்கிடையிலான தொடர்புகளும் வேறுபாடுகளும்
- சமூக உடன்பாட்டுவாதம்
- மாக்ஸ்வாதம்
- லிபரல்வாதம்
- பெண்ணியல்வாதம்

**உசாத்துணைகள்**


01. கல்வி வெளியீட்டுத்திணைக்களம் (2007), *அரசறிவியலின் மூலக்கொள்கைகள் I*, கொழும்பு, கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.

02. கொஸ்மன், ஆர்.எச்.எஸ். (1972), *அரசியலமைப்பும் குடிமகனும்*, கொழும்பு, கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.

03. லஸ்கி, ஹெரல்ட் ஜே. (1970), *அரசு தொடர்பான சித்தாந்தமும் வரைவிலக்கணமும்*, கொழும்பு, கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.

04. உயங்கொட, ஜயதேவ, (2010), *அரசு தொடர்பான அரசியல் கோட்பாடு மற்றும் பயன்பாடு*, கொழும்பு சமூக விஞ்ஞானிகள் சங்கம்.

05. Jessop, Bob, t and Furut(2015), *State: Past, Present and Future*, Cambrige, MA:Polity Press.

06. Vincent, Andrew, (1987), *Theories of the State*, Oxford: Blackwell

# 04. அரசியலமைப்பு மாதிரிகள்

**தேர்ச்சி 4 :-** உலகில் நிலவும் அரசியலமைப்பு மாதிரி வகைகளின் அடிப்படையில் அரசியலமைப்புகளை பகுத்தாயும் ஆற்றலை வெளிப்படுத்துவார்

(பாடவேளைகள் – 30 )

## தேர்ச்சி மட்டம் :-

4.1. அரச அதிகார பகிர்வுக்கமைய அரசியலமைப்பு மாதிரிகள் உருவாக்கப்பட்டுள்ள முறையினை விபரிப்பார்.

4.2. நிறைவேற்று அதிகார ஒழுங்கமைப்பிற்கமைய அரசியலமைப்பு மாதிரிகள் உருவாக்கப்பட்டுள்ள முறையினை விபரிப்பார்.

## கற்றற் பேறுகள் :-

- அதிகார பகிர்வின் அடிப்படையில் அரசியலமைப்புகளை இனங்கண்டு அவற்றை வரைவிலக்கணப்படுத்துவார்.
- அவ்வரசியல் அமைப்பு முறைகளின் பண்புகளையும் நன்மை தீமைகளையும் சுட்டிக்காட்டுவார்.
- நிறைவேற்று அதிகார ஒழுங்கமைப்பிற்குகமைய அரசியலமைப்பு முறைகளின் மாதிரிகளை அடையாளம் கண்டு அவற்றிற்கு விளக்கம் கூறுவார்.
- ஒவ்வொரு அரசியலமைப்பு முறைகளினதும் பயனுறுதி தொடர்பாக ஒப்பீட்டு ரீதியாக கருத்துரைப்பார்.
- சமகாலத்தில் இலங்கையில் காணப்படும் அரசியலமைப்பு முறைகளின் பண்புகளை தாங்கற்றறிந்த அரசியலமைப்பு மாதிரிகளின் துணையுடன் பகுத்தாய்வார்.

## அறிமுகம் :-

இந்த அலகின் நோக்கம் உலகில் காணப்படும் அரசியலமைப்பு மாதிரிகள் மற்றும் அதன் விசேடத்தன்மைகளை விளங்கிக் கொண்டு அதனூடாக இவ்வகையான அரசியலமைப்பு மாதிரிகள் தொடர்பாக விளக்கம் ஒன்றை வழங்குதும், அரசின் இறைமை அதிகாரத்தை பகிர்தல் மற்றும் நிறைவேற்று அதிகாரம் ஒழுங்கமைப்பு செய்யப்பட்டுள்ள முறைக்கு ஏற்ப அரசியலமைப்பு மாதிரிகளை விளங்கிக் கொள்வதுமாகும்.

முதலாவதாக இறைமை அதிகாரத்தை பகிர்தல் அல்லது இறைமை அதிகாரம் எங்கு நிலைப்படுத்தப்பட்டுள்ளது என்பதை அடிப்படையாகக் கொண்டு அரசியலமைப்புக்களை வகைப்படுத்தி, இவ்வரசியலமைப்புகளின் விசேட பண்புகளைக் ஒப்பிட்டு கலந்துரையாடப்படும். இரண்டாவதாக, இந்த அரசியலமைப்புகளின் அனுகூல பிரதிகூலங்களை தொடர்பாக ஒப்பீட்டு ரீதியாக அவதானம் செலுத்தி அவற்றில் அதிகாரங்கள் நிலைப்படுத்தப்பட்டுள்ள முறைப்படி அரசியலமைப்புகளை ஒற்றையாட்சி, சமஷ்டியாட்சி, அரை சமஷ்டியாட்சி, கூட்டு சமஷ்டி போன்ற அரசியலமைப்புகள் உருவாக்கப்படும் முறைப்பற்றி கலந்துரையாடப்படும்.

அத்தோடு நிறைவேற்று அதிகாரம் ஒழுங்கமைக்கப்பட்டுள்ள முறைக்கு ஏற்ப உலகில் காணப்படும் பிரதான அரசியலமைப்பு மாதிரிகளின் விசேடத் தன்மைகளை விளங்கிக் கொண்டு அது தொடர்பான பகுப்பாய்வுகள் இடம்பெறும். இதன்போது லிபரல் (தாராண்மைவாத) ஜனநாயகத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் கெபினட் (பாராளுமன்ற) அரசியலமைப்பு, ஜனாதிபதி அரசியலமைப்பு,

கலப்பு அரசியல் அமைப்பு மற்றும் அனைத்தாண்மை அரசியலமைப்புகள் தொடர்பாகவும் அவதானம் செலுத்தப்படும்.

## அரசின் இறைமை அதிகாரத்தை பகிர்வதை அடிப்படையாகக் கொண்டு காணப்படும் அரசியலமைப்பு மாதிரிகள்

### ஒற்றையாட்சி அரசியல் அமைப்பு முறை:-

ஒற்றையாட்சி அரசியலமைப்பில் இறைமையானது முழுமையாக மத்திய அரசிடமே தங்கியிருக்கும். ஒற்றையாட்சியில் அரசியலமைப்பு ரீதியான உயரியத் தன்மையை மத்திக்கு வழங்கி இருப்பதனால் பிராந்திய அரசுகள் உள்ளிட்ட எந்தவொரு மாதிரியினதும் இருப்பு மத்திய அரசின் விருப்பத்திலேயே தங்கியுள்ளது. இது சமநிலையற்ற மத்தியமயப்படுத்தப்பட்ட நிலைமையை உருவாக்கும். மத்திய அரசாங்கத்திற்கு தனது விருப்பத்தின்படி உள்ளூராட்சி (மாகாண) அரசாங்கங்களை மீளப் உருவாக்குவதற்கும் ஒழுங்கமைப்பதற்கும் இல்லாது செய்வதற்கும் அதிகாரம் உண்டு. அத்தோடு அந்த நிறுவனங்களின் அதிகாரங்கள் மற்றும் பொறுப்புக்களை விரிவாக்குவதற்கும் குறைப்பதற்கும் அதிகாரம் உண்டு.

உலகின் பெரும்பாலான அரசுகள் ஒற்றையாட்சி முறையிலேயே ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. விசேடமாக பாரிய இனப் பாகுபாடுகள் இல்லாத சிறிய ஜனநாயக நாடுகளில் ஒற்றையாட்சி கட்டமைப்புக்கள் பொதுவானவையாக உள்ளன. சமஷ்டி வாதத்தின் சிக்கல் தன்மையுடன் ஒப்பிடும்போது ஒற்றையாட்சி கட்டமைப்பு, இலகுவானதும் வினைத்திறன் மிக்கதுமாக உள்ளது. எவ்வாறாயினும் நடைமுறை ரீதியாக ஒற்றையாட்சி முறைமையில் மத்திய மற்றும் பிராந்தியங்களுக்கு இடையிலான தொடர்பு சமஷ்டியை போன்று சிக்கலானது.

### ஒற்றையாட்சி அரசியலமைப்பின் பண்புகள்

- அரசின் இறைமை அதிகாரம் தனியொரு தேசிய நிறுவனத்திற்கு வழங்கப்பட்டிருத்தல்
- ஒற்றையாட்சி அரசியலமைப்புகளில் இறைமை அதிகாரம் முழுமையாக தேசிய மத்திய அரசாங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டிருக்கும்.
- மத்திய தேசிய அரசாங்கத்தினால் பதவிநிலை (படிநிலை) திட்டத்திற்கு ஏற்ப உருவாக்கப்பட்டுள்ள அரசாங்க நிறுவன செயற்பாடுகளினூடு கீழ்நிலை நிறுவனங்களை இல்லாதொழிக்கும் அதிகாரம் காணப்படல்.
- மத்திய சட்டத்துறையின் உயரியத்தன்மை வெளிப்படும் வகையில் ஒற்றையாட்சி நாடுகளின் தேசிய சட்டத்துறை ஓரங்க வாத அடிப்படையில் அமைந்திருக்கின்றமை.
- சமஷ்டி அரசியலமைப்புடன் ஒப்பிடுகையில் ஒற்றையாட்சி அரசியலமைப்பு எளிமையானதும் வினைத்திறன் மிக்கதுமான அரசியலமைப்பாக உள்ளமை.

### ஒற்றையாட்சி அரசியலமைப்பின் போக்குகள்

- ஒற்றையாட்சி அரசாங்கத்தின் செயற்பாடுகள் தொடர்ந்தேட்சையாக நிருவாக பரவலாக்கத்திற்கு உட்பட்டு வருகின்றது. அதாவது கீழ் மட்டத்திற்கு அதிகரித்த பொறுப்புக்களை வழங்குதலாகும். இது அரசியல் அதிகாரத்தை கீழ்மட்டத்திற்கு வழங்குவதல்ல. 1990 தசாப்தங்களில் இருந்து பெரும்பாலான ஒற்றையாட்சி நாடுகள் கீழ் மட்டங்களுக்கு அதிகமான பொறுப்புகளை வழங்குவதற்கு முயற்சிகளை எடுப்பதை காணக்கூடியதாக உள்ளது. ஒற்றையாட்சி நாடுகளில் மத்தியில் இருந்து கீழ் மட்டத்திற்கு அதிகாரத்தை பரவலாக்குதல் பிரதானமாக மூன்று முறைகளில் இடம்பெறலாம்.

1. அதிகாரத்தை பன்முகப்படுத்தல் (Deconcentration)

அதிகாரத்தை பன்முகப்படுத்தல் முழுமையாக நிருவாகம் சார்ந்த செயற்பாடாகும். இதன்படி மத்திய அரசாங்கத்தின் பணியாட்குழுவை தலைநகரத்தில் இருந்து வேறு பிரதேசங்களுக்கு சேவைக்கு உட்படுத்துவதாகும். நிருவாக செயற்பாடுகளை விரிவாக்குதல், அரசாங்கத்தின் நிருவாக விடயங்களுக்காக செய்யப்படும் செலவுகளை குறைத்தல் போன்றன அதன் நோக்கமாகும்.

2. நிருவாக பரவலாக்கம் - (Decentralization)

கொள்கைகளை நடைமுறைப்படுத்தலை உள்ளூராட்சி போன்ற உப தேசிய நிறுவனங்களுக்கு பெற்றுக்கொடுத்தலே இதன் கருத்தாகும். பிரித்தானியா மற்றும் ஸ்கென்டினேவிய நாடுகள் இதற்கு சிறந்த உதாரணங்களாகும். அவ்வாறான நாடுகளில் மாகாண அரசாங்கங்கள் மத்திய அரசின் அனுமதியுடன் அல்லது ஒத்துழைப்பின்றி நலன்புரி வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துகின்றன. உதாரணமாக ஐக்கிய இராச்சியத்தில் உள்ளூராட்சி அரசாங்கங்கள் மத்திய அரசாங்கத்தினால் உருவாக்கப்படுகின்ற திட்டங்களை நடைமுறைப்படுத்துகின்றன.

3. அதிகார ஒப்படைத்தல் (Devolution)

ஒருசில சட்டவாக்க அதிகாரங்கள் உட்பட தீர்மானம் எடுக்கும் சுயாதீனத் தன்மையை மத்திய அரசாங்கத்தின் மூலம் கீழ் மட்டங்களுக்கு பெற்றுக்கொடுக்கப்படுவதே இதன் பொருளாகும். பிரான்ஸ், இத்தாலி மற்றும் ஸ்பெயின் போன்ற நாடுகளிளின் பிரதேச அரசாங்கங்கள் இது தொடர்பான உதாரணங்களாக குறிப்பிடலாம். ஐக்கிய இராட்சியத்தினால் 1999 ஆம் ஆண்டில் ஸ்கொட்லாந்துக்கும் வேஸ்சுக்கும் அதிகாரத்தை வகைப்படுத்தப்பட்டு ஒப்படைக்கப்பட்ட பாராளுமன்ற சட்டம் அறிமுகம் செய்யப்பட்டது. எவ்வாறாயினும் அந்நாட்டின் மத்திய அரசாங்கத்தின் பாராளுமன்றம் சாதாரண சட்டமூலம் ஒன்றை நிறைவேற்றிக் கொள்வதன் மூலம் அவ்வாறு ஒப்படைக்கப்பட்ட அதிகாரத்தை இல்லாதொழிக்கவும் முடியும்.

## சமஷ்டி அரசியலமைப்பு

சமஷ்டி அல்லது பெடரல் அரசியல் அமைப்பு என்பது தனி அரசினுள் அரசாங்கங்களுக்கிடையில் நிருவாக அதிகாரத்தை இணைத்தல் அல்லாமல் இறைமை அதிகாரத்தை பங்கிட்டு நடைமுறைப்படுத்தும் பல் மட்டங்களிலான (Multi Level) ஆட்சி மாதிரியாகும் (Martin and Harrop - 2013). இதன்படி சமஸ்டி அரசியல் அமைப்பினுள் சட்ட ரீதியான இறைமை மத்திய அரசாங்கம் மற்றும் சமஷ்டி முறையில் உருவாக்கப்பட்டிருக்கும் உப பிரிவுகளுக்கிடையில் (பிராந்தியம் அல்லது மாகாணம்) பங்கிடப்படும். சமஷ்டி முறையில் இந்த எந்த மட்டத்திலும் இன்னொரு மட்டத்தை இல்லாதொழிக்கும் திறன் காணப்படுவதில்லை. இதன்மூலம் பிராந்தியங்களின் ஒப்பீட்டு ரீதியான சுயாதீன நிலை பாதுகாக்கப்படும். இதனால் சமஷ்டி அரசாங்கத்தில் மத்திய அரசிற்கு பிராந்தியங்களின் பெரும்பான்மையின்றி தமது அதிகாரத்தை விரிவாக்கிக் கொள்ள முடியாது.

சமஷ்டி முறை ஐக்கியத் தன்மை மற்றும் பிரதேச பல்வகைத்தன்மைகளுக்கிடையிலான ஒப்பந்தத்தின் அடிப்படையில் கட்டியெழுப்பட்டது. இது ஒப்பீட்டு ரீதியாக சுயாதீன அல்லது வேறுப்பட்ட அரசியல் அபிலாசைகள் நிலவுகின்ற அலகுகளுக்கிடையில் ஏற்படுகின்ற கலந்துரையாடல்கள் மற்றும் பேரம் பேசுதலை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்படுகின்ற அரசியலமைப்பாகும். எந்தவொரு சமஸ்டி அரசிலும் கண்டுக்கொள்ளக்கூடிய பொதுப்பண்புகள் சில உள்ளன.

## சமஷ்டி அரசியல் அமைப்பின் பண்புகள்

- அரசாங்க இயந்திரம் ஒன்றுக்கொன்று ஒப்பீட்டு ரீதியில் சுயாதீனமான இரு வகையான அரசாங்க மட்டங்களில் காணப்படும். அதாவது தேசிய அல்லது மத்திய அரசாங்கம் மற்றும் பிராந்திய அரசாங்கங்கள் என்ற வகையிலாகும்.

- மத்திய அரசாங்கம் மற்றும் பிராந்திய அரசாங்கங்கள் அதிகாரங்கள் பலவற்றை கொண்டிருக்கும். இவை சுயாதீன அதிகாரங்களாகும். இரு மட்ட அரசாங்கங்களுக்கும் ஒன்றின் அதிகாரத்தை மற்றொன்று உடைமையாக்கிக் கொள்ள முடியாது.

- சமஷ்டி அரசியலமைப்பொன்றில் மத்திய அரசுக்கும் பிராந்திய அலகுகளுக்கும் தனித்துவமான விடயங்கள் ஒப்படைக்கப்படும். மத்திய அரசு வெளிநாட்டு தொடர்புகள், பாதுகாப்பு, குடிவரவு செயற்பாடுகள் மற்றும் நிதிசார் செயற்பாடுகள் போன்ற பொதுவான உள்ளகக் கடமைகளுக்கு பொறுப்பாய் இருப்பதோடு, பிராந்திய அரசாங்கங்களுக்கு ஒப்படைக்கப்படும் விடயங்களில் பன்மைத்தன்மை காணப்படலாம். எவ்வாறெனினும் பொதுவில் கல்வி, உள்நாட்டு அலுவல்கள், சுகாதார செயற்பாடுகள், சமூக சேவை செயற்பாடுகள் போன்ற விடயங்கள் பிராந்தியங்களுக்கு கிடைக்கும்.

- மத்திய அரசு மற்றும் பிராந்தியம் போன்ற ஒவ்வொரு அரசாங்க மட்டத்திற்கும் கிடைக்கும் பொறுப்புகள் மற்றும் அதிகாரங்கள் எழுதப்பட்ட அரசியலமைப்பினால் உறுதியாக காட்டப்பட்டிருக்கும். மத்திய மற்றும் பிராந்தியங்களுக்கிடையிலான தொடர்புகள் ஒருதலைப்பட்சமாக மத்திய அல்லது பிராந்திய அரசாங்கங்களால் மாற்றமுடியாத வகையில் முறையான சட்ட கட்டமைப்பின் கீழ் வழிநடத்தப்படும். இதனால் சமஸ்டி அரசாங்கத்தின் அரசியலமைப்பில் ஒப்பீட்டு ரீதியாக நெகிழா, திருத்தங்களைச் செய்வதில் ஓரளவு இருக்கமானதாக காணப்படும். உதாரணமாக :- அவுஸ்ரேலியா மற்றும் சுவிட்சர்லாந்து போன்ற நாடுகளில் அரசியலமைப்பினை திருத்த வேண்டுமாயின் மக்கள் அபிப்பிராய வாக்கெடுப்பு மூலம் பொதுமக்களின் அனுமதியை பெற்றாதல் வேண்டும்.

- மத்திய அரசுக்கும் மாநிலங்களுக்கும் இடையில் ஒத்துழைப்பினை கட்டியெழுப்பும் நோக்கோடும் மற்றும் மத்திய அரசாங்கத்தின் கொள்கை உருவாக்கம் செயற்பாட்டில் பிராந்திய அரசாங்கங்களை தொடர்புபடுத்திக் கொள்வதற்காகவும் மத்திய அரசாங்கத்தின் சட்டத்துறை ஈரவை கொள்கையின்படி உருவாக்கப்பட்டுள்ளது. பெரும்பாலான நாடுகளில் **செனட்** எனும் இரண்டாம் மன்றங்களின் நோக்கம் பிராந்திய அரசாங்கங்களுக்கு மத்திய அரசாங்கத்தில் பிரதிநிதித்துவமும் அதிகாரமும் பெற்றுக்கொடுத்தலாகும்.

- அரசியலமைப்பில் முறையான விதிமுறைகள் உயர் நீதிமன்றத்தினால் அர்த்தப்படுத்தப்படுகின்றது. இதன்மூலம் உயர்நீதிமன்றமானது மத்திய மற்றும் பிராந்திய அரசாங்கங்களுக்கிடையில் முரண்பாடுகளை தீர்த்துவைக்கும் உயர் நிறுவனமாக செயற்படுகின்றது. மத்திய மற்றும் பிராந்திய மட்டங்களுக்கு தேவையான அதிகாரத்துறைகளை தீர்மானிப்பதன் மூலம் சமஷ்டி அரசியல் அமைப்பு நடைமுறைப்படுத்துவது எவ்வாறு என்பதை தீர்மானிக்கும் அதிகாரம் சமஷ்டி நீதிமன்றுக்கு உண்டு.

- ஒற்றையாட்சி அரசியல் அமைப்பு விரிவடையக்கூடிய மாதிரி ஒன்றாக இருப்பதோடு சமஷ்டி அரசியலமைப்பு விசேட நிலைமைகளின் வேண்டுமென்றே உருவாக்கிக்கொள்ளப்பட்டதாகும். தொடர் பேரம் பேசுதலின் மூலமே சமஷ்டி அரசியலமைப்பொன்று உருவாக்கப்படுகின்றது. சுயாதீன அலகுகளை சேர்த்துக்கொள்வது எவ்வாறு? மத்திக்கும் பிராந்தியங்களுக்கும் இடையில் அதிகாரம் பங்கிடப்படுவது எவ்வாறு? போன்ற அடிப்படையான விடயங்கள் இவ்வாறான பேரம் பேசுதலின் போது முக்கிய இடத்தை வகிக்கும். அத்துடன் அரசியலமைப்பாக்க செயற்பாட்டில் சமஷ்டி அரசியலமைப்பொன்றை உருவாக்கும் செயற்பாடு பிரதான இடத்தைப் பெறுகின்றது. ஏனெனில் மையத்திற்கும் மற்றும் அலகுகளுக்கும் இடையில் அதிகாரத்தை பகிர்தல் இடம்பெறுவது அரசியலமைப்பினாலேயேயாகும். எவ்வாறானப்போதும்

ஒற்றையாட்சி முறையினை உருவாக்கும்போது இவ்வாறான சவால்களுக்கு முகங்கொடுக்கவேண்டி ஏற்படுவதில்லை.

## சமஷ்டி அரசியலமைப்பை உருவாக்குவதற்கான காரணங்கள்

- முன்னர் சுயாதீனமாக காணப்பட்ட அரசுகள் அல்லது அரசியல் அலகுகள் ஒரே அரசாக ஒன்றுபடுவதற்கான தேவை இருத்தலின் அடிப்படையில் சமஷ்டி அரசுகள் உருவாக்கப்பட்டுள்ளன. சுவிட்சர்லாந்து, ஐக்கிய அமெரிக்க குடியரசு இதற்கான உதாரணங்களாக காட்டலாம். வெளியக அச்சுறுத்தல் காணப்படல், சர்வதேச தொடர்புகளை சிறப்பான முறையில் முகாமைத்துவம் செய்தல் அல்லது தேசத்தின் பொருளாதார அபிவிருத்தி என்பன இதற்கான அண்மித்த காரணிகளாகும்.

- நிலத்தின் விசாலத்தன்மையும் சமஷ்டி அரசியலமைப்பு ஒன்றை உருவாக்குவதற்கு அடிப்படையாக அமையும் மற்றுமொரு காரணியாகும். உலகில் பூகோள அடிப்படையில் பெரிய அரசுகள் சமஷ்டி முறை ஒன்றை அறிமுகப்படுத்த தீர்மானிப்பது இவ்விடயத்துடன் எல்லா சந்தர்ப்பங்களிலும் பொருந்தாவிடினும் ஐக்கிய அமெரிக்க குடியரசு (1787), கனடா (1867), பிரேசில் (1891), அவுஸ்ரேலியா (1901), மெக்சிகோ (1917), இந்தியா (1947) ஆகிய நாடுகள் தொடர்பில் இது உண்மையாகும். புவியியல் ரீதியாக விசாலமான அரசுகள் கலாசார பன்மைத்தன்மை பெறக்கூடிய போக்கு நிலவுவதோடு, வலுவான பிராந்திய சம்பிரதாயங்களை பெற்றுககொள்வதற்கான சந்தர்ப்பங்களும் காணப்படுகின்றன.

- கலாசார மற்றும் இன பன்மைத்துவம் சமஷ்டி முறையொன்றை உருவாக்கிக் கொள்வதற்கான இறுதி சாதனமாகும். சமஷ்டிவாதம் சமூக பிளவுகளுக்கும் பன்மைத்தன்மைக்கும் எப்பொழுதும் நிறுவன ரீதியான பதிலினை வழங்கும். உதாரணமாக இந்தியாவின் பிராந்திய அரசுகள் மொழியினை சார்ந்து எல்லைகளை நிர்ணயித்திருந்தாலும் பஞ்சாப் மற்றும் காஸ்மீர் பிராந்தியங்கள் மத ரீதியிலான வேறுபாடுகளை கவனத்தில் கொண்டுள்ளன. வேற்றுமையில் ஒற்றுமை காணல் (Unity in Diversity) என்ற வாசகத்தில் இந்தக் கருத்து உறுதியாக வெளிப்படுகின்றது.

## சமஷ்டி அரசியலமைப்பின் (சாதகமான பண்புகள்) நிறைகள்

- தனியானதொரு மத்தியமயப்படுத்தப்பட்ட நிறுவனம் ஒன்றிடம் அதிகாரம் குவிக்கப்பட்டுள்ள ஒற்றையாட்சி அரசியலமைப்பினை போன்றல்லாமல் பிரதேச மற்றும் பிராந்திய அபிலாசைகளுக்கு அரசியலமைப்புசார் உறுதியினை வழங்குகின்ற அரசியல் குரலினை பெற்றுக்கொடுக்க முடிகின்றமை.

- மத்திய அரசாங்கத்தின் சட்டத்துறையின் இரண்டாம் மன்றத்தின் மூலம் பிராந்திய அரசாங்கம், மத்திய அரசாங்கத்தினுள் ஏதேனும் அளவிலான பிரதிநிதித்துவம் மற்றும் அதிகாரத்தை அனுபவித்தல். இதன்மூலம் சமஷ்டி அதிகாரம் கிடைத்துள்ள பிராந்தியங்கள் தனியாக இருக்காமல் மத்திய அரச கட்டமைப்பினுள்ளே ஒன்றுசேர்தல் நடைபெறும்.

- அரசாங்க அதிகாரமானது பரவலடைந்து காணப்படுவதால் தனியாள் சுதந்திரத்தை பாதுகாப்பதற்கு உதவும் சமநிலை தலையீகள் கொண்ட வலையமைப்பு ஒன்று உருவாகும்.

- பிரிந்திருக்கின்ற சமூகமொன்றை ஒற்றுமைப்படுத்த மற்றும் ஒன்றிணைந்த வகையில் கொண்டு செல்வதற்கான நிருவாக இயந்திர முறைமை ஒன்றினை சமஷ்டி வழங்கும். இந்த தொடர்புகளை எடுக்கும்போது இனரீதியாக பிரிந்த மற்றும் பிரதேச ரீதியாக பிரிந்த சமூகத்திற்கு சமஷ்டி தீர்வு சிறப்பானதாக அமையலாம். பெல்ஜியத்தின் அனுபவங்களின்மூலம் காட்டப்படும் விதத்தில் பிரிந்த

சமூகமொன்றில் இனப்பன்மைத்துவத்தை இணைப்பதற்காக சமஷ்டி ஆட்சிமுறை பிரயோசனமாக அமைந்தது.

- பரந்தளவான அரசுகளை ஒழுங்கமைப்பதற்காக இயற்கையான பிரயோக ரீதியான திட்டமொன்று சமஷ்டி முறை மூலம் பெற்றுக்கொடுக்கப்படுகின்றது.

### சமஷ்டி அரசியலமைப்பின் (பாதக பண்புகள்) குறைகள்

- இருபதாம் நூற்றாண்டில் இருந்து சமஷ்டி அரசியலமைப்பு மத்தியமயப்படுத்தப்படல் என்ற திசைக்கு மாற்றமடைவதை தடுப்பதற்கு சமஷ்டி வாதத்திற்கு முடியாமல் போயுள்ளது.
- சமஷ்டி முறையின் காரணமாக அரசாங்க பிரிவினை ஏற்பட முடியும் என்பதோடு அரசினுள் கேந்திரமயப்படுத்தலுக்கான அழுத்தம் வலுவடையும்.
- சமஷ்டி அரசாங்கம் ஒற்றை மற்றும் மத்தியமயப்படுத்தப்பட்ட அரசாங்கங்களைப்போல் செயற்றிறனானதும், வலுவானதுமான அரசாங்கங்களாக இல்லாதிருக்கின்றமை.

### சமஷ்டி அரசியலமைப்பு ஒன்றை உருவாக்குதல்

வரலாற்று ரீதியாக சமஷ்டி அரசியலமைப்பு உருவாக்கப்படும் மூன்று வழிமுறைகள் காணப்படுகின்றன.

1. பொது அபிலாசைகளை அடைந்துக் கொள்வதற்கு முன்னர் பிரிந்து காணப்பட்ட அலகுகள் ஒன்று சேர்ந்து மத்திய அதிகார முறையொன்றை உருவாக்கிக் கொள்ளல்.

   இதன்கீழ் பெரும்பாலும் சமஷ்டி அரசாங்கம் கட்டமைக்கப்படுவது நிலையான அரசியல் சன சமூகங்கள் பல தனித்தனியே தமது அடையாளங்களையும் சுயநிலைமையையும் பாதுகாத்துக்கொள்ளும் எதிர்ப்பார்ப்புடன் ஒன்று சேர்தலின் மூலமாகும். உதாரணமாக 1787 இல் அமெரிக்காவில் பிராந்தியங்கள் 13 இன் பிரதிநிதிகளின் சந்திப்பினால் ஐக்கிய அமெரிக்க குடியரசு உருவாகியது. அமெரிக்க அனுபவங்களின் மூலம் வலுவான அழுத்தம் பெற்ற சமமான சம்மேளனம் 1848 இல் சுவிட்சர்லாந்திலும், 1867 இல் கனடாவிலும், 1897 / 98 களில் அவுஸ்ட்ரேலியாவிலும் நடைபெற்றது. இதற்கு பொருளாதார மற்றும் பாதுகாப்பு தொடர்பான விடயங்களே அழுத்தம் கொடுத்த காரணங்களாகும்.

2. பிரிந்த நாடு ஒன்று ஒன்றிணைந்து சமஷ்டி ஆட்சி முறை ஒன்றாக மீள கட்டமைக்கப்படல்.

   இது ஒருசில நேரங்களிலேயே ஏற்படும். பெல்ஜியம் இதற்கான பிரதான உதாரணமாகும். பிரான்சு மொழி பேசும் பிரதேசம் மற்றும் ஒல்லாந்து மொழி பேசும் பிரதேசத்திற்கும் இடையில் காணப்பட்ட பிளவுகள் காரணமாக ஏற்பட்ட முரண்பாடுகளினால் 1970 மற்றும் 1980 ஆம் தசாப்தங்களில் மேற்கொள்ளப்பட்ட அரசியலமைப்பு திருத்தங்கள் மூலம் இந்த குழுக்களுக்கு அதிக அதிகாரங்கள் பெற்றுக்கொடுக்கப்பட்டதோடு இறுதியாக 1995 ஆம் ஆண்டில் பெல்ஜியம் சமஷ்டி அரசாக பிரகடனப்படுத்தப்பட்டது.

3. ஒற்றையாட்சி அரசொன்று இனத்துவ மற்றும் கலாசார பல்வகைத்தன்மையின் அடிப்படையில் சமஷ்டி அரசாக மீள் கட்டமைக்கப்படல்.

   ஸ்பெயின், மலேசியா, தென்னாபிரிக்கா என்பன இதற்கான உதாரணங்களாகும். ஆரம்பத்திலிருந்து ஒற்றையாட்சியாக காணப்பட்ட பெரிய பிரித்தானியாவும் தற்போது சமஷ்டி பண்பினை நோக்கி நகரும் நிலையினை காட்டுகின்றது.

## பாதி சமஷ்டி அரசியலமைப்பு

பாதி (அர்த்த) சமஷ்டி அரசியலமைப்பில் ஒற்றையாட்சி அரசியலமைப்பினதும் மற்றும் சமஷ்டி அரசியலமைப்பினதும் பண்புகளை ஒருசேர அடையாளப்படுத்த முடியும். இதன்படி ஒற்றையாட்சி மற்றும் சமஷ்டியாட்சி என்ற இரு வகைகளுக்கும் இடைப்பட்ட அரசியலமைப்பாக இதனை கருத முடியும்.

இந்தியா அர்த்த சமஸ்டி தொடர்பில் எடுக்கக்கூடிய சிறந்த உதாரணமாகும். இந்தியாவின் அரசியலமைப்பு முறையினை ஒற்றை அல்லது சமஷ்டி அரசியல் அமைப்பென்று அழைக்காமல் அர்த்த சமஷ்டி அரசியலமைப்பு என்றே கருதப்படுகின்றது. இரட்டை அரசாங்க நிறுவனங்கள் மற்றும் அரசியலமைப்பின் உயர்த்தன்மை என்ற பண்புகளின் மூலம் இந்திய அரசியலமைப்பு பிரதானமாக சமஷ்டிக்குரிய பண்புகளை காட்டினாலும், அதனுடன் ஒற்றையாட்சியில் காணப்படும் பல பண்புகளையும் உள்ளடக்கியுள்ளது. உதாரணமாக ஒற்றைக் குடியுரிமை, பதவிநிலை முறையின் ஆதிபத்தியம் மற்றும் இவை எல்லாவற்றுக்கும் மேலாக மத்திய அரசாங்கத்திற்கு பெருமளவிலான அதிகாரங்களை அரசியலமைப்பினூடாக பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளமையைக் குறிப்பிடலாம்.

இந்திய அரசியலமைப்பினுள் அதிகாரப் பகிர்வினை ஆராயும்போது அந்நாட்டு அரசியலமைப்பு மத்திய அரசுக்கு சார்பான வகையில் செயற்பட்டுள்ளமை தெளிவாகின்றது. இதற்கு சில உதாரணங்களைக் காட்டலாம்.

உதாரணமாக :- அரசரகால நிலை பிரகடனப்படுத்தப்பட்டிருக்கும் சந்தர்ப்பத்தில் பிராந்திய அரசாங்கங்களின் அதிகார பட்டியல் தொடர்பில் மத்திய அரசு சட்டங்களை உருவாக்க முடியும். அத்துடன் மத்திய அரசாங்கத்திற்கு, பிராந்திய அரசாங்கங்களின் நிறைவேற்று அதிகாரங்களை கட்டுப்படுத்த முடியும். உண்மையில் அவசரகால நிலைமையின் போது இந்திய அரசியலமைப்பு ஒற்றையாட்சி பண்புகளை வெளிக்காட்டுகின்றது. இந்திய அரசியலமைப்பில் அவசரகால நிலை மூன்று வகையாக குறிப்பிடப்படுகின்றது. அவையாவன,

1. தேசிய அவசர நிலை

   இந்தியா வெளியக ஆக்கிரமிப்புக்கு அல்லது உள்ளக கொந்தளிப்புகளுக்கு முகங்கொடுக்கும் சந்தர்ப்பங்களில் யாப்பின் 352 ஆம் உறுப்புரையின்படி ஜனாதிபதி அவசரகால நிலையை பிரகடனப்படுத்த முடியும்.

2. பிராந்திய அவசர நிலை

   யாதாயினும் மாநிலம் ஒன்றில் அரசியலமைப்பு இயந்திரம் செயலிழந்த சந்தர்ப்பத்தில் அரசியலமைப்பில் 356 ஆம் உறுப்புரையின்படி ஜனாதிபதி அரசரகால நிலையை பிரகடனப்படுத்த முடியும்.

3. நிதி நெருக்கடி நிலை

   இந்தியாவின் நிதி இஸ்திரத்தன்மைக்கு நெருக்கடி நிலையொன்று ஏற்படும் சந்தர்ப்பத்தில் அரசியலமைப்பின் 360 ஆம் உறுப்புரையின்படி ஜனாதிபதி அவசரகால நிலையை பிரகடனப்படுத்த முடியும்.

இதைத் தவிர சாதாரண காலங்களிலும் கூட மத்திய அரசாங்கத்தின் பாராளுமன்றுக்கு பிராந்திய சட்டத்துறையின் அனுமதியின்றி சாதாரண பெரும்பான்மையுடன் புதிய பிராந்தியங்களை உருவாக்க அல்லது பிராந்தியங்களின் எல்லைகளை மாற்றியமைக்கவும் முடியும். கே.சி. வியர் என்பவரால் ‘‘அமெரிக்க அரசியலமைப்பு மரபார்ந்த சமஷ்டியாக விளக்கும் அதேநேரம் இந்திய அரசியலமைப்பை விளக்குவது அர்த்த சமஷ்டி அரசியலமைப்பு என்றாகும். அது மேலதிகமான ஒற்றையாட்சி பண்புகளைக் கொண்ட சமஷ்டி அரசியலமைப்பு என்பதிலும் பார்க்க மேலதிக சமஷ்டி பண்புகளைக்

கொண்ட ஒற்றையாட்சி அரசியலமைப்பாகும்''. இதனை அவர் சுருக்கமாக்கி கூறும்போது ''இந்திய அரசியலமைப்பு தன்மையில் சமஷ்டி என்றாலும் சாரம்சத்தில் ஒற்றையாட்சி அரசியலமைப்பே'' என்றார். எனினும் நடைமுறையில் இந்திய அரசியல் அமைப்பில் சமஸ்டி பண்புகள் வலுவடைந்துள்ளமையை காணலாம்.

**கூட்டாண்மை சமஷ்டி முறை**

கூட்டு சமஷ்டி என்பதனால் பொது வழக்கில் கருதப்படுவது உடன்பாடு என்பதாகும். கூட்டுச்சமஷ்டி என்பது சுயாதீன அரசு அலகுகளுக்கிடையில் நெருங்கிய ஒத்துழைப்பினை ஏற்படுத்திக் கொள்வதற்கு அவற்றுக்கிடையில் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட உடன்பாடாகும். பெரும்பாலும் பொருத்தனை / ஒப்பந்தம் மூலம் கூட்டாண்மை சமஷ்டி அரசியலமைப்பு உருவாக்கப்படுவதோடு பின்னர் பொது அரசியலமைப்பொன்று நிறைவேற்றிக் கொள்ளப்படும். பாதுகாப்பு, வெளிவிவகார, பொது பண அலகு போன்ற ஆழமான பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்கும் நோக்கத்தில் கூட்டாண்மை சமஷ்டி அரசியலமைப்பு உருவாக்கப்படுகின்றன. இதன்படி அனைத்து அலகுகளுக்கும் பொருத்தமான பொது விடயங்களுக்கான அரசியல் அலகுகளிலான சங்கமாகும். அதாவது விசேட நோக்கங்களை அடைந்துக்கொள்ளும் எதிர்ப்பார்ப்பில் இறைமை அதிகாரம் கொண்ட அரசுகளால் மத்திய அரசாங்கத்திற்கு வரையறுக்கப்பட்ட அதிகாரத்தைப் பெற்றுக்கொடுக்கும் அரசியலமைப்பாகும்.

கூட்டாண்மை சமஷ்டி முறையில் பிராந்திய அரசாங்கங்கள் அதிகாரத்தில் அதிகமானமானவற்றை பெற்றுக்கொள்வதோடு மத்திய அரசாங்கத்திற்கு இருப்பது குறைந்த அதிகாரங்களேயாகும். மத்திய அரசாங்கம் செய்யவேண்டியது எது என்பதை தீர்மானிப்பதும் பிராந்திய அரசாங்கங்களேயாகும். கூட்டாண்மை சமஷ்டி முறைக்கு வரலாற்று ரீதியிலான உதாரணமாக Articles of Confederation என்பதன் கீழ் கட்டியெழுப்பப்பட்ட அமெரிக்க அரசியலமைப்பினை குறிப்பிட முடியும்.

**நிறைவேற்று அதிகாரம் ஒழுங்கமைந்திருக்கும் முறைப்படி காணப்படும் அரசியலமைப்புகள்**

இதன்கீழ் அரசியலமைப்புகள் மூன்று வகைகளாக பாகுபடுத்தப்படுகின்றன. அவையாவன, பாராளுமன்ற அரசியலமைப்பு, ஜனாதிபதி அரசியலமைப்பு மற்றும் கலப்புமுறை அரசியலமைப்பு என்பனவாகும்.

- **பாராளுமன்ற அரசியலமைப்பு**

  - பாராளுமன்ற அரசியலமைப்பு தொடர்ந்தும் பிரித்தானியாவை எடுத்துக்காட்டாக கொள்ளும் அதேவேளை அந்த அரசியலமைப்பு பரவலாக பிரித்தானியா பொதுநலவாய நாடுகளில் காணலாம். அத்துடன் மேற்கு ஐரோப்பிய நாடுகளிலும் கண்டுக்கொள்ள முடியும்.

    ஜனாதிபதி அரசியலமைப்புகளில் நிறைவேற்றுத்துறை மற்றும் சட்டவாக்கத்துறைகளுக்கிடையில் தெளிவான வேறுபாடு நிலவினாலும், பாராளுமன்ற முறையினுள் இதனை தெளிவாக காண முடியாது.

- **பாராளுமன்ற முறையின் பண்புகள்**

  - பாராளுமன்ற முறையொன்றில் பாராளுமன்ற உறுப்பினர்களால் ஆக்கப்பட்ட அமைச்சரவைக்கு (கபினட்) நிறைவேற்று அதிகாரம் காணப்படும். இதனாலேயே அமைச்சரவை ''அரசியல் நிறைவேற்றுத்துத்துறை'' என அழைக்கப்படுகின்றது.
  - பாராளுமன்றத்தில் பெரும்பான்மை ஆதரவைப் பெற்றுக்கொள்ளும் கட்சியின் அல்லது கூட்டணியின் தலைவர் பிரதமர் எனப்படுகின்றார்.

- பிரதமர் பொதுவாக பாராளுமன்ற உறுப்பினர்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட சிலரைக் கொண்டு அமைச்சரவையை உருவாக்கிக் கொள்ளப்படும். அமைச்சரவை, அரசாங்கத்தின் உயிர் நாடியாகக் கொள்ளப்படும்.

- பாராளுமன்றத்தின் ஒத்துழைப்பின் அடிப்படையில் அரசாங்கம் நிலைத்திருக்கும். பாராளுமன்ற முறையில் நிறைவேற்றுத்துறை நேரடியாக சட்டத்துறையில் தங்கியிருப்பதோடு சட்டத்துறைக்கு பொறுப்பு கூறவேண்டும் என்பதே இதன் மூலம் கருதப்படுகின்றது.

- அரசின் தலைவர் நேரடியாக தெரிவு செய்யப்படுவதில்லை. அரசின் தலைவர் முடியாகவோ அல்லது மறைமுகமாக தெரிவு செய்யப்படும் ஜனாதிபதியாக இருப்பார். பிரித்தானியா மற்றும் இந்தியா இதற்கான உதாரணங்களாகும்.

- பிரதமர் மற்றும் அமைச்சரவை கூட்டாக பாராளுமன்றுக்கு பொறுப்புச் சொல்ல வேண்டும்.

- ஜனாதிபதி முறையோடு ஒப்பிடும்போது பாராளுமன்ற முறையின் சாதகங்களில் ஒன்று நிறைவேற்றுத்துறையினதும் சட்டத்துறையினதும் கலப்பினால் சக்திவாய்ந்ததும் உறுதியுமான அரசாங்கமொன்றை உருவாக்குவதுமாகும். இது பொதுவாக அவுஸ்ரேலியா, கனடா, பிரித்தானியா, டென்மார்க் மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளில் காணக்கிடைக்கின்றது.

## ஜனாதிபதி அரசியலமைப்பு

லிபரல் ஜனநாயக உலகினுள் ஜனாதிபதி அரசியலமைப்பு பாராளுமன்ற அரசியல் அமைப்பிற்கான ஒரு பிரதான மாற்றீடாகும். எவ்வாறெனினும் ஜனாதிபதி அரசியலமைப்பு பாராளுமன்ற அரசியலமைப்பினைப் போன்று உலகம் முழுவதும் பரவலடைந்த அரசியலமைப்பு அல்ல. ஐக்கிய அமெரிக்க குடியரசின் ஜனாதிபதி அரசாங்க முறை இலத்தின் அமெரிக்காவின் பெரும்பாலான நாடுகள் முன்மாதிரியாக பயன்படுத்தியுள்ளன. இதற்கு ஆசியாவில் காட்டப்படக்கூடிய உதாரணம் பிலிபைன்ஸ் ஆகும்.

ஜனாதிபதி அரசியலமைப்புகளுக்கிடையில் எவ்வாறான வேறுபாடுகள் காணப்பட்டப்போதும் இவ்விரசியலமைப்புகளில் காணப்படக்கூடிய அதி முக்கிய பண்பு சட்டத்துறை மற்றும் நிறைவேற்றுத்துறைகள் தனித்தனியே தேர்ந்தெடுக்கப்படுவதோடு (Separate Orgin), ஒன்றிலிருந்து ஒன்று தனிப்பட்ட நிலைப்பு (Separate Survival) உள்ளமையுமாகும். இதன்படி,

- நிறைவேற்று மற்றும் சட்டத்துறைகள் தனித்தனியே தேர்ந்தெடுக்கப்படுவதோடு இந்த பிரிவுகளுக்கிடையே யாப்புரீதியாக சுயாதீன அதிகாரங்கள் கிடைக்கின்றன. இதன்படி ஜனாதிபதி நேரடியாகவோ அல்லது குறைந்தப்பட்சம் ஐக்கிய அமெரிக்க குடியரசின் ஜனாதிபதி தெரிவு செய்யப்படும் முறையில் வாக்காளர் கல்லூரியினால் தேர்ந்தெடுக்கப்படுவார்.

- நிறைவேற்று மற்றும் சட்டத்துறைகளுக்கிடையில் முறையான நபரிடைத்தொடர்புகள் காணப்படும். ஜனாதிபதி அரசினதும், அரசாங்கத்தினதும் தலைவராவார்.

- நிறைவேற்றுத்துறை சட்டத்துறைக்கு பொறுப்புச் சொல்ல மாட்டாது என்பதோடு சட்டத்துறை விசேடமான குற்றப்பிரேரணை முறைகளில் அல்லாமல் ஜனாதிபதியை பதவி விலக்க முடியாது. மறுபுறம் ஜனாதிபதியால் சட்டத்துறையை பதவியில் இருந்து நீக்க முடியாது. இவ்விரு துறைகளினதும் ஆயுட்காலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்பதே இதன் கருத்தாகும்.

- நிறைவேற்று அதிகாரம் ஜனாதிபதிக்கு பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளதோடு, அமைச்சரவை ஜனாதிபதிக்கு பொறுப்புச் சொல்லும் வெறும் ஆலோசனை சபையாகும். அமைச்சரவையின் உறுப்பினர்கள்

சட்டத்துறையினர் அல்லர். சட்டத்துறையின் உறுப்பினர்கள் அமைச்சரவையின் உறுப்பினராக நியமிக்கப்பட்டால் அவர் பாராளுமன்ற உறுப்பினர் பதவியில் இருந்து விலகிக் கொள்ள வேண்டும்.

- அரச தலைவரின் வகிபங்கு மற்றும் அரசாங்கத் தலைவரின் வகிபங்கு என்பன ஜனாதிபதி பதவியினுள் ஒன்று சேர்க்கப்பட்டுள்ளது.

- ஜனாதிபதி அரசியலமைப்பின் பிரதான வெற்றி நிறைவேற்று அதிகாரத்திலிருந்து சட்டத்துறையின் அதிகாரத்தை வேறாக்குவதற்கு முயற்சிப்பதாகும். அது தடைகள் மற்றும் சமன்பாடுகள் மூலம் கட்டியெழுப்பப்பட்டுள்ளது. இந்நிலையானது தனியாள் சுதந்திரம் மற்றும் உரிமைகளைப் பாதுகாக்க உதவுகின்றது. அத்துடன் அரசாங்கத்தின் ஒரு நிறுவனத்திற்குள் அதிகாரம் குவிக்கப்படுவதற்கான சந்தர்ப்பம் தடுக்கப்படுகின்றது.

## கலப்புமுறை அரசியலமைப்பு

பல்வேறு அரசியல் அமைப்புகளின் பண்புகளை உள்ளடக்கி கொண்டிருக்கும் அரசியலமைப்புகள் கலப்பு முறை அரசியல் அமைப்புகள் என அழைக்கப்படுகின்றது. முடியாட்சி மற்றும் கூட்டாட்சி என்ற இரண்டு வகையான அரசியலமைப்புகளினதும் பண்புகளை கலந்த அரசாங்கம், மேலும் ஜனாதிபதி மற்றும் பாராளுமன்ற அரசியலமைப்புகளின் பண்புகளின் சேர்க்கைகளினால் கட்டியெழுப்பப்பட்ட அரசியலமைப்புகளாகவோ காணப்படுகின்றன.

இவ்வாறு கலப்பு அரசியலமைப்புகள் பலவகையில் காணப்படுவதோடு அவற்றுள் மிகவும் அதிகமானதும் பிரபல்யமானதுமான அரசியல் அமைப்பாக திகழ்வது பாராளுமன்ற அரசியலமைப்பினதும் ஜனாதிபதி அரசியலமைப்பினதும் அடிப்படை பண்புகளை உள்ளடக்கிய பாதி (அர்த்த) ஜனாதிபதி முறை என பொதுவாக அறியப்படும் அரசியலமைப்பாகும். அர்த்த ஜனாதிபதி அரசியலமைப்பு ஒருபுறம் பாராளுமன்றுக்கு பதிலளிக்கக்கூடிய பிரதமர் உட்பட்ட அமைச்சரவையினாலும் மறுபுறம் மக்களின் நேரடி வாக்குகளால் தெரிவு செய்யப்பட்ட நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியினாலும் கட்டியெழுப்பப்பட்டிருக்கும். அர்த்த ஜனாதிபதி அரசியலமைப்பின் பிரதான பண்புகள் சில காணப்படுகின்றன.

- ஜனாதிபதி மக்களின் வாக்குகளினால் தெரிவு செய்வதாக காணப்படல்.

- ஜனாதிபதிக்கு குறிப்பிடத்தக்களவு நிறைவேற்று அதிகாரங்கள் காணப்படுகின்றமை.

- நிறைவேற்று அதிகாரம் கொண்ட பிரதமர் மற்றும் அமைச்சரவை ஒன்று ஜனாதிபதிக்கு நிகராக காணப்படுதல் மற்றும் அவர்கள் பாராளுமன்றின் பெரும்பான்மை விருப்பம் உள்ளவரை பதவியில் இருத்தல்.

இரட்டை நிறைவேற்று முறை என அழைக்கப்படும் அர்த்த ஜனாதிபதி முறை இரண்டு பிரதானிகளுடனான முறையாக இருப்பதால் அது நிச்சயமாக நிருவாக அதிகாரத்தில் பிரிவினையை உருவாக்கும். அதுமட்டுமல்லாது நேரெதிர் கட்சிகள் இரண்டிற்கு ஜனாதிபதி மற்றும் அமைச்சரவையின் அதிகாரங்கள் கிடைக்கின்றப்போது இந்த பிரிவினை ஜனாதிபதி மற்றும் பிரதமருக்கிடையில் முரண்பாடுகள் ஏற்படுவதற்கு காரணமாகலாம். பிரான்ஸ் இது தொடர்பில் கொடுக்கக்கூடிய சிறந்த உதாரணமாகும். இதற்கு மேலதிகமாக தற்போது இலங்கை உட்பட பல்கேரியா, லித்துவேனியா, மெசடோனியா, மடகஸ்கார், மாலி, மொசாம்பிக், ரூமேனியா ஆகிய நாடுகளிலும் அர்த்த ஜனாதிபதி முறையே நடைமுறைப்படுத்தப்படுகின்றது. (Newton and Deth, 2005, Sodaro 2008)

### அனைத்தாண்மை அரசியலமைப்பு (Autocracy)

அனைத்தாண்மை அரசியலமைப்பின் பிரதான பண்பாவது தனி நபரின் கைகளில் அரச அதிகாரம் குவிந்திருப்பதோடு அனைத்தாண்மைவாதியின் முடிவுகள் வெளியக சட்டப்பூர்வமாக அல்லது மக்கள் அதிகாரம் ஆகிய இரண்டில் ஒன்றுக்கும் கட்டுப்படாததாக இருப்பதாகும்.

இவ்வாட்சி முறையின் கீழ் தனியாள் உரிமைகள் பொதுவாக கவனத்தில் கொள்ளப்படாததோடு பலாத்காரத்தின் மூலமே அதிகாரம் இயல்பாகவே கொண்டுச் செல்லப்படும். இதன்படி அனைத்தாண்மையாளனின் அதிகாரத்தை தடைசெய்யக்கூடிய அரசியலமைப்போ அல்லது வேறு ஏதேனும் சட்டமோ இவ்வாட்சிமுறையில் காணப்படாது. அத்தோடு மக்களுக்கு அவர்களின் அரசாங்கம் செயற்பட வேண்டியது எவ்வாறு என்பது தொடர்பாக தமது கருத்தை வெளிப்படுத்துவதற்கான தேர்தல்கள் போன்ற ஜனநாயக செயன்முறைகள் காணப்படுவதில்லை.

அனைத்தாண்மைவாத்தின் பிரதான வரலாற்று வடிவமாக இருப்பது மரபு மன்னராட்சியும், ஏகாதிபத்தியவாதமுமாகும். ஏதேட்சையதிகார ஆட்சிமுறையும் இராணுவ ஆணையதிகாரமும் கூடிய ஆட்சிமுறை அனைத்தாண்மை ஆட்சிமுறையுடன் இனங்காண முடியும். எனினும் அனைத்தாண்மைவாத (Totalitarian) ஆட்சிமுறையும் இராணுவ கட்டளை ஆட்சிமுறையும் எல்லா சந்தர்ப்பங்களிலும் அனைத்தாண்மை ஆட்சிமுறையுடன் ஒன்றாக பயணிப்பதில்லை. அனைத்தாண்மை ஆட்சிமுறையினைப் (அனைத்தாண்மை ஆட்சி முறை என்பது வாழ்க்கை மற்றும் சிவில் சமூகத்தின் எல்லா அங்கங்களையும் நிருவகிக்கும் ஆட்சி முறையாகும்.) போன்றே இராணுவ கட்டளைகளுடனான ஆட்சி முறையிலும் ஒரு உயரிய கட்டளையாளனால் அந்த ஆட்சிமுறைக்கு தலைமைத்துவம் வழங்கப்பட்டு அதன்மூலம் அனைத்தாண்மை ஆட்சி ஒன்றினை உருவாக்கிக்கொள்ள முடியும். மறுபுறம் அனைத்தாண்மைவாதி அல்லது இராணுவ கட்டளைகளுடனான ஆட்சி முறைகள், **கம்யுனிசம், ஜுன்டா அல்லது** தனி அரசியல் கட்சி போன்ற கூட்டு தலைமைத்துவ இயல்பில் செயற்பட முடியும். சிலநேரங்களில் அனைத்தாண்மை ஆட்சி முறை ஜனநாயக அரசியலமைப்பினூடாகவும் உருவாக முடியும். தீர்மானமெடுத்தல் மற்றும் தீர்மானங்களை நடைமுறைப்படுத்தல் விரைவாக செய்ய முடியும் ஏனபது தனிநபர் ஆட்சி முறையின் பிரதான நன்மையாகும். எவ்வாறானபோதும் அனைத்தாண்மை அரசியலமைப்பு ஜனநாயகத்தை முழுமையாக எதிர்க்கின்றது. இது புராதன ஜனநாயகம் மற்றும் ஜனநாயக எதிர் அரசியல் மாதிரி முறைமையொன்றாகும்.

**முன்மொழியப்பட்ட கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள்**

1. அரசு அதிகாரத்தை வேறாக்குதலை அடிப்படையாக கொண்ட அரசாங்க மாதிரிகள்
2. நிறைவேற்று அதிகாரத்தை ஒழுங்கமைத்தல் அடிப்படையில் நிலைபெறும் அரசாங்க மாதிரிகள்

   எனும் இரு தலைப்புகளின் கீழ் இரு விவாதக்குழுக்கள் இரண்டு வீதம் தயார்படுத்தி விவாதம் ஒன்றை திட்டமிடுக.

**உசாத்துணைகள்**


01. Bealey Frank, Richard A: Chapman and Michael Sheehan, (1999), *Elements in Political Science*, Edinborgh: Edinbrogh University Press.

02. Hague, Rod and Martin Harrop, (2013), *Comparative Government Politics*, Newyork, Palgrave Macmillan.

03. Haywood, Andrew, (2013), *Politics* New York, Palgrave Macmillan.

04. Lijphart, A, (Ed), (1992), *Parliamentary Verses Presidental Government*, Oxford University Press.

05. Wheare, K.C. (1966), *Modern Contitutions*, Oxford University Press.

## 05. அரசியல் கருத்தியல்கள்

**தேர்ச்சி 05** :- அரசியல் கருத்தியல்களின் இயல்பை இனங்கண்டு நவீன அரசியல் செயன்முறைகள் நிறுவனங்கள் என்பன தொடர்பில் தீர்மானிப்பதற்கு அரசியல் கருத்தியல் மூலம் மேற்கொள்ளப்பட்டிருக்கும் பணிகள் தொடர்பான விளக்கத்தினை வெளிப்படுத்துவார்.

(பாடவேளைகள் – 30)

**தேர்ச்சி மட்டம்** :- 5.1 பல்வேறு அரசியல் கருத்தியல்களை விளங்கிக் கொள்வார்.

5.2 அவற்றின் அடிப்படைப் பண்புகள், அரசியல் துறைகள், அவற்றின் செயற்பாடுகளை என்பனவற்றை விமர்சன ரீதியாக விளக்குவார்.

**கற்றற் பேறுகள்** :-

- அரசியல் கருத்தியல் என்பதற்கு விளக்கமளிப்பார்.
- அவ்வரசியல் கருத்தியல்களை ஒப்பிட்டு விபரிப்பார்.
- அவ்வரசியல் கருத்தியல்கள் அரசியல் நிகழ்வுகளில் பாதிப்பு ஏற்படுத்தும் விதத்தை அரசியல் நிகழ்வுகளின் துணைக்கொண்டு விபரிப்பார்.

**அறிமுகம்** :-

- சமூகத்தின் அரசியல் அறிவிற்கு, தனி நபர்கள் மற்றும் சமூக குழுக்களின் அரசியல் செயற்பாட்டிற்கும், அரசியல் நிறுவனங்களின் தன்மை மற்றும் பணிகளையும் தீர்மானிப்பதில் செல்வாக்கு செலுத்துகின்ற ஒழுங்கமைந்த வகையில் காணப்படும் அரசியல் கருத்துக்களின் தொகுதியே அரசியல் கருத்தியல் எண்ணக்கருவின் விளக்கமாகும். அரசியல் கோட்பாடுகள் மற்றும் அரசியல் சிந்தனைகள் என்பன இதற்காக பயன்படுத்தப்படுகின்ற இருவேறு பதங்களாகும். அரசறிவியலில் அரசியல் கருத்தியல்கள் என்ற எண்ணக்கருவானது முறையாக அமையப்பெற்றுள்ள அரசியல் சிந்தனை தொகுதிகள் மற்றும் கருத்துக்களின் தொகுதி என்ற அர்த்தத்திலேயே பயன்படுத்தப்படுகிறது.
- அரசியல் கருத்தியலொன்று பிரசித்தமான சிந்தனையாளர் ஒருவரின் அல்லது சிந்தனையாளர்கள் பலரின் கற்பிதங்கள் மற்றும் கருத்துக்களின் தொகுதியாக கட்டியெழுப்பப்பட்டிருக்கலாம். அன்றேல் பிரதான ஒரு சிந்தனையாளரின்றி சிந்தனையாளர்கள் பலரினால் முன்வைக்கப்பட்ட கருத்துக்களின் வளர்ச்சியின் பெறுபேறாக கட்டியெழுப்பப்பட்டிருக்க முடியும்.
- அரசியல் ரீதியாக மிகமுக்கியமான பங்களிப்பினைச் செய்துள்ள அரசியல் கருத்தியல்கள் சிலவற்றை அறிந்துக்கொள்வதே இப்பாடத்தின் மூலம் எதிர்பார்க்கப்படுகிறது. அதன்படி

- தாராண்மை வாதம்
- சமவுடைமை வாதம்
- குடியரசு வாதம்
- சமூக ஜனநாயக வாதம்
- பாசிச வாதம்
- தேசிய வாதம்
- மத சார்பின்மை வாதம்
- பெண்ணிய வாதம்

ஆகிய அரசியல் கருத்தியல்கள் அரசியல் விஞ்ஞான பாடப்பரப்பில் மேற்கொண்ட பணிகள், அவற்றின் தன்மைகள், பண்புகள் மற்றும் முக்கியத்துவம் தொடர்பாக விளக்கத்தைப் பெற்றுக் கொடுப்பதே இத்தேர்ச்சியின் மூலம் எதிர்பார்க்கப்படுகிறது.

**விடயப்பரப்பை விளங்கிக் கொள்வதற்கான வழிகாட்டல்கள்**

**5.1 தாராண்மை வாதம்**

- இது *Liber* என்ற இலத்தீன் பதத்திலிருந்து தோன்றியதாகும். அதன் அர்த்தம் "சுதந்திரம்" என்பதாகும்.
- தாராண்மைவாத அரசியல் தத்துவத்தின் மூலமும், பொருளாதார கோட்பாட்டின் மூலமும் "சுதந்திரம்" என்ற எண்ணக்கரு கருதப்படுவது அரசின் / அரசாங்கத்தின் தேவையற்ற தலையீட்டிலிருந்து சுதந்திரமடைதல் என்பதாகும். (Freedom from undue goverment interference)
- 17ம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் நிலவிய நிலமானிய சமூக, பொருளாதார, அரசியல் முறைமை மற்றும் சர்வதிகார அரசாட்சி முறையின் பின்னணியில் அவற்றுக்கு எதிராக தோற்றம் பெற்ற கருத்துக்களின் தொகுதியாக தாராண்மைவாதத்தை அறிமுகப்படுத்தலாம்.
- 17ம் நூற்றாண்டாகும் போது அரசனின் தான்தோன்றித்தனமான ஆட்சி முறைமைக்கு எதிராக புதிய சமூக வகுப்பொன்றின் எழுச்சி தோற்றம் பெற்றது. முதலாளித்துவத்தின் ஆரம்ப கட்டமான இக்காலத்தில் உருவான புதிய வர்த்தக மற்றும் மத்தியதர வகுப்பினர், அரசின் தான்தோன்றித்தனமான ஆட்சி முறையினையும், தான்தோன்றித்தனமான வர்த்தக கட்டுப்பாடுகள் மற்றும் வரி சேகரிப்பு முறையினையும் கொண்ட பொருளாதார கட்டுப்பாடுகளை பொறுத்துக் கொள்ளவில்லை.
- இவ்வாறான பின்னணியில் அரசாட்சியின் தான்தோன்றித்தனமான அரசியல் மற்றும் பொருளாதார தலையீடுகளிலிருந்து இவர்களுக்கு "சுதந்திரம்" தேவைப்பட்டது. பின்னர் இது தாராண்மைவாதத்தின் அடிப்படைக் கோட்பாடாக வளர்ச்சியடைந்தது.
- இதன்படி தாராண்மைவாத எண்ணக்கருவின் அடிப்படை கருத்து அரசின் / அரசாங்கத்தின் தலையீட்டிலிருந்தும் அதன் கட்டுப்பாட்டிலிருந்தும் பெறுகின்ற சுதந்திரமாகும். (Freedom from

goverment's interference and constraints inpoted by goverment) இந்த கருத்தினுள் தத்துவார்த்த மற்றும் அரசியல்சார் அடிப்படையும் பிணைந்து காணப்படுகிறது.

**I தத்துவார்த்த அடிப்படை**

- பழைமை தாராண்மைவாதத்தின் மூலம் சுதந்திரம் என்பதற்கு எதிர்மறை சுதந்திரம் (Negative freedom) என்ற வகையில் புதிய விளக்கமொன்று வழங்கப்பட்டது. தடைகள், கட்டுப்பாடுகள், தலையீடுகள் இன்மையால் நபர்கள் அனுபவிக்கும் சுதந்திரமே இதன் மூலம் கருதப்படுகின்றது. (Freedom from constraints தடைகள் அற்ற வகையில் பெறுகின்ற சுதந்திரமாகும்).
- மேலும்,

  * தான்தோன்றித்தனமாக அரசினால் கைது செய்யப்படுவதிலிருந்து விடுபடும் சுதந்திரம் (Freedom from arbitary arrest)

  * தான்தோன்றித்தனமாக அரசு பிறப்பிக்கின்ற வரி முறைகளிலிருந்து விடுபடும்

  சுதந்திரம் (Freedom from arbitary taxation) என்றவாறு பழைமை தாராண்மைவாத தத்துவம் சுதந்திரம் என்பதை "எதிர்மறை சுதந்திரம்" என உருவாக்கி உள்ளது.

**II அரசியல் அடிப்படை**

- இதனால் கருதப்படுவது அரசின் தலையிடாக் கொள்கையாகும்.
- பிற்காலத்தில் பொருளாதார கோட்பாடாக வளர்ச்சியடைந்த அரச தலையிடாக் கொள்கையினால் (Laissez - Faire) பொருளாதார, சமூக, அரசியல் துறைகளில் அரசாங்கத்தின் தலையீடு குறைந்தபட்சமாக இருக்க வேண்டும் என கூறப்பட்டது.
- சுதந்திர பொருளாதாரமும் சுதந்திர சந்தையும் அரசின் தலையிடாக் கொள்கையுடன் இணைந்துள்ள பிரதான இரு எண்ணக்கருக்களாகும்.
- அரசாங்கத்தின் தலையீட்டையும் கட்டுப்பாட்டையும் குறைத்துக் கொண்டு சுதந்திரமாக இயங்குகின்ற சந்தையொன்றின் மீது கட்டியெழுப்பப்பட்ட சுதந்திர பொருளாதாரம் தொடர்பான கருத்தே இதன் அடிப்படையாகும்.
- தனியாள் சுதந்திரம் என்பதை, சுதந்திர சந்தை மற்றும் பொருளாதாரத்திற்கு அத்தியாவசியமான அடிப்படை நிபந்தனையாக பழைமை தாராண்மை வாதம் கருதுகின்றது.

❖ **தாராண்மைவாதமும் தனியாள் சுதந்திரமும்**

- தனியாள் சுதந்திரம் - பழைமை தாராண்மைவாதத்தின் அடிப்படை கோட்பாடாகவும், நடைமுறை தாராண்மைவாதத்தின் அரசியல் மற்றும் அரசியலமைப்பு சிந்தனையின் முதற்படியாக கருதப்படும் எண்ணக்கருவாகும்.
- தாராண்மைவாத தத்துவத்திலும், சமூக, அரசியல், பொருளாதார தத்துவங்களினதும் கோட்பாடுகளினதும் அடிப்படை கற்கையான தனியாள் சுதந்திரம் (Individual Freedom) எனும் விடயமானது பல்வேறு கற்பனைகளின் மூலம் கட்டியெழுப்பப்பட்டுள்ளது. அவையாவன :

  I சமூகமானது தனிநபர்களால் ஆனது. அதனால் சமூகம் என்பது தனிநபர்களினால் கட்டியெழுப்பப்பட்டுள்ள சமூக கூட்டாகும். (Society is a collection of Individuals)

II சமூகத்தில் உள்ள தனிநபர்கள் ஒவ்வொருவரும் (Individuas) சுதந்திரமாக (Free) தர்க்க ரீதியாக (rational) சிந்திக்கக்கூடிய சுயாதீனமான (Autonomous) மனிதனாவர்.

III சமூகத்தில் காணப்படும் சுதந்திரமானது, தர்க்க ரீதியான அறிவுடைய மற்றும் சுயாதீனமான நபர்கள் தனது மானிட ஆற்றல்களை உச்சளவில் பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருப்பது வெளித்தடைகள் அதாவது, அரசாங்கத்தினதும் சமூகத்தினதும் கட்டுப்பாடுகள், தடைகள், தலையீடுகளை குறைத்து உறுதிப்படுத்தும் சுதந்திரமான சூழலிலேயே ஆகும். இதுவே 'சுதந்திரம்' ஆளுகின்ற சூழலாகும்.

IV. தனியாள் சுதந்திரத்தை உறுதிப்படுத்துகின்ற வகையில் ஆட்சி செய்வதே அரசாங்கத்தின் பொறுப்பாகும். இதனை சட்டத்தின் ஆட்சி, சுதந்திரம் மற்றும் பொருளாதார, சமூக துறைகளில் குறைந்த அரச தலையீட்டை உறுதிப்படுத்துகின்ற அரசாங்கத்தினாலேயே செய்ய முடியும். அது "தாராண்மை" அரசாங்க முறையாகும்.

❖ **தாராண்மைவாத அரசியல் கருத்தியல்கள்**

பிரதான சிந்தனையாளர்களும் அவர்களின் கருத்துக்களும்.

- **தோமஸ் ஹொப்ஸ் (1586 - 1679)**

  - இவர் எந்தவகையிலும் தாராண்மைவாத சிந்தனையாளர் அல்லர்.
  - எனினும் தாராண்மை அரசியல் தத்துவத்தின் அடிப்படை விடயங்களான

    (அ) அரசின் அடிப்படை தனிமனிதனாவான்

    (ஆ) தனிநபர் தர்க்கரீதியிலான சிந்தனையுள்ள சுயாதீன மனிதனாவான்.

    (இ) அரசு என்பது மனிதர்களின் சமூகரீதியான படைப்பாகும் என்ற கருத்துக்களின் முன்னோடியாவார்.

  - ஹொப்ஸ் எதேச்சதிகார அரசாங்கத்தை சட்ட முறையான அரசாங்கமாக மாற்றுவதற்கு 1652 இல் அரசியல் தத்துவத்தினுள் முக்கியத்துவம் பெறும் லெவியாதன் (*Leviathan*) என்ற நூலினை வெளியிட்டார்.
  - அரசின் தோற்றம் தொடர்பாக அவர் கட்டியெழுப்பிய சமூக ஒப்பந்த கோட்பாட்டினுள், பின்னைய காலத்தின் லிபரல்வாதம் தொடர்பிலான சிந்தனைளர்களின் கருத்துக்களில் மேற்குறிப்பிட்ட விடயங்கள் மூன்றும் ஆழமாய் காணப்பட்டன.

- **ஜோன் லொக் (1632 - 1704)**

  - ஹொப்சுக்குப் பின்னர் இங்கிலாந்தில் தோன்றிய பிரதான அரசியல் சிந்தனையாளரான இவர் தாராண்மைவாத அரசியல் சிந்தனையின் உண்மையான ஆரம்ப கருத்தாவாவார்.
  - அரசாட்சிக்கு எதிரானவரான லொக் இங்கிலாந்தின் மன்னர் ஆட்சி மற்றும் பாராளுமன்ற ஆட்சி ஆகியற்றுக்கு இடையில் நடைபெற்ற அதிகார போராட்டத்தில் பாராளுமன்ற வாதிகளை பிரதிநிதித்துவம் செய்தார்.
  - லொக் 1690 களில் "அரசாங்கம் தொடர்பான இரு கட்டுரைகள்" என்ற நூலை வெளியிட்டு பழைமை தாராண்மைவாதத்தின் அரசியல் அடிப்படையினை கட்டியெழுப்பினார்.

- தாராண்மைவாத அரசியல் கருத்தியலுக்கு லொக் இணைத்த பிரதான கருத்துக்களை பின்வருமாறு காட்ட முடியும்.

I அரச அதிகாரத்தின் மூலதாரம் மக்களாவர்.

II மக்களால் நிபந்தனைகளுடன் வழங்கப்பட்டுள்ள பொறுப்புடன் (Trusteeship) கூடிய அதிகாரத்தினாலேயே அரசாட்சி செய்யும் அதிகாரம் ஆட்சியாளருக்கு கிடைத்திருக்கின்றது.

III பொதுமக்களால் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ள இந்த பொறுப்புடன் கூடிய அதிகாரத்தை நிபந்தனைகளை மீறாத வகையில் செயற்படுத்துவதற்கு ஆட்சியாளர் கடமைப்பட்டிருந்தனர். பொது மக்களின் சுதந்திரம், வாழ்க்கை, மற்றும் சொத்துக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தல் அந்நிபந்தனைகளின் நோக்கமாகும்.

IV தங்களுடன் உடன்பட்டுள்ள ஆட்சியாளர்கள் இந்த நிபந்தனைகளை மீறுவார்களாயின் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தை மீளப்பெற்றுக் கொள்ளும் உரிமை மக்களுக்கு உண்டு.

V அரசாங்கத்திற்கு வரையறுக்கப்பட்ட அதிகாரமே காணப்படுகின்றது. இந்த அதிகாரம் இருவழிகளில் கட்டுப்படுத்தப்பட்டது.

(அ) அரசாங்கத்தின் அதிகாரம், மக்களால் ஆட்சியாளருக்கு வழங்கியுள்ள பொறுப்புசார் உடன்படிக்கையின் நிபந்தனைகள் மூலம் கட்டுப்படுத்தப்படல்.

(ஆ) பொதுமக்கள் ஆட்சியாளர்களுக்கு அரச அதிகாரத்தை வரையறுக்கப்பட்ட காலத்திற்கே வழங்கி இருந்தமை.

- லொக்கினால் அறிமுகம் செய்யப்பட்ட இவ்வரசியல் சிந்தனையை ‘வரம்புடைய அரசாங்கம்’ (Limited Government) பற்றிய எண்ணக்கரு எனலாம்.

- **மொண்டஸ்கியூ (1689 - 1755)**

  - பிரான்சிய அரசியல் சிந்தனையாளரான இவரின், “அதிகார வேறாக்கம்” தொடர்பான கோட்பாடு தாராண்மைவாத சிந்தனைக்கு வழங்கிய முக்கியமான பங்களிப்பாகும்.

  - கி.பி. 1748 இல் பிரான்ஸிய மொழியில் வெளியிட்ட “சட்டத்தின் உயிர்” என்ற கட்டுரையில் இது தொடர்பான சிந்தனையை அபிவிருத்தி செய்துள்ளார்.

  - இதன் பிரதான மூலக்கொள்கையாவது, அரசாங்கத்தின் அதிகாரமானது சட்டத்துறை, நிர்வாகத்துறை, நீதித்துறை ஆகிய பிரதான துறைகளுக்கடையே பிரித்து வைக்கப்பட வேண்டும் என்பதாகும்.

  - அவ்வாறு இல்லாமல் இவ்வதிகாரமானது ஒரு நிறுவனத்திடம் அல்லது ஒரு நபரிடம் ஒன்று குவிக்கப்படும்போது தனியாள் சுதந்திரத்தை மீறும் ஆட்சி முறையொன்று உருவாகுவது அதன் பெறுபேறாகும். இதனை மொன்டஸ்கியூ “கொடுங்கோல் ஆட்சி” (Tyranny) என குறிப்பிடுகின்றார். அரசாங்கத்தின் இவ்வதிகாரங்களை பிரதான மூன்று துறைகளுக்கிடையே தெளிவாக வேறாக்கல் மற்றும் இந்த நிறுவனங்கள் ஒவ்வொன்றையும் சுயாதீனமாக இயங்கச் செய்வதன் மூலமே இதனை தடுக்க முடியும்.

  - அரசியல் அதிகாரம் ஆட்சியாளர்களால் கொடுங்கோண்மையான வகையில் பயன்படுத்தும் அபாயம் தொடர்ந்திருப்பதால் பொதுமக்களின் சுதந்திரத்தை பாதுகாக்க வேண்டுமாயின்

இந்த அதிகாரங்களுக்கு தடைகளை ஏற்படுத்த வேண்டும் என்ற சிந்தனையின் விளைவாக இந்த எண்ணக்கரு கட்டியெழுப்பப்பட்டுள்ளது.

- எனவேதான் மொண்டஸ்கியூ அரசாங்க அதிகாரத்தை ஒரு நபரிடமோ அல்லது நிறுவனத்திடமோ ஒன்று குவிக்கக்கூடாது என குறிப்பிட்டார்.

- **ஜீன் ஜெக் ரூசோ (Jean Jacques Rousseau)** (1712 - 1778)
    - பிரான்சிய இனத்தவரான ரூசோ சமூக ஒப்பந்த கோட்பாட்டினை முன்னெடுத்து சென்றவர்களில் ஒருவராவார்.
    - 1762 இல் வெளியான ''சமூக ஒப்பந்தம்'' எனும் நூல் அவரின் பிரதான அரசியல் நூலாகும்.
    - ரூசோவும் லொக், மொண்டஸ்கியூ போன்றே அரசினால் மனித சுதந்திரம் மீறப்படுகின்றமையிலிருந்து பாதுகாக்க வேண்டும் என்பதில் அக்கறை செலுத்தினார்.
    - மக்களால் தமது சுதந்திரம் மற்றும் பாதுகாப்பு என்பனவற்றை உறுதிப்படுத்தப்படுவதற்காக உருவாக்கப்பட்ட அரசினாலேயே அவர்களின் சுதந்திரத்திற்கு பாதிப்பு ஏற்படும் அபாயம் உள்ளது. இந்த புதிருக்கு ரூசோ கொடுத்த தீர்வு அரச அதிகாரமானது அரசினுள் ஒழுங்கமைந்துள்ள அனைவரினதும் நலனைக் கருத்திற் கொண்டதாக அமைய வேண்டும் என்பதாகும்.
    - ரூசோ இரண்டு எண்ணக்கருக்களை மையப்படுத்தி தனது கருத்துக்களை முன்வைத்துள்ளார்.

I. ''பொது விருப்பம்'' (General Will) என்பது முதலாவதாகும். அரசு பிரதிநிதித்துவப்படுத்துவது ஆட்சியாளர் எனும் சிலரின் விருப்பினையோ நல்வாழ்வினையோ அல்லாமல் அரசில் உறுப்பினராக உள்ள அனைவரினதும் ஒட்டு மொத்த விருப்பத்தினை பிரதிபலிக்கின்றது என்பதே இதன் அர்த்தமாகும்.

II. ''மக்கள் இறைமை'' என்பது இரண்டாவது ஆகும். மக்கள் இறைமையின் சொந்தக்கார் அரசோ அல்லது ஆட்சியாளர்களோவன்றி பொது மக்களே என்பது இதன் கருத்தாகும். பொது மக்களிடம் உள்ள இறைமையை கையகப்படுத்தவோ பிரிக்கவோ முடியாது.

## 5.2. சமவுடைமை வாதம்

- 19ம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் ஏற்பட்ட அரசியல் கருத்தாகும்.
- இக்கருத்தின் தோற்றத்திற்கு 17ம் நூற்றாண்டிலிருந்து அபிவிருத்தி அடைந்த கைத்தொழில் புரட்சியின் பெறுபேறுகளில் ஒன்றாக ஐரோப்பிய முதலாளித்துவ சமூகத்தில் ஏற்பட்ட மோசமான வர்க்க முரண்பாடும், தொழிலாளர் வர்க்கத்தின் கடுமையான வறுமை நிலையும் காரணமாகியது.
- குறைந்த கூலி பெறுகின்ற அதிக உழைப்பு சுரண்டலுக்கு உட்பட்ட தொழிலாளர் வகுப்பின் உரிமைகளை பெற்றுக் கொடுக்கும் நோக்கோடு தொழிற்சங்க இயக்கங்களும் போராட்டங்களும் 19ம் நூற்றாண்டின் முன்னரைப் பகுதியில் வளர்ச்சியடைந்திருந்தது.
- சமவுடைமைவாதம் எனும் கருத்துக்களின் வளர்ச்சியை இரு காலகட்டங்களில் கண்டுகொள்ள முடியும்.

I. இந்த கருத்து முதலில் முதலாளித்துவ முறையின் கீழ் காணப்பட்ட தனியார் சொத்து முறைமைக்கு பதிலாக சமூகத்தில் நிலவுகின்ற பொது சொத்து முறைமை தொடர்பான

மாற்று முறை ஒன்றை முன் வைப்பதன்மேல் எழுந்தது. ''சொத்து முறை தொடர்பான சமூக பொது உரிமை'' இனை ஏற்படுத்துவதன் மூலம் பொருளாதார உற்பத்தி செயற்பாடுகளை சமூக பொது செயற்பாடுகளாக மாற்றும்போது தனியார் சொத்து முறையின் கீழ் காணப்பட்ட மிகவும் மோசமான பொருளாதார மற்றும் சமூக அசமத்துவத்தை இல்லாது செய்ய முடியும் என்ற ஆரம்ப கருத்துருவாக்கமே இதன்மூலம் எதிர்பார்க்கப்பட்டது.

II. கார்ல்மார்க்ஸ் மற்றும் பெட்ரிக் ஏங்கல்ஸ் ஆகிய இருவரும் இணைந்து முன்வைத்த சமவுடைமைவாதம் தொடர்பான நவீன கருத்து 'மாக்சிய வாதம்' என அறியப்படுகின்றது. தமது புதிய கோட்பாட்டினை சமவுடைமை தொடர்பான பழைமை கருத்திலிருந்து வேறுபடுத்திக் காட்டுவதற்கு ''விஞ்ஞான சமவுடைமை'' வாதம் என இவர்கள் அடையாளப்படுத்தினர். இது மாக்சியவாத சமவுடைமை வாதம் எனவும் அறியப்படுகிறது.

- 1848 இல் மார்க்ஸ் மற்றும் ஏங்கல்ஸ் வெளியிட்ட 'கமியூனிச அறிக்கை' மூலம் ''சமவுடைமைவாதம்'' பற்றிய மாக்சிய கோட்பாடு முதன்முறையாக ஒழுங்காக முன்வைக்கப்பட்டது. அதில் காணப்படும் பிரதான கருத்துக்கள் சிலவற்றைப் பின்வருமாறு சுருக்கமாக குறிப்பிடலாம்.

I. முதலாளித்துவ சமூக, பொருளாதார முறைமை தொழிலாளர் வகுப்பின் உழைப்பைச் சுரண்டுதல் மீது கட்டியெழுப்பப்பட்டுள்ள மற்றும் நிலைத்திருக்கும் அலகொன்றாகும்.

II. தனியாள் சொத்து முறைமை மற்றும் உற்பத்தி வழிமுறைகளில் தனியாள் உரிமைகளை அடிப்படையாகக் கொண்ட முதலாளித்துவ முறைமை காணப்படும் வரை உழைப்புச் சுரண்டல் மற்றும் சமூக அசமத்துவ நிலை காணப்படும்.

III. இந்த உழைப்பு சுரண்டல், வறுமை மற்றும் சமூக சமத்துவமின்மை என்பவற்றை இல்லாது செய்ய வேண்டுமாயின் முதலாளித்துவ சமூக பொருளாதார முறைமையை இல்லாது செய்து அதற்கு பதிலாக சமவுடைமை சமூக பொருளாதார முறை ஒன்றினை புதிதாக உருவாக்க வேண்டும்.

IV. சொத்து மற்றும் பொருளாதார உற்பத்தி வழிமுறைகளில் தனியார் உரிமையை இல்லாது செய்து அவற்றை பொது சமூக உரிமையாக கட்டியெழுப்ப வேண்டும் என்பதே இந்த சமூக முறைமையின் பிரதான குணாம்சமாக இருக்க வேண்டும். இதன் போது பொருளாதார வளத்திற்கான சொந்தக்காரர்களாக பொதுமக்கள் காணப்படுவர். வரப்பிரசாதங்களைப் பெற்ற ஒருசிலர் அல்லர். இதன் போது சமூக வளங்களின் மூலம் உற்பத்தி செய்யப்படுகின்றவைகளை யாவரும் சமமான முறையில் அனுபவிக்கப்பட முடியும். உற்பத்தி, பரிமாற்றம் மற்றும் நுகர்வு சமத்துவத்தின் மீது கட்டியெழுப்பப்படும். இதன்போது சமூக வகுப்புக்களாக பிரிந்து செல்வது (வர்க்க வேறுபாடு) தொடர்ந்திருக்க மாட்டாது.

V. இவ்வாறான சமூக பொருளாதார பரிமாற்றங்கள் ஏற்பட வேண்டுமாயின் அதனை சமூக புரட்சி ஒன்றின் ஊடாகவே சாத்தியப்படுத்திக்கொள்ள வேண்டும். இதில் தலைமைத்துவம் தாங்குவது தொழிலாளர் வர்க்கமாகும். தொழிலாளர் வர்க்கத்தின் தலைமையில் ஏற்படும் 'சமவுடைமை புரட்சி' முதலாளித்துவ சமூகத்தின் தொழிலாளர் வர்க்கத்திற்கும் முதலாளித்துவ வர்க்கத்திற்குமிடையே ஏற்படும் வர்க்க போராட்டம் **விரிவடையும்** சம்பவமும் இடம்பெறும்.

VI. சமவுடைமைப் புரட்சி தீவிர அரசியல் பரிமாற்றமாகும். இதன்போது முதலாளித்துவ அரசை வீழ்த்தி தொழிலாளர் வர்க்கத்தினால் அரச அதிகாரத்தைக் கைப்பற்றிக்

கொள்வது இடம்பெறும். இதன்மூலம் முதலாளித்துவ வர்க்கத்தின் அரசியல் அதிகாரம் இல்லாது போகும்.

VII. சமவுடைமை அரசாங்கத்தின் பிரதான கடமையாவது முதலாளித்துவ பொருளாதார முறைமையை, சொத்து தொடர்பான பொது உரிமையை அடிப்படையாகக் கொண்ட சமவுடைமை பொருளாதார மற்றும் சமூக முறைமை ஒன்றை உருவாக்குவதற்குத் தேவையான தீவிர பரிமாற்றத்திற்கு தலைமைத்துவம் வழங்குவதாகும்.

VIII. சமவுடைமை சமூகத்தின் இறுதியில் "கம்யூனிஸ்" சமூக முறைமையாக பரிமாற்றம் அடையும். கொமியுனிஸ்ட் சமூக முறைமை முழுமையாக ஒற்றுமை மற்றும் சமத்துவத்தை அடிப்படையாகக் கொண்ட சமூக பரிமாற்றமாக உருவெடுப்பதே இதன் இறுதி பெறுபேறாகும்.

- இந்த பண்புகளின்படி தெளிவாவது இது தாராண்மைவாதத்தினைப் போன்றே சமூக பொருளாதார அரசியல் கட்டமைப்புக்களை உருவாக்கும் மற்றுமொரு கருத்தியல் என்பதாகும். எனினும் தாராண்மைவாதம் முதலாளித்துவ கருத்தியலாகும். சமவுடைமைவாதம் முதலாளித்துவத்தை இல்லாதொழிக்கும் கருத்தியலாகும்.

- இருபதாம் நூற்றாண்டில் சமவுடைமைவாதம் அரசியல் தத்துவமாக மாறியது. இதன் மூலம் மேல் எழுந்த முதலாளித்துவம் தொடர்பான பாரிய விமர்சனங்கள் மாற்றுக் கருத்துக்கள் ஐரோப்பாவிலும் காலணித்துவ நாடுகளிலும் பெரிதும் கவரப்பட்டது.

  உதாரணமாக : 1917 இரஷ்ய புரட்சி, 1949 சீனப்புரட்சி, 2ஆம் உலக யுத்தத்தின் பின்னர் மேற்கு ஐரோப்பாவில் சமவுடைமை அரசாங்கங்கள் தாபிக்கப்படல், 1959 கியூப புரட்சி, ஐரோப்பாவின் தொழிலாளர் வர்க்கப் போராட்டங்கள் என்பன சமவுடைமை கருத்தியலினால் ஈர்ப்புக்கொண்டவைகளாகும்.

- 20 ஆம் நூற்றாண்டின் "உலக சமவுடைமை இயக்கம்" என்கின்ற அரசியல் செயற்பாடும் அதற்கான பிரயத்தனத்திலும் அபிவிருத்தி ஏற்பட்டது.

- சமவுடைமைவாதம் அரசியல் கருத்தியலாக இன்னொரு பரிமாற்றத்திற்கு உள்ளானது. மாக்ஷியவாதம் கற்பித்த "புரட்சிகர சமவுடைமைக்கு" (Revolutionary Socialism) சமாந்தரமாக "மூன்றாம் உலக நாடுகளின் சமவுடைமை" (Third World Socialism) வாதம் என்ற கருத்தும் கட்டியெழுப்பப்பட்டுள்ளது.

- இந்தியாவின் ஜவ□ர்லால் நேரு, எகிப்தின் அப்துல் கமால் நசார் மற்றும் தன்சானியாவின் ஜீலியஸ் நியராரே போன்றோர் இதன் முக்கிய சிந்தனையாளர்களாவர்.

- மூன்றாம் உலக சமவுடைமை வாதம் மாக்சிய - சமவுடைமைவாத கோட்பாடுகளின் காணப்பட்ட சமத்துவம் மற்றும் சமூகநீதி தொடர்பான கருத்தின் அடிப்படையிலேயே கட்டியெழுப்பப்பட்டுள்ளது. காலணித்துவ காலத்தில் லிபரல் முதலாளித்துவவாதிகள் தாங்கள் உரிமையாக்கிக் கொண்ட நாடுகளின் பொருளாதார குறைவிருத்தி மற்றும் சமூக சமத்துவமின்மைக்கு பரிகாரம் கிடைக்காது என்பதை ஏற்றுக்கொண்ட இந்த தலைவர்கள் பின் காலனித்துவ சமூகங்களுக்கு மிகவும் பொருத்தமுடைய பொருளாதார மாற்றங்களை தேடினர். முதலாளித்துவத்தினதும், சமவுடைமைவாதத்தினதும் மூலக் கொள்கைகளை கலந்து உருவாக்கப்பட்ட இந்த மாற்றுக் கருத்தினையும் 'சமவுடைமைவாதம்' என்றே அழைக்கின்றனர்.

## 5.3. குடியரசுவாதம்

- இது லிபரல் வாதம் போன்றே அரசியல் சித்தாந்தமாக இருப்பதோடு அரசியல் கோட்பாடு மற்றும் அரசியல் தத்துவம் என்ற வகைப்படுத்தலுக்கும் உட்படுகின்றது.
- அரசியல் பிரசைகள், பிரசா உரிமை, சுதந்திரம் மற்றும் அரசியல் தொடர்பான குடியரசுவாத கருத்துக்கள் நவீன அரசு, அதன் இயல்பையும் நோக்கங்களையும் தீர்மானிப்பதில் முக்கிய பங்காற்றியுள்ளது.
- லிபரல்வாதம் மற்றும் குடியரசுவாதம் என்பன ஒன்றோடொன்று மாறுபட்ட அரசியல் கருத்தியலாக இல்லாதவிடத்தும், இவை இரண்டுக்குமிடையில் காணப்படுகின்ற வேறுபாடுகளை அறிந்து கொள்ளல், இக்கருத்தியல்களை சரியாக விளங்கிக் கொள்ளவும் உதவும்.
- குடியரசுவாதம், அரசியல் எண்ணக்கருவாகவும், தத்துவமாகவும் நீண்ட வரலாற்றைக் கொண்டுள்ளது. இந்த வரலாறு கிரேக்க, உரோம யுகங்கள் வரை நீண்டு காணப்படுகிறது.
- குடியரசுவாத கருத்தின் வளர்ச்சியை நான்கு கட்டங்களில் காட்ட முடியும்.

1. பழைமை குடியரசுவாதம் :- கிரேக்க மற்றும் உரோம குடியரசுவாத யுகம் - அரிஸ் டோட்டில், பொலிபியஸ் மற்றும் சிசரோ
2. ஐரோப்பிய மறுமலர்ச்சி காலம் :- மக்கியாவலி அபிவிருத்தி செய்த குடியரசுவாத சிந்தனை
3. பதினெட்டாம் நூற்றாண்டின் பிரான்ஸ் மற்றும் அமெரிக்க குடியரசுவாதம் :- பிரான்சிஸ் ரூசோ, மொண்டஸ்கியூ, அமெரிக்காவின் தோமஸ் ஜெபர்சன் மற்றும் ஜேம்ஸ் மெடிசன்.
4. இருபதாம் நூற்றாண்டின் குடியரசுவாதம் :- ெ□னாெ□ரன்டிட், குவேன்டின் ஸ்கினர், பிலிப் பெட்டி, (Hannah Arendt, Quenton Slicner, Philip Pettit) இருபதாம் நூற்றாண்டு குடியரசுவாதத்தின் பிரதான கருத்தியலாளர்கள்

- **குடியாட்சிவாதத்தில் பொதுவான மூலக்கொள்கைகள் சில காணப்படுகின்றன.**

(அ). குடியரசுவாதம் அரசாட்சி முறைமைக்கு நேரெதிரானதாகும். இது 18 ஆம் 19 ஆம் நூற்றாண்டுகளில் தாராண்மைவாதத்திற்கு சமாந்தரமாக அபிவிருத்தியடைந்த ஒன்றாகும்.

(ஆ) குடியரசுவாதத்தின்படி இறைமையின் உரிமையாளன் அரசன் / ஆட்சியாளன் அன்றி பொதுமக்களாவர். இதுவும் பழைமை தாராண்மைவாதத்திற்கு சமாந்தரமாக தோற்றம் பெற்ற அரசாட்சிக்கு எதிரான நிலைப்பாடாகும்.

(இ) அரசின் தலைவன் மக்களின் வாக்குகளினால் தெரிவு செய்யப்பட வேண்டும் என்பதில் கவனம் செலுத்தியதோடு இக்கருத்து 18 ஆம் நூற்றாண்டின் பின் வளர்ச்சியடைந்த கோட்பாடாகும்.

(ஈ) பிரசைகள் அரசியல் ரீதியாக உண்மையாகவும், துருவிராய்கின்ற அரசியல் விலங்காக செயற்பாடுகளில் பங்குப்பற்றுவார். அரசியல் ரீதியாக செயற்பாட்டுடன் இருந்து பொது நன்மைக்காக அர்ப்பணிப்புடன் உழைத்தல் குடியரசுவாத பிரசையொருவரின் பிரதான பண்பாகும். இது அரிஸ்டோட்டிலின் காலத்திலிருந்து இடம்பெற்றுவரும் கருத்து. இந்த குணாம்சங்களை அவர்கள் குறிப்பிடுவது "சிவில் நல்லொழுக்கம்" (Civic Virtue) என்றாகும்.

(உ) அனைத்து பிரசைகளினதும் பொது நலலுக்காகவே பிரசைகள் அரசியல் சமூகமாக (Political Community) ஒழுங்கமைந்திருப்பதன் நோக்கமாகும் (Common Good).

(ஊ) அரசியலின் நோக்கம் சுதந்திரமாகும். அது பிரசைகளின் செயற்பாட்டில் தவிர அமைதியாக இருப்பதனால் பெற்றுக் கொள்வதற்கோ, பாதுகாத்துக் கொள்வதற்கோ முடியுமானதல்ல. இலகுவில் இல்லாமல் போகக்கூடிய வளமான சுதந்திரத்தை பாதுகாக்கக் கூடியது பிரசைகளின் அரசியல் பங்குபற்றுதல் செயற்பாட்டினாலேயேயாகும். இது "பிரசைகளின் பங்குப்பற்றல்" (Civic Engagement) என்ற சொல்லினால் அழைக்கப்படுகிறது.

- கீழ்வரும் பண்புகளின் மூலமே தாராண்மைவாதம் மற்றும் குடியரசுவாதம் ஆகியன ஒன்றிற்கொன்று வேறுபடுகின்றது.

<u>அ) பிரசையும் அரசியலும்</u>

I. குடியரசுவாதத்திற்கு ஏற்ப பிரசாஉரிமை என்பது வெறுமனே அரசின் / அரசியல் சமூகத்தில் உறுப்புரிமையை பெற்றுக் கொள்வது மட்டுமல்ல. அரசியல் செயற்பாட்டில் செயலூக்கத்துடன் பங்குபற்றும், அதனூடாக பொது நன்மைக்காக அர்ப்பணிப்புடன் உழைக்கின்ற பிரசைகளின் நற்பண்பாகும். "அரசியலில் ஈடுபடுதல்" என்பது அந்த பொது நன்மையும், சுதந்திரத்தையும் அடைந்துக்கொள்வதை நோக்காகக் கொண்டு ஏனைய பிரசைகளுடனும் இணைந்து கூட்டுணர்வுடன் செயற்படுவதாகும். பிரசை செயலூக்கத்துடன் அரசியலை மேற்கொள்ளும் நிலையில் சுதந்திரம் பாதுகாக்கப்படும்.

II. எனினும் இது பற்றிய தாராண்மைவாத கருத்து வேறுபட்டதாகும். பிரசாவுரிமை என்பது அரசின் / அரசியல் சமூகத்தில் அங்கத்துவம் கிடைப்பதாகும். தாராண்மைவாத ஜனநாயக அரசில் பிரசை தனக்கு கிடைக்கப்பெற்றுள்ள சுதந்திரத்தை தனியாகவும், அமைதியாகவும் அனுபவிப்பதாகும். தாராண்மையற்ற மற்றும் ஜனநாயகமற்ற அரசியல் முறையிலேயே பிரசைகள் செயலூக்கத்துடனான அரசியல் போராட்டம் இடம்பெறும்.

<u>ஆ) சுதந்திரம்</u>

I. தாராண்மைவாதம் "சுதந்திரத்தை" தனியாள் சுதந்திரம் (Personal Freedom) என்றே அர்த்தப்படுத்தியது. அதாவது அரசின், சமூகத்தின் மற்றும் ஏனையோரினது தடைகளிலும் தலையீடுகளிலுமிருந்து விடுபட்டு தனிநபர்கள் தனது விருப்பப்படி ஏனையோருக்கு இடையூறு ஏற்படாவண்ணம் சிந்திக்கின்ற செயற்படுகின்ற மற்றும் வாழ்வதற்கான சுதந்திரமாகும். இதனை "எதிர்மறை சுதந்திரம்" (Negative Freedom) என குறிப்பிடுவர். அதாவது தடைகள் இன்றி கிடைக்கின்ற சுதந்திரம் (Freedom From Constraint) என்பதாகும்.

II. குடியரசுவாதத்திற்கிணங்க சுதந்திரம் என்பது பிரசைகள் தங்களது போராட்டங்களின் மூலம் பெற்றுக் கொள்கின்ற மற்றும் பாதுகாத்துக் கொள்கின்ற உரிமையாகும். சுதந்திரம் என்பது இயல்பாக இழக்கப்படக்கூடிய அச்சுறுத்தலுக்கு முகம் கொடுக்கின்ற பொதுவான உரிமையாகும். அதனை பாதுகாத்துக் கொள்வதற்கு தாராண்மைவாதம் முன்வைக்கும் சட்டரீதியான, அரசியல் வரையறைகள் போதுமானதாக இல்லாதிருப்பதோடு அதற்காக பிரசைகளின் பங்குப்பற்றல் (Civic engegment) அத்தியவசியமாகும்.

- **தற்கால குடியரசுவாத சிந்தனை**

20 ஆம் நூற்றாண்டில் குடியரசுவாதத்தின் பிரதான சிந்தனையாளர்களான ஹெனாஹெரன்டிட், குவேன்டின் ஸ்கினர், பிலிப் பெட்டியிட் ஆகியயோரின் சிந்தனைகளில் பிரதான இரு கருத்துக்கள் காணப்படுகின்றன.

I. அரசியல் ஆதிபத்தியவாதத்திலிருந்து விடுபட்ட சுதந்திரம் (Freedom from domination)

II. சுதந்திரத்தை பெற்றுக்கொள்ளும் ஊடகமாக பிரசைகளின் செயற்பாடு.

20 ஆம் நூற்றாண்டின் குடியரசுவாதம் பிரசைகளின் அசியல் செயற்பாடுகள் மற்றும் பணிகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்துகின்றமையால் அது "பிரசைகளின் குடியரசுவாதம்" (Civics Republication) எனவும் அழைக்கப்படுகிறது.

**5.4 சமூக ஜனநாயகம்**

- இது பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியரைப்பகுதியில் ஆரம்பமாகி தற்காலத்திலும் செயற்படுகின்ற எண்ணக்கருவாகும்.
- 1860 களில் ஜேர்மனியில் தொழிலாளர் இயக்கத்தை அடிப்படையாகக் கொண்டு தோற்றம் பெற்ற ஜேர்மனிய சமூக ஜனநாயக கட்சி இதன் முன்னோடியாக காணப்பட்டது.
- 20 ஆம் நூற்றாண்டின் ஆரம்ப தசாப்தங்களில் ஐரோப்பிய நாடுகளில் தொழிலாளர் வகுப்பினரை அடிப்படையாகக் கொண்டு ஒழுங்கமைந்த தொழிற்சங்கங்களின் ஊடாக சமூக ஜனநாயக கட்சி தோற்றம் பெற்றுள்ளதை காணலாம்.
- சமூக ஜனநாயக இயக்கங்களில் புதிய மறுமலர்ச்சியை இரண்டாம் உலக மகா யுத்தத்தின் பின் ஜேர்மன் மற்றும் ஸ்கென்டினேவிய நாடுகளில் காணக்கிடைத்தது.
- தாராண்மை வாதம், மாக்சிய வாதம் ஆகிய கோட்பாடுகளில் முழுமையாக உடன்படாத அதேநேரம் அவற்றின் சில அங்கங்களை இணைத்து கட்டியெழுப்பப்பட்ட ஒன்று என்பதே இருபதாம் நூற்றாண்டின் ஐரோப்பிய சமூக ஜனநாயக சிந்தனையின் பிரதான பண்பாகும். இதனாலேயே முதலாளித்துவத்தினதும் மாக்ஸவாதத்தினதும் கலப்பொன்றாகவும் இது குறிப்பிடப்படுகின்றது.
- மாக்ஸ்வாதத்தின் செல்வாக்கை பெற்றுக் கொண்டும் அதனையே தமது நிலைப்பாடாகக் கொண்டும் ஐரோப்பாவில் சமூக ஜனநாயகம் தோற்றம் பெற்றது. அந்த சமூக ஜனநாயக தொழிலாளர் கட்சிகள் ஆரம்பத்தில் மாக்ஸியத்தின் செல்லாக்கைப் பெற்றுக்கொண்டவைகளாக காணப்பட்டன.
- இருபதாம் நூற்றாண்டின் ஆரம்ப தசாப்தங்களில் சமூக ஜனநாயகமானது மாக்ஸ்வாத மற்றும் புரட்சிகர சமவுடைமைவாதத்திலிருந்து வேறுபட்ட கருத்தியல் முனைப்பினையும் அரசியல் ரீதியான அடையாளத்தினையும் பெற்றது. ஜேர்மன் சமூக ஜனநாயக கட்சியின் தலைவரான எட்வர்ட் பேன்ஸ்டைன் (1850 - 1932) (Edward Bernstein) அதன் முன்னோடியும் இந்த கோட்பாட்டின் பிரதான சிந்தனையாளருமாவார்.
- ஆரம்பத்தில் மாக்சியவாதியான இவர் தொழிலாளர்களின் கட்டாய புரட்சி தொடர்பான கருத்தை ஏற்றுக்கொள்ளவில்லை. பாராளுமன்றத்தை ஊடகமாக ஏற்றுக் கொண்டு சீர்திருத்தங்களின் மூலம் தொழிலாளர் வகுப்பினர் சமவுடைமைவாத நோக்கங்களை அடைந்து கொள்ள முடியும் என்ற புதிய சிந்தனையை சமூக ஜனநாயகவாதத்திற்கு இவர் வழங்கினார்.
- 1930 களின் பின்னர் அரசின் நலன்புரிவாத கருத்து சமூக ஜனநாயக சிந்தனையுடன் ஒன்றிணைந்தது. சமூக ஜனநாயகத்தை சமவுடைமைவாதத்தின் மென்துறையாக கருதுவதற்கான பின்னணியாக இந்த சிந்தனையின் இணைப்பு காணப்பட்டது.
- அரசியல் சிந்தனையாக சமூக ஜனநாயகத்தின் பிரதான அடிப்படைகள்

I. முதலாளித்துவ சமூக பொருளாதார முறைமையினால் உருவாக்கப்படுகின்ற தீவிர பொருளாதார அசமநிலை, வறுமை மற்றும் சமூக அநீதிகளுக்கு முதலாளித்துவத்தினுள் தீர்வின்மையினால் அந்த முறைமையை நிராகரிக்க வேண்டும்.

II. முதலாளித்துவத்திற்கு மாற்றீடாக தோற்றம் பெற்ற சமவுடைமைவாதம் முதலாளித்துவத்தின் மூலம் உருவாக்கப்பட்ட பிரச்சினைகளுக்கு சிறந்த முன்மொழிவுகளை செய்தது. எனினும், புரட்சி ஒன்றினூடான நிலைமாற்றத்தினால் சமவுடைமைவாதத்தை தோற்றுவிப்பது என்பது மாக்சியவாதத்தின் நடைமுறைக்கு அப்பாற்பட்டு உள்ளது.

III. முதலாளித்துவ முறைமை, சமூக சமத்துவம் மற்றும் சமூக நீதி பற்றிய சமவுடைமைவாத அடிப்படைகளில் சீர்திருத்தங்களை மேற்கொள்வதன் மூலம் முதலாளித்துவத்தின் பிரச்சினைகளுக்கு சமவுடைமைவாத தீர்வுகளைப் பெற்றுக் கொடுக்க வேண்டும்.

IV. முதலாளித்துவத்தை சமவுடைமைவாத அடிப்படைகளுக்கு ஏற்ப மறுசீரமைப்பு செய்யும் போதான கொள்கை ரீதியான அடிப்படைகள் பின்வருமாறு

1. பொருளாதாரத்துறையில் அரசின் தலையீடு :

- இது அரச தலையிடுகளற்ற தாராண்மை முதலாளித்துவ அடிப்படையில் இருந்து தெளிவாக வேறுபடுதலாகும்.
- அரச தலையீட்டின் மூலம் பொருளாதாரத்தின் போக்கினை நிருவகித்தல் மற்றும் வழிநடத்தக்கூடியதாக இருத்தல்.
- இதன்மூலம் சந்தைப் பொருளாதாரத்தினால் ஏற்படும் பாதகமான சமூக, பொருளாதார விளைவுகளுக்கு (சமூக சமமின்மை, வறுமை, சமூக அநீதி) தீர்வு காணமுடியும்.

2. கலப்பு பொருளாதாரம்

- இதனூடாக முதலாளித்துவ மற்றும் சமவுடைமைவாத பொருளாதார அடிப்படைகளையும் கொள்கைகளையும் ஒன்றிணைத்தலே முன்மொழியப்பட்டது.
- சந்தைப் பொருளாதாரம் இடம்பெறும் அதேநேரம் அதனை அரசு நிருவகித்தல் கலப்பு பொருளாதாரத்தின் (Mixed Economy) பிரதான பண்பாகும்.

3. சமூக நலன்புரி

- முதலாளித்துவ தாராண்மைவாத பொருளாதார முறையில் சமூக நலன்புரி என்ற எண்ணக்கரு காணப்படுவதில்லை.
- இது சந்தை சக்திகள் மூலம் நலன்புரிகளை வலுப்படுத்தியுள்ளதாக நம்புகின்றது.
- இந்த கருத்தினை சமூக ஜனநாயகவாதம் முழுமையாக நிராகரிப்பதோடு சுதந்திர சந்தையானது அசமநிலையை ஏற்படுத்துமே தவிர இவற்றுக்கான தீர்வுகளை பெற்றுக்கொடுக்காது என்பதில் கவனம் செலுத்துகின்றது.

- இதற்காக சமூக ஜனநாயகவாதமானது பொருளாதார மற்றும் சமூகத் துறைகளில் அரசின் நேரடி தலையீட்டுடனான சமூக நலன்புரிகளை (Social Welfarism) முன்மொழிந்தது.

4. செல்வம் மற்றும் வருமானங்களை சமூகத்திற்கு மீள பகிர்ந்தளித்தல்

- முதலாளித்துவ சந்தைப் பொருளாதாரத்தின் பாதகமான விளைவொன்றான செல்வம் மற்றும் வருமானங்களை பகிர்வதில் காணப்படும் பாரிய சமமின்மை, செல்வம் குறித்த ஒருசாராரின் கைகளில் ஒன்றுகுவிதல் ஆகியவற்றுக்காக சமூக ஜனநாயகம் வருமானம் மற்றும் செல்வங்களை மீள பகிர்ந்தளிக்கும் எண்ணக்கருவினை மாற்றீடாக முன்மொழிந்தது. (Redistribution of Income and Wealth).

- செல்வந்தர்களிடமிருந்து அறவிடப்படும் வருமானவரிகளை சமூக நலன்புரி செயற்பாடுகளுக்கு செலவழித்தல் இதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள பிரதான உபாயமாகும்.

5. கூட்டு பேரம்பேசுதல்

- சமூக ஜனநாயக இயக்கம் வரலாற்று ரீதியாக தொழிலாளர் வகுப்பின் மீது கட்டியெழுப்பப்பட்டதாகும்.

- ஆகவே, தொழிலாளர் வகுப்பின் ஊதியம் மற்றும் வாழ்க்கைத்தரத்தை பாதுகாத்துக் கொள்வதை நோக்காகக் கொண்டு, பிரபுக்களோடு கூட்டு ஒப்பந்தங்களை ஏற்படுத்திக் கொள்வதற்கான அடிப்படைகளை வழங்குவது சமூக ஜனநாயகத்தின் பிரதான பண்பாகும்.

## 5.5 பாசிச வாதம்

- தாராண்மைவாதம் 17 – 18 ஆம் நூற்றாண்டுகளிலும், சமவுடைமைவாதம் 19 ஆம் நூற்றாண்டிலும், பாசிசவாதம் 20 ஆம் நூற்றாண்டின் முதல் அரைப்பகுதிக்கும் உரிமையுடைய கருத்தியல்களாகும்.

- இது முதலாம் மற்றும் இரண்டாம் உலக யுத்தங்களுக்கு இடைப்பட்ட காலத்தில் ஓர் தத்துவமாகவும், அரசியல் இயக்கமாகவும் தோற்றம் பெற்றது.

- அரசியல் கருத்தொன்றாகிய பாசிசவாதமானது இரண்டாம் உலக யுத்தத்தில் இத்தாலி மற்றும் ஜேர்மனியின் வீழ்ச்சியோடு தோல்வியடைந்தது.

- ஆரம்பத்தில் பாசிசவாதம் என்ற சொல் இத்தாலியில் பெனிட்டோ முசோலினியின் தலைமைத்துவத்தில் தோற்றம் பெற்ற சர்வதிகார ஆயுத பல அரசியல் இயக்கத்தை குறிப்பிட பயன்படுத்தப்பட்டது.

- பின்னர் அது ஜேர்மன், ஜப்பான் ஆகிய நாடுகளில் தோற்றம் பெற்ற இனவாத ஆயுதபல மற்றும் சர்வாதிகார அரசியல் இயக்கங்கள் மற்றும் அரச முறைமைகளை குறிப்பிட பயன்படுத்தப்பட்ட பொதுவானதொரு அரசியல் பதமாக மாற்றம் அடைந்தது.

- ஜேர்மனிய பாசிசம், நாஸிசவாதம் (Nazism) எனப்பட்டது. இது தேசிய சமவுடைமைவாதம் (National Socialism) என்ற ஜேர்மன் சொல்லின் திரிபாகும்.

- **பின்னணி**

  - இத்தாலியிலும் ஜேர்மனியிலும் பாசிசவாதமானது முதலாளித்துவ, தாராண்மை ஜனநாயக, சமவுடைமைவாத மற்றும் கொமியுனிச வாதங்களுக்கு நேரெதிரான தத்துவமாகவும், அரசியல் இயக்கமாகவும் தோற்றம் பெற்றது.

  - முதலாம் உலக மகாயுத்தத்தின் தோல்வியை அடிப்படையாகக் கொண்டு இத்தாலியிலும், ஜேர்மனியிலும் தோற்றம் பெற்ற பாரிய அரசியல் நெருக்கடி, 1920 களில் ஏற்பட்ட பொருளாதார சரிவுநிலையினால் உருவான பொருளாதார மற்றும் சமூக வீழ்ச்சி என்பன பாசிசவாதம் மற்றும் நாசிசவாதம் தோன்றுவதற்கான பின்னணியாக அமைந்தது.

- **கருத்தியல்**

  - ஜேர்மனிய நாசிசவாத ஆட்சியாளரான அடொல்ப் ிட்லர் (Addolph Hitler) 1925 - 26 களில் அரசியல் சிறைக் கைதியாக இருந்தபோது வெளியிட்ட 'எனது போராட்டம்' (Mein Kampf) என்ற நூலில் பாசிசவாதத்தின் அடிப்படை மற்றும் நோக்கங்களை மிகவும் தெளிவாக எழுதியுள்ளார்.

  - ஹிட்லர் மற்றும் இத்தாலிய பாசிசவாத தலைவனான பெனிட்டோ முசோலினி (Benitto Mussolini) வெளியிட்ட கருத்துக்கள் மற்றும் பயன்பாடுகளின் அடிப்படையில் பாசிசவாத சிந்தனையினதும் அரசியலினதும் பிரதான பண்புகளை இனங்காண முடியும்.

    அ) அரசியல் அனைத்தாண்மைவாதம் (Totalrianism)

    - பாசிசவாதமானது ஒரு வகையில் சர்வாதிகார ஆட்சி முறையொன்றினை கட்டியெழுப்புவதை நோக்காக கொண்டிருந்ததோடு இது அரசியல் கோட்பாட்டில் அனைத்தாண்மைவாதம் எனும் எண்ணக்கருவாக அடையாளப்படுத்தப்பட்டது.

    - அதன் பொருளாவது அரசு அடிப்படையிலேயே சர்வாதிகாரமானதும், சர்வாதிகார ஆட்சி கட்டமைப்பின் மூலம் முழு சமூகத்தையும், அரசியல் முறைமையையும் தனது முழுமையான கட்டுப்பாட்டிற்கும், ஆதிக்கத்திற்கும் உட்படுத்திக் கொள்வதாகும்.

    ஆ) அரசுக்கு அடிபணிதல் (Cult of the state)

    - முசோலினியின் பாசிசவாத எண்ணக்கருவிலிருந்து ஆரம்பமான அரசின் அதிகாரத்துவத்தை முழு சமூகமும், சகல பிரசைகளும் நிபந்தனைகள் மற்றும் கேள்விகளின்றி ஏற்றுக்கொள்ளலும், அதன் அதிகாரதிற்கு தனது சுய விருப்பின்படியே அடி பணிவதுமே இதன் விளக்கமாகும்.

    - ஏனெனில் அரசானது முழு இனத்தினதும் உயர்வு, கௌரவம் மற்றும் விதி ஆகியவற்றின் வெளிப்பாடு என்பதாலாகும்.

    - பாசிச அரசியல் முறைமையினுள் அரசிலிருந்து விலகிய அல்லது சுயாதீனமான தனியாள் சுதந்திரம் ஒன்று இல்லை.

    - அதிகாரத்திற்கும், அதிகார நிறுவனங்களுக்கும் மற்றும் தலைவருக்கும் அடிபணிவதனூடாகவே சுதந்திரம் கிடைக்கப்பெறுகிறது.

இ) தனியாள் சுதந்திரம் இல்லை

- தாராண்மைவாதத்தின் அடிப்படை கரு, அரசினால் பாதுகாக்கப்படும் தனியாள் சுதந்திரம் என்றால் பாசிசவாதத்தின் கீழ் 'தனியாள் சுதந்திரம்' என்ற எண்ணக்கரு மறுக்கப்படுதலே குறிக்கும்.

- பாசிசவாதத்தில் தனியாள் சுதந்திரம் என்பது, அரசிற்கும், இனத்திற்கும் தலைவனுக்கும் நிபந்தனையின்றி காட்டும் அடிபணிவின் தன்மையைப் பொறுத்தே காணப்படுகின்றது.

ஈ) நாயகர் வழிபாடு (தலைவருக்கு அடிபணிதல்)

- தலைவனின் அதிகாரம் மற்றும் ஆதிபத்தியத்திற்கு சகல பிரசைகளும், முழு சமூகமும் நிபந்தனையின்றியும் சுய விருப்பத்துடன் அடிபணிதல் பாசிசவாதத்தின் விசேட பண்பாகும்.

- ஜேர்மனியின் நாசிசவாத்தின் கீழ் முன்னிலைப்பட்ட புருரர் (Fuhrer) என்ற எண்ணக்கரு இந்த நாயகர் வழிபாட்டின் மூலம் வெளிப்பட்ட பாசிச வாதத்தின் படைப்பாகும்.

உ) தீவிர வர்க்கவாதம் / இனவாதம்

- ஜேர்மனிய நாசிசவாதத்தின் மூலம் வளர்க்கப்பட்ட இந்த பண்பின் மூலம் ஜேர்மன் இனம் உலகின் உயர்ந்த இனம் என வெளிப்படுத்தப்பட்டதுடன் உலகின் தலைவிதி ஜேர்மனிய இனத்தின் தலைவிதியின் படியே தீர்மானிக்கப்படும் எனவும் அதனால் முழு உலகத்தின் மீதும் தனது ஆதிபத்தியத்தை நிலைநிறுத்துவதற்கு இனத்திற்கு பூரண உரிமை உண்டு எனவும் குறிப்பிட்டது.

- "ஜேர்மன் இனம் ஆரிய இனமாகும்" என்ற கருத்து இதன் மூலம் வெளிப்பட்டது. இந்த நம்பிக்கையின் அடிப்படையிலலேயே இலட்சக் கணக்கான யூதர்கள் கொல்லப்படுவதை ஜேர்மனிய நாசிச வாதிகள் நியாயப்படுத்தினர்.

ஊ) தீவிர இராணுவவாதம் (Extreme Militarism)

- தீவிர இராணுவவாதம் இரண்டு மூலங்களிலிருந்து வெளிப்பட்டுள்ளது.

  I. ஜேர்மனியரே உலகின் உயர்ந்த இனம் என்பதால் முழு உலகமும் தங்களது ஆதிபத்தியத்தின் கீழ் கொண்டு வரும் என்ற பரந்துபட்ட சிந்தனை.

  II. ஜேர்மனிய 'ஆரிய' இனத்தின் அதிகாரத்திற்கு அச்சுறுத்தலாக கருதுகின்ற ஏனைய இனங்களிலிருந்து 'சுதந்திரம்' அடைவதாகும். இச்சிந்தனையை அடிப்படையாகக் கொண்டே இரண்டாம் உலக யுத்தத்தை ஆரம்பிப்பதற்கு ஜேர்மனிய நாசிசவாதிகள் முற்பட்டனர்.

எ) வன்முறையும் தீவிரவாத்ததையும் (Terror) அரசியல் அதிகார ஊடகமாக பயன்படுத்துதல்

- பாசிச அரசின் அடிப்படைப் பண்பாக முழு சமூகத்தையும் தங்களது ஆதிபத்தியத்தின் கீழ் பலவந்தமாக உட்படுத்திக் கொள்வதாக இருந்தது.

- தனது அதிகாரத்திற்கு உடன்படாத சகல சமூக / இனப் பிரிவினரையும் அடிமைப்படுத்திக் கொள்வதற்கும் மற்றும் உடலியல் ரீதியாக அழிவை ஏற்படுத்துவதற்கும் பாசிச வாதிகள் ஒழுங்கமைந்திருந்தனர்.

- இன சுத்திகரிப்பு (Genocide) பாசிச அரசின் கடமை ஆக்கப்பட்டது.

- பாசிசவாதத்துடன் உடன்படாத மக்களுக்கு இரு மாற்றுவழிகளே காணப்பட்டன. ஒன்று நாட்டை விட்டுச் செல்லுதல் அல்லது இன சுத்திகரிப்புக்கு உட்படுதல் என்பனவையே அவை.

- முதலாம் உலக போரின் பின் இத்தாலியிலும், ஜேர்மனியிலும் வெளிப்பட்ட பாசிசவாதம், இரண்டாம் உலக மகா யுத்தத்தில் அந்நாடுகள் அடைந்த தோல்வியினால் உத்தியோக பூர்வமாக நிறைவடைந்தன.

- பாசிசவாதம் மானிட பண்பாட்டில் ஏற்பட்ட மாறாக் கலங்கமாக கருதப்படுகிறது.

- பாசிச சிந்தனை இன்று தோல்வியடைந்து காணப்பட்டாலும் அதன் தாக்கத்திற்குட்பட்ட சிறிய குழுக்கள் ஐரோப்பாவிலும், அமெரிக்காவிலும் இன்றும் காணப்படுகின்றன.

## 5.6 தேசிய வாதம்

- 19ஆம் மற்றும் 20ஆம் நூற்றாண்டுகளில் வளர்ச்சியடைந்த பிரதானமான அரசியல் கருத்தியல் தேசிய வாதமாகும் (Nationilism).

- அது அரசியல் கருத்தியலாகவும், அரசியல் மற்றும் சமூக இயக்கமாகவும் இருப்பதோடு நவீன உலகில் அரசின் அரசியல் முரண்பாடுகள் மற்றும் அரசுகளுக்கிடையிலான தொடர்புகள் என்பவற்றை தீர்மானிப்பதில் செல்வாக்கு செலுத்துகின்ற பிரதான சாதனமும் ஆகும்.

- தேசிய வாதத்தின் கடமைப் பொறுப்புகளை மறந்து நவீன உலகத்தை விளங்கிக் கொள்ள முடியாதளவுக்கு நவீன வரலாற்றின் வழியையும் மனிதர்களின் அரசியல் தலைவிதியை தீர்மானிப்பதிலும் தேசிய வாதம் பங்களிப்பு செய்துள்ளது.

- தங்களை ‘‘இனமென்று’’ குறிப்பிடும் சுய புரிந்துணர்வுடைய மக்கள் குறித்த அரசியல் நோக்கத்திற்காக முன்னெடுக்கின்ற ‘இனம்’ பற்றிய கருத்தாக தேசியவாதம் என்பதை சுருக்கமாக குறிப்பிலாம்.

- கருத்தியலாகவும் சிந்தனையாகவும் தேசியவாதத்தில் இரண்டு விசேடங்களைக் காணலாம்.

  I. தேசியவாதம் என்பதற்கு முறையான ஒருமுகப்படுத்தப்பட்ட சிந்தனையொன்றில்லை.

  ○ இது குறித்த ஒரு சிந்தனையாளரினாலோ அல்லது தத்துவவியலாளரினாலோ முன் வைக்கப்பட்டதல்ல. அதற்கென தனித்துவமான சிந்தனையாளர்களும் இல்லை. இது பற்றி பெனடிக்ட் என்டர்சன் எனும் அரசியல் கோட்பாட்டாளர் 1983ஆம் ஆண்டு வெளியிட்ட கற்பனைப் சமூகங்கள் (*Imagined Communities*) எனும் நூலில் விளக்கமாக கூறியுள்ளார்.

- தேசியவாதம் அரசியல் ரீதியாக எவ்வளவு பலமானதாக காணப்பட்டாலும் அது தத்துவம் என்றவகையில் கீழ்நிலையானதும், தத்துவார்த்த அடிப்படையொன்றும் அதில் காணப்படவில்லை. ஏனைய அரசியல் கருத்தியல்களைப் போன்று தனக்கென்ற தனித்துவமான சிந்தனையாளர்களையோ, கோட்பாட்டாளர்களையோ இது உருவாக்கிக் கொள்ளவில்லை. தேசியவாதத்திற்கு ெ□ாப்ஸ், கொக்வில், மாக்ஸ், வெபர் போன்றரொருவர் இல்லை. (என்டர்சன் 1983.14)

II. தனித்துவமான தத்துவவியலாளர்கள், சிந்தனையாளர்களினால் தேற்றுவிக்கப்படாவிட்டாலும் பல்வேறு சமூகங்களிலிருந்து தோற்றம் பெற்றுள்ள தேசியவாத கருத்தியல்களில் பொதுவான கட்டமைப்பொன்று காணப்படுகிறது.

உ+ம் : சிங்கள தேசியவாதம், ஜப்பான் தேசிய வாதம், ஆங்கில தேசிய வாதம், இரஷ்சிய தேசிய வாதம் போன்றவாறு ஒன்றிற் கொன்று நேரடித் தொடர்புகள் அற்ற தேசியவாதங்களின் கட்டமைப்புசார் ஒழுங்கமைப்பு பொதுத்தன்மை உடையதாகும்.

- தேசியவாதத்தை பிரதான மூன்று அணுகுமுறைகளினூடாக இனங்காணலாம்.

1. நவீன அணுகுமுறை (Modernist)

   18ஆம் நூற்றாண்டின் பின்னர் ஐரோப்பிய கைத்தொழில் முதலாளித்துவ நாடுகளில் தேசிய அரசுகள் வளர்ச்சியடையும் செயற்பாட்டுடன் கட்டியெழுப்பப்பட்ட கருத்தாகும்.

2. மரபு ரீதியான அணுகுமுறை (Primordialist)

   இதன் கருத்து, தேசியவாதம் பல்லாயிரம் ஆண்டுகள் பழைமையான மனித வரலாற்றைப் போன்றே பழைமையான நிகழ்வாக கொள்ளப்படுகின்றது.

3. கருவிவாத அணுகுமுறை (Instrumentalist)

   இனம் என்ற கருத்து அரசியல்வாதிகள் மற்றும் அரசியல் பிரமுகர்கள் அரசியல் அதிகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்காக பயன்படுத்துகின்ற கருவியாகும் என இதனால் குறிப்பிடப்படுகிறது.

**'இனவுணர்வின்' அடிப்படையும் தேசியவாதமும்**

1. "ஏதேனும் சமூகத்திற்கு தாங்கள் அனைவரும் கூட்டாக இனம் என்கின்ற பாரிய சமூகத்திற்குள் உடன்படுவோம் என்கின்ற உணர்வினைக் கட்டியெழுப்புவதே தேசியவாதத்தின் பிரதான பணியாகும்.". அதாவது தேசம் என்கின்ற சமூகத்திற்கு உடன்படல் (Blonging to the Community called Nation) என்ற உணர்வாகும்.
2. 'ஒரே இனமாக' சிந்திப்பதற்கு அவர்களுக்கிடையே பொதுத்தன்மை தொடர்பான உறுதிப்பாடு இருத்தல் வேண்டும். தேசியவாதிகள் இதனை 'தேசிய அடையாளம்' (National Identity) என்கின்றனர். தேசிய அடையாள சின்னங்களாக மொழி, மதம், கலாசாரம், பொது வரலாறு மற்றும் சில நேரங்களில் பொதுவான நில பிரதேமும் அடங்கும்.
3. பொதுத்தன்மை தொடர்பான உணர்வின் மூலம் தோற்றம் பெறுகின்ற தேசியவாதம் பின்னர் அரசியல் தன்மையையும் பெற்றுக் கொள்கிறது. இதன் மூலம் 'இனம்' என்பதற்கு அரசியல்

அடையாளமொன்று கிடைப்பதோடு அதனூடாக மக்களுக்கு அரசியல் இலக்குகளை பெற்றுக் கொடுத்து இனத்தை அரசியல் ரீதியாக வழிநடத்தும். அரசியல் சுதந்திரம், பிரதேச சுய ஆட்சி மற்றும் சமூக குழுக்களின் உரிமைகள் இந்த அரசியல் நோக்கங்களில் பிரதானமானவையாகும்.

4. சுயநிர்ணய உரிமை (Right of self Determination) தேசிய வாதத்துடன் தொடர்புபட்ட பிரதான எண்ணக் கருவாகும். இதனால் கருதப்படுவது தனது அரசியல் தலைவிதியைத் தீர்மானிக்கும் உரிமை சகல இனங்களுக்கும் உரித்தானது என்பதாகும். அரசியல் ரீதியாக பிரிந்து வேறான அரசொன்றை உருவாக்கிக் கொள்வதோடு, பிரிவினை, பிரதேச சுயாட்சி, தேசிய சுய நிர்ணய உரிமை என்பதன் மூலம் நிறைவேற்றிக்கொள்ளும் நோக்கங்களாகும்.

5. அரசியல் ரீதியாக தேசியவாத கருத்தியலின் பணியாவது இனம் என்று குறிப்பிடப்படுகின்ற ஒரு சமூகத்தை ஏனைய சமூகங்களிலிருந்து வேறுபடுத்தி அடையாளம் காண்பதாகும். முன்னர் குறிப்பிட்டதன்படி இதன் நியமங்களாக மொழி, மதம், கலாசாரம் ஆகிய தேசிய அடையாள கருவிகளாகும். இதனை வேறுபடுத்தி அடையாளம் காணுதலில் உச்ச நிலையை அடையும்போது நாமும் எதிரி / எதிரிகள் என்ற வேறுபாட்டின் மூலம் உலகத்தை பார்ப்பதற்கு தேசிய வாதிகள் முற்படுகின்றனர்.

- தேசியவாதம் கருத்தியலாகவும் அரசியல் இயக்கமாவும் (18 நூற்றாண்டு தொடக்கம் இன்று வரை) பிரதான இரண்டு தன்மைகளைக் கொண்டது.

  1. தேசிய - அரச தேசியவாதம்
  2. இனத்துவ தேசியவாதம்

## 1. தேசிய - அரச தேசியவாதம்

- இது தேசியவாதத்தின் பழைமை தோற்றாகும். இதன் பிரதான பண்பாக காணப்படுவது தேசிய அரசின் அடையாளத்தை அடிப்படையாகக் கொண்டிருப்பதாகும்.
- ஐரோப்பாவில் 18ம் நூற்றாண்டில் தோற்றம் பெற்ற தேசிய அரசுகளின் தோற்றப்பாடு “ஒரு தேசம் - ஒரு அரசு” என்ற சூத்திரத்தின்படி ஒரு இனத்திற்குட்பட்ட மக்கள் அவ்வினத்தின் தேசத்திற்கு உட்படுகின்றனர்.
- தேசத்தின் மீதான உரிமை, பிணைப்பு மற்றும் அன்பு போன்றன அவ்வினத்தின் அரசுடன் அந்நியம் ஆகும்போது கிடைக்கும் பிணைப்பு மற்றும் நேசிப்புமாகும்.

உ+ம் : இலங்கையர்கள், இந்தியர்கள், தாய்லாந்தியர்கள் என்பதனால் கருதப்படுவது இந்த தேசிய அரசுகளின் சிந்தனையாகும்.

## 2. இனத்துவ தேசியவாதம்

- தேசிய அரசினுள் வாழ்கின்ற இனங்களுக்கிடையில் ஏற்படுகின்ற கூட்டான சமூக குழுவொன்று தொடர்பான அரசியல் அறிவு ‘இனத்துவ தேசியவாதம்’ (Ethinic Nationalism) என அழைக்கப்படும்.
- அதற்கும் அடிப்படையாக அமைவது மொழி, மதம், கலாசாரம் ஆகிய பொது அடையாளங்களாகும்.

- இனத்துவ தேசியவாதம் பற்றிய கருத்தாடல் தோற்றம் பெறுவது தானும் உறுப்புரிமையை அனுபவிக்கின்ற தேசிய அரசினுள் தேசிய - அரச தேசியவாதத்தினுள் தனக்கு சமமான உரிமைகள் கிடைக்காமை மற்றும் வேற்றுமைகளுக்கு உட்படல் ஆகிய இன்னல்களுக்கு மத்தியிலாகும்.

- அவ்வாறான இனத்துவதேசிய வாதத்தினுள் அரசியல் கோரிக்கைகளுள் சமமான உரிமைகள், பிரதேச சுய ஆட்சி மற்றும் பிரிந்து செல்லல் ஆகியன அடங்கும்.

- 18ம் நூற்றாண்டிலிருந்து தேசிய வாதத்தின் வரலாற்று அனுபவமானது கலப்பான ஒன்றாகும். அது சாதகமான மற்றும் பாதகமான விளைவுகளை பெற்றுக் கொடுத்துள்ளது.

1. உலகின் நவீன அரசுகள் அடிப்படையிலே தேசிய அரசவாத தேசிய வாதத்தினால் தீர்மானிக்கப்படுகிறது.

2. அரசியல் சுதந்திரம், விடுதலை தொடர்பான கருத்து தேசிய வாதத்தில் மிகவும் பிரபலமாக வகையில் மக்கள் கூட்டுணர்வில் சேர்க்கப்பட்டுள்ளது.

3. தேசியவாத அரசு மற்றும் தேசியவாத இயக்கங்கள் யுத்தம், இன சுத்திகரிப்பு, வன்முறை போன்றவற்றிற்கு வழிப்படுத்தியுள்ளது.

## 5.6 மதசார்பற்ற வாதம் (Secularism)

- மதசார்பின்மைவாதம் என்பது சமயத்தையும் அரசியலையும் ஒன்று கலக்காமலிருப்பதாகும்.

- அரச துறைக்கு சமயத்தின் அழுத்தமோ, சமய துறைக்கு அரசின் அழுத்தங்களோ இல்லாமல் இவை இரண்டும் ஒன்றிற்கொன்று வேறுபட்ட மற்றும் சுயாதீனமான இரண்டு துறைகளாக கருதப்பட வேண்டும் என்ற கருத்தை வெளிப்படுத்தும் கருத்தியலாகும்.

- சமயம் அரசியலுக்குள் பிரவேசித்தல், அரசியலுக்காக சமயத்தை ஊடகமாக பயன்படுத்திக் கொள்ளும் பின்னணியில் சமய முரண்பாடுகள் பிரதான அரசியல் கருத்தியலாக காணப்படுகின்ற தற்காலத்தில் மதசார்பற்றவாதம் தொடர்பான ஈடுபாடு அதிகரித்துள்ளது.

- இது தொடர்பாக நீண்ட கலந்துரையாடலொன்று இந்தியாவில் இடம் பெற்றுக் கொண்டிருப்பதோடு அரசு மதசார்பற்றதாக இருக்க வேண்டும் என 1975இல் அரசியலமைப்பிற்கு சேர்க்கப்பட்ட சீர்திருத்தத்திலும் குறிப்பிடப்படுகிறது. இது ஜனநாயகத்தைப் போன்றே முக்கியத்துவம் பெறுவதோடு, இந்திய அரசியலமைப்பிலும் அரசியல் முறைமையிலும் அடிப்படையான கோட்பாடாவும் உள்ளது.

### தோற்றம்

- 18 - 19ம் நூற்றாண்டுகளில் ஐரோப்பாவில் தோற்றம் பெற்றது.

- ஐரோப்பிய **ஞானிகளின்** (Enlightement) சிந்தனையின் ஒரு பகுதியாகும்.

- அதனால் மதசார்பின்மைவாதமானது பழைமை தாராண்மைவாதத்தோடும் சமவுடைமைவாத சிந்தனையுடனும் தொடர்புபட்டது.

- ஐரோப்பிய மதசார்பின்மைவாதம், மத்திய காலத்தின் இறுதி காலத்தில் பிரதான அங்கமாக அரசு மற்றும் திருச்சபைகளுக்கிடையில் காணப்பட்ட நிறுவன இணைப்பின்மீது அரசாட்சியின் காவலனாக திருச்சபை இருந்தமைக்கு எதிராக வளர்ச்சியுற்றதாகும்.

- அரசாட்சி முறைமைக்கு எதிரான இயக்கங்கள் அரசு மற்றும் திருச்சபைகளுக்கிடையில் காணப்பட்ட இந்த "தூய்மையற்ற கூட்டிற்கு" எதிரானதன் மூலம் அந்த போராட்டத்தின் தத்துவார்த்த வெளிப்பாடான விளைவாகவாவே மதசார்பின்மைவாதமானது தோன்றியது.

- மதசார்பின்மை வாதம் தோற்றம்பெறுவதற்கான மற்றுமொரு காரணமாக ஐரோப்பிய மறுமலர்ச்சி யுகத்தில் தோன்றிய தர்க்க அறிவுக்கு முதலிடம் கொடுத்தமையை சுட்டிக் காட்ட முடியும். இது திருச்சபை முன்னெடுத்துச்சென்ற அஞ்ஞான ரீதியான ஆதிக்கத்திற்கு எதிரானதாகும்.

- மறுமலர்ச்சி காலத்தில் தோன்றிய மதசார்பின்மைவாதம், பழைமை தாராண்மை வாதத்தினதும், சமவுடைமை வாதத்தினதும் சிந்தனை ரீதியிலான மூலமாகும்.

- தாராண்மை வாதம், மதச்சார்பின்மையில் தனியாள் சுதந்திரம், சிந்தனை மற்றும் மனசாட்சியை பின்பற்றும் சுதந்திரம் ஆகிய மூலத்தத்துவங்களை ஈர்த்துக் கொண்டதோடு சமவுடைமைவாதம் சமூக அழுத்தத்தின் நிறுவனமாக மத ஆதிபத்திற்கு எதிராக புரட்சி செய்தலை ஏற்றுக் கொண்டது.

- இதன்படி "திருச்சபையும் அரசையும் ஒன்றிலிருந்து ஒன்று வேறுபடுத்துவது" (Separation of church and the state) ஐரோப்பிய தாராண்மைவாத மற்றும் சமவுடைமை வாத சம்பிரதாயத்தினுள் தோற்றம் பெற்ற பிரதான அம்சமாகும்.

- **தாராண்மைவாத மதச்சார்பின்மையின் அடிப்படைகள்**

I. அரசும் மற்றும் திருச்சபை ஆகியவற்றை நிறுவன ரீதியாக வேறாக்குதல் :

   இதனால், அரசின் தன்மை, அரசின் கொள்கை என்பவற்றைத் தீர்மானிப்பதில் சமயம் தலையிடக் கூடாது என்பதோடு சமய விடயங்களில் அரசு தலையிடக் கூடாது என கருதப்படுகிறது.

II. அரசு சமயத்துடன் அன்யோன்யமாக இருக்கக் கூடாது மற்றும் சமய கற்கைக்கும் பிரசாரத்திற்கும் அரசு தொடர்புபடாதிருத்தல்.

III. அரசு எந்தவொரு சமயத்திற்கும் பக்கச்சார்பாக இருக்கக் கூடாது. சமயம் மனிதர்களின் தனிப்பட்ட விடயமானவதோடு அதை அரசியலுக்கு கொண்டு வர வேண்டியதில்லை.

IV. மதத்தை புறக்கணிக்க வேண்டும் என தாராண்மை மதச்சார்பின்மைவாதம் குறிப்பிடவில்லை. சமய சுதந்திரம் பிரசைகளின் அடிப்படை உரிமைகளில் ஒன்று என்பதோடு சமயத்தின் பெயரால் எந்தவொரு பிரசைக்கும் பாகுபாடு காட்டக்கூடாது என்பதிலேயே இது கவனம் கொள்கின்றது.

- **சமவுடைமைவாத மதச்சார்பின்மை**

  - மாக்சியவாதிகள் சமயம் சமூகத்தை துன்பத்திற்கு உள்ளாக்கும் நிறுவனம் ஒன்றெனவும் உலகம் பற்றிய தவறான விளக்கம் ஒன்றை துன்பத்திற்குள்ளான மக்களுக்கு பெற்றுக் கொடுக்கும் கருத்து தொகுதி ஒன்றெனவும் அறிமுகம் செய்தனர்.

  - சமவுடைமைவாத மதச்சார்பின்மையின் அடிப்படைகள்

  I. சமவுடைமைவாத அரசு முழுமையாக சமயத்திலிருந்து வேறுபடுத்தப்பட்டிக்க வேண்டும். மதமானது அரசின் அனுமதியுடனேயே நிலவ முடியும்.

  II. சமவுடைமைவாத முறையினுள் சமயம்சார், அரசியல்சார் நிறுவனங்களுக்கு இருப்பு கிடையாது.

III. அரசின் தீவிர மேற்பார்வையின் கீழ் சமவுடைமைவாத அரசுக்கு அதனால் அச்சுறுத்தல் இல்லாத வரையில் மட்டுமே மாக்சியவாத முறைமையினுள் சமய நிறுவனங்களுக்கு இடம் கிடைக்கும்.

IV. சமய அடையாளத்துடன் அரசியல் மற்றும் சிவில் சமூக இயக்கங்களை நிறுவுவதற்கு வாய்ப்பு இல்லை.

- **இந்திய மதசார்பின்மைவாதம்**

  - தாராண்மைவாத சிந்தனையின் அடிப்படையில் இந்திய மதசார்பின்மை கட்டியெழுப்பப்பட்டுள்ளது.

  - இந்திய மதசார்பின்மையின் பிரதான பண்புகள் :

    I. இதில் இரண்டு அர்த்தங்கள் உள்ளன.

    (அ). தாராண்மை மதசார்பின்மை வாதத்தின் கோட்பாட்டு ரீதியான அடிப்படை அனைத்து மதங்களையும் பக்கசார்பின்றி (Impartical) பார்ப்பதாகும். இந்தி மொழியில் அது “அறநெறி சார்பின்மை” என குறிப்பிடப்படுகிறது.

    (ஆ). சகல மதங்களையும் சமமாக மதித்தல். அதாவது சகல மதங்களும் சமமானவை என ஏற்றுக் கொள்வதாகும். இது “சர்வ அறநெறிகளினதும் சேர்க்கை” என்ற எண்ணக்கருவினால் வெளிப்படுத்தப்பட்டது.

    I. தனிநபர்களின் சமய அடையாளங்களை கவனத்தில் கொள்ளாது அரசானது சகல பிரசைகளையும் ஒரே சமமாக மதிப்பளித்தல்

    II. பிரசைகளின் உரிமைகளை பெற்றுக் கொள்ளும்போது எந்தவொரு பிரசைக்கும் தனது சமய அடையாளங்கள் தடையாக இருக்க மாட்டாது.

- **மதசார்பின்மையும் அரசியலும்**

  - மதசார்பின்மையின் மூலம் மேற்கொள்ளப்படுவது அரசு மற்றும் சமயங்களுக்கிடையிலான தொடர்பு, அரச கொள்கை மற்றும் பிரசைகளின் உரிமைகளை மதச்சார்பின்றி நிர்ணயிப்பதாகும்.

  - எனினும், அரசியலில் மதம் தொடர்புபடாதிருக்க வேண்டும் என்பது இதன் அர்த்தமல்ல.

  - மதசார்பின்மை காணப்படும் நாடுகளில் மதவாத அரசியல் கட்சிகள் மற்றும் இயக்கங்கள் காணப்படுவதோடு இந்தியா அதற்கு சிறந்த உதாரணமாகும்.

- **மதசார்பின்மையின் தற்கால முக்கியத்துவம்**

  - மதசார்பின்மைவாதம் உலக அரசியலில் முக்கியத்துவம் பெற இரு காரணிகள் செல்வாக்கு செலுத்தியுள்ளன.

  I. சமய அடிப்படைவாதத்தை துணையாகக் கொண்ட மதம்சார் அரசுகள் (Theocratise State) தோன்றுவதற்கான வாய்ப்புகள் காணப்படல்.

II. பன்மைக்கலாசாரவாதத்தினை மையப்படுத்தி சமய அடையாளங்களை உடைய சிறுபான்மை சமூகங்களின் உரிமைகளைப் பாதுகாத்தல்.

## 5.7. பெண்ணிய வாதம்

- அரசியல் கருத்தியலொன்றாக பெண்ணியவாதத்தின் தலையீடு 1970 களில் ஆரம்பமானது.
- கோட்பாட்டு மற்றும் செயற்பாட்டு சமூக கற்கையாக ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் தோற்றம் பெற்ற இந்த கருத்தியல் பின்னர் ஐரோப்பா தவிர்ந்த சமூகங்களிலும் பரவியது.
- பெண்ணிவாத இயக்கத்திலும் சிந்தனையிலும் பிரதான 5 துறைகளை இனங்காணலாம்.
  - தாராண்மை பெண்ணியல் வாதம்
  - சமவுடைமை பெண்ணியல் வாதம்
  - தீவிர (ரெடிகல்) பெண்ணியல் வாதம்
  - பின்நவீன பெண்ணியல் வாதம்
  - பின் காலனித்துவ பெண்ணியல் வாதம்

- தாராண்மை பெண்ணியல் வாதம் :- கல்வி, தொழில் வாய்ப்பு மற்றும் சமமான ஊதியம் என்பவற்றை பெற்றுக் கொள்வதன் மூலம் பெண்களுக்கான அரசியல் மற்றும் சட்ட உரிமைகளை வெற்றி கொள்ளுதல்.
  - தனது உடலியல் தொடர்பான தீர்மானங்களை எடுப்பதற்கு பெண்களுக்கு உரிமை உண்டு
  - சமமான தொழில், சமச் சம்பளம் மற்றும் சமமான உரிமைகள் என்பன தாராண்மை பெண்ணிய வாதத்தின் பிரதான கோசங்களாகும்.
- சமவுடைமை பெண்ணியல் வாதம் :- சமத்துவத்தை பெற்றுக் கொள்ளும் மூலோபாயத்தில் இது தாராண்மை வாதத்திலிருந்து வேறுபடுகிறது.
  - பெண் விடுதலைக்கான போராட்டம் சமவுடைமை வாதத்திற்கான போராட்டத்துடன் ஒன்றிணைக்கப்பட வேண்டும் எனவும், ஏனைய சமூகக் குழுக்கள் தமது உரிமைகளுக்காக செய்கின்ற போராட்டத்துடன் பெண்களின் போராட்டத்தையும் இணைக்க வேண்டும் என்பதிலும் கவனம் செலுத்தியது.
- தீவிர (ரெடிகல்) பெண்ணியவாதம் :- தந்தைவழி தலைமைத்துவத்தை முற்றாக இல்லாதொழித்தல் பெண்விடுதலைக்கு கட்டாயமானது என ஏற்றுக் கொள்கிறது.
  - ஆண் மற்றும் பெண் என்ற வகையில் சமூக அழுத்தும் மற்றும் துன்பத்திற்கு உட்படும் வகையில் சமூகத்தை வேறுபடுத்தியிருப்பது தந்தை தலைமைத்துவத்தினாலாகும்.

- பின் நவீன பெண்ணியவாதம் :-

  - பெண்கள் மற்றும் பெண்களின் துன்பியல்கள் சமமானதல்ல என்பதோடு அவர்கள் துன்பத்தை பல்வேறு விதங்களில் அனுபவிக்கின்றனர். இதனால் பெண்களின் கோரிக்கைகள் ஒரே தன்மையானதாக இருக்கவேண்டியதில்லை. அது பன்மையானது.

  - பல்வேறு சமூக சூழல்களில் பெண்களின் சிரமங்கள் அந்த சூழலுடன் பெண்களின் வகுப்பு வேறுபாடுகள், நிறபேதங்கள், தொழில் போன்ற காரணிகள் சமமாக இல்லாதிருப்பதனால் அந்த வேறுபாடுகள் மற்றும் விசேடத்துவங்களை அடிப்படையாகக் கொண்ட பெண்ணியவாதத்தின் தேவை இதன் மூலம் உணர்த்தப்படுகிறது.

- பின் காலனித்துவ பெண்ணியவாதம் :-

  - இதன்கீழ் காலனித்துவங்களாக இருந்து சுதந்திரம் பெற்றுக் கொண்ட சமூகங்களில் பெண்களின் துன்பியலுக்கு முக்கியத்துவம் வழங்கி பெண்களின் உரிமைகள் என்ற எண்ணக்கரு மீளுருவாக்கப்பட்டுள்ளது.

  - இனபேதத்திற்கும் குடியேற்றவாதத்திற்கும் உட்பட்ட இவ்வாறான சமூகங்களில் உள்ள பெண்களின் அனுபவம் மேற்கத்தேய சமூகங்களில் பெண்களுடைய அனுபவங்களை விட வேறானது என்பதால் அவற்றில் கவனம் செலுத்தி பெண்ணியவாத அரசறிவியலை கட்டியெழுப்ப இவர்கள் முன்மொழிந்தனர்.

**முன்மொழியப்பட்ட கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள்ஷ**

1. தனியாள் கருத்திட்டம் ஒன்றை தயாரித்தல்.

   பல்வேறு அரசியல் கருத்தியல்கள் என்ற தலைப்பினூடாக ஒப்படை ஒன்றை தயாரிக்குக.

   இதன்போது கீழ்வரும் விடயங்கள் தொடர்பில் அவதானம் செலுத்தவும்.

- ❖ கருத்தியலை வரைவிலக்கணம் செய்தல்
- ❖ கருத்தியல் பற்றிய அறிமுகம்
- ❖ அது தொடர்பில் கருத்து தெரிவித்துள்ள முக்கிய சிந்தனையாளர்களும் அவர்களின் கருத்து முன்வைப்புகள்
- ❖ அரசறிவியல் பாடப்பரப்பிற்கு அதனூடாக ஏற்பட்ட தாக்கம்.
- ❖ யாதார்த்த ரீதியான முக்கியத்துவம் / சமகால போக்குகள்

ஆகிய விடயங்கள் உள்ளடங்கும் வகையில் ஆக்கப்பூர்வமான ஒப்படை ஒன்றை முன்வைக்கவும்.

**உசாத்துணைகள்**


01. உயங்கொட, ஜயதேவ, (2011), அனைவரும் அரசர்கள் அனைவரும் குடிமக்கள், அரசு தொடர்பான கோட்பாடும் அதன் பயன்பாடும், கொழும்பு, சமூக விஞ்ஞானிகள் சங்கம்.
02. வர்ணபால, விஸ்வ, (1996), அரசியல் கருத்தியல்கள், உயர் சிந்தனை தொடர்பான விளக்கம், கொழும்பு, கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.
03. விரேகர், சார்ள்ஸ், (2001), அரசறிவியல் சித்தாந்தத்தின் பரவல், கொழும்பு, கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.
04. Bryson, Valorie, (2003), Feminist Political Theory: An Itroduction, Newyork: Palgrave: Macmillan.
05. Graham, Paul and John Hoffman, (2006), Introduction to Political Ideologies, Newyork: Pearson Longman.
06. Heywood, Andrew, (2012), Political Ideologies: An Introduction, Newyork: Palgrave: Macmillan
07. Pettit, Philip, (2002), Republicanism: A Theory of Freedom and Government, Oxford: Oxford University Press.

## 06. முரண்பாடும் முரண்பாடு தீர்த்தலும்

**தேர்ச்சி 06:-** மோதலின் இயல்பை விளங்கிக் கொண்டு மோதல் தீர்வு மற்றும் சாமாதானத்தை கட்டியெழுப்புதல் என்பவற்றின் அவசியத்தை வெளிப்படுத்துவார்.

**(பாடவேளைகள்** - 40)

**தேர்ச்சி மட்டம் :-**

6.1. மோதலும், மோதல் இணக்கப்பாடு தொடர்பான கோட்பாட்டினையும் மற்றும் அதன் நடைமுறை பிரயோகங்களையும் தெளிவுப்படுத்துவார்.

6.2. சமாதானத்தைக் கட்டியெழுப்புதலினதும், அதனை மீள்கட்டமைத்துதலினதும் முக்கியத்துவம் தொடர்பில் விமர்சன ரீதியாக கருத்து தெரிவிப்பார்.

**கற்றற் பேறுகள் :-**

- மோதலை வரைவிலக்கணப்படுத்தி வகைப்படுத்துவார்.
- மோதல் தீர்வு முறைகளை வரைவிலக்கணப்படுத்துவார்.
- மோதலை தீர்ப்பதில் முன்னெச்சரிக்கை வழங்கப்படுவதன் முக்கியத்துவத்தை விளக்குவார்.
- மோதலை தவிர்ப்பதற்கு முன்வருவார்.
- மோதல் முகாமைத்துவத்தில் தானும் ஒரு பங்காளராக செயற்படுவார்.
- மோதல் நிலைமாற்றத்தை விமர்சன ரீதியான நுணுகியாய்வார்.
- மோதல் இணக்கப்பாட்டு ஊடகங்களை விளக்குவார்.
- சமாதானத்தை கட்டியெழுப்புதல் என்பதை அறிமுகப்படுத்துவார்.
- மோதல் இணக்கப்பாடு, சமாதானத்தைக் கட்டியெழுப்புதலும் சமகால உலகத்திற்குப் பொருத்தப்பாடு கொண்டதான வகையில் விளக்குவார்.
- தமது வாழ்க்கையில் அனுபவிக்கின்ற மோதல்களை சாதகமான விளைவுகள் ஏற்படும் வகையில் மாற்றுவதற்கு முயல்வார்.

**அறிமுகம்**

- சமகாலத்தில் முரண்பாடு மற்றும் முரண்பாட்டுத் தீர்வு கற்கை பரந்த பல்துறைசார் கற்கையாக மாறியுள்ளது. அரசறிவியல், சமூகவியல், சட்டம், முகாமைத்துவக் கற்றை மற்றும் சர்வதேச தொடர்புகள் ஆகிய துறைகளில் இது முக்கிய கற்றல் பிரிவாக மாறியுள்ளது. முரண்பாடு மற்றும் முரண்பாட்டுத் தீர்த்தல் தொடர்பான கற்கை அரசறிவியலில் 1980 களின் இறுதிப்பகுதியில் இருந்தே கற்கப்பட தொடங்கியது.
- இந்த பாடத்தில் கீழ்வரும் மூன்று கருத்தியல்கள் தொடர்பிலேயே அவதானம் செலுத்தப்படுகின்றது. அவையாவன,

  i. முரண்பாடு என்பதை வரைவிலக்கணப்படுத்தி விளங்கிக் கொள்ளல்.

ii. முரண்பாட்டுத் தீர்வு என்பதை வரைவிலக்கணப்படுத்தி விளங்கிக் கொள்ளல்.

iii. சமாதானத்தை கட்டியெழுப்பல் மற்றும் மீளமைத்தல் என்பதை வரைவிலக்கணப்படுத்தி விளங்கிக் கொள்ளல்.

## பாட விடயங்களை விளங்கிக் கொள்வதற்கான வழிகாட்டல்

### 6.1. முரண்பாடு வரைவிலக்கணம்

முரண்பாடு என்பது மனிதர்கள், சமூகக் குழுக்கள் அல்லது இரண்டு அரசுகள் அல்லது அதற்கு மேற்பட்டவைகளுக்கிடையில் காணப்படும் விசேடத்துவமான தொடர்பொன்றாகும். பேராசிரியர் கிறிஸ்டோபர் மிச்செலின் முன்வைத்துள்ள கீழ் குறிப்பிடப்பட்டுள்ள வரைவிலக்கணங்கள் மூலம் இவற்றை மேலும் விளங்கிக் கொள்ள முடியும்.

''முரண்பாடு என்பது தமக்கிடையில் ஒன்றுக்கொன்று பொருத்தமில்லாத நோக்கங்களை உடைய அல்லது அவ்வாறு சிந்திக்கும், இரு தரப்புகள் அல்லது நபர்கள் அல்லது சமூகக் குழு அல்லது அதற்கு மேற்பட்ட குழுக்களுக்கிடையில் நிலவும் தொடர்பாகும்''

பேராசிரியர் கிறிஸ்டோபர் மிச்செலின் **சர்வதேச முரண்பாடுகளின் கட்டமைப்பு** (The Structure of International Conflict) (1981) என்ற கட்டுரையின் அர்த்தப்படுத்தலுக்கு ஏற்ப முரண்பாடு என்பது, எதிர்வாதம், போட்டி, பிரச்சினை (பிணக்கு) போன்றவற்றில் இருந்து வேறுபட்டதாகும். அரசியல் மற்றும் சமூகக் கோட்பாடுகளில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளபடி எதிர்வாதம், போட்டி மற்றும் பிணக்கு என்பவற்றை மோதல்வரை நிலைமாற்றம் அடையக்கூடிய நிலைமையாகும். அது வன்முறைக்கும் அதனோடு தொடர்புடைய தரப்புக்களுக்கும் அழிவினை தரக்கூடிய பெறுபேறுகளை பெற்றுக்கொடுக்கும் விளைவினைக் கொண்டிருப்பதனாலேயே முரண்பாடு எதிர்வாதம் மற்றும் பிணக்கில் இருந்து வேறுபடுகின்றது.

போட்டித்தன்மை, எதிர்வாதம் மற்றும் பிரச்சினை (பிணக்கு) ஆகியன மனித தொடர்புகளில் தொடர்ச்சியாக நிலவுவதாகும். அவை தவிர்க்கப்பட முடியாத நபர்களுக்கிடையிலான மற்றும் சமூகக் குழுக்களுக்கிடையிலான தொடர்பாகும். எனினும் முரண்பாட்டு தீர்வு முறையில் கூறப்படுவது, அவை தரப்புகளுக்கு அந்யோன்யமான முறையில் பாதிப்பினை ஏற்படுத்துகின்ற முரண்பாடாக வளரச்சியடைவதனாலேயே தடுக்கப்பட வேண்டும்.

ஆரம்ப மட்டத்தில் நோக்கும்போது நபர்களுக்கிடையிலும் முரண்பாடு தோன்றலாம். அவை மனிதர் ஒவ்வொருவருகிடையிலும் மோதுகின்ற நோக்கங்களை நாடி செல்லும்போதே தோன்றுகின்றது.

உதாரணம் :- ஒரு மாம்பழத்தை முழுமையாக பெற்றுக்கொள்வதற்காக பிள்ளைகள் இருவருக்கிடையில் முரண்பாடு தோன்றலாம். மாம்பழத்தை தனித்து முழுமையாக உரிமைக் கொண்டாடுவது என்பது ஒன்றுக்கொன்று சமப்படுத்த முடியாத நோக்கமொன்றாக (an incompatible goal) இருப்பதனாலாகும்.

மேற்குறிப்பிட்ட உதாரணத்தை சமூகம் மற்றும் தேசிய மட்டத்திற்கும் கொண்டுவரலாம். சமூகக் குழுக்கள், இனக் குழுக்கள், சமூக வர்க்கம், இனங்கள் மற்றும் அரசுகளுக்கிடையில் ஏற்படுகின்ற தொடர்புகளின் போது முரண்பாடு தோன்றுவது அதிகாரம், வளம், மூலதனம், அந்தஸ்து போன்ற நோக்கங்களை அடைந்துக்கொள்ளும்போது ஏற்படுத்திக்கொள்ளும் அவர்களிடையே காணப்படும் சமப்படுத்த முடியாத நோக்கங்கள் மற்றும் அபிலாசைகளினாலாகும்.

முரண்பாட்டின் செயற்பாடுகளை இனங்காண்பதும் இங்கு முக்கியமானதாகும்.

**முரண்பாட்டின் செயற்பாடுகள்**

இது தொடர்பில் இரு பிரதான அணுகுமுறைகள் உள்ளன.

1. முரண்பாட்டின் சாதகமான பக்கம்
2. முரண்பாட்டின் பாதகமான பக்கம்

1904 ஆம் ஆண்டு ஜோர்ஜ் சீமெல் (George Simmel) எனும் சமூகவியலாளர் எழுதிய ''முரண்பாட்டின் சமூகவியல்'' (Sociology of Conflict) என்ற நூலின்படி முரண்பாட்டின் சாதகமான செயற்பாடுகள் பலவாகும். அவை,

- ❖ சமூகம் வளர்ச்சியடையாமல் ஒரே இடத்தில் இருப்பதை தவிர்க்கிறது.
- ❖ சமூகப் பிரச்சினைகள் தொடர்பில் கவனம் செலுத்தி அவற்றைத் தீர்ப்பதற்கான தேவையை வலியுறுத்தல்.
- ❖ நபர்களும் சமூகமும் மாற்றமடைய பங்களித்தல்.
- ❖ சமூகக் குழுக்களின் ஒற்றுமைத்தன்மையினை வலுப்படுத்துகிறது.

1956 இல் **சமூக முரண்பாட்டின் செயற்பாடுகள்** (The Function of Social Conflict) என்ற கட்டுரையில் லூவிஸ் கோசர் (Lewis Koser) என்ற சமூகவியலாளர் முரண்பாட்டின் சாதகமான விளைவுகளாக பினவருவனவற்றைக் குறிப்பிட்டுள்ளார்.

- ❖ முரண்பாடு சிறப்பாக ஒழுங்கமையாத சமூகக் குழுக்களுக்கிடையில் காணப்படும் சஞ்சலநிலையினை (மன அழுத்தத்தினை) (Tension) தீர்த்துக்கொள்ள கைகொடுப்பதால் அவை சமூகக் குழுக்களுக்கிடையில் ஒற்றுமைத்தன்மையினை உறுதிப்படுத்த துணை நிற்கும்.
- ❖ மாக்சிய கருத்தின்படி, சமூக வரலாற்றின் முன்னோக்கிய பயணத்தின் உந்து சக்தியாக காணப்படுவது வர்க்க முரண்பாடேயாகும். (Class Conflict)
- ❖ ஒன்றுக்கொன்று நேரெதிரான சமூக வர்க்கங்களுக்கிடையே வரலாறு முழுவதும் ஏற்பட்டுள்ள எதிர்வாதங்கள் முரண்பாடுகள் காரணமாக சமூகமானது வரலாற்று நிலைமாற்றத்திற்கு உள்ளாகியுள்ளது.

**2. முரண்பாட்டின் பாதகமான பார்வை (எதிர்மறை) விளைவுகள்**

முரண்பாட்டினால் உருவாக்கப்படும் பாதகமான விளைவுகளாக வன்முறை, மனிதக் கொலை, மனிதப்படுகொலை, பொருளாதார சமூக அழிவுகள் காணப்படுகின்றன.

உதாரணம்

- முதலாம், இரண்டாம் உலகமகா யுத்தங்கள்
- நாடுகளுக்கிடையிலான யுத்தங்கள் மற்றும் ஆயுத முரண்பாடுகள்
- உள்ளக சிவில் யுத்தங்கள்
- வன்முறைசார் இன முரண்பாடுகள்
- பாரிய வல்லரசுகளுக்கிடையிலான பாரிய அழிவினை ஏற்படுத்தக்கூடிய அணுவாயுத மோதல்வரை செல்வதற்கு அண்மைக்காலம் வரை காணப்பட்ட வாய்ப்புகள்.
- உலகளவில் பரவி வருகின்ற பயங்கரவாதம் மற்றும் பயங்கரவாதத்திற்கு எதிரான யுத்தங்கள்.

20 ஆம் நூற்றாண்டில் மனிதகுலம் அனுபவித்த முரண்பாடு தொடர்பான எதிர்மறை விளைவுகளின் அனுபவமே முரண்பாட்டுத் தீர்வு மற்றும் இணக்கப்பாடு தொடர்பில் அரசியல் மற்றும் கற்கைக்கான தூண்டுதல்களை வழங்கின.

## 6.1. முரண்பாட்டினை வகைப்படுத்தல்

முரண்பாடுகளை மூன்று வகையாக வகைப்படுத்தலாம்.

i. எளிய வகைப்படுத்தல்

ii. செயற்பாட்டுவாத வகைப்படுத்தல்

iii. அரசியல் வகைப்படுத்தல்

### 1. எளிய வகைப்படுத்தல்

இது நான்கு வகைப்படும்.

i. ஆளக முரண்பாடு

ii. ஆளிடை முரண்பாடு

iii. குழுவினுள்ளான முரண்பாடு

iv. குழுக்களுக்கிடையிலான முரண்பாடு

#### i. ஆளக முரண்பாடு (Intrapersonal Conflict)

ஒவ்வொரு நபரினதும் உள்ளத்தினுள் ஏற்படுகின்ற முரண்பாடுகள் இதில் அடங்கும். வாழ்க்கையின் பல்வேறு சந்தர்ப்பங்களில் பல்வேறு நோக்கங்கள் மற்றும் அபிலாசைகளை அடிப்படையாகக் கொண்டு உள்ளத்தில் முரண்பாடுகள் ஏற்படல் மனிதனின் இயற்கை அனுபவமாகும்.

#### ii. ஆளிடை முரண்பாடு (Inter Personal Conflict)

நபர்களுக்கிடையில் ஏற்படும் ஆளிடை செயற்பாடுகளின்போது இரு நபர்கள் அல்லது அதற்கு மேற்பட்ட நபர்களுக்கிடையில் ஏற்படும் போட்டி, வேற்றுமை மற்றும் எதிர்க்கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு உருவாகும் முரண்பாடுகளாகும்.

#### iii. குழுவினுள்ளான முரண்பாடு (Intra group conflict)

சமூக குழுக்களுக்கிடையில் பல்வேறு நோக்கங்கள் மற்றும் அபிலாசைகளை அடிப்படையாகக் கொண்டு உருவாகும் முரண்பாடுகள் இவ்வகைக்குள் அடங்கும்.

#### iv. குழுக்களுக்கிடையிலான முரண்பாடு (Inter Group conflict)

இரண்டு குழுக்கள் அல்லது அதற்கு மேற்பட்ட குழுக்களுக்கிடையில் ஏற்படும் முரண்பாடுகள் இந்த வகைக்குள் அடங்கும்.

**2. செயற்பாட்டுவாத வகைப்படுத்தல் (Funtionalist Clasification)**

முரண்பாடுகளினால் சமூகத்தில் செய்யப்படுகின்ற செயற்பாடுகளினதும் சாதக பாதக விளைவுகளின் இயல்பபே இதன் அடிப்படையாகும். இந்த அடிப்படையின் கீழ் அமெரிக்க சமூக உளவியலாளரான மோர்டின் டோயிஷ் (Morton Deutsch) முரண்பாட்டை இரண்டாக வகைப்படுத்தினார்.

அ. நேர்கணிய முரண்பாடு (நியாயப்படுத்தக்கூடிய) (Constructive Conflict)

ஆ. எதிர்மறை முரண்பாடு (Destructive Conflict)

(அ) **நேர்கணிய (நியாய) முரண்பாடு**

நியாய செயற்பாட்டினை செய்யும் மற்றும் பெறுபேறுகள் கிடைக்கும் முரண்பாடுகள் இதில் அடங்கும். முரண்பாட்டில் பங்கெடுக்கும் தரப்பினர் தங்களுக்கு இதன்மூலம் நேர்கணிய பெறுபேறு கிடைத்தது என்றே சிந்திக்கின்றனர். இதனால் இவர்கள் முரண்பாட்டின் விளைவுகள் மீது திருப்தி அடைகின்றனர். அது முரண்பாட்டின் நேர்கணிய முடிவொன்றினை ஏற்படுத்தும். இது சாதகமான நிறைவினைப் பெற்றுத்தரும். இது அழிவுகளற்ற ஆக்கப்பூர்வமானதாகும். அவ்வாறான முரண்பாடொன்றில் காணப்படும் ஆக்கப்பூர்வமான விடயமாவது முரண்பாட்டுக்கு பங்களித்த காரணங்களை தீர்த்துக்கொள்வதற்கான ஒற்றுமையாகவும் ஆக்கப்பூர்வமாகவும் செயற்படுவதற்கு தரப்புகளுக்கு வாய்ப்பு, திறமை மற்றும் அர்ப்பணிப்பு என்பன கிடைக்கின்றமையாகும்.

(ஆ) **எதிர்மறை மற்றும் அழிவுத்தரக்கூடிய முரண்பாடுகள்**

எதிர்மறை முரண்பாடுகளில் தரப்புக்கள் தங்களுக்கு பாதகமான பெறுபேறுகள் கிடைத்துள்ளது என சிந்திப்பர். இதன்போது இவர்கள் முரண்பாடு தொடர்பில் திருப்தியின்மையில் இருப்பர். இதன் விளைவாக இடம்பெறுவது நேர்கணிய முரண்பாட்டில் போன்று முரண்பாடு முடிவுக்குவராமையாகும். இது மேலும் பரந்து விரிவடையும். பேராசிரியர் டொயிஸின் கருத்துப்படி இவ்வாறான எதிர்மறை முரண்பாடு மேலும் விருத்தியடையும்போது நடைபெறுவது முரண்பாடு மற்றும் அதற்கு காரணமான அடிப்படை காரணிகளில் தனிமைப்பட்டு, விருத்தியடையும் புதிய சக்தி மற்றும் இயக்கத்தன்மை (Dynamic) ஒன்றை கைப்பற்றிக்கொள்வதாகும்.

உதாரணம் :- இலங்கையின் இன முரண்பாடு

**3. அரசியல் வகைப்படுத்தல்**

உலகில் காணப்படும் பெரும்பாலான முரண்பாடுகள் அரசியல் முரண்பாடுகளாகும் (Political Conflict). அவை தனிப்பட்ட முரண்பாடுகள் அல்ல. பாரிய மக்கள் தொகை, அரசுகளுடன் தொடர்புடையது. அவை பெரும்பாலும் வன்முறையாக மாறியுள்ளது. அவை பெறும்பாலும் நீண்டகாலமாக நிலைத்திருக்கும், தீர்ப்பதற்கு கடினமானவைகளாகும். இவ்வாறான முரண்பாடுகளின் தன்மையை மையப்படுத்தி பேராசிரியர் பீட்டர் ஹொலன்ஸ்டீன் (Peter Wallenstein) மூன்று வகைப்படுத்தல்களை செய்துள்ளார்.

அ. அரசுகளுக்கிடையிலான முரண்பாடுகள்

ஆ. உள்ளக முரண்பாடுகள் (அரசுக்குள்)

இ. அரசு நிர்மாண முரண்பாடுகள்

**அ. அரசுகளுக்கிடையிலான முரண்பாடுகள் (Inter State Conflict)**

சர்வதேச அரசியலில் அரசுகளுக்கிடையிலான முரண்பாடுகள் பல்வேறு இயல்புகள் மற்றும் காரணங்களை அடிப்படையாகக் கொண்டு தோற்றம் பெறுகின்றன.

உதாரணமாக:- அரசுகளுக்கிடையில் எல்லை அல்லது வளங்களைப் பகிர்ந்துக் கொள்ளல் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்ட முரண்பாடுகள். இவை சிலவேளைகளில் நாடுகளுக்கிடையிலான யுத்தமாகவும் மாறும். அயல்நாடுகளைப் போலவே உலக வல்லரசுகளும் இவ்வாறான நாடுகளுக்கிடையிலான முரண்பாடுகளில் ஈடுபடல் 20 ஆம் நூற்றாண்டில் இடம்பெற்றுள்ளன. பனிப்போர் (Cold War) காலத்தில் இடம்பெற்றது போன்று உலக வல்லரசுகள் இவ்வாறான யுத்தங்களில் மறைமுகமாக தெடர்புபட முடியும்.

### ஆ. உள்நாட்டு (அரசுக்குள்ளான) முரண்பாடுகள் (Intrastate Conflict)

அரசியல் அதிகாரமே உள்ளாட்டு முரண்பாடுகளுக்கு பெரும்பாலும் காரணமாக அமைகின்றது. உதாரணம் நீண்டகால ஆயுத முரண்பாடுகள் அதாவது சிவில் யுத்தம்.

பெரும்பாலும் இவ்வாறான முரண்பாடுகளின்போது அரசுகள் இவை நாட்டின் சட்டம், ஒழுங்கு, அரசின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் ஏற்படுகின்றது என கருதியே செயற்படுகின்றது. உள்ளக முரண்பாடு அதிகரிப்பதால் அவை சிவில் யுத்தங்களாக மாற்றமடைதல் என்பது உலகத்தில் கடந்த சில தசாப்தங்களாக கண்டுக்கொள்ளக்கூடிய போக்குகாகும். அரச அதிகாரம் தொடர்பில் நீண்டு செல்லும் சிவில் யுத்தமாக மாறுவதே இதன்போது நடைபெறுகின்றது.

உள்ளக முரண்பாடுகள் தோன்றுவதற்கான காரணிகள்

(i) கட்டமைப்புசார் காரணிகள்

(ii) பொருளாதார, சமூகக் காரணிகள்

(iii) அரசியல் காரணிகள்

(iv) கலாசார காரணிகள்

### (i) கட்டமைப்புசார் காரணிகள்

இனத்துவ மற்றும் சமூக ரீதியாக பன்மைத்துவம் கொண்ட சமூகங்களில் அரசியல் ஒருமைத்தன்மையை ஏற்படுத்திக் கொண்டுசெல்லதற்கான அரசொன்று தோற்றம் பெறாமையே இவ்வாறான சமூகங்களில் முரண்பாடு ஏற்படுவதற்கான பிரதான கட்டமைப்புசார் காரணி ஒன்றாக இருக்கின்றது. சில இனக்குழுக்களின் துன்ப துயரங்களுக்கு சாதகமாக பிரதிபலிப்புகளை வழங்குவதற்கு அரசாங்கம் தவறும் சந்தர்ப்பத்தில் அல்லது மறுக்கும்போது அரசு பலவீனமடைகின்றது. அரச எதிர்ப்பு உணர்வுகள் இக்குழுக்களிடையே வேரூன்றிவிடுகின்றது. அரசுகள் தமது உரிமைகள், கோரிக்கைகளுக்கு சாதகமான பதிலினை வழங்காது என நினைக்கின்ற அவ்வாறான இனக்குழுக்கள் மற்றும் அரசு ஒருவருக்கொருவர் தூரமாகுதல் துன்பதுயரங்கள் எதிர்ப்புக்களாகவும், எதிர்ப்புக்கள் முரண்பாடுகளாக மாறுவதற்கு வழிவகுக்கும்.

### (II). பொருளாதார, சமூகக் காரணிகள்

பாரிய சமூக, பொருளாதார அசமத்துவம் நிலவுதல், சமூக ரீதியாக பாரபட்சம் காட்டப்படல் மற்றும் சமூக ரீதியாக ஏற்படுகின்ற ஓரங்கட்டல்கள் என்பவற்றை அனுபவிக்கும் சமூகக் குழுக்களுக்கிடையே துன்பங்கள் விருத்தியடைதல் பொதுவான நிகழ்வாகும். எனினும் அரசாங்கம் இவ்வாறான துன்ப துயரங்களை தொடர்ந்து புறக்கணிக்கும்போது சமூகத்தில் திருப்தியின்மை உருவாகி அது நடைமுறையில் உள்ள முறைமைக்கு எதிரான விரோதமாக மாறும். விசேடமாக பொருளாதார விருத்தி செயற்பாடுகளால் ஏற்படுகின்ற பொருளாதார இடைவெளி அதிகரிக்கும்போது அரசியல் பிரச்சினைகள் ஏற்படுவது பெரும்பாலான நாடுகளின் சாதாரண அனுபவமாக மாறியுள்ளது. தொழிற்சங்கம், மாணவர் மற்றும்

இளைஞர் இயக்கங்கள் அரசாங்கத்துடன் நேரடி முரண்பாடுகளுக்கு வருவது இந்த பின்புலத்திலேயே ஆகும். நாட்டின் பிரதான பொருளாதார, சமூக அபிவிருத்தி செயற்பாட்டில் சிறுபான்மை இனக்குழுக்களுக்கு வரப்பிரசாதங்கள் கிடைக்காதபோது அவர்களின் துன்ப துயரங்கள் இன முரண்பாடாக மாற்றமடைகின்றது. விரைவான பொருளாதார நிலைமாற்றம் நடைபெறும்போது சமூகத்தில் ஏற்படும் விரைவான கைத்தொழில்மயமும் நகரமயமாக்கம் என்பவற்றால் பெரும்பாலான சமூகக் குழுக்களுக்கிடையே ஏற்படக்கூடிய பாதுகாப்பற்ற உணர்வும், சமூக மனத்தாக்கத்திற்கும், அரசியல் தீவிரத்தன்மைக்கும் வழிவகுத்துள்ளதாக முரண்பாடு தொடர்பான கற்றல்களில் கூறப்படுகின்றது.

**(III). அரசியல் காரணிகள்**

உள்ளக முரண்பாடுகள் ஏற்படுவதற்கான பிரதான அரசியல் காரணிகள் சில முரண்பாட்டு கல்வியில் இனங்காணப்பட்டுள்ளது. இதில் அவதானம் செலுத்தும் நான்கு விடயங்கள் உள்ளன.

- சில சமூகக் குழுக்களுக்கு அசமத்துவம் மற்றும் பாரபட்சம் காட்டும் அரசியல் நிறுவனங்கள் காணப்படல்.
- சகல இனத்துவ, கலாசார சமூகக் குழுக்களையும் உள்ளடக்கிக்கொள்ளப்படாத இனவாத கருத்தியல்கள் காணப்படல்.
- சமூகத்தின் இனத்துவ மற்றும் சமூகக் குழுக்களுக்கிடையில் காணப்படுகின்ற பாரிய அரசியல் போட்டி மற்றும் எதிர்ப்புகள் காணப்படல்.
- பொருளாதார, சமூக மற்றும் அரசியல் நெருக்கடி நிலைகளில் முரண்பாடு தீவிரமடையும் வகையில் அவற்றைப் பயன்படுத்தும் உயர்குழாம் அரசியல் காணப்படல்.

**(IV). கலாசார மற்றும் கருத்தியல் காரணிகள்**

உலகின் தேசிய அரசுகளில் மிக சாதாரணமாக காணப்படுகின்ற இன முரண்பாட்டுக்கு வழி சமைத்துள்ள பிரதான காரணி காலாசாரமாகும். பல்லின சமூகங்களின் சிறுபான்மைக் குழுக்களின் மொழி, மதம், கல்வி மற்றும் ஏனைய கலாசார உரிமைகளுக்கும் அடையாளங்களுக்கும் ஏற்புடைமை கிடைக்காமையும், அவை பாரபட்சங்களுக்கு உட்படுத்தப்படுவதினாலும் இந்த மக்களிடையே ஏற்படுகின்ற துன்ப துயரங்கள், அமைதியின்மை மற்றும் திருப்தியின்மைகள் அரசியல்மயப்படுத்தப்படல் என்பன இன முரண்பாடு தோற்றம் பெறுவதற்கான ஆரம்பமாகும். இனத்துவத்தை மையப்படுத்திய அடையாள கருத்தியல்கள் இன முரண்பாடுகளை விரிவடையச் செய்வதற்கு ஒத்துழைப்பு வழங்கும். பெரும்பான்மையை போன்றே சிறுபான்மை குழுக்களிடையே ஏற்படுகின்ற இவ்வாறான தேசியவாத கருத்தியல்களின் சாதாரண பண்பாக காணப்படுவது, இவை அந்யோன்யமான முறையில் நேரெதிர் கருத்துக்களை கொண்டிருப்பதாகும். அதாவது தங்களைத் தவிர ஏனைய இனக்குழுக்களுக்கு அழைப்பு விடுக்காத மற்றும் இந்த சமூகக் குழுக்கள் தமது இருப்புக்கு (வாழ்தன்மைக்கு) அச்சுறுத்தலாக இருக்கும் எதிரிகளாக கருதும் கருத்தியலாகும். இவ்வாறான தேசியவாத கருத்துக்கள் பல்லின சமூகங்களில் தேசிய ஒன்றிணைப்புக்கான தடையாகும்.

**அரச உருவாக்க முரண்பாடுகள் (State Formation Conflict)**

பீட்டர் ஹொலன்ஸ்டினின் அர்த்தப்படுத்தலுக்கு ஏற்ப, அரச உருவாக்க முரண்பாடுகள் என்பது அரசொன்றினுள் வாழும் மக்களில் குறிப்பிடத்தக்க வீதத்தினர் புறந்தள்ளப்பட்டுள்ளனர் என்ற பிரதான விடயத்தினைக் கொண்டு அரசாங்கம் மற்றும் தாம் புறந்தள்ளப்பட்டுள்ள ஏதேனும் பூமி பிரதேசத்திற்கான உரிமையினை கோரும் எதிர் குழுக்களுக்கிடையிலான முரண்பாடாகும்.

இந்த வரைவிலக்கிணக்கத்திற்கு ஏற்ப தற்போதைய உலகத்தின் பெரும்பாலான பல்லின அரசுகளில் காணப்படும் பிரதேச அடையாளம், அதிகாரத்தைப் பகிர்ந்துக்கொள்வது போலவே பிரிந்து செல்வதையும் நோக்காகக் கொண்டு செயற்படும் இன வர்க்க அரசியல் இயக்கங்கள் மற்றும் அந்நாட்டு அரசாங்கங்களுக்கிடையில் காணப்படும் முரண்பாடுகள் அரச நிர்மாண முரண்பாடுகளாகும்.

பெரும்பாலான முரண்பாடுகளில் தனிப்பட்ட நபர்கள் தொடங்கி நாடுகளுக்கிடையிலான முரண்பாடுகள் வரை ஒருவகையான வாழ்க்கை சக்கரம் காணப்படுகின்றது என்பது முரண்பாடு மற்றும் முரண்பாட்டுத் தீர்வு தொடர்பில் அண்மைக்கால ஆய்வுகளில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள முக்கிய விடயமாகும்.

முரண்பாட்டு கல்வியின் முன்னோடிகளில் ஒருவரான அமெரிக்காவின் லூவிஸ் கிறிஸ்பேர்க் (Luvis Krisberg) இந்த கருத்தினை வெளியிட்ட ஆய்வாளராவார்.

பேராசிரியர் கிரிஸ்பேக் இன் கருத்திற்கு ஏற்ப முரண்பாடு நிலையானது அல்ல. இவை ஆரம்பித்து காணாமல் போகும். ஆரம்பத்தில் அமைதியற்ற முரண்பாடுகள் பின்னர் பல்வேறு கட்டங்களைத் தாண்டி செல்லும்போது மிகவும் அமைதியடையும். இவ்வாறு பல்வேறு கட்டங்களை தாண்டி பயணிக்கும் முரண்பாட்டின் பெறுபேற்றால் புதியதோர் முரண்பாடு தோற்றம் பெறுவதற்கு வாய்ப்பு உண்டு. கிறிஸ்பேக் முரண்பாடு ஒன்று பயணிக்கும் பாதை தொடர்பான கருத்து ''முரண்பாட்டு வாழ்க்கை சக்கரம்'' என்ற கருத்திற்கு அடிப்படையாக அமைந்துள்ளது என்பதை காணக்கூடியதாக உள்ளது.
இந்த படிநிலைகள் கீழ்குறிப்பிடப்பட்டுள்ளவாறாகும்.

- **முரண்பாட்டிற்கான காரணம் / நிபந்தனைகள் காணப்படல்**

  இது முரண்பாட்டின் ஆரம்ப நிலையாகும். முரண்பாடொன்று ஏற்படுவதற்கு போதுமான நிபந்தனைகள் காணப்படலும் பெரும்பாலும் அவை கண்டுப்பிடிக்காமல் இருப்பதுமே இதன் பிரதான குணாம்சமாகும். அறிந்திருந்தாலும் அவை முரண்பாடு ஒன்றுக்கான காரணமாக ஏற்றுக்கொள்ளாமை. அவற்றை ஏற்றுக்கொண்டு ஆரம்பத்திலேயே தீர்வுகளைப் பெற்றுக்கொடுத்தல் முரண்பாடொன்று ஏற்படுவதை தவிர்ப்பதாகும்.

- **முரண்பாடு மேலெலல் (Emergence)**

  முதல் கட்டத்தில் காணப்பட்ட துன்பங்கள் மற்றும் அதற்கு கிடைக்கும் எதிர்மறை விளைவுகளை அடிப்படையாகக் கொண்டு சமப்படுத்த முடியாத அபிலாசைகள் மற்றும் நோக்கங்கள் உருவாக்கப்படல் இக்கட்டத்தில் நடைபெறும்.


- **முரண்பாடு தீவிரநிலை (உக்கிரநிலை) அடைதல் (Escalation)**

  முரண்பாட்டின் பரிமானம் மற்றும் தீவிரத்தன்மை ஆகிய இரண்டும் பண்புரீதியாக புதியதொரு படிநிலைக்கு மாற்றமடைவது என்பதே இதன் கருத்தாகும். முரண்பாடு வன்முறைப்போலவே யுத்த படிநிலைக்கு வருதல், முரண்பாட்டினால் ஏற்படுகின்ற மரணங்கள், சொத்து சேதத்தின் அளவுகள் உயர்வடைதல் முரண்பாடு தீவரமடையும்போது ஏற்படும். முரண்பாட்டின் தரப்பினர்கள் ஒருதலைப்பட்சமாக யுத்த ரீதியான தீர்வில் ஆழமான அக்கறை செலுத்தலும் இந்நிலையில் ஏற்படும். பொதுவாக நாடுகளின் உள்ளக முரண்பாடுகளின் போது இந்த படிநிலை ஒப்பீட்டளவில் நீண்ட காலாமாகும். அத்தோடு இக்கட்டத்தில் முரண்பாட்டை அரசியல் கலந்துரையாடல் வழிமுறையில் தீர்த்துக்கொள்வதற்கான வாய்ப்பும் மிகவும் குறைவாகும்.

- **முரண்பாட்டின் தீவிரநிலை அற்றுப்போதல் (De- Escalation)**

முரண்பாடொன்று தீவிர படிநிலைக்கு இட்டுச்செல்லப்படினும் அத்தீவிரத்தன்மை குறைவடையும் போக்கும் முரண்பாட்டில் உண்டு. அதன் தீவிரத்தன்மையை குறைத்துக்கொள்ளும் சமிஞ்சைகள் இரு தரப்புக்குமிடையில் பரிமாற்றிக் கொண்டதன் பின்னர் முரண்பாடொன்றின் தீவிரத்தன்மை குறைவடைதல் ஆரம்பிக்கும். இவ்வாறானதொரு நிலையினை அடைதல் பல்வேறு விடயங்களின் பெறுபேறுகளின் விளைவாக இருக்கலாம். தரப்புகளுக்கு முரண்பாட்டினை தொடர்ந்தும் கொண்டுசெல்வதற்கான வளம் மற்றும் திறன்கள் பலவீனமடைதல், சர்வதேச அழுத்தங்கள், மோதலை முன்னெடுப்பதற்கு தேவையான மக்களின் ஒத்துழைப்பில் ஏற்படும் வீழ்ச்சி, தரப்புக்கள் முரண்பாட்டினாலேயே கலைப்படைதல் மற்றும் அதனால் ஒருதலைப்பட்சமாக தீர்வுகளை தேடும் திடசங்கற்பம் கீழ்நிலையடைதல் போன்றன பெரும்பாலும் கண்டுக்கொள்ளக்கூடிய விடயங்களாகும்.

முரண்பாட்டு வாழ்க்கை சக்கரம் (Conflict Life Cycle)




வில்லியம் ஏ. சார்ட்மன் (William A Zartman) முன்வைத்துள்ள அந்யோன்ய ரீதியிலான **காயப்படுத்தும் தேக்கநிலை** (Mutually Hurting Stalemate) என்ற எண்ணக்கரு, முரண்பாடொன்று தீவிரத்தன்மை உயர்வடைவதிலிருந்து தீவிரத்தன்மை குறைவடையும் வரை முரண்பாட்டின் பரிமாற்றத்தை தெளிவுப்படுத்தும் கோட்பாட்டு சூத்திரமாகும். முரண்பாடொன்றின் தீவிரநிலை நீண்டகாலத்திற்கு நீடிக்கும்போது, யுத்த ரீதியாக ஒருதலைப்பட்சமாக தீர்வினைப் பெற்றுக்கொள்வதற்கான திறன் இல்லாது போகும் என்பது தரப்புகளுக்கு விளங்கும் என்பதேயே சார்ட்மன் இதன்மூலம் காட்டினார். எத்தரப்புக்கும் ஒருதலைப்பட்சமாக வெற்றியை பெற்றுக்கொள்ள முடியாத, முன் பின் செல்ல முடியாத சிறைப்படுத்தலுக்கு முரண்பாட்டுத் தரப்புகள் ஆளாகியிருக்கும். இது தீமைகளை பெற்றுத்தரும், இருதரப்புகளுக்கும் பாரிய நட்டங்களை பெற்றுத்தருவதாகும். இச்சந்தர்ப்பத்திலேயே தரப்புகள் ஒருதலைப்பட்சமான தீர்வுகளையன்றி, இருத்தரப்புகளும் இணைந்து தேட வேண்டிய இருதரப்பு கலந்துரையாடல் முறையிலான தீர்வுகளை தேட தயாராகும். இது முரண்பாட்டின் தீவிரத்தன்மையினை குறைப்பதற்கு தேவையான அதிமுக்கிய நிபந்தனையாக சார்ட்மன் குறிப்பிடுகின்றார். முரண்பாட்டை கலந்துரையாடல்

மூலம் தீர்த்துக்கொள்வதற்கு மூன்றாம் தரப்பொன்று மத்தியஸ்தர்களாக பங்குக்கொள்வதற்கான வாய்ப்பு இந்நிலையிலேயே கிடைக்கும்.

- **முரண்பாட்டினை முடிவுக்கு கொண்டுவரல் (Termination)**

நாடொன்றினுள் காணப்படும் முரண்பாடு சிவில் யுத்தமாக மாறி, அதனாலேயே நீண்டுசென்றுள்ள (Protracted) முரண்பாடொன்றை முடிவுக்கு கொண்டுவருதல் நீண்டகால செயற்பாட்டின் விளைவாகும். இவ்வாறான சில முரண்பாடுகள் ஒரு தரப்புக்கு யுத்த வெற்றி கிடைப்பதோடு முடிவடைய முடியும். இதன்போது பொதுவாக தோல்வியுற்ற தரப்பினர் அவர்கள் கிளர்ச்சியாளர்களாயின் அழிவடைவதோடு, அவர்களின் அரசியல் கோரிக்கைகளை நிறைவேற்றுவதா இல்லையா என்பதை தீர்மானிக்கும் பூரண உரிமை, அதாவது எதிர்மறை அதிகாரம், வெற்றிப்பெற்ற தரப்பான அரசாங்கத்திற்கு கிடைப்பதே நடைபெறும்.

நீண்டு காணப்படும் சிவில் யுத்த முரண்பாட்டினை முடிவுக்கு கொண்டுவரும் மற்றுமொரு வழிமுறை இருதரப்பும் ஏற்றுக்கொள்ளும் கலந்துரையாடல் மூலமான தீர்வுக்கு வருவதாகும். இது பொதுவாக "சமதான உடன்படிக்கை" (Peace Agreement) மூலம் நடைபெறும். மூன்றாம் தரப்பொன்றின் மத்தியஸ்தம் (Mediation) இதில் முக்கியமானதொரு பங்கினை வகிக்கும். முரண்பாட்டோடு தொடர்புடைய தரப்புக்கள் ஆரம்பத்தில் வெற்றிக்கொள்ள எண்ணிய ஒருதலைப்பட்ச (Unilateral) மற்றும் (உயர்ந்தபட்ச) உச்சவாத (Maximalist) இலக்குகளை கைவிட்டு, இரத்தரப்பும் உடன்படக்கூடிய இலக்குகளை தேர்வு செய்வதே சாமாதான உடன்படிக்கையில் பெரும்பாலும் நடைபெறுகின்றது. இதன்படி கலந்துரையாடல் மூலமான சமாதான உடன்படிக்கையின் மூலம் முரண்பாடு முடிவுக்குவரல், முரண்பாட்டுத்தரப்புக்கள் மற்றும் கோரிக்கைகளுக்கிடையில் நடைபெறும் அந்யோன்ய விட்டுக்கொடுப்பு (Mutual Accommodation) மற்றும் சமரச சமாதானம் (Compromise) என்பனவாகும்.

❖ **முரண்பாடுகளின் போது யாது செய்ய வேண்டும்?**

முரண்பாட்டினை தீர்த்துக்கொள்ளும் கோணத்தில் பார்க்கும்போது, முரண்பாடுகளை சாதகமான மற்றும் ஆக்கப்பூர்வமான தீர்வொன்றை பெற்றுக்கொள்ளும் நோக்கத்தோடே அதில் பிரவேசிக்க வேண்டும். முரண்பாட்டு தீர்வு தொடர்பான கற்றை இதற்காக முன்வைத்துள்ள யோசனை யாதெனில் இதற்கான சிறந்த பிரவேசம் முரண்பாடுகளுக்கு காரணமாக அமைந்த காரணிகளை (Underlying Causes) அடையாளங்கண்டு அதற்கு முக்கியத்துவம் கொடுப்பதாகும்.

சைமன் பிஸர் (Simon Fisher) இன் குழு 2000 ஆம் ஆண்டில் வெளியிட்ட ***முரண்பாட்டோடு பணிபுரிதல்: செயற்பாடுகளுக்கான திறன்கள் மற்றும் உபாயமுறைகள்*** (Working With Conflict; Skills and Strateries for Action) என்ற நூலில் முரண்பாடு தொடர்பில் செயற்படும்போது பயன்படும் பல்வேறு அணுகுமுறைகளை விபரித்துள்ளனர். இந்த அணுகுமுறைகள் முரண்பாட்டு தீர்வு கற்கையில் பல்வேறு ஆய்வாளர்கள் மற்றும் செயற்பாட்டாளர்களால் முன்வைக்கப்பட்டவைகளாகும். இவை முரண்பாட்டு தீர்வு பயிற்றுவிப்பாளர்களும் செயற்பாட்டாளர்களும் பரந்தளவில் பயன்படுத்தப்பட்டவைகளாகும்.

**(அ). சமூக உறவுசார் அணுகுமுறை (Community Relations Approach)**

முரண்பாடானது சமூகங்களுக்கிடையில் தொடர்புகள் அற்றுப்போவதால் ஏற்படுகின்றது என்பதே இவ்வணுகுமுறையின் பிரதான கருத்தாகும். சமூகக்குழுக்களுக்கிடையில் ஏற்படும் நம்பிக்கையீனம், விரோதம் மற்றும் **அந்நியமாதல்** என்பன இதன் பண்புகளாகும். இதனால் முரண்பாட்டுத் தீர்வின் நோக்கமாக அமைய வேண்டியது,

- முரண்பாட்டுடன் தொடர்புடைய தரப்புகளுக்கிடையில் தொடர்பாடல் மற்றும் புரிந்துணர்வை விருத்திச்செய்தல்

- இனத்துவ, கலாசார, சமூக போன்ற பல்வகைமையினை ஏற்றுக்கொள்வதற்கும் பொறுத்துக்கொள்வதற்கும் சமூகங்களுக்கிடையில் காணப்படும் திறன்களை விருத்தி செய்தல்.

**(ஆ) மனிதத் தேவைகள் அணுகுமுறை (Human Needs Approach)**

மனிதனின் அடிப்படை பௌதீக, மானுட மற்றும் சமூகத் தேவைகள் பூர்த்தி செய்யப்படாமையினாலேயே முரண்பாடு ஏற்படுகின்றது என முரண்பாடு தொடர்பான மனிதத் தேவைகள் கோட்பாடு குறிப்பிடுகின்றது. செலுத்தப்படுவது பாதுகாப்பு, அடையாளம், ஏற்றுக்கொள்ளல், குழுவின் கௌரவம், அரசியல் பங்குப்பற்றல் மற்றும் சுதந்திரம் போன்றவைகளே இவ்வாறான முரண்பாடுகளின் போது கவனம் செலுத்தப்படும் விடயங்களாகும். மனிதத் தேவைகளோடு தொடர்புடைய இவ்வாறான முரண்பாடுகளை தீர்க்கும்போது கீழ் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்களுக்கு ஏற்ப செயற்படுவது பயனுடையதாகும்.

- தம்மால் செய்யப்படாத மானுட தேவைகளை அறிந்துக்கொண்டு அவற்றை ஈடுசெய்து கொள்வதற்குள்ள மாற்று வழிமுறைகளை தேடுவதற்கு முரண்பாட்டுத் தரப்புகளை தூண்டுதல்

- அனைத்து தரப்பினருக்கும் அடிப்படை மனிதத் தேவைகளை ஈடுசெய்துக்கொள்ளக்கூடிய வகையிலான உடன்பாடுகளுக்கு வருவதற்கு தரப்புகளுக்கு உதவியளித்தல்.

**(இ) அடையாளத் தேவைகள் அணுகுமுறை (Identity Needs Approach)**

முரண்பாடுகள் சமூகக் குழுக்களுக்கிடையிலான அடையாளம் அச்சுறுத்தலுக்குள்ளாகியுள்ளது என்ற உணர்வினால் தோற்றம் பெறுகின்றது எனும் கருத்திலேயே அடையாளக் கோட்பாடு அவதானம் செலுத்துகின்றது. முன்னர் ஏற்பட்ட தோல்விகள், துன்பங்கள் மற்றும் பின்னடைவுகள் இதன் காரணிகளாக உள்ளன. இவ்வாறான முரண்பாடுகளை தீர்க்கும்போது கீழ்வருவனவற்றை மேற்கொள்ளல் வேண்டும்.

- தாம் ஒவ்வொருவருக்கும் இருக்கும் அச்சுறுத்தல் மற்றும் பயங்கள் என்னவென்பதை கண்டுபிடிப்பதற்கு தரப்புகளுக்கு உதவிகளை செய்து, அவர்களுக்கிடையில் தன்னுணர்வாதல் (பச்சாத்பாதம்) (Empathy) மற்றும் சமரசத்தை (Reconciliation) கட்டியெழுப்ப உதவிப் புரிதல்.

- அனைத்து தரப்புகளினதும் அடிப்படை அடையாளங்கள், தேவைகளை ஏற்றுக்கொள்ளும் கூட்டு உடன்பாட்டினை ஏற்படுத்திக்கொள்ளல்.

**(ஈ) கலாசார தொடர்பாடல் அணுகுமுறை (Cultural Communication Approach)**

ஒவ்வொருவருக்கும் கலாசார தொடர்பாடல் மாதிரிகளுக்கிடையில் காணப்படும் **வேற்றுமைகளே** உள்ளக கலாசார தொடர்பாடல் கோட்பாட்டில் அவதானம் செலுத்தப்படுகின்றது. அதாவது **தெளிவின்மையினால்** ஏற்படுகின்றது என்றே கருதப்படுகின்றது. முரண்பாட்டு தீர்வின் நோக்கங்களாக இந்த அணுகுமுறை பின்வருவனவற்றை முன்மொழிகின்றது.

- முரண்பாட்டோடு தொடர்புடைய தரப்புக்களின் கலாசாரம் தொடர்பாக அவர்களுக்கிடையில் காணப்படும் புரிந்துணர்வை அதிகரித்தல்.

- அந்த குழுக்களுக்கிடையில் ஒவ்வொருவருர் பற்றியும் காணப்படும் பாதக, எதிர்மறை சிந்தனைகளை (Negative Stereotypes) நீக்கிக் கொள்ளல்.

- உள்ளக கலாசார தொடர்பாடலை வலுப்படுத்தல்.

**(உ) முரண்பாட்டு நிலைமாற்ற அணுகுமுறை (Conflict Transformation Approach)**

முரண்பாடு அசமத்துவம் மற்றும் பாரபட்சம் காணப்படும் சமூக, பொருளாதார, அரசியல் மற்றும் கலாசார கட்டமைப்புகளுக்கான பிரதியீடு எனும் வகையிலேயே முரண்பாட்டு நிலைமாற்றக் கோட்பாடு முன்வைக்கும் அடிப்படை கருத்தாகும். இவ்வாறான முரண்பாடுகளில் முரண்பாட்டு பரிநிலையாக்கம் அவசியமான ஒன்றாகும். இதற்காக பின்வருவனவற்றை மேற்கொள்ளவேண்டும்.

- அசமத்துவம் மற்றும் பாரபட்சம் என்பவற்றுக்கு அடிப்படையாக அமையும் காரணங்களான கட்டமைப்புகள் மற்றும் கொள்கைகளை மாற்றியமைத்தல்.
- முரண்பாட்டோடு தொடர்புடைய தரப்புகளுக்கிடையில் காணப்படும் புரிந்துணர்வை சாதகமான முறையில் பரிமாற்றத்திற்கு உள்ளாக்குதல்.
- மக்களை வலுவூட்டல் மற்றும் சமாதானம், நியாயத்தன்மை, மன்னிப்பு வழங்கல், ஏற்றுக்கொள்ளலும் சமரசப்படுத்தலையும் (Reconcialation) மேம்படுத்தல் செயலொழுங்கு மற்றும் பயன்பாடுகளை ஆரம்பித்தல்.

**(ஊ) பிரச்சினை தீர்த்தல் அணுகுமுறை (Problem Solving Approach)**

தரப்பினருக்கிடையே (i) ஒன்றுக்கொன்று பொருந்தாத மற்றும் வேறுப்பட்ட நோக்கங்கள் காரணமாகவும், (ii) முரண்பாடு தொடர்பில் "பூச்சிய விருத்தி" (Zero – Sum) சமன்பாட்டினை (தாங்கள் மட்டுமே சரி, தங்களுக்கு மட்டுமே எல்லா வெற்றிகளும் கிடைக்கவேண்டும், எதிர்த்தரப்பு முற்றுமுழுதாக தோல்வியடைய வேண்டும், அழிவடைய வேண்டும் போன்ற நம்பிக்கைகள்) நிலையாக வைத்திருப்பதன் காரணங்களே இவ்வணுகுமுறையின் கோட்பாட்டு அடிப்படையாகும். இதனால் ஏற்படும் முரண்பாடுகளை தீர்ப்பதே (Problem Solving) இதன் நோக்கமாகும். இதற்காக பின்வரும் செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும்.

- முரண்பாட்டுக் காரணிகளையும் முரண்பாடு மற்றும் தமது தனித்துவத்தை வேறுபடுத்திக் கொண்டு, தமது கடினமான நிலையில் இருக்காமல், அடிப்படை காரணங்களை அடிப்படையாகக் கொண்டு முரண்பாட்டு தீர்வுக்கான இணக்கப்பாடு (Negotiation) செயற்பாட்டில் ஈடுபட தரப்புக்களுக்கு உதவி செய்ய வேண்டும்.
- ஒரு தரப்பு மட்டுமின்றி எல்லா தரப்புகளும் வெற்றிக்கொள்ளும் உடன்பாட்டினை ஏற்படுத்திக் கொள்வதற்கு தரப்புகளுக்கு வசதியளித்தல்.

## 6.2. முரண்பாட்டு தீர்வு செயன்முறை

- முரண்பாட்டு தீர்வு என்பது பொதுவாக நீண்டதொரு செயன்முறையாகும்.
- தனிப்பட்ட ரீதியிலும், சமூக, அரசியல் முரண்பாடுகளிலும் அவதானிக்கத்தக்க விடயம் யாதெனில் முரண்பாட்டை முழுமையாக தீர்த்துக்கொள்ளல் கடினமாயினும், முரண்பாட்டினை சாதகமான வகையில் அணுகும் வழிமுறைகள் காணப்படுகின்றது என்பதாகும். இதன்படி,
    - முரண்பாடு தொடர்பில் முன்னெச்சரிக்கை செய்தல்
    - முரண்பாட்டை தவிர்த்தல்
    - முரண்பாட்டு முகாமைத்துவம்
    - முரண்பாட்டு நிலைமாற்றம்

- முரண்பாட்டிற்குப் பின்னரான சமாதானத்தைக் கட்டியெழுப்பல்
- முரண்பாட்டு தீர்வு

- **முரண்பாடு தொடர்பில் முன்னெச்சரிக்கை செய்தல் (Early Warning)**
    - இது 1980 – 1990 காலப் பகுதிகளில் வளர்ச்சியடைந்த எண்ணக்கருவாகும்.
    - இதன் அடிப்படை கருத்து, சமூகத்தில் ஏற்பட வாய்ப்புள்ள முரண்பாடுகள் தொடர்பாக முன்னரே இனங்கண்டு அவை ஏற்படுவதை தடுப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்தலாகும்.
    - அவ்வாறு செய்யும்போது முரண்பாடு ஏற்படக்கூடிய இடம், சமூகக் குழுக்கள் போன்றவற்றை இனங்கண்டு அதன்மூலம் முரண்பாடுகளுக்கு காரணமாய் அமையக்கூடிய காரணிகள் மீது கவனம் செலுத்தி தீர்ப்பதற்கான யோசனைகளை உருவாக்க முடியும்.

- **முரண்பாட்டை தவிர்த்தல் (Conflict Prevention)**
    - இது மேற்குறிப்பிட்ட ''முன்னெச்சரிக்கை செய்தல்'' முரண்பாட்டு தீர்வு முறையின் ஆரம்பப் படிநிலையாகும்.
    - முரண்பாடு ஏற்படுவதற்கான காரணங்கள், வாய்ப்புகள் மற்றும் இடங்களை இனங்கண்டதன் பின்னர் அவற்றை முரண்பாடாக மாறாமல் தடுப்பதே இதன் நோக்கமாகும்.
    - முரண்பாட்டு தவிர்ப்பு முறைகள் இரண்டு உள்ளன.

**I. முரண்பாட்டை சுமாராக தவிர்த்தல் (Light Prevention)**

- இதன்கீழ் முரண்பாடொன்று வன்முறையாக மாறுவதை தடுப்பதற்கான நடவடிக்கை எடுத்தலே நடைபெறுகின்றது.
- இராஜதந்திர தலையீடுகள், கலந்துரையாடல்கள், மாநாடுகள், சமாதான பேச்சுக்கள், முரண்பாட்டு தீர்வு செயலமர்வுகள் போன்ற ஊடகங்களை இதற்காக பயன்படுத்த முடியும்.

**II. ஆழமாக தவிர்த்தல் (Deep Prevention)**

- இதன்முலம் முரண்பாட்டிற்கு அடிப்படையாக அமைந்த அடிப்படை காரணிகளை கண்டறிந்து, அவற்றுக்கு தீர்வுகளைப் பெற்றுக்கொடுத்து முரண்பாடு ஏற்படக்கூடிய வாய்ப்புகளை தவிர்ப்பதாகும்.
- பொருளாதார, அரசியல் சீரமைப்புகள், அபிவிருத்தி வழிமுறைகள், வருவாய்கள் மீண்டும் பகிர்ந்து செல்லும் வழிமுறைகள், நலன்புரி கொள்கைகள், அரசியல் நிறுவனங்களை உருவாக்குதல் போன்றன இதற்காக பயன்படுத்தக்கூடிய வழிமுறைகளாகும்.

- **முரண்பாட்டு முகாமைத்துவம் (Conflict Management)**
    - முரண்பாட்டு முகாமைத்துவம் என்பதற்கு இரு விளக்கங்கள் உள்ளன.

I. முரண்பாட்டை முழுமையாக தீர்ப்பது கடினமான, நீண்ட காலம் எடுக்கக்கூடியதாக உள்ளபோது முரண்பாட்டின் வன்முறை மற்றும் அழிவுத்தன்மையான விளைவுகளை கட்டுப்படுத்தி, அந்த பரவுகை மற்றும் தீவிரத்தன்மையை கட்டுப்படுத்தல் முரண்பாட்டு முகாமைத்துவமாகும். இது முரண்பாட்டிற்கான பிரதான மூலக்காரணிகளுக்கு தீர்வுகளை தேட முயற்சிப்பதில்லை.

இவ்வணுகுமுறை, முரண்பாடுகளை சாதகமற்ற விளைவுகளை ஏற்படுத்தும் ஒன்றாகவே பார்க்கின்றது.

II. இரண்டாவது அணுகுமுறை, முரண்பாட்டை சாதகமற்ற விளைவுகளை பெற்றுக்கொடுக்கும் ஒன்றாக பார்க்காமல், சமூகத்தில் ஒன்றுக்கொன்று மாறுபட்ட மனோநிலை மற்றும் நோக்கங்களுக்கிடையிலான மோதல் என்றே விளக்குகின்றது. இதனால் முரண்பாடுகளை ஜனநாயக மற்றும் சமாதானமான சட்டகத்தினுள் கலந்துரையாடல், கலந்துரையாடல் முறையின் மூலம் நடைபெறுகின்ற செயற்பாடாக மாற்றுதல் இங்கு இடம்பெற வேண்டும்.

இம்முறைகள் இரண்டினதும் நோக்கம் முரண்பாடொன்றை பிரச்சினைக்குரிய தன்மைக்கு மாற்றுவதை தவிர்ப்பதாகும்.

- **முரண்பாட்டு நிலைமாற்றம் (Conflict Transformation)**

  - இவ்வணுகுமுறையினால் முரண்பாடொன்றை சாதகமான முறையில் தீர்த்துக்கொள்ளல், இதுவரை சமாதான உடன்படிக்கை அல்லது ஒரு தரப்பு மட்டும் வெற்றி பெறுவதல்லாமல், பரிநிலைமாற்ற செயன்முறையினுள்ளேயே நடைபெறும் செயற்பாடாகும். அதாவது முரண்பாட்டினாலேயே முரண்பாட்டின் தன்மை, நோக்கம், அபிலாசை என்பனவும் நிலைமாற்றம் அடையும்.
  - பீட்டர் ெ□ாலன்ஸ்டீன் (1991) முரண்பாட்டு நிலைமாற்றம் என்பது வரலாற்று செயன்முறையில் கிடைக்கும் கற்றல் அனுபவத்தினால் கிடைக்கும் பெறுபேறு என்றே குறிப்பிடுகின்றார். இதன்படி, சாத்தியமான முறையில் நடைபெறும் முரண்பாட்டு நிலைமைாற்றம் என்பது, யுத்த அபாயம் மீண்டும் ஏற்படாவண்ணம் முரண்பாட்டு தரப்புக்கள், முரண்பாட்டிற்கு ஏதுவாக அமையும் பிரச்சினைகள் மற்றும் முரண்பாட்டினால் எதிர்ப்பார்க்கப்பட்ட நோக்கங்களும் நிலைமாறுவதாகும். இதன்படி முரண்பாட்டை சாதகமான முறையில் தீர்த்துக்கொள்வதற்கான புதிய வாய்ப்பு திறந்துவிடப்படும்.
  - முரண்பாடு நிலைமாற்றம் பல வகைகளில் ஏற்பட முடியும். அவற்றில் சில கீழ்வருமாறு,

    - தரப்புகள் நிலைமாறுதல் (Actor Transformation)
    - முரண்பாட்டு தரப்புகளில் பங்குதாரர்கள், அரசாங்கம், தலைவர்கள் மாற்றம் அடைதல் மற்றும் அவர்கள் முரண்பாடு தொடர்பில் காட்டும் மனோநிலை மாற்றமடைவதால் முரண்பாட்டிற்கு ஏற்படும் தாக்கம்.
    - பிரச்சினைகள் மற்றும் நிகழ்ச்சி நிரலின் நிலைமாற்றம் (Issue and Agenda Transfomation)
    - இதன்போது முரண்பாட்டிற்கு மையமாக அமையும் பிரச்சினைகள் மற்றும் நிகழ்ச்சி நிரல்கள் மாற்றம் அடைதல்.
    - உச்சவாத நோக்கங்களுக்குப் பதிலாக, மத்தியமய சமாதானத்திற்கு வாய்ப்பளிக்கும் நோக்கம் உருவாதல், ஒருதலைபட்ச வெற்றிக்குப் பதிலாக இணை சமாதானத்திற்கான வாய்ப்பு உருவாதல் என்பன இதன் மூலம் ஏற்படுகின்றது.
    - முரண்பாட்டின் விதிமுறை நிலைமாற்றம் (Rule Transformation)
    - முரண்பாட்டு தரப்புகளின் நடத்தைகளில் மாற்றம் ஏற்படலே இதன் மூலம் கருதப்படுகின்றது.

- கட்டமைப்பு நிலைமாற்றம் (Structural Transformation)

    - முரண்பாட்டின் ஒட்டுமொத்த கட்டமைப்பு, பிரச்சினைகள், நோக்கங்கள், நடத்தை, தரப்புகள் போன்ற அனைத்தும் நிலைமாற்றம் அடைதல்.

- **முரண்பாட்டிற்கு பின்னரான சமாதானத்தைக் கட்டியெழுப்புதல் (Post Conflict - Peace Building)**

    - சமாதான உடன்படிக்கையை ஒன்றை கையொப்பம் இடல் அல்லது யுத்தத்தை முடிவுறுத்தல் அல்லது முரண்பாட்டு தீர்வுக்கு தேவையான முன் நிபந்தனை மட்டும் என்பதே இதன் மூலம் புலப்படும் கருத்தாக உள்ளது. முரண்பாடு மீண்டும் ஏற்படா வண்ணம் முரண்பாட்டு காரணிகளுக்கு சாதகமான வகையில் அவதானம் செலுத்தி, பொருளாதார – அரசியல் போன்றவற்றில் மீள்கட்டமைப்பை ஏற்படுத்துதல் இதன் பின்னரான சாவாலாக உள்ளது.

    - முரண்பாட்டின்போது அழிவடைந்த பிரதேசங்கள் மற்றும் சமூகத்தை மீளக்கட்டியெழுப்புதல், புனர்வாழ்வளித்தல், மீள் அபிவிருத்தி, மக்களுக்கு சலுகைகளை வழங்குதல், நீதி மற்றும் நியாயத்தை பெற்றுக்கொடுத்தல், மக்களுக்கும் பிரசைகளுக்குமிடையே புரிந்துணர்வை கட்டியெழுப்பல் போன்றன முரண்பாட்டுக்கு பின்னரான சமாதானத்தை கட்டியெழுப்புதல் செயற்பாடுகளில் அடங்கும்.

- **முரண்பாட்டு தீர்வு (Conflict Resolution)**

    - முரண்பாட்டு தீர்வு என்பது முரண்பாடு மீண்டும் ஏற்படா வண்ணம் அதன் அடிப்படை காரணிகளை போலவே முரண்பாடு ஏற்பட்டபோது தோற்றமடைந்த துன்ப துயரங்களிலும் அவதானம் செலுத்தி செய்யப்படும் சமாதானத்தை கட்டியெழுப்பும் செயற்பாட்டினால் அடையப்பட வேண்டிய நோக்காகும்.

### 6.3. முரண்பாட்டு தீர்வு ஊடகங்கள்

முரண்பாட்டு தீர்வு செயன்முறைகளில் பயன்படுத்தப்படும் அடிப்படை ஊடகங்கள் 4 காணப்படுகின்றன.

1. இணக்கப்படுத்தல்
2. மத்தியஸ்தம் செய்தல்
3. சமாதான உடன்படிக்கை
4. சமாதானத்தைக் கட்டியெழுப்பல்

- **இணக்கப்படுத்தல் (Negotiation)**

    - Getting to say ‘‘yes’’ என்ற இணக்கப்படுத்தல் தொடர்பான பிரசித்திப் பெற்ற கைநூலினை எழுதிய றொஜர் பிசர் (Roger Fisher) மற்றும் வில்லியம் யூரி (William Ury) என்போரின் அர்த்தப்படுத்தலுக்கு ஏற்ப, இணக்கப்படுத்தல் என்பது ‘‘நாங்கள் மற்றவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ள வேண்டியதை பெற்றுக்கொள்வதற்காக பயன்படுத்தும் ஊடகமாகும். உங்களுக்கும் மற்றையத் தரப்புக்கும் இடையே பங்கிட்டுக்கொள்ளக்கூடிய பொது அபிலாசைகள் போலவே எதிர் அபிலாசைகள் காணப்படும்போது இரு தரப்புக்குமிடையே உடன்பாடொன்றை ஏற்படுத்திக்கொள்ளும் நோக்கில் செய்யப்படும் தொடர்பாடல் பரிமாற்றமே இணக்கப்படுத்தல் என்பதாகும்’’

- “இணக்கப்படுத்தல்” என்பது முரண்பாட்டில் ஈடுபட்டுள்ள தரப்புக்கள் தமது முரண்பாடுகளைத் தீர்த்துக்கொள்வதற்கான கலந்துரையாடல் செயற்பாட்டு முறைமை ஒன்றாகும்.

- “இணக்கப்படுத்தல்” என்பது ஒன்றோடொன்று மோதுபவர்களை பொதுவானதொரு நிலைபாட்டிற்கு கொண்டுவருவதற்காக முரண்பாட்டோடு தொடர்புடைய தரப்புக்களுக்கிடையில் ஏற்படும் செயன்முறையாகும்.

- இணக்கப்படுத்தல் நடைபெறும் விதங்கள் மூன்று, முரண்பாட்டு கற்கையில் காட்டப்பட்டுள்ளது.

(அ) முரண்பாட்டை தீர்த்துக்கொள்ளும் இணக்கப்படுத்தல் (Problem Solve Negotiation)

இதன்போது முரண்பாட்டு தரப்புகளுக்கு பொதுவில் ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்வொன்றினை தேடுவதே நடைபெறும். இது இருதரப்புக்கும் மகிழ்ச்சியை பெற்றுக்கொடுக்கக்கூடிய, மத்தியமய சமாதான தீர்வுவொன்றினை இணைந்து தேடிக்கொள்ளும் செயன்முறையாகும். இதன்மூலம் முரண்பாட்டோடு தொடர்புடைய காரணிகளை தீர்த்துக்கொள்வதற்கு உடன்படுதே இடம்பெறுகின்றது.

(ஆ) தன்னாதிக்க இணக்கப்படுத்தல் (Contending Negotiation)

இதன்போது முரண்பாட்டுடன் தொடர்புடைய ஒரு தரப்பு மற்றையத் தரப்பின் மீது தமது நிலைபாட்டை திணிப்பதற்காக கலந்துரையாடலில் ஈடுபடுவதாகும். தமது நிலைப்பாட்டில் மாற்றமடையாமல் தீர்க்கமான நிலைபாட்டில் இருந்துகொண்டு எதிர்த்தரப்பின் நிலைப்பாட்டை தமக்கு சாதகமான முறையில் மாற்றிக்கொள்ள அழுத்தம் கொடுப்பதே இங்கு நடைபெறும்.

(இ) விட்டுக்கொடுத்தல் (நெகிழ்ச்சியான) இணக்கப்படுத்தல் (Yielding Negotiation)

இம்முறையினில் முரண்பாட்டோடு தொடர்புடைய தரப்புக்கள் தீர்வொன்றினைப் பெற்றுக்கொள்வதற்காக தமது நோக்கம் மற்றும் எதிர்ப்பார்ப்புகள் தொடர்பில் வலைந்து கொடுத்தலே நடைபெறும்.

- **மத்தியஸ்தம் செய்தல் (Mediation)**

மத்தியஸ்தம் என்பது முரண்பாட்டோடு தொடர்புடைய தரப்புக்களுக்கிடையில் விவாதத்திற்கு துணைபுரிந்துள்ள பிரச்சினைகள் தொடர்பில் இருதரப்பாலும் ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்வினை (Settlement) ஏற்படுத்திற்கொள்ளும் நோக்கில் மூன்றாம் தரப்பொன்று பொறுப்பேற்றுள்ள இடைத்தரகு செயற்பாடாகும். மத்தியஸ்தம் ஒரு சந்தர்ப்பத்தில் இடம்பெறும் செயற்பாடல்லாமல் தொடர் செயற்பாடாகும். இது பல படிநிலைகளைக் கொண்டுள்ளது.

I. ஆரம்பத்தில் முரண்பாட்டு தரப்புகளுக்கிடையில் தகவல்களை பரிமாறுபவராக செயற்படல்.

II. அவர்களுக்கிடையில் சாதகமான கருத்து பரிமாற்றத்திற்கு தேவையான தொடர்பாடல் ஊடகமாதலும் அதற்கு உதவி புரிதலும்.

III. முரண்பாடுகளுக்கு மாற்று தீர்வுகளை பற்றி சிந்திப்பதற்கு உதவி புரிதல்.

IV. முரண்பாட்டுத் தரப்புக்களை கலந்துரையாடல் மேசைக்கு கொண்டுவருதல் மற்றும் கலந்துரையாடல்களில் தலைமைப் பங்கினை மேற்கொள்ளல்.

V. மத்தியஸ்த்தின்போது ஏற்படுகின்ற பிரச்சினைக்குரிய விடயங்களை தீர்த்துக்கொள்வதற்கு தரப்புக்களுக்கு உதவி புரிதல்.

VI. மத்தியஸ்தில் ஈடுபடும் தரப்புகளின் வெளியீட்டாளராக செயற்படல்.

VII. சமாதான உடன்படிக்கையினை தயாரிப்பதில் உதவி புரிதல்.

VIII. சமாதான உடன்படிக்கையினை நடைமுறைப்படுத்தல், தரப்புகள் கேட்கின்ற உதவிகளைப் பெற்றுக்கொடுத்தல்.

### 6.3.3 சமாதான உடன்படிக்கை

- இருப்பது முரண்பாட்டு தரப்புக்கள் சமாதான உடன்படிக்கை அல்லது தீர்வு உடன்படிக்கை (Peace Agreement, Settlement Agreement) ஒன்றை கைச்சாத்திப்படலே அரசின் உள்ளக ரீதியாகவோ அல்லது நாடுகளுக்கு இடையிலோ முரண்பாடொன்று காணப்படும்போது இணக்கப்படுத்தல் மற்றும் மத்தியஸ்தம் செய்தல் செயற்பாடுகளின் எதிர்ப்பார்க்கப்படும் நோக்கமாகும். சமாதான உடன்படிக்கை என்ற சொல் (Peace Accord) இதற்காக பயன்படுத்தப்படும்.
- மூன்றாம் தரப்பொன்றின் மத்தியஸ்தம் காணப்படும்போது, இந்த மூன்றாம் தரப்பின் பங்குப்பற்றல் மற்றும் ஒத்துழைப்பின்படியே சமாதான உடன்பாட்டிற்கு முரண்பாட்டு தரப்புக்கள் கைச்சாத்திடும். உடன்படிக்கையை தயாரிப்பதற்கும் மூன்றாம் தரப்பு பங்குப்பற்றும். மத்தியஸ்தம் இல்லாத சந்தர்ப்பங்களில் தரப்புக்களின் இரண்டினதும் நிபுணர்கள் உடன்படிக்கையை தாயாரிப்பர்.
- முரண்பாடொன்று ஒருதலைப்பட்சமாக முடிவுக்குவரும்போது சமாதான உடன்படிக்கைகள் கைச்சாத்திடுவதில்லை. அவ்வாறான சந்தர்ப்பங்களில் பெரும்பாலும் தோல்வியடைந்த தரப்பினை கீழ்நிலைப்படுத்தும் உடன்படிக்கையே செய்யப்படும். அது சமாதான உடன்படிக்கை ஒன்றல்ல.

- **சமாதான உடன்படிக்கையொன்றின் பண்புகள்**

i. முரண்பாட்டு தரப்புக்கள் இரண்டும் முரண்பாட்டை இடைநிறுத்துவதற்கு அல்லது முடிவுக்கு கொண்டுவர இணங்குதல்.

ii. தனியாகவும், கூட்டாகவும் நடைமுறைப்படுத்த உடன்படுகின்ற உறுதிமொழிகளை சமாதான உடன்படிக்கையின் நிபந்தனைகளாக மாற்றுதல்.

iii. முரண்பாடு சிவில் யுத்தமொன்றாயின், யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவரல், நிராயுதபாணியாதல், போராட்டக்காரர்களை புனர்வாழ்வளித்தல், யுத்தத்தின்போது சரணடைந்த பொது மக்களை மீளக்குடியமர்த்தல், மனித உரிமை மீறல்களுக்கு தீர்வுகளைத் தேடல் போன்ற விடயங்களுக்கு கூட்டாக இணங்குதல்.

iv. போராட்ட தரப்பு பிரதான அரசியல் செயன்முறைக்குள் உள்வாங்கிக்கொள்ளல் மற்றும் அந்த தரப்புக்களின் அரசியல் கோரிக்கைகளுக்கான பதிலாக அரசியல் மறுசீரமைப்புக்கு இணங்குதல்.

v. உடன்பாட்டின் நிபந்தனைகளை சரியான முறையில் நடைமுறைப்படுத்த சபதமெடுத்தல் மற்றும் அதற்கான கண்காணிப்பு விதிமுறைகளுக்கு இணங்குதல்.

- **சமாதானத்தைக் கட்டியெழுப்பல்**

சமாதான உடன்படிக்கைக்கு தரப்புக்கள் வருதல், சமாதானத்தை கட்டியெழுப்பும் நீண்ட செயன்முறையின் ஆரம்பம் மட்டுமே. விசேடமாக வன்முறை மற்றும் நீண்டுசென்றுள்ள சிவில் யுத்தம் காணப்பட்ட சமூகத்தில் சமாதானத்தைக் கட்டியெழுப்புவதும் நீண்டகால மற்றும் பரிநிலைமாற்ற செயன்முறையாகும்.

சமாதானத்தைக் கட்டியெழுப்பல் செயன்முறையில் பிரதான சவால்கள் இரண்டு உள்ளன.

i. சமாதான உடன்படிக்கையில் ஏற்றுக்கொண்ட நிபந்தனைகளை சரியான முறையிலும் உறுதியளித்த முறையிலும் நடைமுறைப்படுத்தல்.

ii. உடன்படிக்கை முறையாக செயற்படாதபோது ஏற்படக்கூடிய முரண்பாட்டிற்கு மீண்டும் திரும்புவதை நிருவகித்தல்

## 6.4. சமாதானத்தைக் கட்டியெழுப்புதல் (Peace Building)

**சமாதானத்தை கட்டியெழுப்புதலும், வரைவிலக்கணமும் அதன் அணுகுமுறையும்**

முரண்பாடு மற்றும் சமாதானக் கற்கைகளில் சமாதானம் என்பதற்கு இருவேறுப்பட்ட அர்த்தப்படுத்தல்களை வழங்கப்பட்டுள்ளது. பேராசிரியர் ஜோகான் கல்டுங் (Johan Galtung) 1964 அறிமுகப்படுத்திய இருவகையான முறைகள் இவைதான்.

i. **எதிர்மறை சமாதானம் (Negative Peace)**

வன்முறை மற்றும் யுத்தமற்ற நிலையில் உருவாகும் சமாதானம்.

ii. **நேர்கணிய சமாதானம் (Positive Peace)**

- இது வன்முறை மற்றும் யுத்தமற்ற நிலையில் உருவாகும் சமாதானத்தை விட பரந்தது. மக்களுக்கிடையில் அந்யோன்ய புரிந்துணர்வு பரவலடைதல், சமாதான கற்கை, சர்வதேச ஒத்துழைப்புகள், பிணக்குகளை தீர்த்துக்கொள்ளல், சாத்தியமான முறையில் முரண்பாட்டை முகாமைசெய்தல், சமூக அநீதிகள் மற்றும் அசமத்துவங்களை இல்லாது செய்து சமூகத்தின் கட்டமைப்புசார் வன்முறைகள் ஏற்படுவதற்கான வாய்ப்புகளை இல்லாது செய்தல் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டு கட்டியெழுப்பப்படும் சமாதானமாகும்.

- இதற்கு மேலாக 1970 களில் தோற்றம் பெற்ற நிலையான சமாதானம் / நிலைத்திருக்கும் சமாதானம் (Sustainable Peace) என்ற புதிய எண்ணக்கருவின் முன்னோடியும் பேராசிரியர் கல்டுங்கே ஆவார். தமது வாய்ப்புகள் தேய்ந்துசெல்லா வண்ணம் தாங்களே போசித்துக்கொண்டு முன்னோக்கி செல்லக்கூடியதும் நிலைத்து இருக்கும் சமாதானம்'' என்பதே ''நிலையான சமாதானம்'' என்ற பதத்தின் பயன்பாட்டு அர்த்தமாகும்.

- ஐக்கிய நாடுகளின் பொதுச் செயலாளராக இருந்த பிரதோஸ் பிரதோஸ் கல்லி (Boutros Boutros Ghali) 1992 இல் முன்வைத்த ''சமாதானத்திற்காக நிகழ்ச்சி நிரல்'' (An Agenda for Peace) என்ற ஆவணத்தில் ''சமாதானத்தை கட்டியெழுப்புதல்'' என்பதை பின்வருமாறு வரைவிலக்கணப்படுத்தியுள்ளார்.

- ''சமாதானத்தை கட்டியெழுப்புதவதற்கு, நாடொன்று மீண்டுமொருமுறை முரண்பாட்டை நோக்கிச் செல்லும் நிலையினை குறைக்கும் இலக்கோடு, முரண்பாட்டு முகாமைத்துவத்திற்காக தேசிய மட்டத்தில் காணப்படும் திறமைகளை அனைத்து மட்டங்களிலும் வலுப்படுத்துவதும், நிலைபேண் சமாதானம் மற்றும் நிலைபேண் அபிவிருத்திக்காக அடித்தளமிடுவதையும் நோக்காகக் கொண்ட பல்வேறு நடைமுறைகளைக் உள்ளடக்கிய ஒன்றாகும். சமாதானத்தை கட்டியெழுப்பல் உபாயமுறையினை சிறப்பான முறையில் **ஒழுங்கமைந்த** மற்றும் நாட்டின் விசேட தேவைகளுக்கு பொருந்தங்கூடியதாக அமைய வேண்டும். இது அந்நாட்டு தேசிய பொருத்தப்பாடுடைய அடிப்படையில் இருத்தல் வேண்டும்''

- பேராசிரியர் ஜோன் போல் டெல்ராக் (John Paul Lederach) நீண்டகாலம் வன்முறையுடனான முரண்பாடு காணப்பட்ட சமூகத்தில் நிலைபேண் சமாதானத்தை கட்டியெழுப்புவதாயின், சமூகத்தின்

கீழ்நிலை மட்டத்தில், அதாவது அடிமட்ட மக்களின் மட்டத்தில் சமாதானத்தை கட்டியெழுப்பும் செயற்பாடு நடைபெற வேண்டும் என்பதே ''சமாதானத்தை கட்டியெழுப்புதல்'' எண்ணக்கருவின் மூலம் வெளிப்படுவதாக குறிப்பிடுகின்றார். பிரசைகளுக்கும், சிவில் சமூக இயக்கங்களுக்கும், அரசசார்பற்ற நிறுவனங்களுக்கும் சமாதானத்தை கட்டியெழுப்புவதற்காக உள்ள சாத்தியப்பாட்டினை பேராசிரியர் லெடராக் அவதானம் செலுத்தினார். சமாதானத்தை கட்டியெழுப்புவதின் அடிப்படை மக்களிடையே ஏற்படும் ''அந்யோன்ய நம்பிக்கை'' மட்டுமே என்பதே இதற்கான காரணமாகும்.

### 6.4.2. மீள்கட்டமைத்தல் (Reconcilition)

சமாதானத்தைக் கட்டியெழுப்பல் நிகழ்ச்சி நிரலின் பிரதான சந்தர்ப்பமாக ''மீள்கட்டமைத்தல்'' என்ற செயன்முறை கருதப்படுகின்றது. புரிந்துணர்வை ஏற்படுத்தல் என்ற பதமும் இதற்காக பயன்படுத்த முடியும். விசேடமாக நீண்டகால வன்முறையுடனான முரண்பாடு காணப்பட்ட சமூகங்களில் நேர்கணிய சமாதானத்தை கட்டியெழுப்ப அத்தியவசியமானது என கருதப்படும். முன்னர் முரண்பாட்டோடு தொடர்புடைய அனைத்து தரப்புக்களும் முரண்பாட்டினுள் பிரிந்திருந்த மக்களும் சமாதானத்தை கட்டியெழுப்புவதற்காக ஒன்றிணைவது என்பதே மீள்கட்டமைக்கப்படல் என்பதன் எளிமையான விளக்கமாகும். இந்த ஒன்றிணைவு செயற்பாட்டினுள் முன்னர் காணப்பட்ட பகைமை வைராக்கியம் மற்றும் பரஸ்பர சந்தேகம் என்பனவற்றை கைவிட்டு நட்புறவு, நம்பிக்கை மற்றும் பரஸ்பர கௌரவம் தொடர்பான உணர்வுகளின் கீழ் அமைந்த சாதகமான தொடர்புகளை கட்டியெழுப்புவதும் இதன்மூலம் எதிர்ப்பார்க்கப்படுகின்றது.

**மீள்கட்டமைத்தல் மூன்று மட்டங்களில் செய்யப்படுதல் வேண்டும்.**

i. **உளவியல் ரீதியான வழிமுறை :-**

வன்முறைக்கு இரையான மக்களுக்கு இந்த வேதனையான அனுபவத்துடன் சாதகமான முறையில் கொடுக்கல் வாங்கல் செய்வதற்கான திறமை மற்றும் தாயார்படுத்தலை கட்டியெழுப்புதல்.

ii. **சமூக செயற்பாடுகள் -**

சமூக மட்டத்தில் இந்த செயற்பாடிற்காக சமூகத்தை தயார்ப்படுத்தல், பலி தீர்ப்பதற்கு பதிலாக நட்புறவும் மன்னித்தலும், பிரிந்திருத்தலுக்கு பதிலாக ஒன்றுசேர்தலும் மற்றும் வைராக்கியத்திற்கு பதிலாக தன்னுணர்வாதல் என்பவற்றை கட்டியெழுப்புவதே இந்த சமூக செயற்பாட்டின் நோக்கமாகும்.

iii. **அரசியல் செயன்முறை :**

தனிப்பட்ட மட்டத்தில் நடைபெறும் உளவியல் போன்றே சமூகத்தை ''சுகப்படுத்தல்'' (Healing) செயன்முறைக்கு ஒத்ததாக ''அரசியல் சுகப்படுத்தல்'' (Political healing) செயற்பாடும் மீள்கட்டமைத்தலுக்கு உட்படுகின்றது. முரண்பாட்டிற்கு அடிப்படையாக அமைந்த பொருளாதார, அரசியல் மற்றும் சமூக சாதனங்களுக்கு அரசியல் ரீதியாக கவனம் செலுத்தும் மீள்கட்டமைத்தல் செயன்முறையின் தேவையே இதில் அவதானம் செலுத்தப்படும்.

- மீள்கட்டமைத்தல் செயற்பாட்டில் உண்மையைக் கண்டறிதல், நீதியை பெற்றுக்கொடுத்தல் மற்றும் சமாதானம் போன்றன ஒன்றோடொன்று தொடர்பு கொண்டவைகளாக இருக்க வேண்டும் என்பதே சமாதானத்தைக் கட்டியெழுப்பல் தொடர்பான தென்னாபிரிக்க அனுபவதினுள் அவதானம் செலுத்தப்பட்ட விடயமொன்றாகும்.

உண்மையை கண்டறிதல் (Truth Seeking) என்பதன் அர்த்தம் முரண்பாடு ஏற்பட்ட காலத்தில் நடைபெற்ற வன்முறை செயற்பாடுகளினுள் உண்மையில் நடைபெற்றது என்னவென்று அனைவரும் திறந்த வகையில் அறிந்துக் கொண்டு அதன் அடிப்படையில் ''சுகப்படுத்தல் செயன்முறையை'' கட்டியெழுப்புவதாகும்.

முரண்பாட்டு காலத்தில் எல்லா தரப்புக்களாலும் புரியப்பட்ட மனித உரிமை மீறல்களில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி மற்றும் நியாயத்தை பெற்றுக்கொடுப்பதற்கவே ''நீதி'' (Justice) தேவைப்படுகின்றது.

தென்னாபிரிக்காவில் 1995 இல் உருவாக்கப்பட்ட உண்மையை கண்டறிதல் மற்றும் மீள்கட்டமைத்தலுக்கான ஆணைக்குழு (Truth and Reconcilation Commission) இது தொடர்பில் உலகில் காணப்படும் மிகச்சிறந்த உதாரணமாகும். அதாவது குற்றவாளிகளை தேடி தண்டனை வழங்கும் சம்பிரதாய சட்ட அணுகுமுறைக்குப் பதிலாகவும், ''பலிதீர்க்கும் சட்டம்'' அணுகுமுறைக்கு (Retriburtive Justice) பதிலாக ''சுகப்படுத்தும் நீதி'' (Restorative Justice) முன்வைக்கப்பட்டது. நீதி தொடர்பான இந்த மீள்கட்டமைத்தல்வாத அணுகுமுறையின் செல்பாதை குற்றவாளிகளுக்கு தண்டனை வழங்குவதற்கு பதிலாக மனித உரிமைகள் மீறல்களை செய்த நபர்கள் மற்றும் பாதிப்புக்குள்ளானவர்கள், அவர்களுடைய சமூகத்தின் மக்களையும் ஒரே பொது செயற்பாட்டினுள் கொண்டுவந்து மன்னிப்புக்கோருதல் மற்றும் மன்னிப்பளித்தல் ஊடாக நீதியை நிலைநாட்டுதலாகும். செயற்பாட்டினை செய்த நபர்கள் மற்றும் **பாதிக்கப்பட்டவர்களுக்கிடையில்** சந்திப்புகள், கலந்துரையாடல்கள், **தன்னுணர்வு** கலந்துரையாடல்கள் இச்செயன்முறையின் ஊடகமாகும்.

**கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள்**

1. வகுப்பினை குழுவாக பிரிக்கவும்.

   பாத்திரமேற்று நடிப்பதற்கான தலைப்புகளை வழங்குக.

   - முரண்பாட்டை முன்னெச்சரிக்கை செய்தல்.
   - முரண்பாட்டை தடுத்தல்.
   - முரண்பாட்டை முகாமைசெய்தல்.
   - முரண்பாட்டு பரிநிலைமாற்றம்
   - யுத்தத்திற்கு பின்னரான சமாதானத்தைக் கட்டியெழுப்பல்.
   - இணக்கப்படுத்தல்.
   - மத்தியஸ்தம்.
   - சமாதான உடன்படிக்கை.

குறித்த தினத்தில் பாத்திரமேற்று நடிப்பதற்கான வாய்ப்பினை வழங்குக.

**உசாத்துணைகள்**


1. Coser, L. (1975), The Function of Social Conflict, Glencoe, III, Free Press.
2. Fisher, Simonetal, (2000), Working With Conflict; Constructive and Destructive Processes, New Haven and London: Yale University Press.
3. Fisher, Roger and William Ury, (1991), Getting to say "Yes", Negotiating Agreement without Giving in, USA: Penguin Books.
4. Ghali, Boutros, (1992), An Agenda for Peace, New York: United Nations.
5. Gultung, John, (1964), "An Editorial" Journal of Peace Research, 1:1, 1-4.
6. Ledarach, John Paul, (1997), Bulding Peace, Washington, D.C., US Institute of Peace.
7. Krisberg, Louis, (1998), Constructive Conflict: From Escalation to Resolution, Lanham, Maryland; Rowman an Littlefield.
8. Mitchel, Christopher, (1981), The Stucture of International Conflict, London: Macmillan.
9. Simmel, George, (1955), Conflict, NewYork: Free Press.
10. Zartman, William I, (1995), Ripe for Resotution: Conflict and Intervention in Africa, New York: Oxford University Press.
11. Wallensteen, Peter, (2002), Understanding Conflict Resolution: War, Peace and the Global System, London: SAGE.

# 07. இலங்கையின் காலனித்துவ நிலைமாற்றம்

**தேர்ச்சி 07** : இலங்கையின் குடியேற்றவாத யுகத்தில் இடம்பெற்ற பொருளாதார, சமூக, அரசியல் மாற்றங்களை அறிந்துக் கொள்வார். (பாடவேளைகள் - 50)

**தேர்ச்சி மட்டம் :**

7.1. குடியேற்றவாதமும் குடியேற்ற ஆட்சிமுறைமையும் இலங்கையில் சமூக, பொருளாதார, அரசியல் நிலைமாற்றங்களுக்கு ஏதுவான முறையினை விபரிப்பார்.

7.2. இலங்கையின் காலனித்துவ மாற்றங்களின் போதான எதிர்விளைவுகளை விளங்கி கருத்துரைப்பார்.

### கற்றற் பேறுகள்:

- குடியேற்றவாத நிலைமாற்றத்தின் பொருளாதார, சமூக, செல்நெறியின் போக்குகளையும் விளைவுகளையும் விபரிப்பார்.
- இலங்கையில் நவீன அரசுக்கு அடித்தாளமிடப்பட்ட விதத்தை விளக்குவார்.
- இலங்கையில் பிரதிநிதித்துவ ஜனநாயகத்தின் ஆரம்பத்தினையும் அது வளர்ச்சியடைந்த முறையினையும் எடுத்துக்காட்டுவார்.
- டொனமூர் அரசியலமைப்பின் பண்புகளைப் பகுத்தாய்வார்.

### அறிமுகம் :

காலனித்துவத்திற்கு உட்பட்ட இலங்கை மீது காலனித்துவ ஆட்சி முறை எவ்வகையில் தாக்கம் செலுத்தியது என்பதை ஆய்வு செய்வதே இவ்வலகின் நோக்கமாகும். ''காலனித்துவ அரசு'' என்ற எண்ணக்கருவினை அறிமுகப்படுத்தி, காலனித்துவ முறை மற்றும் அதன் அரசியல் இலங்கையின் பொருளாதார, சமூக மற்றும் அரசியல் துறைகளில் தாக்கம் செலுத்திய முறைப்பற்றி இங்கு தெளிவுப்படுத்தப்படும். இங்கு இலங்கையில் இக்கல்வி பிரித்தானிய காலனித்துவத்தோடு மட்டுப்படுத்தப்படுகின்றது என்பதை நினைவில் இருத்திக் கொள்ள வேண்டும்.

### பாட விடயங்களை விளங்கிக் கொள்வதற்கான வழிகாட்டல்

### காலனித்துவமும் காலனித்துவ அரசும்

மேலே மூன்றாம் அத்தியாயத்தில் ''காலனித்துவ அரசு'' என்ற உப தலைப்பின்கீழ் உள்ள விடயங்களையும் இந்த அலகுடன் இணைத்துக் கொள்ள முடியும்.

உலக வரலாற்றை ஆராயும் போது காலனித்துவம் உருவாகிய இரண்டு முறைகளை அடையாளம் கண்டுக்கொள்ளலாம். அவையாவன,

(1). ஏதாவது அரசொன்றின் மக்கள் புதிய நாடொன்றை வசப்படுத்தி, குடியேறி தம் தாய் நாட்டின் சமூக, அரசியல் மற்றும் பொருளாதார முறைகளோடு இசைவான அமைப்புக்களை

கட்டியெழுப்பிக்கொண்டு, தாய் நாட்டின் இறைமைக்கு உட்பட்டு அந்த புதிய தேசத்தினை கொண்டு நடத்துவதாகும்.

(2). முன்னர் குடியேற்றமாக காணப்பட்ட பிரதேசத்தினை பலமான அரசொன்றினால் உடன்படிக்கை அல்லது ஆயுத பலத்தினால் ஈர்த்துக்கொண்டு, தமது அதிகாரபலத்தின்கீழ் ஆட்சி செய்தல்.

இதில் இரண்டாவது முறையினால் காலனித்துவத்திற்கு உட்படும் சமூகம் காலனித்துவவாத அரசின் அதிகாரத்திற்கு கீழ்ப்படும். இலங்கை இதில் இரண்டாவது வகையிலேயே காலனித்துவமானது.

மூன்றாம் அத்தியாயத்தில் 3.2 அரச மாதிரிகள் மற்றும் வகைப்படுத்தல் என்ற விடய உள்ளடக்கத்தின் கீழ் காலனித்துவ அரசு என்பது பற்றிய விடயங்களை இங்கும் இணைத்துக்கொள்ளவும்

## காலனித்துவ அரசு

குடியேற்றவாத நாடு மற்றும் காலனித்துவம் என்பவற்றுக்கிடையில் இடையில் காணப்படும் தொடர்புகளை தெளிவுப்படுத்துவதற்காக அரசியல் மற்றும் சமூக ஆய்வாளர்களால் பயன்படுத்தும் எண்ணக்கருவாக ''காலனித்துவ அரசை'' (Colonial State) அடையாளப்படுத்த முடியும். காலனியாளர்களின் முகவராக செயற்படும், காலனித்துவ சமூகம் மற்றும் அதன் அரசியல் நிருவாகமும் அதன் ஆயுத கட்டமைப்புமே இங்கு காலனித்துவ நாடு என கருதப்படுகின்றது. அரசாங்கமானது காலனித்துவ சமூகத்தின் அபிலாசைகளையன்றி காலனித்துவவாத அரசின் அபிலாசைகளையே பிரதிநிதித்துவப்படுத்தும். தாய்நாட்டின் பொருளாதார, சமூக, கலாசார மற்றும் அரசியல் தேவைகளுக்கு ஏற்ப வழிநடத்தல் இதன் பிரதான கடமையாகும். இது காலனித்துவ சமூகத்தின் சமாதான ஒழுங்குகினை கொண்டுநடத்துவதற்கு முன்னுரிமை வழங்கும். அடிமைப்படுத்தப்பட்ட மக்களிடமிருந்து வரும் எதிர்ப்புகளை அடக்குதல், அச்சமூகத்தின் மீது தமது கருத்தியல் ஆதிபத்தியத்தை திணிப்பதற்கு முன்னுரிமை வழங்கும். காலனித்துவவாத அரசின் தேவைகளுக்காக பலாத்காரத்தை தொடர்ந்தும் பயன்படுத்தல் காலனித்துவ அரசின் விசேட பண்பாகும். இதனால் காலனித்துவ நாட்டில் குறைந்தப்பட்ட வெளிப்படைத்தன்மையே காணப்படும். கீழ் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்களுக்காக காலனித்துவ அரசின் பொருளாதார, சமூக, கலாசார மற்றும் அரசியல் கட்டமைப்புகளை மாற்றுவதற்கும் பரிமாற்றம் செய்வதற்கும் முயற்சிக்கும்.

## காலனித்துவ மாற்றமும் அதன் விளைவுகளும்

இலங்கை 1505 ஆம் ஆண்டு முதல் 1948 ஆம் ஆண்டுவரை மேலைத்தேய காலனித்துவத்திற்கு உட்பட்டிருந்தது. முதலில் போர்த்துகீசரும், இரண்டாவதாக ஒல்லாந்தரும், மூன்றாவதாக ஆங்கிலேயரும் இதனை உட்படுத்திக்கொண்டனர். இவ்வினங்களில் ஆங்கிலேயரே இலங்கைமீது வன்மையான அழுத்தங்களை பிரயோகித்தவர்களாவர். இவர்கள் 1796 தொடக்கம் 1815 ஆம் ஆண்டுவரை இலங்கையின் கரையோர மாகாணங்களை ஆட்சி செய்தனர். 1815 முதல் முழு இலங்கையையும் தமது ஆட்சியின் கீழ் கொண்டுவந்தனர். அன்றிலிருந்து பிரித்தானியர் என்ற காலனித்துவவாதிகளால் (Colonizer) அறிமுகப்படுத்தப்பட்ட கொள்கைகள் இலங்கை என்ற காலனித்துவ சமூகத்தின்மீது நீண்டகாலம் செல்வாக்கு செலுத்தியுள்ளது.

காலனித்துவவாத அரசு காலனித்துவங்களில் காலனித்துவ அரசுகளை கட்டியெழுப்ப சிற்சில சமூக, பொருளாதார, அரசியல் மற்றும் நிருவாக சீர்த்திருத்தங்களை அறிமுகப்படுத்தியது.

(1). தமது காலனித்துவத்தை கொண்டுசெல்வதற்கான பாதுகாப்பும் நிருவாகச் செலவும் அதிகரித்தமை மற்றும் நேரடியாக காலனித்துவத்தை நிருவகிக்க முடியாமல் போனமை.

(2). தமக்கு எதிரேயுள்ள புதிய சமூகத்தில் காணப்படும் வாழ்க்கை முறை, அபிலாசைகள் காலனித்துவவாதிகளின் கலாசாரத்தோடு ஒத்துப்போகமையினால் அவற்றை மாற்றிக் கொள்ளல்.

(3). தமக்கு கீழ்ப்பட்ட சமூகத்தினை தமது தாய்நாட்டின் உச்சமட்ட வளர்ச்சிக்காக பயன்படுத்திக்கொள்ளல் போன்ற நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காகும்.

- ❖ ஆரம்பகால காலனித்துவ இலங்கை சமூகத்தின் பிரதான உற்பத்தி மூலமான நிலங்கள் அரசனுக்கு சொந்தமானது. இராசகாரிய முறை இதன் பிரதான பண்பாகும். பொதுமக்கள் தமக்கு சமீபமமான பிரபுவின் ஊடாக பெற்றுக்கொண்ட நிலத்தில் சில சேவைகளை வழங்கும் நிபந்தனைக்கு கட்டுப்பட்டு பயிர்ச்செய்தனர். இந்த படிநிலையில் கீழ்மட்ட உறுப்பினர் மேல்மட்ட உறுப்பினருக்கு சேவைசெய்யும் முறையினாலும், தமது குடும்பத்தின் தேவைக்கருதியும் நிலங்களில் பயிர் செய்தனர்.

- ❖ குறிப்பிட்ட சேவைகளை வழங்கவேண்டும் என்ற நிபந்தனையினால் தனியாள் முயற்சி தடைப்பட்டதோடு உற்பத்தியானது அடிப்படையில் தங்குநிலை மட்டத்தில் இருக்க காரணமாகியது.

  இலாபம் ஈட்டும் முதலாளித்துவ நோக்கின் அடிப்படையில் வளர்த்தெடுக்கப்பட்ட பிரித்தானிய குடியேற்றவாதிகளுக்கு, நடைமுறையில் இருந்த இம்முறை தடையாக அமைந்தது. அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட பெருந்தோட்ட கைத்தொழிலுக்கு தேவையான தொழிலாளர்களைப் பெற்றுக்கொள்வதற்கு, தொழிலாளர்கள் / விவசாயிகள் நிலங்களோடு கட்டுந்திருந்த சமூக முறைமை (இராஜகாரிய முறை) தடையாக அமைந்தது.

  வினைத்திறனான வரிகளை அறவிட்டுக்கொள்ளல் மற்றும் காலனித்துவவாத அரசின் பொருளாதார அபிலாசைகளை திருப்திப்படுத்திக்கொள்வதற்காக நிலம் தொடர்பான தனியாள் உரிமையினை அறிமுகப்படுத்தியது. கோல்புறுக் - கமரன் ஆணையாளரின் யோசனைகளில் முக்கியமான யோசனையாக இது காணப்பட்டது.

  உதாரணம் :- தரிசு நிலச் சட்டம்

- ❖ இராஜகாரிய முறையினை இல்லாதொழித்து நிலம் தொடர்பான போட்டித் தன்மை வாய்ந்த சந்தையொன்றை அறிமுகப்படுத்தல்.

  ஆங்கிலேயரால் ஏற்படுத்தப்பட்ட போட்டி ரீதியான நில சந்தையில் கோப்பி, சிங்கோனா, தேயிலை, இறப்பர் மற்றும் தென்னை போன்ற வர்த்தகப் பயிரிகளில் முதலீடு செய்தனர். இதற்கு தொழில்நுட்பங்கள் பயன்படுத்தப்பட்டப்போதும் எதிர்ப்பார்த்தது போன்றே தேயிலை பெருந்தோட்டக் கைத்தொழிலின்பால் இந்நாட்டு பாரம்பரிய மக்கள் அந்தளவுக்கு விருப்பம் காட்டவில்லை. அவர்கள் தாங்கள் பழக்கப்பட்ட தங்குநிலை விவசாயத்திலேயே ஈடுபட்டனர். காலனித்துவ அரசு விஞ்ஞான ரீதியான பயன்பாடு, இயந்திரமயப்படுத்தல் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை விருத்திச் செய்வதன் மூலம் பெருந்தோட்ட உற்பத்தியை ஊக்கப்படுத்தியது. இதன் விளைவாக இலங்கையின் பொருளாதாரம் இரட்டை பொருளாதாரமாக தோற்றம் பெற்றது. ஒன்று தங்குநிலைப் பொருளாதாரம். மற்றையது சந்தைப் பொருளாதாரமாகும்.

- ❖ வர்த்தக கைத்தொழில்களினால் இந்நாட்டு சமூகத்தோடு சிறந்தமுறையில் ஒத்திசைந்து செல்லா இந்திய தமிழர் என்ற பிரிவினர் தோற்றம் பெற்றனர். ஆரம்பத்தில் கரைநாட்டு சிங்களவர்கள் இதற்கு தேவையான உழைப்பினை வழங்கினாலும், வளர்ச்சியடைந்த தொழிலாளர் படையின் கேள்வி காரணமாக வெளிநாட்டு தொழிலாளர்களை கொண்டுவருவதற்கான தேவை உருவானது என நிபுணர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

- ❖ முதலாளித்துவத்திற்கு முதலில் உட்பட்ட கரைநாட்டு சிங்களவர்கள் பெருந்தோட்டம் சார்ந்த கைத்தொழில்களுக்கு தேவையான சேவைகளை வழங்கியும், மதுபானத் தவரணைகள் போன்ற புதிய பொருளாதார வாய்ப்புகளை பயன்படுத்திக்கொண்டு குறிப்பிடத்தக்க மூலதனத்தினை உழைத்துக்கொண்டனர். பின்னர் அவர்கள் தேசிய உற்பத்தியாளர் வகுப்பினராக மாறினர். இதன்போது

கரைநாட்டு சிங்கள சமூகத்தின் ஆதிபத்தியமற்ற குலங்களை சார்ந்தோரே முன்னிலைப் பெற்றனர். இவர்களே தேசிய முதலாளித்துவ வகுப்பின் ஆரம்பக்கருத்தாக்கள் ஆவர்.

❖ இந்நாட்டு முதலாளித்துவம் நீண்டகால வரலாற்றின் விளைவல்ல என்பது இங்கு ஞாபகப்படுத்திற்கொள்ள வேண்டிய முக்கிய விடயமாகும். இது காலனித்துவ அரசினால் தமது கொள்கைகள் மூலம் வளர்க்கப்பட்ட ஒன்றாகும். தனியாள் வளர்ச்சியை மதிக்கும் சமூக பெயர்ச்சியினை விரும்பும் மக்கள் பிரிவினரும் மற்றும் பழைய நம்பிக்கைகள் மற்றும் கற்பிதங்களில் தங்கியிருக்கும் மக்கள் பிரிவினர் எனும் இருவகையான சமூகப் பிரிவினர் ஒருமித்து வாழும் சமூக முறைமை ஒன்று தோற்றம் பெற்றது.

ஐரோப்பிய குடியேற்றவாதிகளின் வெளிப்பாடுகளின் விளைவாக இரண்டு கருத்தொகுதிகள் ஒன்றோடொன்று சந்தித்தன. ஐரோப்பிய சமூகத்தில் தனியாள்வாதத்தினை மெச்சிய சமூக பெயர்ச்சியினை மதிக்கும் ஒழுக்கம் கொண்ட ஒன்றாகும். இவர்கள் சந்தித்த இலங்கை சமூகம் ஏற்றுக்கொண்ட ஒழுக்கத்தை (Ascribed) அடிப்படையாகக் கொண்ட சமூகப் பெயர்ச்சியினை புறக்கணிக்கும் மற்றொன்றாகும். இதனால் பரீட்சயமற்ற சமூகத்தை மாற்றுவதற்கு தேவையான பல நடவடிக்கைகள் இவர்களால் எடுக்கப்பட்டன.

- கட்டாய இராஜகாரிய சேவை முறையை இல்லாதொழித்தல்.
- திறந்த சந்தையொன்றை அறிமுகப்படுத்தல்.
- வர்த்தகப் பொருட்களுக்கான சுங்கவரியினை குறைத்தல்.
- ஆளுநரிடம் காணப்பட்ட வரையறையற்ற அதிகாரங்கள் தனியாள் சுதந்திரத்தை தடைசெய்வதால் வர்த்தக சமூகத்திற்கு ஏற்றவகையில் அவரின் அதிகாரங்களை கட்டுப்படுத்தல்.
- நில வரி முறையில் தன்னிச்சையாக வரி சேர்க்கும் உரிமையை ஏலத்தில் விற்பதை நிறுத்தியமை.
- பொருட்கள் மூலம் வரி செலுத்துவதற்கு பதிலாக பணத்தின் மூலம் வரி செலுத்தும் முறையை அறிமுகப்படுத்தல்.
- பதினாறாக காணப்பட்ட மாகாண எண்ணிக்கையை ஐந்தாக குறைத்தல்.
- நேரடி வரி முறைக்கு பதிலாக நேரில் வரிமுறையினை அறிமுகப்படுத்தல்.
- அரசின் வர்த்தக ஏகபோக உரிமையை இல்லாதொழித்தல்.
- ஐரோப்பிய இனத்தவர்களுக்கு இலங்கையில் வதிவதற்கு இருந்த தடைகளை நீக்கியமை.
- சிவில் சேவையினை சீரமைத்தல்.
- அரசியலமைப்பு உருவாக்கத்திற்காக ஆளுநருக்கு ஒத்துழைப்பு வழங்க அரசுக்கழகம் ஒன்றை தாபித்தல்.
- நிருவாகச் செயற்பாடுகளுக்காக நிறைவேற்றுக்கழகம் ஒன்றை தாபித்தல்.
- ஆங்கிலக் கல்வியினை பரவலாக்குதல்.
- நீதிமன்ற கட்டமைப்பினை முறையாக ஒழுங்கமைத்தல்.

## 7.1 பொருளாதார, சமூக மாற்றங்கள்

காலனித்துவ அரசினால் இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்ட கொள்கைகளின் தாக்கங்கள் இருவகையினதாகும். அவையாவன,

1. எதிர்ப்பார்க்கப்பட்ட விளைவுகள்
2. எதிர்பாரா விளைவுகள். இவை சாதகமாகவோ, சாதகமற்றதாகவோ இருப்பதற்கு வாய்ப்பிருந்தது.

பொருளாதார, சமூக நிலைமாற்றங்கள் இரண்டு தளங்களில் நடைபெற்றன.

I. காலனித்துவ முதலாளித்துவத்தின் ஆரம்பம் மற்றும் பரவல்

II. காலனித்துவ சமூக நிலைமாற்றம்

பொருளாதார தளத்தில் ஏற்பட்ட மாற்றங்களின் அடிப்படையாக, இலங்கையின் குடியேற்றவாத முதலாளித்துவ பொருளாரத்தின் ஆரம்பத்தை குறிப்பிட முடியும். காலனித்துவவாத அரசு காலனியாளர்களை தமக்குயேற்றவாறு மாற்றியமைப்பதன் மூலம் தாய்நாட்டின் கைத்தொழில்களுக்கு தேவையான மூலப்பொருட்கள் மற்றும் பயன்பாட்டிற்கு தேவையான இரண்டாம் நிலை விவசாயப் பொருட்களை வழங்குபவர்களாக வைத்துக்கொள்வதோடு, தாய் நாட்டின் கைத்தொழில் முயற்சியாளர்களுக்கான சந்தையாக பயன்படுத்திக்கொள்வதே எதிர்ப்பார்க்கப்பட்டது. இதற்காக திறந்த தொழில் சந்தையொன்றையும், நில சந்தை ஒன்றையும் உருவாக்கிக் கொள்வதற்காக இராஜகாரிய முறையினை இல்லாதொழித்தல் தரிசு நில, அரச நில கட்டளைச் சட்டங்களால் முதலில் கோப்பியும், இரண்டாவதாக தேயிலை, இறப்பர், தென்னை போன்ற வர்த்தக பயிர்களுக்கான நில சந்தையொன்றை அரச தலையீட்டுடன் உருவாக்கியமையையும் சுட்டிக்காட்ட முடியும்.

- ❖ இதன்படி இலங்கை முதல்நிலை விவசாய உற்பத்திப் பொருட்களை உற்பத்தி செய்பவராக உலக முதலாளித்துவ பொருளாதார முறையுடன் தொடர்புபட்டது. வர்த்தக பெருந்தோட்ட பயிர்ச்செய்கைக்கு தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தல் (பூங்கா, பெருந்தெருக்கள், புகையிரதம்) மற்றும் அது தொடர்பான விஞ்ஞான ஆய்வுகளை செய்வதில் மட்டுமே அரசு அவதானம் செலுத்தியது.
- ❖ சந்தையில் விற்பனைக்காக செய்யப்படுகின்ற பாரிய விவசாய பொருளாதாரத்துடன்கூடிய சந்தையொன்று உருவாகியது.
- ❖ காலனித்துவ கொள்ளையாளர்களினால் எதிர்பாக்காத சாதகமான விளைவுகளும் உள்ளன. அவையாவன, முதலாவதாக சாராயத் தவரணைகளை கொள்வனவு செய்தவர்களும் பின்னர் தோட்ட தொழிலாளர்களுக்கும் மற்றும் முயற்சியாளர்களுக்கும் தேவையான அடிப்படை சேவைகளை வழங்கி (வண்டிகளை வழங்குபவர்களாக, சிறு கடை உரிமையாளர்களாக) குறிப்பிடத்தக்களவு மூலதனத்தை தேடிக்கொண்ட தேசிய முதலாளித்துவ வகுப்பின் தோற்றம்.
- ❖ இவ்வாறான சேவைகளில் ஆரம்பகால சிங்கள சமூகத்தினால் தாழ்த்தப்பட்டவர்களாக காட்டப்பட்ட குலத்தினரே ஈடுபட்டனர். இதன்மூலம் சமூகக் குழுக்களிடையில் உயர்மட்ட சமூகப் பெயர்ச்சியொன்று ஏற்பட்டது. இது இலங்கையின் சமத்துவ சமூகத்தை, ஒழுக்கத்தை முன்னிலைப்படுத்திய ஜனநாயக சமூகம் ஒன்று தோற்றம் பெறுவதற்கு தேவையான பின்புலத்தை நோக்கி நகர்த்தியது.

இவ்வாறு மூலதனத்தை பெற்றுக்கொண்டவர்கள் உயர் சமூக அந்தஸ்தை அடைந்ததும், சமூக சேவைகளில் ஈடுபட்டதோடு, கல்வி, கலாசார மற்றும் சமூக தளத்தின் விருத்திக்காக செயற்பட்டனர்.

❖ சமூக நிலைமாற்றமாக இராஜகாரிய முறை ஒழிக்கப்பட்டமை, சுதந்திர வர்த்தகச் சந்தை ஒன்றை உருவாக்கியமை, குழுவாதத்திற்கு பதிலாக தனியாள் வாதம் தலைத்தோங்கிய அரசின் சட்டத் தொடர்புகள் (முக்கிய அளவீட்டு கருவியாக) முன்னோக்கி வருதல், ஆங்கிலக் கல்வி போன்ற இவைகள் சமூக கலாசார தளங்களில் குறிப்பிடத்தக்களவு மறுசீரமைப்புகள் ஏற்பட அடிப்படையாக அமைந்தன. இவ்வாறான மாற்றங்களினால் புதிய சமூக வகுப்பு முறையொன்று தோற்றம் பெற்றது. கோல்புறுக் - கமரன் முன்வைத்த முதலாளித்துவ பொருளாதார கொள்கைகளின் பெறுபேறொன்றாகவே இலங்கையில் முதலாளித்துவ வகுப்பொன்று தோற்றம் பெற்றது.

❖ ஆங்கில கல்வி மற்றும் குடியேற்றவாத யுகத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட ஏனைய சமூக கலாசார மறுசீரமைப்புகளுடன் இணைந்தவகையில் இதுவரைக் காணப்பட்ட இராஜகாரிய முறைக்கு பதிலாக நவீன சமூக முறைக்கான அடித்தளம் இடப்பட்டது. இதன் பெறுபேறாக ஒருபுறம் நவீன சிவில் சமூகம் தோற்றம் பெற்றதோடு குடியேற்றவாத மறுசீரமைப்புகளால் அல்லது நேரடியாக மேலைநாட்டு கல்வி மறுசீரமைப்புகளால் பலன்பெறாத தேசிய கல்வியோடு மட்டுப்படுத்தப்பட்ட வகுப்பொன்றும் தோற்றம் பெற்றது.

❖ மேலைநாட்டு சமூக முறைக்கு உட்பட்ட அதன் அரசியல் ஒழுக்கத்தை பின்பற்றுகின்றவர்களையே மேலைநாட்டு சமூக முறை வேண்டி நின்றது. ஆங்கிலக் கல்வியினைப் பெற்ற குறிப்பிடத்தக்களவு மூலதனத்தை பெற்றுக்கொண்டவர்களே இதில் இலகுவாக ஒழுங்கமைந்தனர். தேசிய கல்வியினைப் பெற்றவர்களால் இவ்வாறு ஒழுங்கமைய முடியவில்லை. இவர்கள் நம்பிக்கை மற்றும் கருதுகோல்களின் அடிப்படையுடன் கூடிய முறையொன்றை பின்பற்றி புதுவகையான சிவில் சமூகம் ஒன்றினை கட்டியெழுப்பினர். இதனை முன்மாதிரி சிவில் சமூகமாவே (Prototype of a Civil Society) அடையாளப்படுத்துவர். பிரதேசவாதம், இனவாதம், மதவாதம் போன்றவற்றை அடிப்படையாக்கொண்ட சமூக ஒழுங்கமைப்புகள் தோற்றம் பெற்றமை இதன் பண்பாக காணப்படட்டது.

## 7.2 அரசியல் விளைவுகள்

ஆரம்பகால குடியேற்றவாத அரசின் அரசியலானது அரசன் என்ற நிலவுடைமையாளரை அடிப்படையாகக் கொண்டே ஒழுங்கமைந்திருந்தது. அரசன் சம்பிரதாய சட்டங்களுக்கு ஏற்ப ஆட்சிசெய்ய வேண்டுமென்ற கருத்தொன்று காணப்பட்டாலும், இந்த கருத்தின் செல்லுபடியானதன்மை நிலவுடைமையாளரின் விருப்பத்திற்கு கீழ்பட்டிருந்தது. இதனால் ஆரம்பகால காலனித்துவ அரசாட்சி எதேட்சையதிகாரத் தன்மைக்கதாகவிருந்தது. பிரித்தானிய ஆட்சிகாலத்தில் அறிமுகப்படுத்திய கோல்புறுக் - கமரன் யோசனைகளால் இந்நிலை மாற்றத்திற்கு உள்ளானதோடு, பிற்பட்டகால மறுசீரமைப்புகளின் மூலம் இந்த மாற்றங்கள் மென்மேலும் முன்னோக்கி சென்றது.

❖ கோல்புறுக் சீர்த்திருத்தினால் இலங்கையில் காணப்பட்ட இரட்டை நிருவாக முறை இல்லாது செய்யப்பட்டு முழு நாடும் ஒரே பொது சட்ட முறையின்கீழ் கொண்டுவந்து நாட்டை ஐந்து மாகாணங்களாக பிரித்து ஆட்சி நடவடிக்கைகளை மத்தியமயப்படுத்தியது. இந்த செயற்பாடுகள் பின்னாளில் அதிகாரத்தை ஓரிடப்படுத்தும் மத்தியமயப்படுத்தப்பட்ட ஒற்றையாட்சி அரசுக்கு தேவையான அடிப்படையை வழங்கியது.

❖ மறுபுறம் இலங்கையை அரசியலமைப்புசார் ஆட்சிக்கு உட்படுத்தி, காலனித்துவ ஆட்சி மறுசீரமைப்புகளால் ஆளுநரின் எல்லையற்ற ஆட்சி ஆதிகாரத்தை வரையறுத்து, தனியாள் அபிலாசைகளை அடைந்துக்கொள்ளும் வகையிலான கட்டமைப்பொன்றை உருவாக்குவதற்கு தேவையான சட்ட மற்றும் அரசியல் அடித்தளத்தினை கோல்புறுக் - கமரன் சீர்த்திருத்தம் மூலம் இடப்பட்டது. இதன்மூலம் ஆளுநர் மன்னருக்கு பொறுப்புச் சொல்ல வேண்டும் என்ற சித்தாந்தத்தை கொண்டுவர முயற்சி செய்யப்பட்டது.

❖ அத்தோடு ஆளுநரன் தன்னிச்சையான ஆட்சிக்கு பதிலாக நிறைவேற்றுச் சபையின் அனுமதியுடன் வரவு செலவு திட்டம் தயாரிக்கப்படவேண்டும் என்ற நிபந்தனை ஊடாக பொறுப்புடன் கூடிய ஆட்சிமுறையொன்றை ஏற்படுத்துவதற்காக முயற்சியானது பின்னாளில் அரசியல் நிறைவேற்றுத்துறையொன்று தோற்றம் பெறுவதற்கான ஆரம்ப வித்தாக இருந்தது.

❖ ஆளுநருக்கு சட்டம் இயற்றுவதில் காணப்பட்ட அதிகாரத்தை வரையறுத்து சட்டக்கழகத்திற்கு பெற்றுக்கொடுத்ததன் மூலம் எதிர்கால பாராளுமன்ற ஆட்சிக்கான அடிப்படை இடப்பட்டது. இதன்பின்னர் ஏற்பட்ட அசியலமைப்பு மறுசீரமைப்புகளுக்கு இதுவே வழிகாட்டியது. மேலும் இலங்கைக்கு முதன்முறையாக பிரதிநிதித்துவம் தொடர்பான எண்ணக்கருவும் இதன்மூலம் அறிமுகப்படுத்தப்பட்டது.

❖ சட்டம் உருவாக்கத்திற்காக சட்டக்கழகம் உருவாக்கப்பட்டதோடு, ஆளுநர் சபையின் செயற்பாடுகளில் தொடர்பு படவில்லை. இதன்மூலம் பொறுப்புடன் கூடிய ஆட்சி ஒன்றை உருவாக்குவதே எதிர்ப்பார்க்கப்பட்டது.

❖ காலனித்துவ நிலைமாற்றத்தின் மற்றுமொரு முக்கிய அங்கமாக இலங்கையின் சட்டமுறைகளின் மறுசீரமைப்புகளையும், நிருவாகம் மத்தியமயப்படுத்தப்பட்டமையையும் குறிப்பிட முடியும். முழு இலங்கையும் ஒரேவகையான குற்றவியல் சட்டமுறைமைக்குள் கொண்டுவரப்பட்டதோடு பிரதேச சட்டமான கண்டிய சட்டத்தை தனியாள் சட்டமாக்கியது. இது சிவில் செயற்பாடுகளினூடாகவாகும்.

❖ இலங்கையை நிருவாக பிரிவுகளை ஐந்தாக வகுத்து கச்சேரி நிருவாக முறை அறிமுகப்படுத்தப்பட்டது. இதன்படி பிரித்தானிய காலனித்துவ ஆட்சியாளர்களே இலங்கையை ஒற்றையாட்சி கட்டமைப்புக்குள் கொண்டுவந்தனர். அரசியலமைப்புசார் ஆட்சி தொடர்பான அடித்தளம் இடப்பட்டதன்மூலம் பிரதிநிதித்துவ ஜனநாயகம் தொடர்பான வித்து வளர்க்கப்பட்டது.

❖ 1910 ஆம் ஆண்டு மக்கலம் அரசியலமைப்பில் முதன்முறையாக வரையறுக்கப்பட்ட வாக்குரிமையினை அறிமுகப்படுத்தியதன் மூலம் கல்வி மற்றும் சொத்தினை அடிப்படையாகக் கொண்ட வரையறுக்கப்பட்ட குழுவுக்கு வாக்குரிமை கிடைத்தது.

❖ இது 1920 ஆகும் போது மேலும் அபிவிருத்தி செய்யப்பட்டு மாகாண ரீதியான பிரதிநிதித்துவத்திற்கு வழிகோலியது.

❖ 1924 ஆம் ஆண்டு சீர்த்திருத்தத்தினால் வரையறுக்கப்பட்ட மற்றும் மாகாண வாக்குமுறை மேலும் விரிவாக்கப்பட்டது. இது பிரதிநிதித்துவ ஜனநாயகத்தை முன்னோக்கிக் கொண்டுசெல்ல காரணமாகியது.

❖ 1931 டொனமூர் சீர்த்திருத்தத்தின் மூலம் பொறுப்புடன்கூடிய அரசியலமைப்பொன்றை அறிமுகப்படுத்துவதற்கான அடித்தளம் இடப்பட்டது. இதன்படி 21 வயதுக்கு மேற்பட்ட ஆண் பெண் இருபாலாருக்கும் சர்வசன வாக்குரிமை கிடைத்தது.

❖ நடைமுறையில் இருந்த சட்டவாக்கக் கழகத்தை இல்லாது செய்து புதிய சட்டசபை ஒன்று உருவாக்கப்பட்டது. இது அரசுக் கழகம் என அழைக்கப்பட்டதோடு 61 உறுப்பினர்களை உள்ளடக்கியிருந்தது.

❖ நடைமுறையில் இருந்த இனவாரி பிரதிநிதித்துவத்தை இல்லாது செய்து மாகாண பிரதிநிதித்துவ முறை ஏற்படுத்தப்பட்டது. இதன்கீழ் அரசுக்கழகத்திற்கு சர்வசன வாக்கினால் பிரதிநிதிகள் 50 பேரும், ஆளுநரின் நியமனத்தின் ஊடாக எட்டு பேரும், அரசாங்க உத்தியோகத்தர்கள் மூவரும் நியமிக்கப்பட்டனர். இவர்களிடையே சபாநாயகர் ஒருவரை தெரிவு செய்துக்கொள்வதற்கும் வாய்ப்பு வழங்கப்பட்டது.

❖ சுதேசிகளால் வேண்டப்பட்ட மந்திரிசபைக்கு பதிலாக நிருவாக குழு முறை ஏற்படுத்தப்பட்டது. அரசுக் கழகத்தின் 61 பிரதிநிதிகளில் அரசாங்க உத்தியோகத்தர்கள் மற்றும் சபாநாயகர் தவிர்ந்த ஏனைய 57 பிரதிநிதிகளும் ஏழு நிறைவேற்றுக்குழுக்களாக பிரிக்கப்பட்டனர். அவ்வேழு நிறைவேற்றுக்குழுக்களினதும் தலைவர்கள் எழுவர் மற்றும் அரசாங்க உத்தியோகத்தர்கள் மூவரை இணைத்து அமைச்சரவை உருவாக்கப்பட்டது.

❖ 1931 ஆம் ஆண்டு சீர்த்திருத்தத்தினால் உருவாக்கப்பட்ட சர்வசன வாக்குரிமையால் பிரதிநிதித்துவ ஜனநாயகத்திற்கு மக்கள் பழக்கப்பட்டனர். இதனால் தேர்தல்மூலம் தங்களது ஆட்சியாளர்களை தேர்ந்தெடுக்கவும், மாற்றியமையக்கவும் இலங்கை மக்கள் பழகிக் கொண்டனர்.

- ❖ சர்வசன வாக்குரிமை வழங்கப்பட்டதன் விளைவாக அரசியல் அதிகாரத்தை பிரயோகிப்பவர்கள் மக்களுக்கு பொறுப்புச் சொல்ல பழகிக்கொண்டனர். அரசியல்வாதிகள் தாமளித்த வாக்குறுதிகளை பொறுப்புடன் நிறைவேற்றாவிடில் மக்களின் ஒத்துழைப்பு தனக்கு கிடைக்காமல்போகும் என்ற கருத்தின் அடிப்படையிலேயே பொறுப்புடன்கூடிய அரசாங்கத்திற்கு பழக்கப்பட்டனர்.

- ❖ டொனமூர் அரசியலமைப்பை நடைமுறைப்படுத்த அரசியல் கட்சிகள் தேவைப்படவில்லை. அத்தோடு இவ்வரசியலமைப்பினால் அரசியல் கட்சிகளின் தோற்றம் ஊக்கப்படுத்தப்படவில்லை. எனினும் சர்வசன வாக்குரிமையினை மையமாகக் கொண்டு வாக்காளர்களை ஒழுங்குப்படுத்துவதற்குள்ள தேவையினை மையப்படுத்தி அரசியல் கட்சிகள் தோற்றம் பெற்றன.

- ❖ இந்த அரசியலமைப்பின் மூலம் அரசியல் ரீதியாக மக்கள் வலுப்பெற்றனர்.

- ❖ டொனமூர் முறையினால் சமூகமயப்படுத்தல் தன்மை வேகப்படுத்தப்பட்டது. சமூகத்தில் பல்வேறு அழுத்தங்களுக்குட்பட்டிருந்த சமூகக் குழுக்கள் சர்வசன வாக்குரிமையினால் பெற்றுக்கொண்ட சக்தியினால் தலைத்தூக்க தொடங்கினர்.

- ❖ அரசியல்வாதிகளின் இருப்பு மக்களின் விருப்பத்தில் தங்கியிருப்பதால் மக்களின் ஒத்துழைப்பினை மென்மேலும் பெற்றுக்கொள்வதற்காக அரசியல்வாதிகள் ஒவ்வொருவரும் போட்டி முறையில் நலன்புரி செயற்பாடுகளை மேற்கொள்ள தொடங்கியமையை டொனமூர் அரசியலமைப்பின்கீழ் கண்டுக்கொள்ள முடியும்.

- ❖ இவ்வரசியலமைப்பின் கீழ் பொறுப்புக்களை வழிநடத்துவதற்கு அமைச்சரவை ஒன்று தாபிக்கப்பட்டமை முக்கியமானதாகும். இதன்படி ஆளுநர் பின்னாளில் பெயரளவு நிருவாகியானார். இச்சபைக்கு தனது பதவி மற்றும் தனிப்பட்ட ரீதியான கருத்துக்களை முன்வைக்க உரிமை காணப்பட்டது. இந்த அமைச்சரவை ஆரம்பத்தில் இரு குழுக்களாகவே செயற்பட்டது. இதன்போது அரச உத்தியோகத்தர்களான அரச செயலாளர், சட்டச் செயலாளர் மற்றும் நிதிச் செயலாளர்களுக்கு மிகையான அதிகாரங்கள் கிடைத்ததோடு, சுதேசிய அமைச்சர்களுக்கு கிடைத்த அதிகாரங்களைக்கூட கட்டுப்படுத்தும் ஆற்றலும் காணப்பட்டது. ஆரம்பத்தில் கூட்டுப்பொறுப்புடன் இச்சபை செயற்படாதபோதும் டொனமூரின் இறுதிக் காலத்தில் ஐக்கியப்பட்ட குழுவாக செயற்பட்டது.

- ❖ நிறைவேற்று குழுமுறையின் மூலம் சிறுபான்மை இனங்களுக்கும் நிருவாக செயற்பாடுகளில் பங்குக் கொள்வதற்கு வாய்ப்பு வழங்கப்பட்டது. மறுபுறம் நிருவாக செயற்பாடுகளில் தனிப்பட்ட அமைச்சருக்கு குறிப்பிடத்தக்களவு இடம் கிடைத்தது. பொதுவில் எல்லா உறுப்பினர்களுக்கும் சட்டமாக்கல் செயற்பாடுகளை போன்றே நிருவாகச் செயற்பாடுகளிலும் பயிற்சி மற்றும் அனுபவம் என்பன கிடைத்தன.

- ❖ டொனமூர் அரசியலமைப்பு செயற்பட்டக் காலத்தில் ஏற்பட்ட ஜனநாயக அரசியல் நிலைமாற்றத்தின் மற்றுமொரு முக்கிய அங்கமாக சிவில் சமூக செயற்பாடுகள் பரவலடைந்தமையை குறிப்பிடலாம். இடதுசாரி இயக்கங்கள், தேசிய இயக்கங்கள், தொழிற்சங்க இயக்கங்கள், மத அமைப்புகள், பெண் இயக்கங்கள் போன்ற இவ்வாறான இயக்கங்களின் பரவல் இக்காலத்தில் ஏற்பட்டமை சமூக நிலைமாற்றத்திற்கு முக்கிய பங்காற்றிய ஒன்றாகும்.

இதன்படி டொனமூர் அரசியலமைப்பு சீர்த்திருத்தம் சமூக, பொருளாதார, அரசியல் துறைகளின் நிலைமாற்றங்களின் கேந்திரமாகும். இது சுதந்திரத்திற்கு பின்னரான காலத்தில் வேகமடைந்த அரசியல் நிலைமாற்றத்தின் உண்மையான ஆரம்ப கட்டமாகும்.

**உத்தேச கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள்**

1. வினா விமர்சன வேலைத்திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்தல்

- ❖ வகுப்பு மாணவர்களை A,B என இரு குழுவாக பிரிக்கவும்.
- ❖ ஒரு குழுவுக்கு 1833 தொடக்கம் - 1924 வரையும், அடுத்த குழுவுக்கு 1931 தொடக்கம் 1948 வரையான காலனித்துவ பரிமாற்றத்தின் சமூக, பொருளாதார, அரசியல் விளைவுகள் என்ற தலைப்பினை வழங்குக.
- ❖ தமது குழுவுக்கு கிடைத்த தலைப்பினூடு கேள்விகளை விமர்சனரீதியான குறிப்பொன்றை தயாரிக்கச் செய்க.
- ❖ புள்ளிகளை வழங்கி வேலைத்திட்டத்தை முன்னோக்கி கொண்டுசெல்க.

**உசாத்துணைகள்**


01. ஜயவர்தன, குமாரி, (2004), சொக்கன் லொக்கன் ஆன விதம், கொழும்பு, சமூக விஞ்ஞானிகள் சங்கம்.

02. நவரட்ன பண்டார, (2007), பிரித்தானிய காலனித்துவத்தின் கீழ் இலங்கையின் தேசிய இயக்கங்கள், கொழும்பு, பாஸ்ட் பப்ளிசின் (தனியார்) நிறுவனம்,

03. பிரனாந்து, லக்சிறி, (1974), தேசிய இயக்கம், அரசியலமைப்பு வளர்ச்சியும் இடதுசாரி இயக்கங்களும், தீபானி வெளியீட்டாளர், நுகேகொட.

04. பண்டாரகே, அசோகா, (2005), இலங்கையின் காலனித்துவவாதம், கொழும்பு, ஸ்ரெப்பர்ட் லெக்.

05. விதானவசம், அதுல, (2007), இலங்கையின் அரசியல் அமைப்பும் அரசியலும், ம□ரகம, தரன்ஜி பிரின்டர்ஸ்.

06. Ceylon Government Press, (1969), Ceylon, Report of the Commission on Constitution Reform, Colombo, Ceylon Government Press.

07. Jennings, Ivor and H.W.Tambiah, (1952), The Domonion of Ceylon:The Development of it's Laws and Constitution, London: Stevens and Sons limited.

08. Kannangara, A.P., (2011), A Survey of Social Change in an Imprial Regime, Colombo: Vijithayapa Publications.

## 08. வெஸ்மின்ஸ்டர் அரசியலமைப்பு மாதிரிகளும் அதன் மாற்றங்களும்

**தேர்ச்சி 08** :- சுதந்திரத்தின் பின்னர் இலங்கையின் அரசியலமைப்பு வளர்ச்சி தொடர்பான விளக்கத்தை வெளிப்படுத்துவார்.

(பாடவேளைகள் - 62)

### தேர்ச்சி மட்டம்

8.1 :- சுதந்திரத்தின் பின்னரான அரசியலமைப்பு உருவாக்கத்திற்கு பின்னணியாக அமைந்த காரணிகளை விபரிப்பார்.

8.2. மேற்படி அரசியலமைப்புகளின் பண்புகளை தனித்தனியாக விளக்குவார்.

8.3. மேற்படி அரசியலமைப்புகளின் போக்குகளையும் பிரச்சினைகளையும் சுட்டிக்காட்டுவார்.

### கற்றற்பேறு :-

- 1947 - 1972 வரையிலான காலப்பகுதியில் ஏற்பட்ட அரசியலமைப்பு வளர்ச்சியையும் அதன் போக்குகளையும் பகுத்தாய்வார்.
- 1947 - 1972 வரையிலான அரசியலமைப்பின் கீழ் காணப்பட்ட சட்டத்துறையின் அமைப்பையும் இறையான்மையும் ஒப்பீட்டு ரீதியாக தெளிவுப்படுத்துவார்.
- 1947 - 1972 வரையிலான அரசியலமைப்பின் கீழ் நிறைவேற்றுத்துறையின் இயல்பையும் அதன் அதிகாரங்களையும் ஒப்பீட்டு ரீதியாக விளக்குவார்.
- சிறுபான்மையோர் உரிமைகளின் தன்மையும், வரையறைகளையும் எடுத்துக்காட்டுவார்.
- நீதித்துறையின் சுயாதீனத்தன்மையும் அதன் வரையறைகளையும் எடுத்துக்காட்டுவார்.
- நீதி மற்றும் அரச சேவைத் துறைகளில் ஏற்பட்ட மாற்றங்களை பரீட்சிப்பார்.
- மிகச் சிறந்த அரசியலமைப்பொன்றில் இருக்க வேண்டிய பண்புகளை விசாரனை செய்வார்.

### அறிமுகம் :-

சோல்பரி அரசியலமைப்பு வெஸ்மின்ஸ்டர் மாதிரிக்கு ஏற்ப உருவாக்கப்பட்டதாகும். வெஸ்மின்ஸ்டர் மாதிரி அரசியலமைப்பு என்பது பிரித்தானிய அரசியலமைப்பின் பண்புகளைக் கொண்ட அரசியலமைப்பாகும். அவையாவன,

- அரசியலமைப்பு கட்டமைப்பினுள் முக்கிய இடம் பாராளுமன்றுக்கு கிடைத்தல்.
- பாராளுமன்றுக்கு பொறுப்புக்கூறும் அமைச்சரவை ஒன்று காணப்படல்.
- பாராளுமன்றம் சட்டரீதியாக உயர்நிலையினை அடைதல்.
- அரசாங்கமானது பாராளுமன்றத்தினால் நிருவகிக்கப்படல்.

- பாராளுமன்றத்தினால் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களால் அரசாங்கம் அமைக்கப்படல்.
- அரசாங்கம் பாராளுமன்றுக்கு பொறுப்புக்கூறல் (பாராளுமன்றமானது அமைச்சர்களை தனித்தனியாகவோ அல்லது கூட்டாகவோ அகற்ற முடியும்)
- பாராளுமன்றத்தின் அதிகாரத்திற்கு உண்மையாக சவால் விடுக்க முடியாத வகையில் நீதிமன்றத்தின் வகிபங்கு வரையறை செய்யப்பட்டுள்ளமை.
- தனி அங்கத்தவர் தேர்தல் (எளிய பெரும்பான்மை) தொகுதி முறையினை அடிப்படையாகக் கொண்ட இரு கட்சி முறை.

சோல்பரி அரசியலமைப்பு 1944 அமைச்சரவை பத்திரத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த யோசனைகள் மற்றும் சோல்பரி ஆணைக்குழுவினால் முன்வைக்கப்பட்ட யோசனைகளின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட கெபினட் (பாராளுமன்ற) அரசாங்க மாதிரியாகும். அமைச்சரவையை உருவாக்கும்போதும், பாராளுமன்றத்தின் கட்டமைப்பை உருவாக்கும்போதும், நாமநிருவாகியை உருவாக்கும்போதும் வெஸ்மின்ஸ்டர் அரசியலமைப்பு மாதிரியை கொண்டிருந்ததோடு, சில பிரிவுகளில் சோல்பரி அரசியலமைப்பு பிரித்தானிய அரசியலமைப்பில் இருந்து மாறுபட்டிருந்தது. அவையாவன,

- சோல்பரி அரசியலமைப்பு எழுதப்பட்ட அரசியலமைப்பாக இருந்தமை.
- ஒப்பீட்டு ரீதியில் நெகிழா அரசியலமைப்பாக இருந்தமை.
- அரசியலமைப்பு விவரண அதிகாரம் வரையறுக்கப்பட்ட மற்றும் எழுதப்படாத வகையில் நீதிமன்றுக்கு உரித்தாக்கப்பட்டிருந்தமை.

சோல்பரி அரசியலமைப்பு இலங்கை பல்லின மற்றும் பன்மத சமூகம் என்பதை ஏற்றுக்கொண்டது. சுயாதீன நீதித்துறை மற்றும் சுயாதீன அரச சேவையினை உருவாக்குவதற்கு அரசியலமைப்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. இந்த அரசியலமைப்பு நிலவிய காலத்தில் (1947 – 1972) அரசியலமைப்பில் எட்டு திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.

## பாட விடயங்களை விளங்கிக் கொள்வதற்கான வழிகாட்டல்

### 8.1. சோல்பரி அரசியலமைப்பிற்கு பதிலாக புதிய அரசியலமைப்பொன்றினை உருவாக்குவதில் பின்னணியாக அமைந்த காரணிகள்

- சோல்பரி அரசியலமைப்பின் கீழ் இலங்கை தொடர்ந்தும் பிரித்தானிய முடிக்குரிய அரசாக இருக்கக் கூடாது என்ற பலமான வாதம் ஒன்று கட்டியெழுப்பப்பட்டமை.
- இலங்கையை குடியரசாக மாற்றவேண்டிய தேவை.
- அரசசேவை ஆணைக்குழு மற்றும் நீதிச்சேவை ஆணைக்குழு தொடர்பாக காணப்பட்ட முரண்பாடுகள்

  (இந்த முரண்பாடுகள் யாது என ஆசிரியரால் சுருக்கமாக குறிப்பிட வேண்டும்)

இவ்விடயங்களை கருத்திற்கொண்டு யாப்பு மறுசீரமைப்பு ஒன்றினை ஏற்படுத்துவதற்கான இரு முயற்சிகள் எடுக்கப்பட்டபோதும் அவை வெற்றியளிக்கவில்லை.

I. ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் பிரதமர் எஸ்.டப்ள்யு.ஆர்.டி. பண்டாரநாயக்க அவர்கள் 1957 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 02 ஆந் திகதி அரசியலமைப்பு திருத்தத்திற்காக ஒன்றிணைந்த பாராளுமன்ற செயற்குழு ஒன்றினை நியமித்தார். 1959 ஆம் ஆண்டு பெப்பிரவரி 06 ஆந் திகதி இக்குழு பொது உடன்பாடொன்றுக்கு வந்தது. விசேடமாக இலங்கையை குடியரசாக்க வேண்டும் என்றும் புதிய அரசியலமைப்பில் அடிப்படை உரிமைகள் உள்ளடக்கப்பட வேண்டியதன் அவசியம் தொடர்பாகவும் இந்த குழுவினை பிரதிநிதித்துவம் செய்த அனைத்து அரசியல் கட்சிகளிடையேயும் பொது உடன்பாடு ஒன்று காணப்பட்டது. எனினும் 1959 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் பண்டாரநாயக்காவின் படுகொலையை தொடர்ந்து அரசியலமைப்பு மறுசீரமைப்பு நடவடிக்கைகள் தடைப்பட்டன.

II. 1965 ஆம் ஆண்டு மார்ச் மாதம் ஆட்சிக்கு வந்த ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் இலங்கையை குடியரசாக மாற்றுவதற்காக அரசியலமைப்பிற்கு சீர்த்திருத்தங்களைக் கொண்டுவரும் நோக்கில் பாராளுமன்றில் ஒன்றிணைந்த செயற்குழு குழு ஒன்றினை தாபித்தபோதும் எதிர்க்கட்சி புதிய அரசியல் அமைப்பொன்றை உருவாக்க வேண்டும் என்ற எண்ணத்தில் தொடர்ந்திருந்தமையால் சோல்பரி அரசியலமைப்பை மாற்ற ஐக்கிய தேசிய கட்சி அரசாங்கத்தாலும் முடியாமல் போனது.

இதனால் புதிய அரசியல் அமைப்பினை உருவாக்குவதற்கான முறையான நடவடிக்கைகள் 1970 களின் பின்னர் ஆட்சிக்கு வந்த ஐக்கிய முன்னணி அரசாங்கத்தால் எடுக்கப்பட்டது. புதிய அரசியலமைப்பினை உருவாக்குவதற்கான அரசியல் நிர்ணய சபையினால் முதலாவது குடியரசு அரசியலமைப்பு தயாரிக்கப்பட்டதோடு இந்த யாப்பு 1972 ஆம் ஆண்டு மே மாதம் தொடக்கம் 1978 ஆம் ஆண்டு வரை நடைமுறையில் இருந்தது. 1972 முதலாம் குடியரசு அரசியலமைப்பின் பிரதான பண்புகள் பின்வருமாறு,

- பாராளுமன்ற (கபினட்) அரசாங்க முறையாக இருந்தமை.
- வெஸ்மின்ஸ்டர் முடியாட்சி முறைமையை நீக்கி செய்து முதன் முறையாக குடியரசு முறையொன்றை தாபித்தமை.
- மக்கள் இறைமை எண்ணக்கருவுக்கு முக்கிய இடம் கொடுத்தமை.
- தேசிய அரசுப் பேரவை பொதுமக்களின் இறைமை அதிகாரத்தை நடைமுறைப்படுத்தும் ஒரே பிரதிநிதியாக்கப்பட்டமை.
- மக்கள் இறைமையால் அதிகாரத்திற்கு வரும் பிரதமரால் நாம நிருவாகி நியமிக்கப்படல். (குடியரசு ஆட்சியின் பண்பொன்றாகும்)
- சோல்பரி அரசியல் அமைப்பில் இருந்த சில சமநிலை தலையீடுகள் செயற்பாடுகளை நீக்கியமை.

  உதாரணமாக : நீதிமன்றுக்கு காணப்பட்ட அரசியலமைப்பு பொருள் விளக்கல் அதிகாரத்தை இல்லாது செய்தமை.

  சட்டத்துறையினை ஓரவை வாதத்திற்கு ஏற்ப உருவாக்கியமை.

  பொதுச் சேவையினை அமைச்சரவையின் கீழ் கொண்டுவந்தமை.

- இலங்கையை ஒற்றையாட்சி அரசாக அரசியலமைப்பில் உள்வாங்கியமை.
- அரசுக்கும் பௌத்த மதத்திற்கும் இடையிலான தொடர்பொன்றினை அரசியலமைப்பின் மூலம் ஏற்படுத்தியமை.
- சிங்கள மொழியை மாத்திரம் அரச கரும மொழியாக்கியமை.

- அரசியல் நிருவாகத்திற்கு அரச சேவை மற்றும் நீதிச் சேவைகளை மிகவும் நெருக்கப்படுத்தியமை.

- சோல்பரி அரசியலமைப்பில் கண்டுக்கொள்ளப்படாமலிருந்த அரச கொள்கை வழிகாட்டும் கோட்பாடுகள் மற்றும் மனித உரிமைகள் தொடர்பான விதிமுறைகளை 1972 ஆம் ஆண்டு அரசியலமைப்பில் உள்வாங்கியமை.

## 8.2. சட்டத்துறையின் அமைவுச் சேர்க்கையும் இறையான்மையும்:-

சோல்பரி முறையின் கீழ் சட்டத்துறையானது மூன்று நிறுவனங்களை ஒன்றிணைத்து உருவாக்கப்பட்டது.

I. முடி (மகாதேசாதிபதி)

II. பிரதிநிதிகள் சபை

III. செனற் சபை

பாராளுமன்றத்தின் பிரதான நிறுவனம் பிரதிநிதிகள் சபையாகும். இந்த சபையின் உறுப்பினர் எண்ணிக்கை தொடர்பில் அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. ஒவ்வொரு சனத்தொகை கணக்கெடுப்பின் பின்னரும் தேர்தல் தொகுதிகள் எல்லை நிர்ணய ஆணைக்குழுவால் தேர்தல் தொகுதிகளாக பிரிக்கப்படுவதன் மூலம் ஆசன எண்ணிக்கையை தீர்மானிக்க வேண்டும் என அரசியல் அமைப்பில் குறிப்பிடப்பட்டிருந்தது. சோல்பரி அரசியலமைப்பு நடைமுறையில் இருந்த காலத்தில் பிரதிநிதிகள் சபை உறுப்பினர்களின் எண்ணிக்கை ஒரே வகையில் காணப்படவில்லை.

- ❖ 1947 – 1959 காலம் வரை உறுப்பினர் தொகை 101 ஆகும். இதில் 95 பேர் தேர்தல் தொகுதிகளை அடிப்படையாகக் கொண்டு நேரடியாக மக்கள் வாக்கினாலும் எஞ்சிய 06 பேரும் சிறுபான்மை மக்களை பிரதிநிதித்துவம் செய்வதற்காக நியமிக்கப்பட்டனர்.

- ❖ 1960 களின் பின்னர் அரசியலமைப்பு நடைமுறையில் இருந்த எஞ்சிய காலத்தில் அங்கத்தவர் தொகை 157 ஆக இருந்தது. அதில் 151 பேர் தேர்தல் தொகுதிகளை அடிப்படையாகக் கொண்டு மக்களின் நேரடி வாக்கினால் தெரிவு செய்யப்பட்டதோடு எஞ்சிய அறுவரும் சிறுபான்மை மக்களை பிரதிநித்துவப்படுத்த நியமிக்கப்பட்டனர்.

- ❖ இரண்டாம் மன்றமான செனற் சபை 30 உறுப்பினர்களால் ஆனது. இதில் 15 உறுப்பினர்கள் பிரதமரின் ஆலோசனையின்படி மகாதேசாதிபதியால் நியமிக்கப்பட்டதோடு, எஞ்சிய 15 உறுப்பினர்களும் பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவம் செய்யும் அரசியல் கட்சிகளினால் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

- ❖ நாங்கள் முன்னர் கண்டதுபோல, தேசிய அரசுப் பேரவையில் இருக்க வேண்டிய உறுப்பினர் தொகைப் பற்றி அரசியலமைப்பில் சரியாக குறிப்பிடப்படவில்லை. அது அரசியலமைப்பின் 77 உறுப்புரையின் கீழான எல்லை நிர்ணய ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்பட்டது.

சோல்பரி அரசியலமைப்பின் கீழ் பாராளுமன்றுக்கு பூரண சட்டவாக்க அதிகாரம் கிடைக்கவில்லை. அவையாவன,

- 29 (2) உறுப்புரையை திருத்தவோ அல்லது நீக்கவோ பாராளுமன்றுக்கு அதிகாரம் வழங்கப்படவில்லை.

- ஏதேனும் சட்டமூலம் அரசியலமைப்போடு ஒத்துபோகவில்லையாயின் அந்த சட்டத்தை வலிதற்றதாக்கும் அதிகாரம் நேரடியாக குறிப்பிடாமல் நீதிமன்றுக்கு இருந்தமை (உயர் நீதிமன்றுக்கு)

- 1947 ஆம் ஆண்டு இலங்கை சுதந்திர சட்டத்தின் படி இலங்கையின் வேண்டுகோல் மற்றும் விருப்பத்தின்பேரில் இலங்கை சார்பாக சட்டத்தை ஆக்கும் அதிகாரம் பிரித்தானிய பாராளுமன்றுக்கு கிடைத்தமை.

1972 ஆம் ஆண்டு அரசியலமைப்பின் கீழ் தேசிய அரசுப் பேரவை சட்ட ஆக்க அதிகாரம் மிக்க ஒரே நிறுவனமாகியது. அவையாவன,

- அரசியலமைப்பின் ஐந்தாம் உறுப்புரைக்கு ஏற்ப, குடியரசின் அரச அதிகாரத்தினை செயற்படுத்தும் மீயுயர் கருவி தேசிய அரசுப் பேரவையாகும்.

- 44 ஆம் உறுப்புரைக்கு ஏற்ப தேசிய அரசுப் பேரவையின் சட்டவாக்க அதிகாரம் மீயுயர் தன்மை கொண்டதாகும்.

- தேசிய அரசுப் பேரவையின் சட்டவாக்க அதிகாரத்தின்படி அரசியலமைப்பை முற்றாக அல்லது அதன் ஏதேனும் பகுதியை மாற்றுதல், திருத்துதல், புதிய அரசியலமைப்பொன்றை நடைமுறைப்படுத்தும் அதிகாரத்தையும் கொண்டிருந்தது.

- 45 ஆம் உறுப்புரைக்கு ஏற்ப தேசிய அரசுப் பேரவைக்கு உரித்தாக்கப்பட்டுள்ள சட்டவாக்க அதிகாரத்தை கைவிடுவதற்கோ, ஒப்படைப்பதற்கோ அன்றேல் எவ்வகையிலும் வேறொருவருக்கு உரித்தாக்குவதற்கோ முடியாது.

- 39 ஆம் உறுப்புரைக்கு அமைய, தேசிய அரசுப் பேரவையினால பிறப்பிக்கப்படும் எந்தவொரு சட்டத்தையும் செல்லுபடியற்றதாக்குவதற்கோ, அது தொடர்பில் கருத்து தெரிவிப்பதற்கோ நீதிமன்றுக்கோ அன்றேல் வேறு நிறுவனங்களுக்கோ அதிகாரமில்லை.

இவ்விடயங்களுக்கு ஏற்ப சோல்பரி அரசியலமைப்பின் கீழ் காணப்பட்ட சட்டத்துறை போலல்லாமல் 1972 ஆம் ஆண்டு அரசியலமைப்பின் கீழ் சட்டத்துறை பூரண இறையான்மை கொண்ட நிறுவனமாகும்.

## 8.3. நிருவாகத்தின் இயல்பும் அதன் அதிகராமும்

சோல்பரி அரசியலமைப்பின் கீழ் உருவாக்கப்பட்ட நிறைவேற்றுத்துறையானது அமைச்சரவை நிருவாகமாகும். நாட்டின் பிரதான நிருவாக மையம் அமைச்சரவையாகும். அமைச்சரவையின் தலைவர் பிரதமராவார். பிரதிநிதிகள் சபையின் பெரும்பான்மை நம்பிக்கையை வென்ற நபரை பிரதமராக நியமிக்க வேண்டும். பெரும்பாலன சந்தர்ப்பங்களில் இலங்கையின் எந்தவொரு கட்சிக்கும் பெரும்பான்மை பலத்தினை பிரதிநிதிகள் சபையில் பெற்றுக்கொள்ள முடியாத சந்தர்ப்பங்களில் பிரதமரை தெரிவு செய்வதில் மகாதேசாதிபதி தமது சுயவிருப்பிற்கு ஏற்ப செயற்பட சந்தர்ப்பம் காணப்பட்டது.

நியமிக்கப்பட வேண்டிய அமைச்சர்களின் எண்ணிக்கை யாது என்பது பற்றி அரசியலமைப்பில் குறிப்பிடப்படாமையால் அதனை தீர்மானிக்கும் உரிமை முழுமையாக பிரதமரின் விருப்பத்தில் தங்கியிருந்தது. பிரதமருக்கு இருந்த பணிகளுக்கு மேலாக அவர் பாதுகாப்பு மற்றும் வெளிவிவகாரம் தொடர்பில் பொறுப்பாளராக செயற்பட வேண்டும் என யாப்பில் குறிப்பிடப்பட்டிருந்தது. நீதி அமைச்சராயின் அவர் செனற் சபையின் உறுப்பினராக இருத்தல் வேண்டும் என்றிருந்தது. அரசாங்கத்தின் கொள்கை ரீதியான தீர்மானங்களை அமைச்சரவை எடுக்கும் அதேவேளை பின்னர் அத்தீர்மானங்களை உத்தியோகத்தர்கள் மூலம் நடைமுறைப்படுத்தப்பட்டது. 46 ஆம் உறுப்புரையின் கீழ் நாட்டின் நிருவாகம் மற்றும் நிறைவேற்று நிருவாகத்தை வழிநடத்தல் என்பன அமைச்சரவைக்கு பொறுப்பாக்கப்பட்டிருந்தது. பாராளுமன்றத்தைக் கூட்டுதல் மற்றும் கலைத்தல் தொடர்பில் மகாதேசாதிபதிக்கு ஆலோசனை வழங்கும் அதிகாரம் பிரதமருக்கு இருந்தது. அமைச்சரவை கூட்டாக பாராளுமன்றத்திற்கு பொறுப்புடையது.

1972 ஆம் ஆண்டு அரசியலமைப்பின் கீழ் அரசியல் நிறைவேற்று நிருவாகமாக பிரதமர் உள்ளிட்ட அமைச்சரவை காணப்பட்டது. பிரதமர் தேசிய அரசுப் பேரவையின் பெரும்பான்மை நம்பிக்கையை வென்ற உறுப்பினராவார்.

அமைச்சர்கள் மற்றும் அமைச்சுக்களை தீர்மானித்தல், அமைச்சர்களுக்குரித்தான துறைகள் மற்றும் பணிகளை தீர்மானிக்கும் பொறுப்பு பிரதமருடையதாகும். அமைச்சர்களுக்கு வழங்கப்படும் துறைகள் மற்றும் பணிகளை மாற்றுதலும் அமைச்சுப் பதவிகளில் இருந்து விலக்குவதற்கும் பிரதமருக்கு அதிகாரம் இருந்தது. மேல் நீதிமன்ற நீதிபதிகள், முப்படைகளின் தளபதிகள், அமைச்சரவையின் செயலாளர், அமைச்சுக்களின் செயலாளர்களை நியமித்தல் அதிகாரங்கள் பிரதமரிடம் காணப்பட்டது.

இதுவரை காணப்பட்ட சுயாதீன அரச சேவை ஆணைக்குழு இல்லாதொழிக்கப்பட்டு அரச சேவை ஆணைக்குழுவுக்குரிய பொறுப்புகள் அமைச்சரவைக்கு கொடுக்கப்பட்டது.

## 8.4. சிறுபான்மையோர் உரிமைகள்

சோல்பரி அரசியலமைப்பில் சிறுபான்மை இனக்குழுக்களின் உரிமைகளை பாதுகாக்கும் நோக்கில் பல விதிமுறைகள் உள்ளடக்கப்பட்டன. அவையாவன,

- **29 (2) ஆம் உறுப்புரை**

  சிறுபான்மை மக்கள் குழுக்களின் உரிமைகளை பாதுகாப்பதற்காக உள்ளடக்கப்பட்ட முக்கியமான விதியாக இது காணப்பட்டது. இவ்விதிக்கு ஏற்ப,

  அ. மதச் சுதந்திரத்தைக் கட்டுப்படுத்தவோ, தடைசெய்யவோ முடியாமை.

  ஆ. இனத்துவ, மதத்துவ குழுவொன்று ஏனைய குழுவொன்றின் அதிகாரத்திற்குட்படுத்தவோ, கட்டுப்படுத்தவோ, தடைவிதிக்கவோ முடியாது.

  இ. இனக்குழுவுக்கோ, மதக்குழுவுக்கோ வழங்கப்படாத சலுகைகள் அவ்வாறான வேறொரு குழுவுக்கு வழங்கக் கூடாது.

  ஈ. யாதேனும் மத நிறுவன அமைப்பினை அதன் நிருவாகியின் அனுமதியின்றி மாற்ற முடியாது. யாதாயினும் மத நிறுவனம் சட்டத்தின் மூலம் ஒருங்கிணைக்கப்பட்டிருந்தால் அதன் நிருவாகக் குழுவின் அனுமதியுடன் அன்றி வேறெந்த முறையிலும் மாற்ற முடியாது.

- **பல்லங்கத்தவர் தேர்தல் தொகுதி**

  சிறுபான்மையினரின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக காணப்பட்ட மற்றுமோர் விதியாக பல்லங்கத்தவர் தேர்தல் தொகுதி காணப்பட்டது. நாட்டில் பல்வேறு பிரதேசங்களில் பெரும்பான்மை இனத்தோடு சேர்ந்துவாழும் சிறுபான்மையினருக்கு பிரதிநிதித்துவத்தைப் பெற்றுக்கொடுப்பது இதன் மூலம் எதிர்ப்பார்க்கப்பட்டது. 1946 இல் அமைக்கப்பட்ட தேர்தல் தொகுதி எல்லை நிர்ணய ஆணைக்குழுவினால் பதுளை, பலாங்கொடை, கடுகன்னாவ, அம்பலாங்கொடை, பலபிட்டிய மற்றும் மத்திய கொழும்பு ஆகியவற்றில் பல்லங்கத்தவர் தேர்தல் தொகுதிகள் ஏற்படுத்தப்பட்டன. எனினும் சோல்பரி ஆணைக்குழுவினால் பல்லங்கத்தவர் தொகுதி உருவாக்கத்தின் மூலம் எதிர்ப்பார்க்கப்பட்ட நோக்கம் முழுமையாக நிறைவேறவில்லை.

- **நியமன அங்கத்தவர் அறுவர் (6) பிரதிநிதிகள் சபைக்கு தெரிவு செய்யப்பட்டமை:-**

  இதன்மூலம் ஐரோப்பிய, பறங்கியர் மற்றும் முஸ்லிம் ஆகிய இனக்குழுக்களிலிருந்து பிரதிநிதிகள் சபைக்கு உறுப்பினர்களை தெரிவு செய்யப்படுவது எதிர்ப்பார்க்கப்பட்டது. யாப்பில் 4 (2) உறுப்புரையின்படி பிரதமரின் ஆலோசனையின்படி மகாதேசாதிபதி இவ்வுறுப்பினர்களை நியமிப்பார். எனினும் இதனால் சிறுபான்மை இனங்களின் உரிமைகளுக்காக நியமிக்கப்பட்ட பிரதிநிதிகள் மூலம் சிறுபான்மையினரின் உரிமைகள் முழுமையாக பாதுகாக்கப்படவில்லை.

- **செனட்சபை**

  சிறுபான்மையினரின் காப்பீட்டுக்கான விதியாக செனட்சபை எனப்படும் இரண்டாம் மன்றம் தாபிக்கப்பட்டது. செனட் சபை உறுப்பினர்களில் ஐம்பது வீதமானோரை மகாதேசாதிபதி தன் சுயவிருப்பிற்கேற்ப நியமிக்க முடியும் என்ற விதிமுறைகளை ஏற்படுத்தியதன் மூலம் சிறுபான்மை இனக்குழுக்களுக்கு தாங்கள் பிரதிநிதித்துவம் செய்யும் சிறுபான்மையோரின் உரிமைகளுக்காக செயற்பட வாய்ப்பு வழங்க எதிர்ப்பார்க்கப்பட்டது. பிரதமர் செனட் சபைக்கான சிறுபான்மையோரை நியமிக்கும்போது சிறுபான்மை மக்கள் பற்றி கவனத்தில் கொண்டாலும், இதனோடு பிரதமர் மற்றும் அவரின் அரசியல் கட்சி தொடர்பில் காணப்பட்ட அரசியல் அடிப்படையின் மீது கவனம் செலுத்தியுள்ளமை தெளிவான தெரிந்திருந்தது. இதன் பெறுபேறு பிரதமரால் நியமிக்கப்பட்ட சிறுபான்மை இனங்களின் உறுப்பினர்கள் பிரதமரின் அரசியல் கட்சியின் உறுப்பினர்களாக இருந்தமையாகும். இவ்வாறான நிலைமைகளால் சிறுபான்மையோரின் போதுமான காப்பீட்டு பொறிமுறையாக கருத முடியவில்லை.

இவைத் தவிர சுயாதீன அரச சேவை ஆணைக்குழுவினை தாபித்தமையின் மூலம் அரச சேவை தொடர்பில் நம்பிக்கையினை ஏற்படுத்தல் யாப்பினை வரைந்தவர்களின் எதிர்ப்பார்ப்பாக இருந்தது. மேலும் நீதிச் சேவையின் சுயாதீனத்திற்காக உருவாக்கப்பட்ட விதிமுறைகளும் சிறுபான்மையோரின் உரிமைகளை பாதுகாத்துக்கொள்ள உதவியது.

## 8.5. அரச சேவை மற்றும் நீதித்துறை

சோல்பரி அரசியலமைப்பினால் அரச சேவை தொடர்பான பொறுப்பு அமைச்சரவைக்கு வழங்கப்பட்டது. ஒவ்வொரு அமைச்சருக்கு கீழும் காணப்பட்ட அனைத்து திணைக்களங்களினதும் செயற்பாடுகள் தொடர்பான முழு பொறுப்பும் குறித்த அமைச்சருக்கு வழங்கப்பட்டிருந்தது. திணைக்களங்களை இணைத்து நிருவகிக்கும்போது அமைச்சருக்கு உதவுவதற்காக நிரந்தர செயலாளர் ஒருவரை பிரதமரின் ஆலோசனையின்படி மாகாதேசாதிபதி நியமித்தார். அவர் குறித்த அமைச்சரின் நிருவாகத்தின் கீழ் வழிநடத்தப்பட்டார். அமைச்சருக்கும் அமைச்சுக்குக்கும் இடையிலும், அமைச்சருக்கும் திணைக்களங்களுக்கும் இடையிலுமான தொடர்புகள் நிரந்தர செயலாளரினால் கட்டியெழுப்பப்பட்டது.

அரச சேவையின் சுயாதீனத்தை பாதுகாப்பதற்காக முறையான விதிமுறைகள் அதன்மூலம் ஏற்படுத்தப்பட்டு இருந்தமை இந்த அரசியலமைப்பின் விசேட பண்பாக இருந்தது.

அரச சேவையாளர்களை நியமித்தல், இடம் மாற்றுதல், நீக்குதல் மற்றும் ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்ளல் என்பன சுயாதீன அரச சேவை ஆணைக்குழுவுக்கு வழங்கப்பட்டது.

இவ்வாறு அரச சேவை ஆணைக்குழு ஒன்றை தாபிப்பதற்கான காரணங்கள் இரண்டாகும்.

I. அரசியல் தலையீட்டில் இருந்து அரச சேவையை விடுவித்துக் கொள்ளல்.

II. அரச சேவைகள் தொடர்பாக சிறுபான்மை குழுக்களிடையே நம்பிக்கையை கட்டியெழுப்பல்.

ஐந்து வருடங்களுக்கு பிரதமரின் ஆலோசனைக்கு ஏற்ப மகாதேசாதியால் அரச சேவை ஆணைக்குழுவுக்கு மூன்று உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டனர். அரச சேவையினை அரசியல் தலையீட்டில் இருந்து விடுவித்துக் கொள்வதற்காக அரசியலமைப்பில் சில விதிமுறைகள் ஏற்படுத்தப்பட்டன. அவையாவன,

1. பாராளுமன்றத்தின் எந்த உறுப்பினரும் அரச சேவை ஆணைக்குழுவின் உறுப்பினராக நியமிக்கப்பட முடியாது.

2. ஏதேனும் உறுப்பினரை ஆணைக்குழுவுக்கு நியமிக்கப்படும்போது அரசாங்க உத்தியோகத்தராக ஏதேனும் கொடுப்பனவுகள் மற்றும் பதவிகள் இருப்பின் அவற்றை விட்டு விலக வேண்டும்.

3. சேவைக்காலம் நிறைவடைந்ததும் மீண்டும் சேவைக்கு நியமிக்கப்பட முடியாது.

4. சேவையில் இருந்து விலக்குதலானது, சரியான காரணங்களை காட்டிய பின் மகாதேசாதிபதியால் மட்டுமே மேற்கொள்ள முடியும்.

5. ஆணைக்குழுவின் தீர்மாங்களுக்கு அழுத்தம் கொடுக்கும் நபர் 1000 ரூபாவுக்கு மேற்படாத தண்டப்பணத்தையோ அல்லது ஒரு வருடத்திற்கு மேற்படாத சிறைத் தண்டனைக்கோ அல்லது இவை இரண்டுக்குமோ உள்ளாக வேண்டும்.

இவ்வாறான விதிமுறைகளை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டபோதும் ஆணைக்குழுவின் சுயாதீனத்தன்மையை முழுமையாக பாதுகாத்துக்கொள்ள முடியவில்லை. அமைச்சர்களின் அழுத்தங்களுக்கு உட்பட்ட சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. இதனால் ஆணைக்குழு தொடர்ந்தும் விமர்சனத்திற்கு உள்ளாகியது.

1972 முதலாவது குடியரசின் மூலம் சுயாதீன அரச சேவை எண்ணக்கரு இல்லாதொழிக்கப்பட்டு அரச சேவையை மிகவும் தெளிவான வகையில் அமைச்சரவையின் கீழ் கொண்டுவந்தது. இதன்படி,

- அரச சேவையாளர்களை நியமித்தல், இடமாற்றுதல், நீக்குதல், ஒழுக்காற்று நடவடிக்கை என்பன அமைச்சரவைக்கு பொறுப்பாக்கப்பட்டது.

- பிரதமரின் ஆலோசனையின் படி ஜனாதிபதியினால் நியமிக்கப்படும் உயர் மட்ட அரச அதிகாரிகள் தவிர ஏனைய அரச உத்தியோகத்தர்களை நியமிக்கும் முழுமையான அதிகாரம் அமைச்சரவைக்கு இருந்தது. இதற்காக அரச சேவை ஆலோசனை சபையின் ஆலோசனைகளை பெற வேண்டியிருந்தது. (இதன்போது அரச சேவை ஆலோசனை சபை மற்றும் அரச சேவை ஒழுக்காற்று சபைகளின் பணிகள் மற்றும் அமைச்சரவைக்கு அரச சேவை தொடர்பில் இருந்த அதிகாரங்கள் தொடர்பாக ஆசிரியர் விரிவாக கலந்துரையாட வேண்டும்)

- சோல்பரி அரசியலமைப்பின் கீழ் பிரதம நீதியரசர் மற்றும் உயர் நீதிமன்றத்தின் ஏனைய நீதியரசர்கள் மற்றும் குற்றவியல் நீதிமன்ற ஆணையாளர்கள் என்போர் பிரதமரின் ஆலோசனையின் பேரில் மகாதேசாதிபதியால் நியமிக்கப்பட்டனர். உயர் நீதிமன்ற நீதியரசர் ஒருவர் 62 வயதுவரை சேவையில் இருக்க முடியும். ஒரு வருடத்தால் சேவையை நீடிக்கும் அதிகாரம் பிரதமருக்கு இருந்தது. பதவியில் இருந்து நீக்குதல் செனற் மற்றும் பிரதிநிதிகள் சபைகளின் வேண்டுகோலின் பேரில் மகாதேசாதிபதியால் நீக்கப்பட்டாலன்றி வேறுவகையில் நீதிபதிகளை நீக்க முடியாது. அவர்களின் பதவிக் காலம் மற்றும் சுயாதீனத் தன்மை என்பன உறுதிப்படுத்தப்பட்டிருந்தன.

  ஏனைய நீதிபதிகள் நீதிச் சேவை ஆணைக்குழுவால் நியமிக்கப்பட்டனர்.

  (நீதிச் சேவை ஆணைக்குழு தொடர்பாக ஆசிரியர் கலந்துரையாட வேண்டும்)

  அனைத்து நீதிமன்ற நீதிபதிகளினதும் சுயாதீனத்தன்மை மற்றும் பக்கச்சார்பின்மை நீதியை நிலைநாட்டுதல் தொடர்பில் பொதுமக்களின் நம்பிக்கையினை ஏற்படுத்த விதிமுறைகள் ஏற்படுத்தப்பட்டன.

1972 அரசியலமைப்பின்படி நீதிமன்றத்தில் மாற்றங்கள் சில ஏற்படுத்தப்பட்டன.

- இராணியார் நீதிமன்றுக்கு மேன் முறையீடு செய்ய காணப்பட்ட உரிமையினை இல்லாது செய்து 1971 இல் உருவாக்கப்பட்ட மேன்முறையீட்டு நீதிமன்றுக்கு வழங்கப்பட்டது.

- உயர் நீதிமன்றம் மற்றும் மேன் முறையீட்டு நீதிமன்றம் என்பனவற்றின் பதவிகாலத்தின் தொடர்ந்தேட்சையான தன்மையை பாதுகாத்தல்.

- நீதிமன்ற முறைகளில் மாற்றங்களை தேசிய அரசுப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட சட்டத்தினால் செய்ய முடியும் என அரசியலமைப்பின் 121 ஆம் உறுப்புரையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (1973 ஆம் ஆண்டு 44 ஆம் இலக்க நீதியை நிலைநிறுத்தும் சட்டம்)

- எனினும் காணப்பட்ட நீதிமன்றங்களை இல்லாது செய்து கீழ் குறிப்பிடப்பட்ட நீதி மன்றங்கள் உருவாக்கப்பட்டன.

  1. மேன் முறையீட்டு நீதிமன்றம்
  2. உச்ச நீதிமன்றம்
  3. உயர் நீதிமன்றம்
  4. மாவட்ட நீதிமன்றம்
  5. மஜேஸ்ட்ராத் நீதிமன்றம்

- 1973 ஆம் ஆண்டு 44 ஆம் இலக்க சட்டத்தினால் இலங்கையை 16 வலயங்களாக பிரித்து ஒவ்வொரு வலயத்திற்கும் ஒவ்வொரு உயர் நீதிமன்றங்கள் வீதம் உருவாக்கப்பட்டன.

- அந்த வலயங்களை மாவட்டங்களாக பிரித்து ஒவ்வொரு மாவட்டத்திற்கும் மாவட்ட நீதிமன்றங்கள் உருவாக்கப்பட்டன.

- ஒவ்வொரு வலயத்தையும் தொகுதிகளாக (கோட்டங்களாக) பிரித்து ஒவ்வொரு தொகுதிக்கும் (கோட்டத்துக்கும்) மஜேஸ்ட்ராத் நீதிமன்றங்கள் ஒவ்வொன்று என உருவாக்கப்பட்டன.

- உச்ச நீதிமன்ற நீதிபதிகளின் ஓய்வு பெறும் வயது 63 என வரையறுக்கப்பட்டது.

- நீதிச் சேவை ஆலோசனை சபை மற்றும் நீதி சேவை ஒழுக்காற்று சபை என்பன உருவாக்கப்பட்டன.

  (இந்த சபைகள் இரண்டையும் பற்றி ஆசிரியர் விரிவாக கலந்துரையாடல் வேண்டும்)

## 8.6. அடிப்படை உரிமைகள்

மனித உரிமைகளை பாதுகாத்தல் தொடர்பான மனித உரிமைகள் பிரகடனத்தை அரசியலமைப்பிற்குள் உள்வாங்குதல் என்பது தாராண்மைவாத அரசியலமைப்புகளின் பண்பாகும் என்பதால் இலங்கையின் அரசியலமைப்பு வரலாற்றில் முதன் முறையாக அடிப்படை உரிமைகள் அத்தியாயம் ஒன்று உலக நாடுகளின் அடிப்படை உரிமைகள் தொடர்பான உறுப்புரைகளைப் பின்பற்றி உருவாக்கப்பட்டிருந்தது.

- சட்டத்தின் முன் அனைவரும் சர்வ சமமானவர்கள்
- தன்னிச்சையாக உயிரை மாய்த்துக் கொள்ள முடியாமை.
- சுதந்திரம் மற்றும் தனியாள் பாதுகாப்பு
- சிந்தனை செய்யும் சுதந்திரம்
- மனசாட்சியை பின்பற்றும் சுதந்திரம் மற்றும் மதச் சுதந்திரம்
- தனியான கலாசாரத்தை அனுபவித்தல் மற்றும் அபிவிருத்தி செய்வதற்கான சுதந்திரம்
- பேச்சுரிமை மற்றும் கருத்து வெளியிடும் சுதந்திரம்

போன்ற உரிமைகள் அரசியலமைப்பில் உள்வாங்கப்பட்டிருந்தது. 1972 உரிமைகளுக்கு ஏற்புடைமை ஒன்றை பெற்றுக்கொடுத்திருந்தாலும் இந்த உரிமைகள் அத்தியாயத்தில் குறைபாடுகள் சிலவும் இருந்தன.

1. அந்த அரசியலமைப்பினால் குறிப்பிடப்பட்டுள்ள உரிமைகள் அனுமதியளிக்கும் வரையறைகளுக்கு உட்படுத்தப்பட்டிருந்தமை.

2. அரசியலமைப்பில் உரிமைகளுக்கு உத்தியோகப்பூர்வ ஏற்புடைமை ஒன்று பெற்றுக்கொடுக்கப்பட்டிருந்தாலும் உரிமைகள் மீறப்படும்போது இது தொடர்பான சட்ட ஏற்பாடுகள் காணப்படவில்லை.

3. அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்டிருந்த பெரும்பாலான உரிமைகள் இந்நாட்டு பிரஜைகளுக்கு மட்டுமே காணப்பட்டது.

4. அரசியலமைப்பில் ஏற்றுக்கொள்ளப்பட்ட உரிமைகள் சிறியளவிலானதாக இருந்தமை.

5. இங்கு குறிப்பிடப்பட்ட உரிமைகள் பழமையான இயற்கை உரிமைகளின் சம்பிரதாயமான சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் என்ற வரையறைக்குள் இருந்தமை.

**கற்றல் கற்பித்தல் செயன்முறைகள்**

1. பக்கப் புரட்டி ஒன்றை தயாரித்தல் / பவர் பொயின்ட் முன்வைப்பு

   1947 – 1972 யாப்புகளினை அடிப்படையாகக் கொண்டு அரசியலமைப்புகளின் வளர்ச்சி மற்றும் போக்கு என்ற தலைப்பினை கீழ்வரும் விடயங்களின் துணையோடு சுட்டி எழுதுக.

   - அரசியலமைப்பின் பெயர் / அரசியலமைப்பின் அமைவுச் சேர்க்கை
   - நிறைவேற்றுத் துறையின் இயல்பு மற்றும் அதிகாரங்கள்
   - சிறுபான்மையினர் உரிமைகள்
   - நீதித்துறை மற்றும் பொதுச் சேவை
   - அடிப்படை உரிமைகள்

   உரிய திகதியில் முன்வைப்பினை மேற்கொள்க.

**உசாத்துணைகள்**


01. Coomarasamy, Radhika (1984) Srilanka: The Crisis of the Anglo – American Constitutional Traditions in a Developing Society, New Delhi: Vikas Publishing House ltd.

02. Cooray, L.J.M (1984) Constitutional Governtment in Srilanka, Colombo: Lake House Invesments Ltd.

03. Goonesekare, R.K.W. (1998) "Change in Constitutional Government, in A.D.V de S indraratna (ed) Fifty years of Srilanka's Independence: A Socio Economic Review, Colombo: Sri Lanka institute of Social and Econoic Studies.

04. Jennings, Iver (1948) Comments on the Constitution, London: The Associated Newspapers of Ceylon Limited.

05. Wilson, A. Jayaratnam (1979) Politics in Sri Lanka, 1947 – 1979, London: The Macmillan Press Ltd.

06. Wilson, A.J. (1958) "Minority Safeguards in the Ceylon constitution' In Ceylon Journal of Historical and Social Studies.

07. வில்சன். ஏ.ஜே. (1968) இலங்கை அரசியல் அமைப்பு பற்றிய நிபந்தனைகள், கொழும்பு, இலங்கை வெளியீட்டு கம்பனி

08. வித்தானவசம், அதுல (2007) இலங்கையின் அரசியல் அமைப்பும் அரசியலும், ம□ரகம தரஞ்சி பிரின்டர்ஸ்.